©

JL
R673m211,N12
N12·7
160958

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

18 MAR 1919
MADRAS

# சித்தாந்தம்.

சைவசித்தாந்த மகாசமாஜத்தின்

மாதாந்தத்

தமிழ்ப் பத்திரிகை.

## ஏழாந் தொகுதி.

பத்திராதிபர்

வி. குப்புச்சாமி முதலியார்.

சென்னை

மஹாலக்ஷ்மி விலாஸ அச்சுக்கூடம்.

1918.

160958

R673 ஊ 2ளி, N12
M42.9

# சித்தாந்தம் ஏழாந் தொகுதியின்

## உள்ளுறை.

அத்துவிதம்-வ-சண்முகசுந்தர முதலியார் ... 9, 38

அருளிலக்கணத்தின் ஓர் பகுதி
மோ. கந்தசாமி முதலியார், B. A. 113, 128, 148, 180, 200, 228

அருளும் பொருளும்-சீ சதாசிவன் ... 269

அவா வறுத்தல்-K. S. ஆறுமுகம் ... 52

அன்பர் பெருமை-கி. இராஜு கிராமணியார் ... 1?9

ஆலய வழிபாடு-சுவாமி-வேதாசலம் ... 155

இராமமூர்த்தி அ பழனிவேலாயுதம் பிள்ளை ... 76

உயிர்ப்பலி இடலாமா? சுவாமி-வேதாசலம் ... 100

ஒரு மணிவாசக விகாசம்-குருவருள் ... 219

குருபக்தி மகிமை-குருவருள் ... 171

சகோதரர் ஒற்றுமை-சுவாமி-வேதாசலம் ... 200

சமயம்-கா-சூலாலசுந்தரம் பிள்ளை ... 61, 105, 124, 243

சமயோற்பத்தி-ச-சபாரத்தின முதலியார் ... 5, 28

சாந்தோக்யோபநிஷத்து சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திரர் } 1, 25, 48, 73, 97, 121, 145, 165, 193, 217, 241.

சிவோகம்பாவனை-B. சிவக்கொழுந்து ... 132

சோமாது தேவிமார்- ... 54

சேக்கிழார் கவிநலமாண்பு-ச-நடேச தேசிகர் ... 83

சைவ சமய மெய்ம்மாட்சி R. P. சேதுப்பிள்ளை, B. A. 43

சைவ சித்தாந்த மகாசமாஜத் தமிழ்ப்பெருங்கூட்டம் 8?

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் பதின்மூன்றாவது வருட அறிக்கை 280

சைவசித்தாந்த மகாசமாஜப் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவிழா
கி-குப்புச்சாமி முதலியார் ... 17

சைவமும் ஏனைய மதங்களும்-J. M. நல்லசாமிப்பிள்ளை 262

தமிழ்ப் பழமை-விருதை-சிவஞான யோகிகள்... 81

தருமநெறி-ச. சபாரத்தின முதலியார் ... 225

திராவிடரின் அதிநாகரீகமும் அவர் சமயமும்-C-சங்கரராயர், B.A.B L 33

திருவாசகமே மணிவாசகம்-குருவருள் ... 185

தீவினையச்சம் ... 68

நீலகண்டமணிமாத்திரை-காஞ்சி. நாகலிங்க முதலியார் 250

பணிசெயல்-கி. குப்புச்சாமி முதலியார் ... 265

பிரபஞ்ச விசாரம்மதிப்புரை-கா-சுப்பிரமணிய பிள்ளை, M. A M. L. 271

போதம் தமிழ் முதனூல்-வி-சிவஞான யோகிகள் 273

மனிதப்பிறப்பின் அருமை-பச்சையப்ப உடையார் 161

மாமிசபோஜனக்குறைவும் மரக்கறி ஆகார உயர்வும்
தி-பக்தவத்சலம் பிள்ளை B. A. 70, 92, 141, 188, 213, 239.

வேதாகமங்களின் முப்பொருட்டுணிவு ஒன்றே
தீ. சு. சீனியாபிள்ளை ... 13, 45, 58.


MADRAS 28 FEB 1918

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி எ.] 1918ஞு ஜனவரீமீ பகுதி [க

## சாந்தோக்யோபநிஷத்து.

—:o:—

### ஆறாவது பிரபாடகம்.

### கண்டம் க.

சுவேதகேது எனும் ஆருணேயரை அவர் பிதாவாகிய உத்தாலகர் நோக்கி, நீ தக்க ஒரு குருவினையடைந்து பிரமசரிய நிலையினையடைவாயாக, நமது குலத்தில் இங்ஙனம் ஒருவரும் அனுஷ்டிக்கவில்லை. விருத்தியால் மாத்திரம் பிராமணராகவிருந்தார்கள் என்றனர்.

உ. அங்ஙனமே சுவேதகேது தனது பனிரண்டாம் வயதுமுதல் இருபத்துநாலாவது வயதுவரையில் வேதங்கள் அத்தியயனஞ்செய்து அதனால் திருப்தியடைந்து பெருமை பாராட்டிக்கொண்டு திரும்பி வந்தனர்.

௩. பிதா புத்திரனை நோக்கி ஐய! கேட்காமல் கேட்கப்படுவதும், எண்ணாமல் எண்ணப்படுவதும், அறியாமல் அறியப்படுவதுமான உபதேசத்தினை அறிந்தனையோ என்றனர்.

௪. புத்திரன் அத்தகைய உபதேசம் எங்ஙனமிருக்குமென்றார். பிதா அவரைநோக்கி ஐய! மண்ணானது பல பாத்திரங்களாய் பல பெயர்

வாய்ந்தவைகளா யிருக்கினும் அவையனைத்தும் மண்ணேயெனச் சத்தியமாய் அறிந்ததுபோலும்,

௫. தங்கக்கட்டி பெயரால் மாத்திரம் பல வித்தியாசம் அடைந்திருக்கினும் அவ்வயனைத்தும் தங்கமேயென உண்மையாக உணர்ந்ததுபோலும்,

௬. இரும்பானது பற்பல பெயர்களை வாய்ந்து பற்பல காரிய ரூபங்களாயிருந்திடினும் அவ்வனைத்தும் இரும்பன்றி வேறில்லையெனத் தெரிந்ததுபோலும் உணர்வதே யுபதேசமென்றனர்.

௭. இவ்வுண்மை எனதாசிரியர் தெரிந்தார் இல்லைபோலும், தெரிந்திருந்தால் சொல்லியிருப்பர் ஆகலின் தேவரீரே உபதேசித்தருள வேண்டுமென்றனர்.

## கண்டம் ௨.

இப்பிரபஞ்சம் நாமரூபங்களை யடைவதற்கு முன் * சத்தாகவும், ஒன்றாகவும், அத்வதீயமாயும் இருந்தது. இது (சகம்) அசத்தாகவும், ஒன்றாகவும், அத்வதீயமாயு மிருந்தது. இந்த அசத்திலே சத்துண்டாயது எனச் சிலர் கூறுவர். அது எங்ஙனம் கூடும்? அதற்குப் பிரமாணமென்னை? அசத்திலிருந்து சத்துவருமோ? ஆகையால் சத்தாகவும் ஒன்றாகவும், அத்விதீயமாக விருந்தது என்றே கொள்ளவேண்டும்.

௨. அந்தச்சத்து பலப்பிரகாரமா ஆவோமெனச் § சங்கற்பித்து, அக்கினியை உண்டாக்கியது. அது சலத்தினை யுண்டாக்கியது. இதனால்தான் ஒருவன் அக்கினியால் தபிக்கும்போது அவனுக்கு வியர்வை யுண்டாகிறது.

௩. அந்தச் சலம் அன்னத்தை உண்டாக்கியது அதனால் தான் அதிக மழை அதிகம் பெய்கிற விடத்தில் அன்னமதிகம் விளைகிறது.

---

* ஈண்டு சத்தென்றது நித்தியமாயுள்ள மாயை, ஒன்றென்றது காரிய ரூபமடைதற்கு முன் காரணரூபமாயிருந்த அவசரம். அத்வதீயமென்றது பிரமத்திற்கு அநந்நியமாயிருக்கும் தன்மை.

§ பிரமமானது மாயையினின்றும் பிரபஞ்சத்தைக் காரியப்படுத்த வேண்டுமெனச் சங்கற்பித்ததை ஈண்டு மாயை சங்கற்பித்ததாகக் கூறுவது பங்கஜ நியாயம்.



## கண்டம் ௩.

காணப்படுகின்ற பூதங்கட்கெல்லாம் மூன்று காரணங்களுண்டு, பட்சியாதி சாதிக்குக்காரணம் முட்டை, மானிடர் பசுவாதி சாதிகட்குக் காரணம் கர்ப்பப்பை, பூமியைப்பிளந்துகொண்டு கிளம்புகிற மலை மரமுதலான தாவரங்கள்.

௨. (அக்கினி, சலம், பூமி) ஆகிய இம்மூன்று தேவதைகளுக்குள் எங்ஙனம் சீவாத்மாவைப் பிரவேசிக்கச் செய்வதெனச் சத்து சங்கற்பித்து ஒவ்வொன்றை மும்மூன்றாகச் செய்தது.

## கண்டம் ௪.

மும்மூன்றாவன, அக்கினியிற் சிகப்பு தேசசின் ரூபம், வெளுப்பு சலத்தின் ரூபம், கருமை அன்னத்தின் ரூபம். இவ்வுண்மை யறிந்த பிறகு அக்கினித்துவமில்லை. அக்கினி பெயர்மாத்திர மானவிகாரம். மற்றைய மூன்று முண்மை.

௨. இங்ஙனமே சூரியன், சந்திரன், மின்னல் இவைகளிடத்தும் அறியவேண்டியது.

௩. நம்மவருள் ஒருவனால் இப்போது கேட்கப்படாததையும், அறியப்படாததையும், உதகரிக்கவேண்டாம். இது பெரியோர்கள் கொள்கை.

## கண்டம் ௫.

உண்ணுகிற அன்னத்தின் தூலபாகம் மலமாகவும், மத்யபாகம், மாமிஸமாகவும் ஆகிறது. இது மனதைப் பலப்படுத்துகிறது.

௨, குடிக்கின்ற ஜலத்தின் தூலபாகம் மூத்திரமாகவும், மத்யபாகம் இரத்தமாகவும், சூட்சுமபாகம் பிராணனாகவும் ஆகிறது.

௩. புசிக்கப்பட்ட தேசசின் தூலபாகம் எலும்பாகவும், மத்யபாகம் மச்சையாகவும், சூட்சுமபாகம் வாக்காகவும் ஆகிறது.

௪. மனம் அன்னமயமாயும், பிராணன் அப்புமயமாகவும், வாக்கு தேஜசுமயமாகவுமிருக்கிறது என்றனர் பிதா. அதற்குப் பதில் குமாரன் இன்னும் நன்கு விளங்கவில்லை யென்றனர்.

---

மெய்கண்டசாத்திரம் பதினான்கு மூலம் விலை அணா 0—8—0

### கண்டம் ௬.

தயிரில் சூட்சுமபாகம் வெண்ணெயாகக்கிளம்பி அங்ஙனம் செய்யா கிறதோ? அங்ஙனம் அன்னத்தின் சூட்சுமபாகம் கிளம்பி மனசாகவும், ஜலத்தின் பாகம் பிராணனாகவும், தேஜசின்பாகம் வாக்கும் ஆகிறது.

### கண்டம் ௭.

ஒரு புருடன் பதினாறு கலைகளோடு கூடியவன். பதினைந்துநாள் சாப்பிடாமல் ஜலத்தைக் குடித்துக்கொண்டிருந்தால் பிராணன் போகமாட்டாது ஏன்? ஜலம் பிராணமயம்.

௨. புத்திரன் பதினைந்துநாள் சாப்பிடாமலிருந்து பிதாவிடம் வந்து நான் சொல்வதென்ன விருக்கிறதென்றார். இருக்கு, யஜுர், சாமம் அத்தியயனம் பண்ணென்றார். அவை இப்போது என்மனத்தே தோன்றவில்லையென்றார்.

௩. பெருநெருப்பிலிருந்து மிகுந்த மின்மினிப்பூச்சி யளவு இருக்கிற தீயானது பல வஸ்துக்களை யெரிக்கமுடியாதோ? அங்ஙனமே நின்து பதினைந்து கலைகளில் மிகுந்திருக்கிற ஒருகலை வேதங்களை அத்தியயனஞ்செய்ய முடியாது ஆதலால் இனி சாப்பிடு என்றனர்.

௪. அங்ஙனமே சாப்பிட்டபின் பிதாவினிடம் வந்து நான் சொல்வதென்ன விருக்கிறதென்றார். அத்தியயனம் செய்யென்றார். உடனே அங்ஙனஞ் செய்தார்.

௫. உன்னிடம் மிகுந்திருந்த ஒருகலை அன்னத்தால் மனசுபலமடைந்து வேதஞ்சொல்ல முடியாமற் போய்விட்டது. ஆகையால் மனசு அன்னமயமாகும் என்றனர். புத்திரன் உண்மையறிந்தார்.

**மணவழகு.**

---

### நீதி.

"அவர்யம் அநுபோக்தவ்யம் க்ருதம் கர்ம சுபாசுபம்
நாபுக்தம் க்ஷீயதே கர்மகல்ப கோடிஸதைரபி"

எத்தகையரும் தாங்கள்செய்த நல்வினை தீவினைகளைத் தாமேயநுபவித்துத் தீரவேண்டும். அநேக நூறு கல்பகோடிகால மானபோதிலும், தாங்கள் செய்த நன்மை தீமைகளின் பலனை யநுபவியாமல் அவ்வினை யழியமாட்டா.

சிவஞானபோத வசனாலங்காரதீபம் விலை ரூபா 2—8—0

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

## சமயோற்பத்தி.*

ஆன்மாக்கள் கடவுளை அடையும் நெறியைப் பயிலும் முறையே சமயம் என்று சொல்லத்தக்கது. இந்த முறை இக்காலத்திலே பலவடிவு கொண்டு நடைபெறுகின்றது. உலகத்திலே நடைபெறும் சமயங்கள் பலவும் தம்முட் பலவாறு முரணுமாயினும், கடவுளை அடைதலே ஆன்மாக்கள் பெறுதற்குரிய உறுதிப்பயன் என்பது எல்லாச் சமயங்கட்கும் ஒத்த துணிபாகும். இங்ஙனமானதொரு கொள்கையை மேற்கொண்டொழுகும் சமயம் உலகத்தில் எங்ஙனம் உற்பத்தியாயிற்றென்பது நாம் எல்லாம் அறியவேண்டியதொரு விஷயமாம்.

சமயம் உற்பத்தியானபின் காலவடைவிலே பிறழ்ந்தும் விரிந்தும் சிதைந்தும் பலபல வடிவுகொள்வது கூடுமாயினும், முதன் முதலாகச் சமயம் எனப்படுவதொன்று உலகத்தில் தோன்றியவாறு எங்ஙனம் என்பது அறிவுடையார் எல்லாம் நுணுகி அறியக்கிடப்பதொரு விஷயமாதலால், அதை எமது சிற்றறிவுக்கெட்டியவாறு ஒரு சிறிது எடுத்து விசாரிப்பாம்.

உலகம் அனைத்துக்கும் காரணரும், தமக்கொரு காரணம் இல்லாதாரும், தம்மை அடைந்தார்க்கு நித்திய சுகத்தைக்கொடுப்பாருமாகிய கடவுள் ஒருவர் உளர் என்பதும், அந்தக்கடவுளை அடைதற்குரிய உபாயங்கள் இவை என்பதும், இந்த உலகத்திலே மனிதர்க்குப் புலப்பட்டதெவ்வாறு? இந்தச் சட உலகத்தின்வேறாகியதொரு சித்துலகம் உண்டென்பதும், அந்தச் சித்துலகம் நித்திய நிலைபேறுடைத்தென்பதும் மாந்தர்க்குத் தோன்றிய தெங்ஙனம்?

இந்தக் காலத்திலே பௌதிக ஞானமாகிய லௌகிக வித்தையே (Material Science) பெரிது சன்மானிக்கப்படுதலால், கடவுளுண்மையை அங்கிகரிப்பார் தாமும், சமயந்தானும் லௌகிக முறையாக மனிதருடைய அறிவிலின்று தோன்றியதன்றி, யாதொரு தைவிக முறையாகக்

* சென்னைச் சைவசித்தாந்த மகாசபையில் படிக்கப்படும்படி, யாழ்ப்பாணம் ஸ்ரீ சபாரத்தின முதலியார் அவர்கள் எழுதியனுப்பிய வியாசம்.

கடவுளாற் கொடுக்கப்பட்ட தன்றென்பர். இவர்கள் இந்த லௌகிக தருமத்திற்கொண்டுள்ள அபிமானத்தால் இந்த முறைக்கு மேலாக யாதொரு தைவிகமுறை (Spiritual law) உண்டென்று கொள்வது இவர்களுக்குச் சிறிதும் உடன்பாடல்ல. ஆயினும் கடவுள் ஒருவர் உண்டென்னும் வழக்கு உலகத்திலே நிலையூன்றி வலிபெற்றுவிட்டமையால், இந்த வழக்குக்கு மாறாக யாதொரு கொள்கையைப் பிரதிபாதித்தல் யுக்தமாகாது என்றெண்ணிப்போலும், இவர்கள் "கடவுள் ஒருவர் இருக்கினும் இருக்கலாம்; அந்தக் கடவுள் உலகத்திற்காணப்படும் இயற்கை முறையேயன்றிப் பிறிதொரு பொருளல்ல" என்று இங்ஙனம் வாதிப்பர். இந்த லௌகிகமுறையாக மனிதருடைய அறிவு படிமுறையே விருத்தியுற்று, அந்த அறிவில் நின்று தானே சமயந் தோன்றிற்றென்பது இவர்களுடைய கொள்கை. லௌகிக முறையாகத் தோன்றும் மானுட அறிவிலே, கடவுள் அறிவுக்கறிவாய் அமைந்து விளங்கி, அந்த அறிவு வாயிலாகச் சமயத்தைத் தந்தார் என்றால் மாத்திரமே அவர்கள் கடவுளுண்மையை அங்கீகரிப்பர். இந்த லௌகிக முறையின் வேறாகவும் யாதொருசெயல் கடவுளாற் செய்யப்படும் என்றால் அங்ஙனம் கொள்வதினும் கடவுள் ஒருவர் இல்லை என்று முடிப்பதே உசிதம் என்பது இவர்கள் கருத்து. உற்றுநோக்குமிடத்து இயற்கைநிகழ்ச்சியே இவர்களுடைய கடவுள். இது பௌத்தம், நிரீச்சுர சாங்கியம் முதலிய நாத்திக மதக் கொள்கைகளை அனுசரித்ததோர் துணிபன்றி ஆத்திகமது சித்தாந்தம் எனத் தக்கதல்ல.

இவர்கள் கடவுளுண்மையை உலக சம்மதம் பற்றிக் கைக்கொள்வதன்றி, கடவுளிடத்தே உண்மையான விசுவாசம் உடையாரல்லர். இவர்கள் கடவுளை விசுவசித்து, அவருடைய சச்சிதானந்தசொரூபத்தை எடுத்து விசாரிப்பதுண்டென்றால், அவர் சருவகாருண்ணியம், சருவஞானம், சருவசாமர்த்தியம் முதலிய இலக்கணங்களை உடையார் என்பது இவர்களுக்கு நன்கு புலப்படும். உலகத்துக்குக் காரணராகிய கடவுள் ஒருவர் உளர் என்பது நாட்டப்படுமிடத்து, அந்தக் கடவுள் இந்த இலக்கணங்களை எல்லாம் உடையர் என்பதும் தானே நாட்டப்படும். கடவுளிடத்தே இந்த இலக்கணங்கள் உண்டாமாயின், அவர் தமக்குப் புத்திரக்கிழமை பூண்டுள்ள ஆன்மாக்களுக்கு, பொதுவியல்பாகிய இந்த இயற்கை முறையானதன்றி, சிறப்பியல்பானதொரு தைவிக முறையால் ஒரு சமயத்தைக் கொடாதொழியார் என்பது இவர்களுக்குப் புலப்படுகின்றிலது. தைவிக முறை

தேவாரம் வேதசாரம் விலை ரூபா 3—0—0



யாக அளிக்கப்படும் சமயத்தைப்போல, லௌகிக முறையால் அளிக்கப்படுஞ் சமயம் அத்துணைப் பயன்படமாட்டாதென்பதும், அது பயன்படுமிடத்தும், காலந்தோறும் சிறிது சிறிதாக விருத்தியடைந்து மெய்ந்நெறியைக் காட்டுதற்குரிய உண்மைச் சமயமாய் அமைவதற்குப் பல்லூழிகாலம் செல்லும் என்பதும், இங்ஙனம் பிரயோசனக்குறைவும் காலதாமதமுமாகிய இரண்டும் ஒருங்கே விரவுற்று விளங்குவதொரு செயலைக் கடவுளுடைய பூரண கருணை என்று சொல்வது கூடாதென்பதும், இவர்களுக்கு இவர்கள் லௌகிகத்திற்கொண்ட அபிமான முதிர்ச்சியினால் புலப்படுவதில்லை. இவர்கள் தைவிகமுறையில் தமது கருத்தைச் சிறிதாவது செலுத்துவதின்றி, தமது முழுக்கருத்தையும் லௌகிகத்திற்றானே செலுத்தி அதனை அளவுகடந்து அபிமானித்தல் பற்றியே இந்த விபரீத விளக்கம் இவர்கள்பால் உதிக்கலாயிற்று.

தைவிக முறையாக ஒரு சமயம் தோன்றுவதுண்டாயின், அது குற்றங்களில் நீங்கி, கடவுளை யடைதற்குரிய உபாயங்களைத் திட்பநுட்பமுற அதி இலகுவில் எடுத்து விளக்கிக்காட்டும். அந்தச் சமயத்தைச் சனங்கள் சந்தேகமின்றி விசுவசிப்பதும் இனிது கூடும். லௌகிகமுறையால் மனிதருடைய அறிவில் நின்று சமயந் தோன்றுவதுண்டாயின், அவ்வறிவு கடவுளை அடைதற்குரிய உண்மைத்துறையை ஒரே முறையில் நேரே காணமாட்டாதாதலால், அங்ஙனம் காண்பது படிமுறையாகப் பல நெடுங்காலம் போக்கிச் சிறிது சிறிதாகவே சித்திக்கத் தக்கதாம். அங்ஙனம் சித்தித்த வழியும் அதனை எல்லாரும் ஒருமனப்பட்டு அங்கீகரித்தலும் ஏலாது. இந்தக் குறைவுகளின்றி, ஆன்மாக்களுக்கு விரைந்து பலன் தரத்தக்கதொரு உபாயத்தைக் கடவுள் காட்டிக்கொடுத்திலர் என்றால், அந்தக் கடவுளைச் சருவகாருண்ணியம், சருவஞானம், சருவசாமர்த்தியம்முதலிய இலக்கணங்களை உடையார் என்பது சிறிதும் பொருந்தாது. ஆகவே இந்த இலக்கணங்களை உடையாராகிய கடவுள், லௌகிகத்தின் வேறாகியதோர் தைவிக முறையாகவே ஆன்மாக்களுக்கு ஒரு சமயத்தைத் தந்தருளினார் என்பது, அவருடைய இலக்கணங்களை ஆராயுமிடத்து நாமெல்லாம் நன்கறியக் கிடக்கின்றது. இங்ஙனம் கடவுளால் ஆதியிற் கொடுக்கப்பட்ட சமயம், காலம் செல்லச் செல்ல மனிதருடைய லௌகிக முதிர்ச்சியளவாகப் பலவாறு விகற்பமுறுதலாற்றான் உலகத்தில் சமயங்கள் பலவாயின.

சிருட்டி ஆரம்பங்களிலே தோன்றும் மானுடர் கடவுளை அறிதற்குரிய பக்குவத்தளவில், தமது வழித்தோன்றல்களினும் சிறந்து விளங்குவர்

என்பது இப்போது நடைபெறும் உலக நிகழ்ச்சிகொண்டு நாம் நன்கறியக் கிடக்கின்றது. காலம் செல்லச் செல்ல மனிதர் எல்லாம் லௌகிகத்தில் அதிகம் அதிகமாக அமிழ்ந்துதலை நாம் பிரத்தியட்சமாகக் காண்கின்றோம். இதுபற்றியே நமது சமயம் காலக்கிரமத்தைக் கிருதயுகம், திரேதயுகம், துவாபரயுகம், கலியுகமென ஆன்மார்த்த விருத்தியளவுபற்றி நால்வகையின் வகுத்துக்காட்டும். உலகத்திலே நிகழ்ச்சியுற்றுவரும் ஆன்மார்த்த விருத்தியை (Spiritual progress) பொது நோக்காக நோக்குமிடத்து அது ஆரோகண கதியை (Evolution) அனுசரித்துக்கொண்டே வருகிறதென்று சொல்லத்தக்கதாயினும், சிறப்புநோக்காக நோக்குமிடத்து அந்த விருத்தி அவரோகண கதியையும் (Involution) அவாந்தர நிகழ்ச்சியாக அனுசரித்தே நடைபெறுகின்றதென்பது நாம் எல்லாம் நன்கறியக்கிடக்கின்றது. இதுவே சமயஞானங்கொண்டு இந்த விஷயத்தை ஆராய்வார்க்கு ஏற்புடைத்தாகத் தோன்றும் செய்மைக்கணுள்ள திருவருட் சார்பு பற்றி ஆன்மார்த்த விருத்தி செய்த்தாக ஆரோகண கதியிற் செல்லுமாயினும், அண்மைக்கணுள்ள மலச்சார்பு பற்றி அவரோகணமுறையும் அவாந்தர நிகழ்ச்சியாக அண்மைக்கட் காணப்படுமென்க. ஒருமலைச் சிகரத்தைநோக்கிச் செல்லும்வழி ஏற்றமும் இறக்கமும் அமைந்து விளங்கினாற்போல ஆன்மார்த்த விருத்தி லௌகிகங் காரணமாக உயர்ந்தும், இங்ஙனமே மேல்நோக்கிச் செல்லும்.

ஆன்மார்த்த விருத்தியன்றி லௌகிகவிருத்தி தானும் (Material progress) எப்போதும் மேல்நோக்கி வளர்ந்துகொண்டே நடைபெறுவதென்று சொல்வது கூடாது. லௌகிக விருத்தியில் ஒருகால் சிறந்திருந்த எத்தனையோ தேசங்கள் பின்னர்த் தாழ்வடைந்ததும், தாழ்வடைந்த பின்னர்ச் சிலகாலம்சென்று முன்போல உயர்வடைந்ததும், நாம் சரித்திரமுறைகொண்டு நன்கறியக்கிடக்கின்றன. உயர்வும் தாழ்வும் கொள்ளிவட்டமும் காற்றாடியும்போல மாறிமாறி நிகழ்ந்துகொண்டு வருகின்றன. ஆகவே உலகத்தில் எந்த விருத்தியாவது ஆரோகணகதியிற்றானே எப்போதும் சலிப்பின்றிச் செல்கின்றதென்று சொல்வது சிறிதுங் கூடாது. ஆனால் சிருட்டி ஆரம்பங்களிலெல்லாம் ஆன்மிகம் (Spirituality) உயர்ந்த நிலையிற்றானே இருந்துளதென்று நாம் உறுதியாக அறுதியிட்டுச்சொல்லலாம். ஞானபூரணராகிய கடவுள் ஆன்மிகத்திற் சிறந்தாரை முதற்கட் சிருட்டிப்பது, அவர்கள் வாயிலாக அவர்கள் பிற்சந்ததியார் எல்லாம் நன்னெறிக்கட் செல்லுதற்குப் பெரிதும் அனுகூலமாகும். இங்ஙனமின்றி ஆன்மிகத்திற் குறைவுற்றாரை முதற்கட் சிருட்டிப்பதுண்டானால், அவர்கள் பின்னோர் ஆன்மிகத்திற் சிறப்பெய்துவது பெரிதும் தாமதித்திடும். இங்ஙனமானதொருசெயல் கடவுளுடைய செயல் எனப்படமாட்டாது. சிருட்டி ஆரம்பகாலத்தில் ஆன்மிகத்திற் சிறந்த ஆன்மாக்கள் இல்லை என்று சொல்வதுங் கூடாது. அங்ஙனமானோர் இல்லாதிருத்தல் கடவுளுடைய பரிபூரண நிலைக்குப் பெருங்குறைவாகும். அவருடைய சந்நிதிக்கட்டானும் யாதொரு குறைவு இருத்தல் கூடாது. (இன்னும் வரும்.)





ச. சபாரத்தின முதலியார்.
யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அத்துவிதம்.*

———:o:———

அத்துவிதம் என்பது வேத வேதாந்தமாகிய சித்தாந்தத்தை நிறுத்துவதற்காகும் ஒரு வச்சிர தீபமே யாம்.

அத்துவிதம் என்னும் வாக்கியப்பிரயோகம் வேதத்தில் ஓரோரிடங்களில் "நத்விதீயம் பிரம்மம்" எனக் கூறியிருத்தலினால் அவ்வத்துவிதம் என்னும் பதத்தை வேதபாஹ்ய மதஸ்தர்கள் நீங்கலாக மற்றையவர்களெல்லாம் தத்தம் மதத்திற்கியைந்தபடி விதரேகம் என்றும், கேவலம் என்றும், விசிட்டமென்றும் அடைமொழி கொடுத்து வழங்கா நிற்பர். இவ்விசேட அடைமொழிகளைக் கொடுத்துக் கூறும் அத்துவிதத்திற்கு இவை பொருத்தமுடைத்தா என்பதை முன்னர் ஆராய்ந்து பின்னர் அதன் உட்கருத்தை யாவரும் அறிந்துய்யுமாறு நிறுவுவாம்.

* சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் 12-வது வருஷோத்சவத்தில் செந்தமிழ்ரத்நாகரம் வல்லை. சண்முகசுந்தர முதலியார் செய்த உபந்நியாசம்.

வடமொழியில் உள்ள "நத்விதீயம்" என்னும் வாக்கியத்தின் முதலிலுள்ள "ந" என்பது உபசர்க்கம். இவ்வுபசர்க்கமாகிய நகரம் உயிர்மெய்யெழுத்தாதலினால் அந்நகரத்தில் "ந்" என்கிற மெய்யெழுத்து ஒழிந்த மாத்திரத்து அகர உயிரே நின்று அத்விதீயம் என வழங்கும். இவ்வாறு நகரத்தை அகரமாகக் கொள்வதற்கு விதியாதோவெனில், பாணினி முனிவரால் கூறப்பட்ட பாணினியம் என்னும் வியாகரணத்துள் ஆறுவது அத்தியாயம் மூன்றுவது பாதம் எழுபத்து மூன்றுவதான "நலோபோநஞு" என்னும் சூத்திரத்தையே பிரமாணமாக வடமொழி வல்லார் கூறியிருத்தலை நோக்கிக்கொள்க. இவ்வாறு வழங்கும் "அத்விதீயம்" என்னும் அருமறை வாக்கியப்பிரயோகம் செந்தமிழ் வழக்கில் அத்துவிதம் என்று திரிபெய்தி வழங்காநிற்கும். மேற்கூறிப்போந்த ந என்னும் அகரம் அன்மை, இன்மை, மறுதலை என்னும் பொருள்களைப்பயக்கும்.

முதலில் அன்மைப் பொருள்பற்றி யாராய்வாம். அகரம் எவ்விடத்து அன்மைப்பொருளை யுணர்த்துமென ஆராயுமிடத்து, அவ்வகரம் உயர்திணை அஃறிணை பொருட் பெயர்களோடு புணர்ந்தவழி அது ஒரு பொருளை மறுத்து வேறு பொருளை நாட்டுவதாகிய அன்மைப்பொருளை யுணர்த்துமென வறிக. உ-ம்-அஞ்ஞானி, என்ற வழி அவ்வகரம் ஞானியை மறுத்து வேறு பொருளாகிய ஞானமில்லாதானை நாட்டுவதாகும். இதுபோலவே அப்பிராமணன், அசைவன் முதலியவைகளிலுங் கூட்டிக்கொள்க. இதனால் அன்மைப் பொருளினிலக்கண மின்னதென அறிந்தாம்.

இரண்டாவது இன்மைப்பொருளை ஆராய்வாம். அகரம் எவ்விடத்து இன்மைப்பொருளை யுணர்த்துமென ஆராயுமிடத்து, அவ்வகரம் அஃறிணைப் பண்புச்சொல்லுடன் கூடியவழி அது ஒரு பொருளின் இருப்பை மறுத்து அதன் சுபாவத்தை நாட்டுவதாகிய இன்மைப்பொருளை யுணர்த்துமென வறிக. இதற்கு உ-ம்-அப்பிரகாசம், என்ற வழி அதன் இருப்பாகிய பிரகாசத்தை மறுத்து பிரகாசமின்மையாம் அதன் சுபாவத்தை நாட்டுவதாகும். இதைப்போன்றே அசலம், அமலம், அகளங்கம், அயோக்கியம் முதலியவைகளிலுங் கூட்டிக்கொள்க. இதனால் இன்மைப்பொருளினிலக்கணம் இன்னதென அறிந்தாம்.

இனி மறுதலைப் பொருளை ஆராய்வாம். அகரம் எவ்விடத்து மறுதலைப் பொருளை யுணர்த்துமென ஆராயுமிடத்து, குணகுணிப்பெயர்களுள் ஒன்





றடனொன்று மறுதலைப்பட்டு நிற்பனவற்றுள் ஒன்றைச் சுட்டுமிடத்து மறுதலைப்பொருளை யுணர்த்துமென வறிக. உ-ம்-அசத்தியம் எனவே சத்தியத்துடன் மறுதலைப்பட்ட சத்தியமல்லாத அசத்தியத்தினை யுணர்த்துவதாகும். இதுபோன்றே அஞ்ஞானம், அசேதனம், அசாதாரனம் முதலியவற்றினுங் கூட்டிக்கொள்க. இதனால் மறுதலைப் பொருளினிலக்கணம் இன்னதென அறிந்தாம். இவை நிற்க,

அகரம் பொதுவாய் அன்மை, இன்மை, மறுதலை என்னும் மூன்றிற்கும் மூவிதப்பொருளைப் பயந்து நிற்றலால், பின்னை எதற்குத் தான் இவ் அகரம் சிறப்புடையதோ என ஆராயுமிடத்து அத்துவிதமென்னுஞ்சொல்லில் நின்ற அகரம் அன்மைப்பொருளுக்கே உரியதெனக் கொள்ளல்வேண்டும் யாங்ஙனம், எண்ணுப்பொருளின்மேல் வரும் அகரம் அன்மைப்பொருளையே யுணர்த்து மல்லது வேறு இன்மை மறுதலை என்னும் பொருட்களை யுணர்த்துதல் வடமொழி வழக்கின்கண் இன்மையென முறையிடுகின்றது. அத்துவிதம் என்னும் பதத்தைப் பிரித்தவழி அகரம் ஒழித்தொழிந்தது விதம் என்பதற்கு இரண்டு எனப்பொருள்படும். ஆகவே இரண்டு என்னும் எண்ணுப்பெயரின்மேல் வர் ＂ அகரம் அன்மைப்பொருளைப் பயப்பிக்குமேயல்லது வேறு பொருளைக் காட்டாதெனக்கொள்க. இக்கருத்தையே ஆசிரியர் சிவஞான முனிவரும் தமது சிவஞான பாடியத்துள் "எண்ணுப்பெயர் மேல் வந்த நகரம் அன்மைப்பொருள் மாத்திரையே யுணர்த்திப் பொதுமையினிற்பதன்றி ஏனைய சொற்களின்மேல் வந்த நகரம்போல இன்மை மறுதலைப் பொருள்களை யுணர்த்துதல் வழக்கின்கணின்மையின்" என்ருர். இவ்வாறு வேத வேதாந்தமாகிய சித்தாந்தத்தை யுணர்த்தும் சுத்தாத்துவிதம் என்னும் சொல்லுக்கு விசிட்டம், விதரேகம், கேவலம் என்னும் அடைமொழி கொடுத்துத் தத்தங் கொள்கைக்கியைந்தவாறு பொருத்திக்கொண்டு விவகரிப்பர். அவை எவ்வளவினதோ என்பதை ஆராய்வாம்.

அத்துவிதம் என்னுஞ்சொல், ஆன்மா முத்திநிலையில் இப்படித்தாய் நிற்கும் என்பதைக்காட்ட எழுந்ததோர் அரிய சொல்லாம். ஆகவே ஆன்மா எப்படி யிருந்தது ? ஏன் வந்தது ? என்னசெய்ய வேண்டுவது ? முத்தியை அடையவேண்டியது எதுக்கு ? என்பவைகளை ஆராய்வோமாயின் அத்துவிதம் என்னும் சொல்லுக்கு உண்மைப்பொருள் இதுதான் என்பது, உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கிவிடும். அது எவ்வாறேயென்பதை

ஆராயுமிடத்து சர்வ ஜீவ தயாபரனும் பசுபதி, இன்பதுன்பங்களற்றுப் பாடாணத்தைப்போல் அனாதி கேவலத்திற்கிடந்த ஆன்மாக்கள் ஆனந்தத்தோடிருக்கும்பொருட்டுத் தனுகரண புவனபோகங்களையமைத்து வேதாகம புராணேதிகாசங்களையும், விதிவிலக்கு முதலியவைகளையும் நிறுத்திக்கருணை நோக்கால் அனுப்பியதேயன்றிப் பிறிதில்லையாகலான் ஆன்மாக்களின் கடமைப்பாடுடையதாகும். குடிதழீஇக் கோலோச்சு மானிலமன்னன் எவ்வாறு குடிகளைக்காத்தற்பொருட்டுச் சட்டநிருபணஞ்செய்ததைச் சிறிதுந் தவறாது பாதுகாத்துப் பயன்துய்ப்பாரோ அதுபோன்றே மேற்கூறிப் போந்த சட்டங்களாகிய வேதாகம புராணேதிகாசங்களிற் கூறியபடி இவை விதி இவற்றைக்கொள்ளற்பாலது, இவைவிலக்கு இவற்றைத்தள்ளற்பாலது என ஒழுகி, நிரதிசயானந்த வீட்டுப்பேற்றை யடைவர். இதனால் பாடாணத்தைப்போற் கிடந்த ஆன்மா முத்தித்திசையில் ஆனந்தத்தோடிருக்கும் என்பது பெற்றாம்.

இதுவரையும் ஆன்மாக்கள் உற்பத்திக்குக் காரணமும் அதன் முத்திப்பேற்றையுங் கூறினோம். இம்முத்திப்பேற்றை விளக்கவந்த சொல்லே அத்துவிதமாகும். அத்துவிதமென்றால் இரண்டற்றது, இரண்டற்று நிற்பது எவ்வாறென்னில் அவனே யாகிவிடாமலும் அவனுக்கன்னியமாக இராமலும் இரண்டறக் கலந்துநின்று ஆனந்தந் துய்த்தலாம்.

ஆகவே, இனிவிசிட்டம் என்னும் அடைமொழிகொடுத்து வழங்கும் விசிட்டாத்துவித முத்திநிலையை ஆராய்வாம். விசிட்டாத்துவித முத்தியாவது-வைகுண்டபதியாகிய ஸ்ரீமன் நாராயணமூர்த்தியானவர் எவ்வாறு சங்கு சக்கரகதை சோதண்டநாந்தக மேந்திய கையராய் இலக்ஷ்மீசமேதராய் எழுந்தருளியிருப்பரோ அதைப்போன்றே ஆன்மாக்களும் நித்தியசூரிகளாய் இலக்குமி நீங்கலாக நாராயணரது வடிவத்தைப் பெற்று சதா சேவைகண்டு ஆனந்தத்துடன் வீற்றிருப்பதே விசிட்டாத்துவித முத்தியென்பர். (இன்னும் வரும்).

இங்ஙனம்,

**வல்லை. சண்முகசுந்தர முதலியார்.**



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வேதாகமங்களின் முப்பொருட்டுணிவு ஒன்றே.

——:o:——

**தொகுதி - 6 - பகுதி - 11 - பக்கம் - 2[illegible]4 - தொடர்ச்சி.**

இன்னும் "வருமிவணம்மைப்பேணுமம்மைகாண் உமையே" என உலகீன்றவளுக்கு எம்மையுடைய ஆலங்காட்டப்பர் திருவாய்மலர்ந்தருளும் பெருவாழ்வு பெற்ற காரைக்காலம்மையார் திருவாய்மலர்ந்தருளிய "அறிவானுந்தானே யறிவிப்பான்றானே யறிவாயறிகின்றான்றானே என்னும் அமுதவுரையையுஞ் சிந்திப்பாம். எல்லாமாயல்லவுமாய் சர்வான்மாக்கடோறு முயிர்க்குயிராயிலகும் பரசிவப்பிரபுவின் வியாபகத்தை யுணர்த்துவான் வந்த திருவாக்கேயாமன்றி எவ்வகையானும் ஆன்மாவென்ற பொருளினிருப்புச்சத்தியமென்பதையும் அதற்குத் தற்போதமுண்டென்பதையும் அதை யொழித் ததற்கே யவ்வுபதேசங்கள் தோன்றின வென்பதையும் மேலேவிளக்கியுள்ள நியாயங்களையுள்ளவாறுணர்வார் தெள்ளிதி னறியலாம் இது வொன்றே." ஒன்று நீ யல்லை யன்றி யொன்றில்லை யாருனை யறியகிற்பாரே" என்ற சுருதிவசனத்தில் "ஒன்று நீ யல்லை" என்பது சேதனாசேதனப் பிரபஞ்சங்களுளொன்று நீயல்ல வென்பதையும் "அன்றியொன்றில்லை" என்பது சிவவியாபகத்துளன்றிப் பசுபாசங்களிருக்கமுடியாதென்பதையும் உணரலாம்.

இனி நான்குவேத மஹா வாக்கியங்களில் "தத்துவமசி" என்னும் மஹாவாக்கியமொன்றைச் சிந்திப்பாம். அது நீயானாய் என்பதே யதனுண்மைப்பொருளென விளக்கியுள்ளார்கள். மற்றைய வாக்கியங்களையுஞ் சிந்திக்கின் ஆன்மாவடைய வேண்டிய பரிபாக சாதக சாத்தியங்களை விளக்கு முண்மையுபதேசமாவதன்றி ஏகான்மவாதஞ் சாதிக்க வெட்டுணையுமிடம் பெறவில்லை யென்பது உண்மையான அநுபவிகளெவரு மறிந்த

விஷயம் இங்ஙனமாய மஹாவாக்கிய உண்மையுபதேசங்களைப் பெற்றுய்ய நின்ற பொருளெதுவோ அதுவே யான்மாவாம் இந்தவுபதேசத்தால் சித்திக்கும் பிரமானந்த வாழ்வையடைந்து சுகிப்பது எதுவோ அதுவே யான்மாவாம். இந்த வுபதேசத்தைப்பெறும் பூர்வ புண்ணியமில்லாது ஜனன மரண சம்சார துக்கத்திற் பட்டுழல்வது எதுவோ அதுவே யான்மாவாம்.

இனி வேதாந்தமாயினுஞ் சித்தாந்தமாயினும் அதன்முடிவாகிய பிரயோசனம் துக்க நிவர்த்தியுஞ் சுகப்பேறெய்துதலுமேயாம் என்ப துபயவாதிகள் சம்மதம். அறம் பொருளின்பம் வீடடைதனூற் பயனே என்ற பிரமாணப்படி பிறப்பிறப்புகணீங்கி முத்தியெய்துதலே ஆன்றோர்கள் துணிவாயிருக்க வதனைவிட்டு ஒன்றென்றும் இரண்டென்றுஞ் சண்டையிட்டு வாணாளை வீணாளாக்குவது அறிவாளிகள் கடமையன்றாம். "தன்னை யறியார் தலைவன் றனையறியார் முன்னைவினையின் முடிவறியார் பின்னைக் குருக்களென்று பெயரிட்டுக்கொள்ளுவர்களையோ தெருக்கடனிலே சிலர்" என்றும், "தனையறியா ரீசன் றனையறியார் பாச வினையறியா ரானந்த மேவார்" என்றும் தன்னையறிந்தாற் றலைவன்மேற் பற்றலது பின்னுமொரு பற்றுமுண்டோ பேசாய் பராபரமே" என்றும் வரும் பிரமாணங்களைச் சிந்தித்து வேதாகமங்களி னாராய்ச்சியால் வரும் பிரயோசனம் திரிபதார்த்த நிச்சயமும் திரிபதார்த்த நிச்சயத்தா லெய்தும்பயன் தனக்குந் தலைவனுக்குமுள்ள சம்பந்தத்தைத் தெரிந்து தான் என்று மீளாவடிமையென்று கண்டு அன்புற்று ஒன்றோடிரண்டெனாச் சமரச சொரூப சுக முத்தியடையவேண்டிய தன்மையென்பது மொருதலையா யுணரத்தக்கது.

இதுகாறுங் கூறிப்போந்தவாற்றாற் பெறப்படுவதென்னையோவெனின், வேதம் பிரமமொன்றே சத்தியமென்பது பதியையும், மற்றவை மித்தை என்பது பாசத்தையும் இங்ஙனம் பதியையும் பாசத்தையு முணரநின்ற பசுவையுங்காட்டி திரிபதார்த்த நிச்சயத்தை நுண்ணறிவினர் சூசித்துணருமாறு உணர்த்துவது போலவே, அங்ஙனஞ் சூசித்துணருமாற்றலில்லாதாரு மெளிதினுணருமாறு ஆகமம் திரிபதார்த்தங்களுங் காலத்திரயத்தினு முள்ளதென்பதைக் கண்டாகோஷமாய் முழங்கிற்றே யன்றி வேதமொரு துணிவும் ஆகமமொரு துணிவுங் கூறிற்றிலவென்பதும் இங்ஙன முணர்கவே "வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னார் கண்களிக்கும்





நாதாந்தமோன நலமே பராபரமே" என்னுந் திருவாக்குக் கிலக்காயுணர்வதாமென்பதும் பதி பசு பாசம் என்னு முப்பொருளும் அநாதி நித்தியமாம் என்பது வேதாகமங்களிரண்டுக்கு முடன்பாடே என்பதும் பசுவாகிய தான் என்று மீளாவடிமை என்பதும் தேவாதி தேவனாய் சர்வான்மக்கடோறு முயிர்க்குயிராயிலகும் பரமேசுர பாதாரவிந்தத்திடையரு ளன்புற்று ஒன்றோடிரண்டெனாச் சமரசசொரூப சுகமுத்தியடையவேண்டிய தன்மை என்பதும் "பந்தமும் வீடு மாயபத பதார்த்தங்க ளல்லான்" என்ற பிரமாணப்படி பந்தமும் வீடும் ஆன்மா (பசு) வாகிய தனக்கே என்பதும் வீடு என்பது பாசத்தினின்றும் விடுபடுதலே என்பதும் விளக்குந் தகளியையும் வேறென்னார் நின்னைத் துளக்கமறச் சிவனென்று சொல்லார் பராபரமே" என்ற திருவாக்குக் கிலக்காய் சிவ சீவர்களினுண்மை யறியாது மயங்குதல் உண்மைஞானங் கைவரப்பெறும் பரிபாக முந்தாமையே காரணமாம் என்பதும் இன்னோரன்னவர்களின் பரிபாக ஏற்றத்தாழ்வை யுணர்த்தவே "பட்டப்பகற் பொழுதை யிருளென்ற மருளர்தம் பக்ஷமோவெனது பக்ஷம்" என்றும் "பூதங்களல்ல பொறியல்ல வேறு புலனல்ல வுள்ளமதியின் பேதங்களல்ல விவையன்றி நின்ற பிறிதல்லவென்று பெருநூல் வேதங்கிடந்து தடுமாறும் வஞ்சவெளி" என்று வரும் திருப்பாடல்களெழுந்தனவென்பதும். நான்கு வேத மஹாவாக்யங்கள் ஒவ்வொன்றின் பொருளையுஞ்சிந்திக்கின் ஆன்மாக்களுக்கு ஒழியாப்பிறவிக் குவித்தாகிய தற்போத மிறக்கச்செய்து பரமதுக்க நிவிர்த்தியும் பரமானந்த பிராப்தியையும் பயக்கும் உண்மை யுபதேசமாமன்றி ஏகான்மவாதஞ்சாதிக்கு வெட்டுணையு மிடம் பெறவில்லை என்பதும் இன்னு முய்ப்பன கொண்டுய்த்தலுமாம்,

"பூதமோ ரைந்தைப்பொறிபுலன் கரணம் பொருந்திய குணங்களோர் மூன்றும் நாதமுங்கடந்தவெளியிலே நீயுநானுமாய் நிற்குநாளுளதோ" என்றும், வேதாகமத்துணிவிரண்டில்லை யொன்றென்னவே வந்த குருவே" என்றும் அப்பொருளுமான்மாவு மாரணநூல் சொன்னபடி தப்பிலாச் சித்தொன்றுஞ் சாதியினாலெப்படியுந் தேறிற்றுவிதஞ்சிவாகமமே சொல்லு நிட்டையாருமிடத் தத்துவிதமாம்" என்றும். "அத்துவிதம் பெரும்பேறென்றறியாமல் யானெனும் பேயகந்தையோடு மத்தமதியினர் போல மனங்கிடப்ப வின்னமின்னம் வருந்துவனோ" என்றும் போனகமிருக்கின்ற சாலையிடை வேண்டுவ புசித்தற்கிருக்கு மதுபோற் புருடார் பெறு தர்மாதி வேதமுடனாகமம்புகலு மதிநூலாம்பயன் ஞானநெறி முக்யநெறி காக்ஷியநுமான முதல் நானாவிதங்கடேர்ந்து நானெனக் கூளறுபடை புடைபெயர்ந்திடவு நான்கு சாதனமு மோர்ந்திட்டான நெறியாஞ் சரியை யாதி சோபான முற்றனுபக்ஷ சம்புபக்ஷமாமிரு விகற்பமு மாயாதி சேவையுமறிந் திரண்டொன்றென்னுமோர் மானத விகற்பமற வென்று நிற்பது நமது மரபென்ற பரமகுருவே" என்றும், நானெனவு நீயெனவு மிருதன்மை நாடாமல் நடுவே சும்மா தானமரு நிலையிதுவே சத்தியஞ்

சத்தியமெனவே தமியனேற்கு மோன குருவாகியுங் கைகாட்டினையே" என்றும், ஆனாலும் "யானென திங்கற்ற வெல்லையதுபோதும்" என்றும் "செம்மான்மகளைத் திருடுந்திருடன் பெம்மான்முருகன் பிறவானிறவான் சும்மாவிருசொல் லறவென் றலுமே அம்மாபொருளொன் றுமறிந்திலனே" என்றும், யான்றானெனுஞ் சொல்லிரண்டுங் கெட்டாலன்றி யாவருக்குந் தோன்றாது சத்தியந் தொல்லைப்பெருநிலம்" என்றும், எனதென்பதும். போ யானெனல் போயெல்லா மிறந்தவிடங்காட்டு நினதென்பதும்போய் நீயெனல்போய் நிற்கு நிலைக்கே நேசித்தேன் என்றும் வரும் சிவானுபூதிச் செல்வர்கள் திருவாக்காம் பிரமாணங்களை யுய்த்துணர்ந்துய்யுஞ் சாதுக்கள் சேமார்த்தம் வேதாகமங்களின் முப்பொருட்டுணிவு ஒன்றே என்பது நாட்டப்பெற்றது.

(இன்னும் வரும்.)

தி. சு. சீனியா பிள்ளை,
சைவப்பிரகாச சபை,
விருதுபட்டி.

---

## சமாச்சாரங்கள்

—:o:—

தமிழ்க்களஞ்சியம் (Tamil cyclopedia.) இப்பெயர்கொண்ட நூலொன்று மாத சஞ்சிகையாக வெளிவருகிறது. பகுதி ஒன்று வெளிவந்தது. இதில் தமிழின் உற்பத்தி, தமிழின் தொன்மை, தமிழின் பதப்பொருள், தமிழ்ச்சிறப்பு (தமிழ் உயர் தனிச்செம்மொழி, தமிழ் தெய்வபாஷை, தமிழ் மூலபாஷை) தமிழ்ச்சங்கம், தலைசங்கம் முதலிய விஷயங்களடங்கியிருக்கின்றன. சஞ்சிகை யொன்றுக்கு விலை அணா-8. வேண்டியவர்கள் சென்னைப் பிரம்பூர் தமிழ் சைக்ளோபீடியா ஆபிசுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

தேர்த்துறை சைவசித்தாந்த ஸ்ரீ பரமாசாரிய பக்தஜன சபை:— இச்சபையின் மூன்றாவது ஆண்டு வருடோற்சவம் ஜனவரி௴ 19௳ காஞ்சிபுரம் மகாவித்துவான் ஸ்ரீமான்-சோணாசல பாரதியவர்கள் அக்கிராசனம் வகிக்கக் கொண்டாடப்பட்டது, வித்துவான்கள் அறுவர் மகோபந்நியாசங்கள் செய்தனர்.

---

கோயிற்பட்டி பத்திவிளை கழகம்:—டிசம்பர்௴ 24, 25, 26-தேதிகளில் M. S. பூர்ணலிங்கம் பிள்ளை B A., L. T., அவர்கள் அக்கிராசனராகவிருக்க, பதின்மூன்றாவது ஆண்டுவிழா நிறைவேறியது. பதினாறு வித்துவான்கள் மகோபந்நியாசஞ் செய்தனர்.

Studies in Saiva Siddhanta 3—0—0.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# சைவசித்தாந்த மகாசமாஜத்தின் பன்னிரண்டாவது ஆண்டுவிழா.

இச்சமாஜத்தின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவிழா 1917-ம் வருடம் டிசம்பர்௴ 23, 24, 25-ம் தேதிகளில் சென்னைக்கடுத்த பிரம்பூர் செம்பியத்தில் அமைத்துள்ள ஓர் நாடகக் கொட்டகையில் ஷை சமாஜத்தின் நிர்வாகசபை அங்கத்தவரில் ஒருவராய செம்பியம் கிராம முனிசீப் ஸ்ரீமான் - பண்டிதரத்தினம்-புழலை - திருநாவுக்கரசு முதலியாரவர்கள் (Honorary Magistrate) பெருமுயற்சியால் மிகச்சிறப்பாக நடைபெற்றது. சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம் சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திர சுவாமிகள் அக்கிராசனம் வகித்து விழாவை அணிபெற நடத்தினர். இவ்விழாவில் ஏறக்குறைய 2,000 சைவசமயாபிமானிகள் கூடினர். அவர்களுள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர்கள் ஸ்ரீமான் J. M. நல்லசாமிப்பிள்ளையவர்கள் B. A., B. L. குருவிக்குளம் ஜமீன்தாரவர்கள், ஊத்துக்குழி ஜமீன்தாரவர்கள், ஸ்ரீமான் வேணுகோபால செட்டியாரவர்கள் B. A., B. L., C. M. இராசு செட்டியாரவர்கள் M.B P.T, ஸ்ரீமான் தில்லைநாயகம் பிள்ளையவர்கள், ஸ்ரீமான் செல்வகேசவராய முதலியாரவர்கள் M. A., ஸ்ரீமான் சாமிநாதப்பிள்ளையவர்கள், ஸ்ரீமான் திருமணம்-அண்ணாமலை முதலியாரவர்கள், ஸ்ரீமான் கி. இராஜு கிராமணியாரவர்கள், ஸ்ரீமான் S. இரத்தினவேலு செட்டியாரவர்கள், (Dubash) முதலிய பலராம். அவைத்தலைவர்களுக்கும், உபந்நியாசர்களுக்கும், ஏனைய பிரமுகர்களுக்கும் ஸ்ரீமான் பு. திருநாவுக்கரசு முதலியாரவர்களும், ஸ்ரீமான் நல்லசிவன் பிள்ளை B.A., B.L. அவர்களும் நல்வரவு கூறினர். அக்கிராசனரவர்கட்கு நல்வரவேற்றுக்கவி படிக்கப்பட்டது. பின்னர் கழகக்காரியதரிசியாகிய ஸ்ரீமான் கி. குப்புச்சாமி முதலியாரவர்கள் ஆண்டு அறிக்கைப்பத்திரம் வாசித்தனர். இதுவரை சமாஜத்தில் 780 அங்கத்தினரே இருக்கின்றார்களென்றும், ஒவ்வொருவருக்கும், சித்தாந்தப்பத்திரிகை இலவசமாகக் கொடுக்க வேண்டி

ருத்தலால், இன்னுமனேகர் அங்கத்தினராக சேர்ந்து சமாஜத்திற்குப் பொருளுதவி செய்தாலன்றி, கழக நோக்கங்கள் முட்டின்றி முடிதல் இயலாதென்றும் வற்புறுத்திக் கூறினர். இதன்பின்னர் தலைவரவர்கள் முகவுரைப்பிரசங்கத்தில், இவ்வுலகின்கண்ணே ஆன்மகோடிகளின் பலவனிகப்பட்ட கன்மங்கட்குத் தக்கபடி முழுமுதற்கடவுள் வேதாகமங்களிற் பற்பல சமயங்களை வகுத்துள்ளாரேனும், அச்சமயங்களேயாய், அவ்வச்சமயங்களைக் கடந்ததாய், முடிவினதாய், தனக்குமேலோர் முடிவிலதாய்; அவ்வச்சமய விதிவழிநின்று வழிபடுவார்க்கெல்லாம் அனுக்கிரகிக்கும் முழுமுதற்கடவுள் ஒருவனே யாமாகலின் அவ்வச்சமயப் பொருளும் தன்வயின் அடங்கக்கொண்டு தானவற்றிற் கதீதமாய் நிற்கும் விழுமியசமயம் சித்தாந்தமே. ஆகவே அறிவாளிகள் பலராலும் பொன்னேபோல் போற்றப்படும் உரிமை உடைத்து சித்தாந்தமெனக் கூறி முடித்தனர்.

பின்னர் சமாஜ உபஅக்கிராசனாதிபதிகளுள் ஒருவராகிய மதுரை-ஸ்ரீமான் J. M. நல்லசாமிப் பிள்ளையவர்கள் B. A., B. L. "சிவஞானபோதம்" என்னும் உயரியநூற்பொருளை விஷயமாகக் கொண்டு அரிய பெரிய சித்தாந்த உண்மைகளை தன்னகத்தே யடக்கியுள்ள சிவஞானபோத மென்னும் நூலைச் சைவநன்மக்கள் ஒவ்வொருவரும் ஐயந்திரிபறக்கற்றுணர வேண்டு மென்று வற்புறுத்தினர். ஸ்ரீமான் சதாசிவச் செட்டியாரவர்கள், B A. "வாகீசர் பிரபாவம்" என்பதை விஷயமாகக்கொண்டு அந்நாயனாரின் சரித்திரத்தில் அமைந்துள்ள நுணுக்கங்களை விரிவாக எடுத்துரைத்தனர். சமாஜ காரியதரிசியாகிய ஸ்ரீமான் கி. குப்புச்சாமி முதலியாரவர்கள் "கற்பு" என்னும் விஷயமாகப் பேசத்தொடங்கி மற்றையரெல்லாம் கற்பென்பதற்கு மகளிர்நிறை என்பதே பெரும் பொருளாகக்கொண்டு கூறுவரேனும் தாம் அவ்வாறு கூறாது கல்வி யென்னும் பொருளிலேயே சைவசித்தாந்தத்தை நிலை நாட்டினர். தூத்துக்குடி-ஸ்ரீமான் P. முத்தையபிள்ளையவர்கள் திருக்குறளின் கடவுள்வாழ்த்தையே ஆதாரமாகக்கொண்டு சிவபிரானே வழிபடு கடவுளென வற்புறுத்திப் பேசினர். சென்னை ஸ்ரீமான் கா. ஆலாலசுந்தரம் பிள்ளையவர்கள் "சித்தாந்தம்" என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு முப்பொருளின் உண்மையைக் கல்லால நீழலின் கீழுள்ள கடவுளின் சின் முத்திரையில் காட்டினர். பிறகு சபாநாயகருடைய முடிவுரை முடிந்தது. சபை ஆரம்பத்திலும் இடையிலும் முடிவிலும் சென்னைச் சிவனடியார் தலயாத்திரைச் சங்கத்தார் தேவார பாராயணஞ் செய்தனர்.

திருத்தொண்டர் வெண்பா (திருக்குறளுந்தாரார்த்தமுடன்) விலை அணா—1.



இரண்டாம் நாள் ஸ்ரீமான் பொன்மார்-நடேச முதலியாரவர்கள்
"மெய்ப்பொருளுணர்ச்சி" என்னும் விஷயமெடுத்துத் திருக்குறளிலு
ள்ள மெய்யுணர்தல் என்பதையே தனக்கு ஆதாரமாகக்கொண்டு பேசினர்.
ஸ்ரீமான்-மணிமங்கலம்-திருநாவுக்கரசு முதலியாரவர்கள் "பாதிவிருத்தம்"
என்பதை விஷயமாகக்கொண்டு சித்தாந்த நயங்கள் அளவில தெளிவாக
வெடுத்துக்காட்டி, சிவஞான சித்தியாரில் ஓர் விருத்தப்பாதி போதும்
என்பது முதலாகப்பல பேசித்தம் விஷயத்தை முடித்தனர், காவித்தண்ட
லம் ஸ்ரீமான் வேதாசல முதலியாரவர்கள் "பிறவியினருமையும் பயனும்"
என்பதைப் பற்பல புராணங்களை மேற்கொண்டு விரிவாகப் பேசினர்.
சென்னை ஸ்ரீமான் மோ-கந்தசாமி முதலியாரவர்கள் B. A. "தமிழரின்
கடவுட் கோட்பாடு" என்பதை விஷயமாகக்கொண்டு தமிழ் முறையாய்
திருக்குறளினின்றும் பல மேற்கோள்களுடன் ஓர் விரிவுரை நிகழ்த்தினர்.
திருநெல்வேலி ஸ்ரீமான் கா. சுப்பிரமணியப்பிள்ளை யவர்கள் M. A., M. L.
"சிவ தருமம்" என்னும் விஷயத்தைப்பற்றி ஓர் அரிய உபந்நியாசஞ் செ
ய்து சைவ சமயம் மிகச்சிறந்த சமயமென்றும், இச்சமயத்திற்கு அன்பு,
அருள் என இரண்டுமே அடிப்படையாக உள்ளன என்பது முதலாகப் பல
பேசினர். சென்னைப் புராணிகர் ஸ்ரீமான் பெ-கந்தசாமிப் பிள்ளையவர்கள்
"பக்தி" என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு தாம் நெடுநாள் பழ
கிய புராணப் பிரசங்க வன்மையால் பலர் மகிழப் பேசினர். பிறகு சபா
நாயகர் முடிவுரை முடிந்தவுடன் சங்கக் காரியங்களைப்பற்றிய அவயவிகள்
கூட்டம் தொடங்கிற்று.

மூன்றாம் நாள் சென்னை ஸ்ரீமான் செந்தமிழ்ரத்நாகரம் வல்லை-
சண்முகசுந்தர முதலியாரவர்கள் "அத்துவிதமும் சமாஜக்கடமையும்" என்
பதைத் தம் விஷயமாகக்கொண்டு தமது நெடுநாள் அநுபோக ஞானத்தால்
விமரிசையாய்ப் பேசினர். யாழ்ப்பாணம்-ஸ்ரீமான்-சோமாஸ் கந்தப்பிள்ளை
யவர்கள் "அடியார் பெருமை" என்பதை விஷயமாகக்கொண்டு தாம்
உண்மையாகவே ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த பல நூல்களினின்றும் மேற்
கோள்களை வெள்ளிடைமலைபோல் பலர்க்கும் பயன்படும்படி எடுத்துக்
காட்டிப்பலரும் மகிழ்வெய்தப் பேசிமுடித்தனர். "ஆளுடைய பிள்ளையார்
பிரபாவம்" என்பதைப் பற்றி சமாஜ வனிதையர்வகுப்புக் காரியதரிசியா
கிய ஸ்ரீமதி-ஆண்டாளம்மாளவர்கள் தெள்ளிய இனிய நடையில் விரித்து
விளக்கமாக உரைத்தார்கள். திருக்கோவலூர்-ஸ்ரீமான்-மா. ரா. குமார

மனைவழகு சரித்திரம் (படத்துடன்) விலை அணா—4.

சாமிப் பிள்ளையவர்கள் "ஒற்றுமை" என்னும் விஷயத்தைத் தமது மனப்பாங்கின்படி யாவருளத்தும்பதியப் பகர்ந்தனர். குளித்தலை பிரம்மஸ்ரீ A. அரங்கசாமி அய்யரவர்கள் "சந்ததி ஞானம்" என்பதைப் பற்றி பிரபல பிரமாணங்களோடு சிறப்பாகப் பேசினர். திருகள்ளாறு-ஸ்ரீமான்-சு நடேச தேசிகரவர்கள் "கடவுளின் சொரூப தடத்தலட்சணம்" என்னும் விஷயத்தைப்பற்றி விளக்கமாகச் சொல்லிமுடித்தனர். இறுதியில் ஸ்ரீமான் T. நல்லசிவன் பிள்ளையவர்கள் B A., B L, சித்தாந்த கலாசாலை ஒன்று ஸ்தாபனஞ்செய்வதற்கு ஒவ்வொரு ரூபாய்க்குக் குறையமால் வருடந்தோறும் சைவாபிமானிகள் யாவரும் கொடுத்துவருதல் கடனென்று குறிப்பித்து வேண்டிக்கொண்டனர். அன்றைய தினம் தேவகோட்டை நகரத்துச் சிரோமணிகளாகிய ஜமீன்தார் செட்டியாரவர்கள், சத்திரம் செட்டியாரவர்கள், மைனர் செட்டியாரவர்கள் முதலிய பிரபுக்களெல்லோரும் வந்து சிறப்பித்தார்கள். பின் தலைவர் முடிவுரையும், அன்னார்க்கும் பிறர்க்கும் வந்தனம்கூறுதலும் நிகழ்ந்தன. பிறகு உபசரணைச்சங்கத்தலைவராகிய ஸ்ரீமான்-தில்லைநாயகம் பிள்ளையவர்களும் ஷை சங்கக் காரியதரிசியாகிய ஸ்ரீமான்-பு. திருநாவுக்கரசு முதலியாரவர்களும் பேசினர். அவர்களுள் கடைசியாகப் பேசிய ஸ்ரீமான்-திருநாவுக்கரசு முதலியாரவர்கள் தாம் சமாஜத்தை அங்குக்கூட்டி நடத்துவதற்குத் தமக்கு இரண்டு புஜங்கள் போல் தம்முடைய யொருசாலை மாணாக்கராகிய ஸ்ரீமான்-வல்லை. சண்முகசுந்தர முதலியாரவர்களும் சமாஜக் காரியதரிசியாகிய ஸ்ரீமான்-கி. குப்புச்சாமி முதலியாரவர்களும் பலவழிகளிலும் உதவிபுரிந்தனரென்று உண்மை பேசும் தம் நாவினால் பல உண்மைகளைப் பேசினர். பிறகு வாழ்த்துப்பாக்களும் தேவார பாராயணங்களும் நிகழ்ந்து இவற்றோடு இவ்வாண்டு பெருவிழா மங்களமாக முற்றுப்பெற்றது.

**களந்தைகிழான்.**
**(கி. குப்புச்சாமி.)**

---



1917ஞ டிசம்பர் மாதம் 24உ செம்பியத்தில்கூடிய மகா சமாஜக் கூட்டத்தில் நடந்த தீர்மானங்கள்.

1. இவ்வருடத்து அறிக்கைப்பத்திரம் அங்கீகரிக்கப்பட்டது.

2. ஸ்ரீமான்-கி. குப்புச்சாமி முதலியார் அவர்கள் ஐந்துவருஷமாகப் புரிந்த உதவிக்காக சமாஜம் நன்றி பாராட்டுகின்றது.

3. ஆயுள் சமாசிகர் தொகையிலிருந்து எடுத்துச் செலவழித்த தொகையை மறுபடியும் இவ்வருஷப்பணத்தில் திருப்பிக் கொடுத்துவிட வேண்டியதெனத் தீர்மானிக்கப்பட்டது.

4. சமாஜ உத்தியோகஸ்தர்கள் அடியிற் கண்டபடி நியமிக்கப்பட்டார்கள்.

### போஷகர்கள்.

மாட்சிமைதங்கிய இராமநாதபுரம் மகாராஜா அவர்கள்
ஸ்ரீமான் S. R. Mm. Ct பெத்தாட்சி செட்டியாரவர்கள், M. R. A. S.
,, S இரத்தினவேலுச் செட்டியாரவர்கள், சென்னை.
,, அ. நா. முத்துக்குமாரசாமி செட்டியாரவர்கள், கூடலூர்.
,, P. தெய்வசிகாமணிச் செட்டியாரவர்கள், சென்னை.
,, ஆண்டவராய விஜய அருணசல வணங்காமுடி பண்டாரத்தார் அவர்கள், பாலவனம் ஜமீன்தார்.
,, அம்பலவாண நாவல சுவாமிகள், யாழ்ப்பாணம்.
,, கி இராஜு கிராமணியார் அவர்கள், மயிலாப்பூர்.
,, P. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள், செம்பியம்.

### சபைத்தலைவர்.

சித்தாந்த சரபம்-அஷ்டாவதானம்
சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திர சுவாமிகள், சென்னை.

### உதவிசபைத்தலைவர்.

ஸ்ரீமான்-J. M. நல்லசாமிப் பிள்ளையவர்கள், B. A., B. L.,
High Court Vakil, மதுரை.
,, T. நல்லசிவன் பிள்ளையவர்கள், B. A., B. L.,
High Court Vakil, சென்னை.

### காரியதரிசி.

ஸ்ரீமான்-K. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள். M. A, M. L, சென்னை.

### பொக்கிஷதாரர்.

ஸ்ரீமான்-W. T. கோவிந்தராஜ முதலியார் அவர்கள், சென்னை.

### பத்திராசிரியர்.

சித்தாந்த சரபம்-அஷ்டாவதானம்

சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திரரவர்கள், சென்னை.

(மணவழகு.)

### கணிதபரிசோதகர்.

ஸ்ரீமான்-S. விநாயக முதலியார் அவர்கள், B. A., சென்னை.

### உள்ளூர் நிர்வாக சபையார்.

ஸ்ரீமான்-கி. குப்புச்சாமி முதலியாரவர்கள்.

,, புழலை. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்.

,, M கந்தசாமி முதலியார் அவர்கள், B. A.,

### Monthly Auditor.

,, C. V. ஜம்புலிங்கம் பிள்ளையவர்கள்.

,, A. சிவப்பிரகாச முதலியார் அவர்கள், B. A.,

,, வல்லை-சண்முகசுந்தர முதலியார் அவர்கள்.

,, E. சுப்பிரமணியம் அவர்கள்.

,, C ஏகாம்பர முதலியார் அவர்கள்.

,, R. P. சேதுப்பிள்ளை அவர்கள், B. A.,

,, C. முருகேச முதலியாரவர்கள்.

,, M. மாசிலாமணி அவர்கள்.



### வெளியூர் நிர்வாக சபையார்.

ஸ்ரீமான்-T. A. இராமலிங்கம் செட்டியார் அவர்கள், B. A, B. L.,
கோயமுத்தூர்.

,, T. S சாமிநாதப் பிள்ளை அவர்கள், திரிசிரபுரம்.

,, S. சபாரத்தின முதலியார் அவர்கள், யாழ்ப்பாணம்.

,, இராஜவேலு முதலியாரவர்கள், B. A., வேலூர்.

மறைத்திருவன்-விருதை சிவஞானயோகிகளவர்கள்; கோயில்பட்டி.

ஸ்ரீமான்-P நடேச முதலியார் அவர்கள், செங்கல்பட்டு.

,, T-சபாபதி முதலியார் அவர்கள், கட்டியாம்பந்தல்.

,, K-U-பொன்னுசாமி முதலியாரவர்கள், உத்திரன்மேரூர்.

,, M. R. குமாரசாமிப் பிள்ளையவர்கள், திருக்கோவலூர்.

,, J. சாமிநாதப் பிள்ளையவர்கள், பெங்களூர்.

,, A. R அமிர்தலிங்கம் செட்டியார் அவர்கள், பூவாளூர்.

பிரமஸ்ரீ-சீநிவாச குருக்கள் அவர்கள், சேலம்.

ஸ்ரீமான்-P. C. முருகேச முதலியார் அவர்கள், காஞ்சிபுரம்.

,, காங்கேயம் அஷ்டாவதானம்-சேஷாசலம் நாயுடு அவர்கள்,
அவிநாசி,

,, P. முத்தையபிள்ளை அவர்கள், தூத்துக்குடி.

,, S பால்வண்ண முதலியார் அவர்கள், திருநெல்வேலி.

,, S. மெய்கண்ட பிள்ளை அவர்கள், நாகை.

,, E. சாமிநாதப் பிள்ளை அவர்கள், வேதமடம்.

,, M. வேலுசாமி தேவர் அவர்கள், இராமநாதபுரம்.

,, A. T. முத்துக்குமாரசாமி செட்டியாரவர்கள், கூடலூர்.

,, M. கதிரேசம் செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி.

,, P. L இராமசாமி நாயகரவர்கள், மிட்டாதார் பாகல்பட்டி.

,, C. மாணிக்க முதலியார் அவர்கள், புழலை.

,, K. முத்துக்கன்னிவேலு செட்டியார் அவர்கள், வாலாஜாபாத்.

### வனிதையர் வகுப்புக் காரியதரிசி.

ஸ்ரீமதி-ஆண்டாளம்மாள் அவர்கள், சென்னை.

———— :0: ————

## சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 1917ளு டிசம்பர் மாதத்தின் வரவு செலவு கணக்கு.

| வரவு. | தொகை. ரூ. | அ | ப | செலவு. | தொகை. ரூ | அ | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 1917ளு நவம்பர்மீ 30உ இருப்பு ... | 254 | 3 | 7 | அச்சுக்கூலி (அக்டோபர், நவம்பர்) ... | 37 | 12 | 0 |
| ஆயுள் சமாசிகர் சந்தா ... | 60 | 0 | 0 | காகிதம் ... | 24 | 6 | 0 |
| சாமாசிகர் வருட சந்தா ... | 18 | 0 | 0 | தபால் செலவு முதலியன ... | 24 | 0 | 9 |
| | | | | லிகிதர் சம்பளம் ... | 20 | 0 | 0 |
| | | | | | 106 | 2 | 9 |
| | | | | டிசம்பர்மீ 31உ இருப்பு | *226 | 0 | 10 |
| | | | | *ஆயுள் சமாசிகர் சந்தா ரூபா 555-0-3 | | | |
| ஆக மொத்தம்... | 332 | 3 | 7 | ஆக மொத்தம்... | 332 | 3 | 7 |

K. Kuppusawmy Mudaliar. M. Kandasawmy Mudaliar, B. A., W. T. Govindaraja Mudaliar.

OFFICE OF THE ... OF BOOKS
4-JUN 1918
MADRAS

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி எ.] 1918ளு பிப்பிரவரியீ பகுதி-[உ

## சாந்தோக்யோபநிஷத்து.

### ஆருவது பிரபாடகம்.

### கண்டம் அ.

க. உத்தாலகர் தன் புத்திரனாகிய ச்வேதகேதுவை நோக்கி ஐய! ஒருவன் நித்திரை செய்கையில் சத்துடன் சம்பிரமமாய்க் கூடியிருக்கிறான். தன்னையே அடைந்திருக்கிறான்.

உ. கயிற்றினாலே கட்டப்பட்டிருக்கிற ஒரு பறவையானது எட்டுத்திக்கிலும் கிளம்பிப்போக முடியாமல், மறுபடியும் தன்னைக்கட்டிய இடத்திலேயே வந்து சேருகிறது, அங்ஙனமே பிராணனில் கட்டுப்பட்டிருக்கிற மனமானது பல திசையிலும் சென்று மறுபடியும் பிராணனை வந்தடைகிறது.

௩. ஒருவன் சாப்பிட இச்சிக்கிறான் என்பது கௌணமாத்திரமே சாப்பிடும்படி அன்னத்தை நீர் நடத்துகிறது. மாட்டினை, குதிரையை, மனிதனை நடத்துகிறவன் என்று சொல்லப்படுவதுபோல, அன்னத்தை நீர் நடத்துகிறது. அன்னத்தால் முளைத்த மூளை இச்சரீரம்.

௪. சரீரத்திற்கு அன்ன மூளை, அன்னத்திற்கு நீர் மூளை, நீரினுக்கு ஒளி மூளை, ஒளிக்குச் சத்து மூளை. சத்திலிருந்து மனிதர்கள் உற்பத்தியாகி பிழைத்து, சத்தினையே அடைகிறார்கள்.

மெய்கண்டசாத்திரம் பதினன்கு மூலம் விலை அணு 3.

௫ புருஷன் நீரைக்குடிக்கவில்லை, ஒளி குடிக்கிறது. எங்ஙனமெனின்? நீரை ஒளி நடத்துகிறது.

௬. ஆகவே யாவற்றிற்கும் சத்தே மூலம். சத்திலிருந்து யாவுமுண்டாகித் தங்கி லயமடைகிறது. இம்மூத்தேவதைகளும் ஒரு புருடனை யடைந்து, புருடன் இறந்தபின் வாக்கு மனதையடைகிறது. மனது பிராணனை யடைகிறது, பிராணன் ஒளியை யடைகிறது. ஒளி பரமாத்வை யடைகிறது. இப்பரமாத்மா சகல புவனத்திற்குங் காரணமான அணுரூபமான வஸ்து.

௭. சகல சகத்திலு மாத்துமாவுள்ளது. அது சத்தியம் அது நீயா யிருக்கிறாய்.

## கண்டம் ௯.

பல தலங்களிலிருக்கிற பல விருட்சங்களிலுள்ள இரசங்களைச் சேகரித்து ஒரு ரசமாக்கியதேனைத் தேனீக்கள் உண்ணுகின்றன.

௨ ஒவ்வொரு இரசமும் தானின்னமரத்தின் இரசமெனத் தானறிகிறதில்லை அங்ஙனமே எல்லா மனிதாகளும் சத்தினையடைந்தும் சத்தினைச்சேர்ந்து விட்டோமென அறிகிறதில்லை.

௩. அவரவர்கள் கன்மத்திற்குத் தக்கபடி இவ்வுலகத்திற்கு வந்து பல பிறவிகளை யெடுக்கிறார்கள்.

௪. எல்லா ஆன்மாக்களிடத்தும் பரமாத்துமா நிறைந்திருக்கிறான். அப்பரமாத்மா சத்தியம், அவரை ஆத்மாவென்றும் சொல்லப்படும். அவர் நீயாயிருக்கிறாய்.

## கண்டம் ௧௦.

* சமுத்திரத்தினின்றும் மேகமூலமாக உதித்த நதிகளும் நதங்களும் மறுபடியும் சமுத்திரத்திலேயே லயமடைகின்றன. சத்திலே யிருந்து வந்த ஆன்மாக்கள் சத்திலேயிருந்து வந்தோமென்பதை மறந்தபடியால் பல மிருகமுதலிய பிறப்புகட்கு ஏதுவாகிறார்கள்.

## கண்டம் ௧௧.

ஒரு மரத்தின் அடியிலாவது, இடையிலாவது, நுனியிலாவது வெட்டினால் சாரமாத்திரம் வடிகிறது மரம் கெடுகிறதில்லை. மரம் நீரைக்குடித்துக்கொண்டு சௌக்கியமாகவே யிருக்கிறது.

* சமுத்திரத்தினின்றும் மேகமுண்டாவது இல்லை. சமுத்திரத்திலுள்ள நீரிலிருந்து மேகமுண்டாவதுபோல, பிரமத்திலிருந்து ஜீவனுண்டாவது இல்லை. பிரமத்தில் வியாப்பியமாகவுள்ள மாயையிலிருந்து ஜீவனுண்டாகிறது.



௨. மரத்திலுள்ள ஜீவன் போய்விட்டால் மரம் பட்டுப்போகிறது.

௩. ஜீவனால் விடப்பட்ட இத்தேகம் நசிக்கிறதேயன்றி ஜீவன் நசிக்கிறதில்லை. அச்சீவன் அணு. ¶

## கண்டம் ௧௨.

பிதா—ஒரு ஆலம்பழத்தைக் கொண்டுவா
புத்திரன்—கொண்டுவந்தேன்
பிதா—அப்பழத்தைப் பிளவுசெய்
புத்திரன்—பிளவுசெய்தேன்
பிதா—அதிலென்ன விருக்கிறது
புத்திரன்—பல வித்துக்களிருக்கின்றன
பிதா—அவற்றில் ஒரு வித்தையெடு
புத்திரன்—ஒரு வித்தை யெடுத்தேன்
பிதா—அவ்வித்தைப் பிளவுசெய்
புத்திரன்—பிளவுசெய்தேன்
பிதா—அதிலென்ன விருக்கிறது
புத்திரன்—ஒன்று மில்லை

பிதா—இங்ஙன மொன்று மில்லாதுபோலக் காணப்படுகிற சூட்சுமத்திலிருந்து பெரிய ஆலமரமெப்படி தோன்றுகிறதோ? அங்ஙனம் அதி சூட்சுமமான சத்தில் (மாயை) இருந்து பிரபஞ்சமுண்டாகிறது.

மணவழகு.

## நீதி.

அர்த்தாநாம் ஆர்ஜநே துக்கம்
ஆர்ஜிதநாம துரட்சனே
நாசே துக்கம் வர்யே துக்கம்
கிமர்த்தமது கபாஜநம்.

பொருள் தேடும்போதும் துக்கம், தேடிய பொருளைக் காப்பாற்றும்போதும் துக்கம், அப்பொருளழியும்போதும் துக்கம், அதைச் செலவு செய்யும்போதும் துக்கம் ஆகையால் எப்போதும் துயரத்திற்கே காரணமான பொருளின்மே லாசையேன்.

¶ ஆணவத்தால் ஆன்மாகட்டுப்படுதலின் ஆன்மா அணுவெனப்படும்.

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# சமயோற்பத்தி.

—— (o) ——

**தொகுதி - 7 - பகுதி - 1 - பக்கம் - 5 - தொடர்ச்சி.**

எந்தச் சிருட்டி யாரம்பகாலத்தும் கடவுளை அறியக்கூடிய ஆன்மிக உணர்ச்சியிற் சிறந்தார் உளர் ஆவர் என்பதும், ஆனது பற்றியே கடவுளுடைய சிருட்டித்தொழிலாகிய அருட்பிரபை சொலிக்கும் என்பதும், அவர்களை முதற்கட் டோற்றுவித்தலே (தனுகரணாதி கொடுத்து உற்பவிக்கச் செய்தலே) கடவுளுடைய கிருத்திய முறைக்குச் சிறப்புடைத்தாகு மென்பதும் இந்த விஷயத்தை நுண்ணறிவுகொண்டு ஆராய்வார்க்கு இனிது புலப்படும்.

லௌகிக முதிர்ச்சிபற்றி ஆன்மார்த்தவிருத்தி படிமுறையாகக் கீழ்நோக்கி அவரோகண கதியிற் செல்லுமிடத்து, பரங்கருணைத் தடங்கடலாகிய கடவுள் அக்கதியைத் தடுத்து, மீண்டும் முன்போல உயர்நிலையில் வைப்பர். இதுபற்றியே சதுர்யுக சக்கரம் சுழன்று சுழன்று மீண்டும் மீண்டும் நிகழ்ந்துகொண்டு செல்லும் என்று நமது சமயம் எடுத்து விளக்கும். ஆகவே உலகத்திலே ஆன்மிக உணர்ச்சி சிறிதுமில்லாத பிராணிகளே முதற்கட்டோன்றின என்றும், அந்தப் பிராணிகளுடைய அறிவு படிமுறையாகப் பரிணமித்து விருத்தியுற, அவ்வறிவில் நின்று சமயந்தோன்றிற்றென்றும் இந்தக் காலத்துள்ள பௌதிக ஞானிகள் வாதிப்பது சிறிதும் ஏற்புடைத்தாகாதென்க.

இன்னமும், இந்தப் பௌதிக ஞானிகள் சமயக்கிரமத்தையும் பௌதிகமுறைகொண்டு அளக்கத் துணிவது பெரியதோர் அபத்தமாம். இவர்கள் பெற்றுள பௌதிக ஞானந்தானும், உலகத்திலே ஒரு அற்பகால எல்லையில் நிகழ்ந்த நிகழ்ச்சியளவில் கட்டுண்டு கிடப்பதன்றி, அதனுக்கு அப்பால் செல்வதில்லை. அதனுக்கு அப்பாலுக்கும் அப்பாலாயுள்ள தைவிக முறைகொண்டு தோன்றிய சமயத்தை உலகத்தின் ஒரு அற்பகால நிகழ்

**சிவஞானபோத வசனாலங்காரதீபம் விலை ரூபா 2—8—0.**



ச்சி பற்றிப் பெற்ற பௌதிக ஞானத்தால் அளவிடத் துணிதல் பெரும் பேதைமையாகும். அல்லாமலும் ஆன்மார்த்தவித்தை Spiritual Science) பௌதிக வித்தையின் (Material Science) வேறானதொன் றென்பதை இவர்கள் சிந்திப்பது மில்லை. இதை இவர்கள் சிந்திப்பதுண்டாயின், ஆன்மார்த்த வித்தையாகிய சமயம் லௌகிகமுறையாற் றோன்றத் தக்கதன் றென்பதும், அது தைவிகமுறையாற்றானே தோன்றற்குரியதென்பதும் இவர்களுக்குத் தெள்ளிதிற் புலப்படும்.

இனி, கடவுள் அறிவுக்கறிவாய் விளங்கும் நிர்க்குண சொரூபத்தை மாத்திரமன்றி, வடிவு தொழில்களையுடைய தடத்த சொரூபத்தையும் உடையர். இங்ஙனம் இல்லையாயின் அவருடைய பிரயோசனம் பெரிது குறைவுற்றிடும். இந்தத் தடத்த வடிவு அவருக்கு உண்டாமாயின், அந்த வடிவின் வாயிலாக அவர் எமக்கோர் சமயத்தைப் பிரசாதித்திருப்பர் என்பது சந்தேகமின்றி நாட்டப்படும். அறிவுக்கறிவாய் நின்று அவர் உணர்த்துதன் மாத்திரையால் உண்மைப்பொருளை எல்லாரும் எளிதின் அறியும் பக்குவமுடையார் அல்லர். அறிவுக்கறிவாய் நின்று உணர்த்துதலினும், ஒரு வடிவுகொண்டு உண்மையை உபதேசித்தல் பலர்க்குப் பெரும்பயனுடைத்தாம். இந்தப் பெரும்பயனைக் கடவுள் எமக்குத் தாரா தொழியமாட்டார்.

கடவுள் உணர்வுக்குணர்வாய் நின்று உணர்த்துதன் மாத்திரையால் உண்மையைக் காண்டற்குரிய பக்குவமுடைய ஆன்மாக்களும் உண்டு இவர்களே விஞ்ஞானகலர் எனப்படுவர். இவர்கள் மாயை கன்மங்களில்லாதவர். மாயையிற்றோன்றிய பௌதிகங்களாகிய மாயேயங்களும், ஆன்மாக்கள் செய்துகொண்ட கன்மசேடங்களாகிய பிராரத்தங்களும் ஒருங்குசேர்ந்து நடக்கும் பௌதிகங்களால் தாக்குண்ணும் சகலராகிய நாம், இந்த மாயேயங்களாலும் கன்மங்களாலும் மயங்கி உண்மையைக் காணமாட்டாது நிற்பேமாதலால், எம்மைக் கடவுள் உணர்வுக்குணர்வாய் நின்று உணர்த்துதன் மாத்திரையால் நாம் திருவருண் முறையைக் காண்பது கூடாது. ஆனது பற்றியே கடவுள் குருமூர்த்தமாக எழுந்தருளி வந்து எமக்குச் சமயோபதேசஞ் செய்தருள்வரென்று நமது சமயம் விளக்கிக் காட்டும். இதுவே அறிவுடையார்க்கு ஏற்புடைத்தாகிய துணிபாகும்.

**தேவாரம் வேதாசாரம் விலை ரூபா 3—0—0.**

இன்னமும், இவ்வுலகத்துள்ள மானுஷ்ய அறிவாற்றலே நாம் ஆராய்வதுண்டானால், அவ்வறிவு, தனக்கதீதமாகிய கடவுளுண்மையையும், அவருடைய சிற்சொருப இலக்கணத்தையும், அவரை யடைதற்குரிய சூக்கும உபாயங்களையும், யாரேனும் ஒருவர் அறிவிக்க அறிந்தாலன்றித் தானாக அறியுந் தரமுடைத்தன்றென்பது நன்குபெறப்படும் ஆகவே கடவுளையும், அவருடைய சொருபவியல்பையும், அவரை யடையும் முறையையும் பிறருடைய உதவியின்றி மனிதன் தானாகக் கண்டான் என்பது ஒருவாற்றானும் பொருந்தாது. குருவின்றிக் கற்பாரில்லை. இருளில் அமிழ்ந்திக்கிடப்பான் ஓர் குருடன் பிறருடைய உதவியின்றி ஒருதேசத்தை யடைவது கூடாது. மாயாவிருளின் மயங்கிக் கிடக்கும் மனிதர் தாமாகப் பதிஞானமாகிய அதிசூக்குமத்துறையைக் காண்பது ஒரு சற்றுங் கூடாது. இந்தத் துறையை யாவனாயினும் ஒருவன் அரிதினும் அரிதாகக் கண்டு பிறர்க்குரைத்தானாயினும், அந்தப் பிறர் எல்லாம் அவனை நகையாடி இகழ்வாரன்றி அவனுடைய காட்சியை உண்மைக் காட்சியென்று நிராக்ஷேபமாகக் கைக்கொள்ளமாட்டார்கள். உலகத்திலே சரித்திரக்காட்சிக்கும் அப்பாலுக்கப்பாலாயுள்ள காலந்தொட்டுச் சனங்கள் பலராலும் கடவுளுண்மை கைக்கொள்ளப்பட்டு வருதலால், அந்தக்கொள்கை எல்லாச் சனங்களாலும் அங்கீகரிக்கத்தக்கதாக ஒரு விசேட தைவிகமுறையாற்றானே தோன்றியிருத்தல் வேண்டும் என்பது நன்கு துணியப்படும்.

அன்றியும், உலகத்திலே லௌகிக இயற்கை முறையாக மானுஷ்ய அறிவு படிமுறையின் விருத்தியுற்று, அந்த அறிவில் நின்றே காலாந்தரத்திற் சமயந் தோன்றிற்றென்றால், அது தோன்றுமுன் பல்லூழி காலங்காறும், மனிதர் கடவுளுண்மையைப் பற்றிய அறிவு சிறிதுமின்றி, விலங்கினங்களையொத்து வாழ்ந்தார் என்றாகி எனவே, ஆதியிலே பூமியில் அறிவு பெரிதுங் குறைந்த அற்பபிராணிகளே தோன்றி, அந்தப் பிராணிகளில் நின்று, பிறபிராணிகள் பரிணாமமுறையாகப் படிப்படி உருத்திரிந்தமைந்து அவற்றுள் ஒன்றாகிய வானரத்திருந்து மனிதன் தோன்றினான் என்று சில காலத்துக்கு முன்னிருந்த டார்வின் (Darwin) என்பார் ஓர் பண்டிதர் துணிந்த துணிபே உண்மையாம் என்றபடியாகும். இந்தப் பண்டிதருடைய துணிபே இக்காலத்துள்ள பௌதிக ஞானிகளுக்கு மிக மேலாகியதோர் பரம சத்தியமாய்விட்டது. பரிணாம சித்தாந்தம் நமது சமயத்துக்கு மாறாயதன்றாயினும், உலகத்துள்ள பிராணிகள் அனைத்தும் இந்தப் பரிணாமமுறை

செய்யுளிலக்கணம் விலை அணா 0—8—0.



யாகவே அமைந்தன என்று சொல்வதற்கு எந்தச்சமயமும் இடந்தரமாட்டாது. லௌகிக தருமத்தை எடுத்துவிளக்கும் இயல்நூற்றுறைகள் தாமும் இந்தக் கொள்கையை நிறுத்திச் சாதிக்க வல்லுன வல்ல. கடவுளுடைய சந்நிதியிலே எந்தக்காலத்தினும் அவரை அறியும் அறிவுடையாரும் இருத்தலே, அனைவரும் அவ்வறிவில்லாதவராக இருத்தலினும் சிறப்புடைத்தாகும். இந்தச் சிறப்பு யாதொரு காலத்திலே இல்லாதிருந்ததென்றால், அதாவது கடவுளுண்மையை ஒரு சிறிதும் ஒருவராவது அறியாத காலம் ஒன்றிருந்ததென்றால், அது கடவுளுடைய சந்நிதான விசேடத்துக்குப் பெரியதொரு குறைவாக முடிந்திடும். இந்தக் குறைவு கடவுளுடைய சந்நிதியில் இருத்தல் கூடாதாதலால், கடவுளுண்மையை அறிதற்குரிய மனிதர் உலகத்தில் எந்தக்காலத்தும் உளராதல்வேண்டும் என்பதும், அங்ஙனமான மனிதரைக் கடவுள் ஆதியில் சிருட்டித்த பொழுதே அவர்களுக்குத் தமதுண்மையை விளக்கும் சமயத்தையும் பிரசாதித்திருப்பர் என்பதும், எனவே ஆதியிலே சமயம் கடவுளாற்றானே கொடுக்கப்பட்டதென்பதும் நன்றாக நாட்டப்படுமென்க.

கடவுள் ஒரு சமயத்தைத் தந்தருளினார் என்றால், அந்தச் சமயம் மனிதருடைய அறியாமை காரணமாக விகற்பமடையுமிடத்து, அதனைத் தந்த கடவுள் பார்த்துக்கொண்டிருப்பாரா என்றும் சிலர்வினாவுதல் கூடும், சமயம் விகற்பமுறுதல் அவ்வக்காலத்துள்ளாருடைய பக்குவபேதம் பற்றி. அந்தப் பேதந்தானும், அவர்கள் படிமுறையாகக் கடைத்தேறுதற்கு வேண்டப்படுமாதலால், கடவுள் அந்தப் பேதத்தைத் தடுத்திடமாட்டார். உண்மையை உற்றுநோக்குமிடத்து இந்தப் பக்குவமாகிய வேறுபாடுதானும் கடவுளுடைய திரோதானசத்தியாற்றானே உலகத்தில்நிகழ்ச்சியுறும். இதுபற்றியே உலகம்மையாராகிய உமாபிராட்டியாரை "சமயத்தலைவி" என்று நமது சமயஞ் சாதிப்பது. இதுபற்றியே நமது சமயத்துக்குரிய ஷட்தரினங்களும் உளவாயின. இந்தவேறுபாடு வேண்டப்படுதல்பற்றி, கடவுளை யாதொரு காலத்திலே ஒருவாற்றானும் அறியாமையும் வேண்டப்படும் என்பது பெறப்படாது. அது பெறப்படுமாயின் கடவுளுடையசந்நிதிவிசேடம் பங்கமுற்றிடும்.

இனி, கடவுளுண்மையை அறியும் அறிவுடையார் உளராவது, அந்தக் கடவுளுடைய சந்நிதிவிசேடத்துக்கு வேண்டப்படுவதாயின், மனிதர் எல்லாரும் அந்த அறிவு கொண்டு விளங்குதல் அந்த மகிமைக்குப் பின்னும் சிறப்பைத் தந்திடுமன்றே எனச் சொல்வீராயின், உலகத்திலே அறிவின்மையும் வேண்டப்படும். என்னை? அறிவின்மைபற்றியே சிற்றறிவினராகிய மனிதர் அறிவுண்மையின் மகத்துவத்தை அறிந்து கடவுளுடைய சிற்சொருபத்தை அனுபவித்தல் கூடும். அவர்களுக்கு விகற்பங்களும் வேண்டப்படும். விகற்பங்கொண்டே நிருவிகற்பராகிய கடவுளுடைய திப்பிய நலத்தை சிற்றறிவினராகிய மாந்தர் அனுபவித்தல் கூடும்.

தாயுமான சுவாமி பாடல் மெய்கண்ட விருத்தியுரை ரூபா ௩—௮—0

ஆகவே கடவுளுண்மையைப்பற்றிய அறிவில்லாரும், அந்த உண்மைமையைப் பலவாறு விளங்கிக்கொண்டாருமாகிய பலரும் கடவுளுடைய சந்நிதிக்கண் விளங்குதலால், அந்தச் சந்நிதியின் பெரும்பிரயோசனம் விளங்குவதன்றி, அதனுக்கோர் குறைவெய்திடமாட்டாது. அந்தச் சந்நிதியின்கண்ணே கடவுளுண்மையை அறிவார் ஒருவரும் இல்லாதவழி, அந்தச்சந்நிதானம் இருளடைந்துவிடும்.

கடவுள் சந்நிதானத்தின்கண்ணே அவரை அறிவார் சிலரேனும் உளராவது அவரை அறிவார் ஒருவரும் இல்லாமையினும் சிறந்ததென்பதை மறுத்தல் கூடாது. அந்தச் சந்நிதிக்கண்ணே கடவுளை அறிவார் ஒருவரும் இல்லாதிருத்தற்கோர் அவசியம் இல்லை ஆகவே கடவுளை அறிவார் சிலருளராதலாற் பெறப்படும் சிறப்புக் கட்வுள் சந்நிதானத்திலே எந்தக்காலத்திலாவது இல்லாதிருந்ததென்றால், அது அந்தச் சந்நிதானத்துக்கும், அதுவாயிலாகக் கடவுளுக்கும் ஓர் குறைவை நாட்டிவிடும் என்க. கடவுளுடைய சந்நிதானத்திலே அறிவறியாமைகளும், விகற்பநிருவிகற்பங்களும் விரவுற்றுவிளங்குதலே இந்தப் பெத்தநிலையிற் பிரயோசனங் குறித்ததாதலால், இந்தப் பிரயோசனம் அவருடைய பூரணத்துக்குப் பேரனுகூலமாகும். இங்ஙனமின்றி, கடவுளை அறிவார் ஒருவரும் இல்லாததொருகாலம் இருந்ததென்றால், அங்ஙனம் ஒருகாலம் இருத்தற்கோர் அவசியம் இன்மையின், அது கடவுளுக்குப் பெருங் குறைவாகுமென்க.

இங்ஙனமாயின் கடவுளை அறியார் சிலர்மாத்திரம் இருக்கலாம்; அவரை அறியார் பலருளராவது அவருடைய சந்நிதான விசேடத்துக்கோ இழுக்காகாதோ என்பீராயின்; கடவுளையறியார் சிலரும் பலருமாக இருப்பதெல்லாம் அவ்வக்காலத்துக்கும் வேண்டப்படும் அறிவளவுபற்றி. இந்த அறிவளவுதானும் ஆன்மாக்கள் கடைத்தேறுதற்கு வேண்டப்படுவதோர் உபாயமாதலால், அறிவுடையார் சிலராதல்பற்றிக் கடவுளுடைய சந்நிதிவிசேடம் இழுக்குற்றிடாதென்க.

ஆகவே கடவுளை ஒருசிறிதும் அறியாத மாக்கள் பூமியின்கண் இருந்ததொரு காலம் உண்டென்பது ஒருவாற்றானும் பொருந்தாதென்பதும், அவரை அறிவார் பூமியின்கண்ணே எப்பொழுதும் இருந்தார் என்பதும் அங்ஙனம் கடவுளை அறிவார் பூமியின்கண் எப்போதும் இருந்தாராக, அவர்களுக்குக் கடவுள் ஒரு சமயத்தைக் கொடாதொழியார் என்பதும், எனவே கடவுள் வாயிலாகத்தானே சமயம் உற்பத்தியாயிற்றென்பதும், கடவுளுண்மையை விசுவசிப்போ ரெல்லாம் தப்பாது கைக்கொள்ளுதல் வேண்டும் என்க.

ச. சபாரத்தின முதலியார்,
யாழ்ப்பாணம்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# திராவிடரின் அதிநாகரீகமும் அவர் சமயமும்.

:o:

## திராவிடர் என்பவர் யாவர்?

ஆரியவர்த்தம் என்று அழைக்கப்படும் இவ்விந்தியதேசமானது ஓர் காலத்தில் ஒரு ஆரியர் கூட உடைத்தாயிருக்கவில்லை. ஆரியர் தமது பூர்வஸ்தானமாகிய மத்திய எசியாவினின்றும் குளிர் மிகுதியினாலும் ஜனநெருக்கத்தினாலும் இந்தியாவினுட் பிழைக்கப் புகுந்தனர். முதன் முதல் சிந்து நதிக்கரையில் வந்து குடியேறினாராதலால் "சிந்து" அல்லது "இந்து" என்று மற்ற அயல் ஜாதியாரால் பெயரிட்டு அழைக்கப்பட்டனர். ஆரியர் இந்தியாதேசத்துட் பிரவேசிப்பதற்குப் பல்லாயிரமாண்டுகளுக்கு முன் இந்தியாமுழுமையும் பரவி ஆண்டு பூர்வ குடிகளாய் நீடித்தகாலம் வசித்து வந்த ஜாதியார் திராவிடரெனப்படுவர். தற்காலம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் முதலிய பாஷைகளைத் தாய்ப்பாஷையாக உடைய ஜாதியாரனைவரும் இத்திராவிட ஜாதியாரின் சந்ததிகளே யாவர். இத்திராவிட ஜாதியார் ஆதியில் பேசிவந்த பாஷை தமிழே யாதலால் இவர்களைப் பூர்வீகத் தமிழர் என்றே சொல்லவேண்டும். இத்திராவிட ஜாதியார் பிற்காலத்தில் பல கிளைகளாகப்பிரிந்து இந்தியாவிற் பற்பல பாகங்களில் ஒருவரோடொருவர் சம்பந்தமின்றி வெகு காலமாகக் குடியேறியிருந்தமையால் இவர்கள் பேசிவந்த தமிழ்ப்பாஷையும் காலக்கிரமத்தில் மாறுதலைடைந்தும் அந்நிய பாஷைகளோடு கலந்தும் வெவ்வேறு பாஷைகளாகத் தோன்றின. ஆனால் தமிழ் நாட்டிலுள்ள வேளாளர்மட்டிலும் தமது பூர்வீக திராவிட பாஷை, ஜாதி ஆசாரம் சமயம் முதலியவற்றில் இன்றைக்கும் அதிகமாய் மாறுபடாது இருந்து வருகின்றனர். ஆதலால் இத்திராவிட வேளாளரின் பூர்வீக சரித்திரத்தை ஆராய்ச்சி செய்தலே திராவிடரின் ஆதிநிலைமையை ஒருவாறு விளக்குவதாகும். அவ்வித ஆராய்ச்சியின்கண் அகப்படும் உண்மைகள் யாவும் சற்று ஏறக்குறைய மற்றெல்லாத் திராவிடருக்கும் பொருந்தும்.

---

பகவத்கீதார்த்த பங்கம் விலை அணா—1.

## திராவிட வேளாளரின் ஜாதி இயல்பு.

இவர்கள் மிகுதியும் தென்னிந்தியாவில் வேளாளர் என்றும் முதலிமாரென்றும் கார்காத்தார் என்றும் மூன்றுபிரிவாகக் காணப்படுகிறார்கள். ஆனால் இம்மூவரும் ஆதியில் ஒரே குடும்பத்தினரென்பதும் சிற்சில காரணங்களினால் பிரிவுபட்டுப் பெயர் மாத்திரையில் வித்தியாசமடைந்தனரென்பதும் அவர்களுடைய முன் சரித்திரத்தால் வெளிப்படுகின்றது. வேளாளர் முழுவதும் தமிழ் நாட்டாரே. இவர்களுள் பெரும்பான்மையர் சைவசமயத்தவராயும் சிறுபான்மையர் வைஷ்ணவராயும் சொற்பமாய்ச் சமண மதத்தைத் தழுவியுமிருக்கிறார்கள். ஆசார ஒழுக்கங்களில் இவர்கள் ஆரிய பிராமணரிலும் மேலான அநுஷ்டானங்கள் உடையவர்கள், மது மாமிசம் எக்காரணம் பற்றியும் ஒருபோதும் கொள்ளார்கள். விதவாவிவாகம் என்றைக்கும் செய்வதில்லை. இன்ன இயல்புகளையுடைய வேளாளர் தற்காலம் வழங்கிவரும் ஜாதிப்பாகுபாட்டில் எதனைச் சேர்ந்தவர்கள் என்பதும் மனிதர் ஜனசமூகத்தில் இவர்களுடைய ஸ்தானம் எதுவென்பதும் இங்கு நாம் விசாரிக்கப்புகுந்த விஷயங்களாம். இவ்வித ஆராய்ச்சிக்குச் சரித்திரபூர்வமான ஆதாரங்கள் போதுமானபடியில்லை. அற்ப சொற்பமாயிருந்தவைகளையும் ஆரியர் தாம் கட்டிய புராணக்கதைகளில் தங்களுக்கு அநுகூலமாகத் தோன்றியவாறெல்லாம் உண்மையைத் திரித்தும் பேதப்படுத்தியும் எழுதிக்கொண்டார்கள். ஆயினும் பூர்வீக சரித்திரங்களை ஆராய்ச்சி செய்வதில் மிகுந்த திறமையும் பொய்த் தொகுதியினின்று உண்மையைத் தெரிந்தெடுப்பதில் மிகுந்த புத்திநுட்பமுமுடைய ஐரோப்பிய நிபுணர்களின் வழிகளைப் பின்பற்றி இந்த ஆராய்ச்சி ஈண்டுச் செய்யப்படும். வேளாளரின் பூர்வீக நிலைமையை உள்ளபடி அறிவதற்கு அவர்களுடைய பாஷையும் அவற்றிலுள்ள பண்டைக்காலத்து நூல்களும் அவர்களுடைய புராதன வழக்கங்களும், அவர்களுள் கர்னபரம்பரையாய்ச் சொல்லிக்கொள்ளும் வசனங்களும் செப்புப்பட்டையங்களுமே நமக்கு முக்கிய ஆதாரங்களாம். இத்துணை சிறந்த சாக்ஷியங்கள் ஆராயுமிடத்து, வேளாளர் ஜாதி, பாஷை, ஆசாரம், சமயம் முதலியவற்றில் ஆரியரோடு கொஞ்சமும் சம்பந்தமில்லாத வேறு ஜாதியாரென்பதும் அவர்கள் பூர்வத்தில் திராவிடர் என அழைக்கப்பட்டு வந்தனரென்பதும் நன்கு நிச்சயிக்கப்படும் மேனாட்டுப் புலவர்களில் மேதாவியாகிய ஒருவரும் "எல்லாவிஷயத்திலும் மனிதர்களின் புத்தி கூர்மைப்படுத்தி விவேகி

திருநீற்றினுண்மை விலை அணா—4.



களாக்குவது சரித்திர ஆராய்ச்சியே" எனக்கூறியுள்ளனர். ஆதலின் திராவிடர் ஒவ்வொருவரும் இவ்வித சரித்திர ஆராய்ச்சியின்கண் அகப்படும் உண்மைகள் தமது உயிரினும் இனிதாகப் போற்றிப் பாராட்டக்கடவர்.

## ஆரியமும் தமிழும்.

ஆரியப்பிராமணர் சமஸ்கிருதத்தை எவ்விதம் தங்கள் சொந்த தாய்ப்பாஷையெனப் போற்றிப் பாராட்டி வருகின்றனரோ அவ்விதமே திராவிட வேளாளரும் தமிழைத் தமது சொந்த தாய்ப்பாஷையெனப் போற்றிப்பாராட்டி வருகின்றனர். சமஸ்கிருதத்தின் சிதைவாய் அதனின்று பிறந்த பாஷைகள் அநேகம் வட இந்தியாவில் வழங்கி வருதல்போல, தென் இந்தியாவில் பேசப்படும் தெலுங்கு, கன்னடம், துளுவம், மலையாளம் முதலிய பாஷைகள் எல்லாம் தமிழின் சிதைவாய் அதினின்று பிறந்தபாஷைகளாம், திராவிட தேசமென்பது திராவிடர் மிகுதியும் வசித்துவந்த தென்இந்தியாவுக்குப் பூர்விகமாய் அமைந்துள்ள பெயர். அத்தேசத்தில் வழங்கிவந்த பாஷைகளுக்கெல்லாம் தமிழ் தாய் மொழியாகவும் தலைமையாகவும் இருந்ததுபற்றி தமிழே திராவிடம் என சிறப்புப்பெயர் பெற்றது. இத்திராவிட பாஷையாகிய தமிழ் சமஸ்கிருதத்தைப்போல் மிகப் பழமையானதும் அதனோடு இயைபுபடாத ஓர் தனிப்பாஷையாம். வடமொழிச்சொற்கள் தமிழிலும், தமிழ்ச்சொற்கள் வடமொழியிலும் வழங்கி வருதல்பற்றி ஒன்று மற்றொன்றினின்று பிறந்ததாகச் சொல்வது முற்றிலும் (தப்பாம்) தவறான கொள்கை. தமிழும் சமஸ்கிருதத்தைப்போல் ஆதியாயுள்ள தனிப்பாஷை யென்பது அப்பாஷைகளுக்குரிய எழுத்து, சொல், இலக்கண இயல்புகளை ஒப்பிட்டு நோக்குவார் எவர்க்கும் எளிதில் புலப்படும்.

ஓர் பாஷைஉண்டாகுங்காலத்து முதன்முதல் பேசப்படும் வார்த்தைகள் "அம்மா, அப்பா, பிள்ளை, தம்பி," முதலிய குடும்ப முறைச்சொற்களும் "நான், நீ, அவன்" முதலிய இடப்பெயர்களுமேயாம். ஒவ்வொரு பாஷையும் உண்டாகும் காலத்து இவ்வார்த்தைகளே முற்பிறந்திருக்குமாதலால் அவற்றை உற்றுநோக்குமிடத்து அப்பாஷைகளின் ஒற்றுமையும் வேற்றுமையும் நன்கு தெளியப்படும்.

சிவலிங்க மகத்துவம் விலை அணா—4.

சமஸ்கிருதம்: மாதா, பிதா பிராதா, சுதா, அகம், வயம் துவம் அசௌ.
தமிழ்: அம்மா, அப்பா, தம்பி, பிள்ளை, நான், நாம், நீ, அவன்.

இவ்வார்த்தைகளெல்லாம் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் சிறிதும் ஒற்றுமையில்லாததுபற்றி அவை வெவ்வேறு பாஷைகளென்பது, துணியப்படும். ஆனால் தமிழிலும் அதனின்று பிறந்த மலையாளம் தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகளிலெல்லாம் இவ்வார்த்தைகள் ஒற்றுமையுடையன. இது போன்ற ஒற்றுமையுடையன சமஸ்கிருதமும் அதனின்று பிறந்த பாஷைகளும்.

இன்னும் சமஸ்கிருத மொழியின்கண்ணே, பால் வகுப்பு சொல் நோக்கத்தால் ஏற்பட்டுளதேயன்றி பொருள் நோக்கத்தால் ஏற்பட்டிலது. உதாரணமாக 'கை' எனப் பொருள்படும் "கரம்" என்ற சொல் ஆண்பால். 'மனைவி' எனப் பொருள்படும் சொற்களிலே "தாரம்" என்பது ஆண்பால்; "சலித்தாம்" என்ற சொல் அலிப்பால். இவ்வாறுளது வடமொழிபால் வகுப்பின்பிறப்பு, மற்று தமிழ் மொழியிலோ, பால்வகுப்பெல்லாம் பொருள் நோக்கத்தால் ஏற்பட்டுளதேயன்றி சொல்நோக்கத்தால் ஏற்படவேயில்லை. இது தமிழ்மொழியின் சிறப்புகளில் ஒன்று. வடநூல் முறைகுறைபாடுடையது. ஆரிய பாஷையோடு இயைபுபட்ட பாஷைகளெல்லாம் சொன்னோக்கம் பால்வகுப்பு குறைபாடுடையன. இவ்வுண்மையொன்றே தமிழ்மொழியின் தனிநிலையை நன்கு விளக்கும்.

வடமொழி, தமிழ்மொழி யிரண்டிலும் ஒருங்கே புலமை நிறைந்த ஆசிரியர் சிவஞானசுவாமிகளும் தமது "தொல்காப்பிய பாயிரவிருத்தி" யில் "தமிழ்மொழி புணர்ச்சிக்கள் படும் செய்கைகளும் குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும் அகப்பொருள் புறப்பொருள் முதலிய பாகுபாடுகளும், குறிஞ்சி முதலிய ஐந்தின் இலக்கணங்களும், வெண்பா முதலிய யாப்பிலக்கணங்களும் இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படா" என்று கூறியுள்ளார். இது யாவரும் நன்குணர்ந்தது; தமிழ் மொழியும் வேறே; இதன்கண் ஐயப்பாடு எள்ளளவுமில்லை.

இத்தகைய ஆராய்ச்சியாலும் இன்னும் பல நியாயங்கள் கொண்டும் தமிழும் சமஸ்கிருதமும் ஒன்றினின்று ஒன்று பிறவாத தனிப்பாஷைகளென்பது (Max Muller) மாக்ஸ் முல்லர் முதலிய பாஷாவிற்பன்னர்களா

சைவாகமப்பிரமாணியம் விலை அணா—12.



லும் ஒருவராலும் மறுக்கொணாதபடி நாட்டப்பட்டிருக்கிறது. அன்றியும், உலகத்தில் மனிதரால் பேசப்படும் மிகப்பொலிவும் திருத்தமும் சீர்மையுமுள்ள பாஷைகளுள் தமிழ் ஒன்றென்றும் அந்நிய பாஷைகளின் உதவி சிறிதுமின்றித் தனியே சிறந்து விளங்கும். ஆற்றலுடையதும் சில விஷயங்களில் வடமொழியினும் மேம்பட்டும் நீதிசாஸ்திரத்தில் அதை ஜெயித்த தாயுமுள்ள தென் தமிழ்ப்பாஷை (Caldwell) கால்டுவெல் முதலிய மேனாட்டு கவிஞராலும் சரித்திர நூல்வல்லாராலும் போற்றப்பட்டிருக்கிறது.

இனி, இத்தமிழ்ப்பாஷையானது சமஸ்கிருதத்தைப்போல ஓர் சிறந்த தனிப்பாஷையாயிருந்தபோதிலும் அதுபோல அத்துணைப்பழமையுடையதல்லவென்பர் சிலர். அவ்விஷயத்தையும் சரித்திர பூர்வமாய் ஆராய்ச்சி செய்தால், வடமொழியாகிய சமஸ்கிருதத்திலும் தென் மொழியாகிய தமிழே முற்பட்டதென்பதும், தமிழினின்றே அநேக இலக்கண விதிகளையும் ஒழுங்குகளையும் கிடைக்கப்பெற்றுச் சீர்திருத்தப்பட்டது. சமஸ்கிருதமென்பதும் பல நியாயங்களுடன் உணர்த்தப்படும். வட இந்தியாவில் சமஸ்கிருதம் தோன்றின காலத்தே, தமிழ் மொழியானது தென்தேசத்தில் நெடுங்காலம் நிலைபெற்றுத் தமிழரசராலும், இறையனாரிருந்த முதற்சங்கம் இடைச்சங்கத்தினராலும் போற்றிப் பரிபாலிக்கும்படியான மிகவுன்னதமான நிலைமையை அடைந்திருந்தது. அக்காலத்துச் செழித்து ஓங்கியிருந்த தமிழ்நாட்டுள் ஆரியரிஷிகள் புகுந்து தமிழரோடு நெருங்கிப்பழக ஆரம்பித்தனர். பழகித் தமிழ்மக்களால் நெறிப்படுத்தப்பட்ட இலக்கண விதிகளைத்தழுவித் தமது பாஷையாகிய ஆரியத்தையும் ஒருவாறு சீர்படுத்தினார்கள். அங்ஙனம் (சமஸ்=ஒழுங்கு; கிருதம்=படுத்துதல்) ஒழுங்குபடுத்தப்பட்ட பாஷையாதலால் சமஸ்கிருதமெனப் பெயர்பெற்றது. ஆரியர் தமிழரோடு பழகுவதற்கு முன்னர் செய்யப்பட்ட ருக்வேத பாஷாநடையானது இலக்கண ஒழுங்குகள் அமையப்பெறாமலும் அதன்பின்னர் செய்யப்பட்ட மற்றைய வேதங்களின் பாஷாநடையானது இலக்கண ஒழுங்குகள் அமைந்திருத்தலும், இதன் உண்மையை வலியுறுத்தும். மேற்கூறப்போந்தவைகளால் தமிழும் சமஸ்கிருதமும் ஒன்றனோடு ஒன்று கொஞ்சமும் சம்பந்தமில்லாத வெவ்வேறு பாஷைகளென்பது நாட்டப்பட்டது. ஆகவே அப்பாஷைகளுக்குரிய தமிழரும் ஆரியரும் வெவ்வேறு ஜாதியாரென்பதும் நன்கு உணரப்படும்.

(அடுத்த மாதத்திற்கு தமிழரின் வியாபகமும் நாகரீகமும்)

C. சங்கரராயர், B. A.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அத்துவிதம்,

தொகுதி - எ - பகுதி - க - பக்கம் - கஉ - தொடர்ச்சி.

இதில் முன்னர் யூசித்தறியவேண்டியது ஒன்றுளது. ஆதாவது ஆனந்தம். ஆனந்தம் என்பது நித்தியானந்தம், அனித்தியானந்தம் என இரு வகைப்படும். நித்தியானந்தம், என்றும் நீங்கப்பெறுத ஆனந்தம். அனித்தியானந்தமாவது, சிறிது காலந்தோன்றி மறைந்துவரும் ஆனந்தமாம். இவை முறையே காதன்மடந்தையரைக் கலந்தவழியும், கலவாது காண்டல் மாத்திரையானே கொண்டதுமே நித்தியா நித்தியானந்தமாம். ஒப்புவமையில்லாத சதானந்தத்திற்குக் காதன்மடந்தையரது இன்பத்தை உவமிக்கலாமோ, அதுவுந்தோன்றி மறையுமின்பமே யாகுமன்றேவெனின் அற்றன்று. மகளிர்விழைவு நீங்கலாக மற்றைய வண்டல் உடுத்தல் மக்கண் மீது உண்டாம் விருப்பு முதலியவற்றிலுண்டாம் ஆனந்தம் சிறிது காலம் நின்றும், மறைந்தும் வரும். மகளிர் விழைவோ அப்படியன்று நேற்றுதுய்த்த போகந்தானே யென்று வெறுக்காது துய்க்குந்தோறும் போகம் புதிதாகக் காணப்படுதலின் அதற்குவமை கூறினும். இதுபற்றியே சமயாசாரியர்களுள் ஒருவராகிய ஸ்ரீமன் மாணிக்கவாசகர் திருக்கோவையாரில்,

> "உணர்ந்தாற்குணர்வரியான் றில்லைச்சிற்றம்பலத்தொருத்தன்
> குணத்தான்வெளிப்படின்சொவ்வைச்செவ்வாயின்கொடியிடைதோள்
> புணர்ந்தார் புணருந்தொறும்போகம்பின்னும்புதிதாய்
> மணந்தார்புரிகுழலாளல் குல்போலவளர்கின்றதே." எனக் கூறிய

வாற்றனுமறிக. இதனுல் சையோகமாத்திரையான்வரும் ஆனந்தமே சதானந்தமாம். இவ்வாறிருக்க ஸ்தூலரூபமாய் எழுந்தருளிய பரவாசுதேவரைப் புரியட்டகமெனுஞ் சூக்குமதேகத்துடன் அவருருவாகிய சாருபத்தைப்பெற்று ஸ்தூலமாய்ச்சேவித்து நிற்கும் நித்திய சூரிகளுக்கு நிகழும் ஆனந்தம் சதானந்தமெனக் கோடல் பொருந்தாது. இது வைதிகசைவத்துள் பதவிகளில் ஒன்றெனவழங்குப, அது அத்துவித முத்தியுமாகாது.

திருத்தொண்டர் வெண்பா (திருக்குறளுத்தரார்த்தமுடன்) விலை அணா—1



கலப்பினுல் உண்டாம் ஆனந்தத்தைப்பற்றி முன்னரே கூறியிருக்கின்றும் ஆங்கறிந்துகொள்க.

விதரேகமென அடைமொழி கொடுத்து விதரேகாத்துவிதமெனக் கூறுவாரது கொள்கையும் மேற்சொல்லிய விசிட்டத்துளடங்குமாதலால் அதுவே சான்றும்.

கேவலம் என்னும் அடைமொழி கொடுத்து வழங்கும் கேவலாத்துவித முத்திநிலையை ஆராய்வாம். இது ஆன்மாவென்று ஒன்றில்லை, பரமாத்மாவினது சொருபமே நான், சுகதுக்கங்கள் ஆன்மாவிற்கு விவகாரநிமித்தமே யல்லது பாரமார்த்திகத்திலில்லை, ரஜ்ஜுசர்ப்பத்தைக்கண்டவழி பிராந்தியினுல் மயங்கிப் பின்னர் பாம்பல்ல தாம்பே எனத்தெளிகின்றுனே அதுபோலவே உலகங்களும் மற்றவைகளும் எனக்கூறிநானே அவனுய் நிற்றலே அத்துவித முத்தி எனக்கூறும்; இவர் கூற்றும் பெரும்பான்மையாய்ச் சார்வாக மதத்தையே சார்ந்துநிற்கின்றதெனக் கொள்ளலாம்.

இனி கேவலாத்துவிதியின் கூற்றைப்போல், பரமாத்மாவே நான் என்றுல் பரமாத்மாவோ சுகரூபி நான் எனக்கூறும் ஆத்மாவோ துக்கரூபி, பரமாத்வோ இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கினவன், யானுகிய ஜீவான்மாவோ மும்மலங்களினுற் கட்டுண்டவன், பரமாத்வோ சர்வ சுதந்தரமுடையவன் யானே சுதந்தரஹீனன்.

இவ்வாறிருக்க, அத்துவிதம் என்று கூறிய இருக்குவேதத்தில் ஒன்று என்றுங் கூறியிருக்கின்றதே அதன் கதியாது எனக் கடாவுவாரும் உளர். இதற்குச் சந்தனுசாரியராய்ச் சித்தாந்தத்தை விளக்கவந்த ஞானபானுவாம் மெய்கண்டதேவர் விரிவாய் எடுத்துக்காட்டியிருக்கின்றுர். பதிப்பொருள் ஒன்றெனச் சுட்டிக்காட்டியதே யல்லது பசுவாகிய ஆன்மாவைப் பதியெனக்கூற வந்ததில்லையென ஒரு திருவெண்பாவினுல் நன்றுய் விளக்கியிருக்கிறுர். அது வருமாறு:

> "ஒன்றென்ற தொன்றேகா ணொன்றே பதிபசுவாம்
> ஒன்றென்ற நீபாசத் தோடுளேகாண்—ஒன்றின்றால்
> அக்கரங்க ளின்று மகரவுயி ரின்றேல்
> இக்கிரமத் தென்னு மிருக்கு"

மணவழகு சரித்திரம் (படத்துடன்) விலை அணா—4.

பிரமம் பிராந்தியினால் ஆன்மாவைப்போல் மயங்கிப் பின்னர் தெளிதல் என்பது காலத்திரயத்தும் இல்லை. ஆன்மா மாயைக்குவேறாகிய பிரமரூபமெனக் கூறப்புகின் சுகங்கண்டவழி களிப்பதும் கேடுவந்தவழி துக்கிப்பதுமாயிருக்கும் ஆன்மாவை எவ்வாறு பிரமமெனக் கூறலாம். இருக்கட்டும், அவர் கூற்றின்படியே ஆன்மா பிரமமாகிவிட்டதெனவே கொள்வோம், பிரமமாகவே முடிந்த ஆன்மாவிற்கு ஆனந்தமேது? கருப்புக்கட்டியைத் தின்ன அவாவுற்ற ஒருவன் அதைச் சமீபித்து உண்டாலன்றோ அவ்வுருசியினாலுண்டாம் ஆனந்தத்தையடைவன் அதைவிட்டுக் கருப்புக்கட்டியாகவே நின்ற ஒருவன் அதன் உருசியை அறிவனோ அறியமாட்டான், இது வெல்லப்பிள்ளையாரைப் பிரதிஷ்டித்து அதன் புஷ்டபாகத்தைக் கிள்ளி நைவேத்தியம் வைத்ததையே யொக்கும். ஆகையால் யானே பிரமமென்று கூறும் கேவலாத்துவிதமும் வேதத்திற் கூறிய சுத்தாத்துவிதமாகாது.

“ஐய! அவரவர்கள் ஏதோ விசிட்டம், விதரேகம் கேவலம் என்னும் அடைமொழி கொடுத்து வழங்கியதுபோலவே நீரும் சுத்தம் என்னும் சொற்பிரயோகத்தைப் புணர்த்தி அத்துவிதத்தைக் கூறினீரே அது யாது காரணம்பற்றி? பின்னை வேதத்திற்கூறிய அத்துவிதந்தான் என்னை?” எனக் கடாநிகழ்த்தின் விடைதருதும் மேற்கூறிப்போந்த மூவித அத்துவிதத்திலும் சேராததாய், சுத்தமாய், பண்ணையும் ஓசையும்போலவும், பழமுஞ்சுவையும் போலவும், கண்ணொளியுங் கதிரொளியும்போலவும், அவனேயாகிவிடாமலும், அவனுக்கன்னியமாயிராமலும், இரண்டென்றும் ஒன்றென்றும் சொல்லக்கூடாததாயும் விளக்கமுற்று ஆன்மா பெத்தத் திசையில் எப்படி ஆணவமலத்துடன் அத்துவிதப்பட்டிருந்ததோ அதே மாதிரியாய் முத்தித்திசையினும் சிவத்துடன் இரண்டறக்கலந்து அத்துவிதமாய் ஆனந்தத்துள் விளக்கமுறும் என்க.

சுத்தமாய் என்றது அடைமொழியல்ல சுத்தம் என்றால் அடைமொழியல்லாத பொருள் எதுவோ அதுவே சுத்தம் எனக் கூறப்படும். நல்லபாம்பு என்றவழி நல்ல என்னுஞ்சொல் அடைமொழியாகாது பாம்புகளிற் சிறந்தது என்னும் பொருளைத்தந்து நின்றது அதைப்போல சுத்தாத்துவிதம் என்றது திப்பிய அத்துவிதமென நின்றது. மேன்மைப் பொருளுக்கு அடைமொழி கொடுப்பது விசேட மல்ல எங்ஙனமெனின்,

Studies in Saiva Siddhanta Rs, 3—0—0.



“திருவளர்தாமரை சீர்வளர்காவிக ளீசர்தில்லை
குருவளர்பூங்குமிழ் கோங்குபைங்காந்தள் கொண்டோங்குதெய்வ
மருவளர்மாலையோர் வல்லியினால்கி யனநடைவாய்ந்
துருவளர்காமன்றன் வென்றிக்கொடிபோன் றொளிர்கின்றதே”

இத்திருச்செய்யுளுக்கு, உரையெழுதப் புகுந்த பேராசிரியர்

“மகளிர்க்கு உறுப்பிற் சிறந்த உறுப்பாகிய குசத்திற்கு உவமையாகப் புணர்க்கப்பட்ட அடைமொழி கொடுக்கக் கடவதன்றோவெனின், அடைகொடுப்பிற் பிற உறுப்புக்களுடன் இதனையும் ஒப்பித்ததாம். ஆகலான் இதற் கடைகொடாமையே குயத்திற்கு ஏற்றத்தை விளக்கிநின்றது. அது முற்கூறிய வகையில் திருக்கோயில், திருவாயில், திருவலகு என்றவற்றிற்கு நாயகராகிய நாயனாரைத் திருநாயனாரென்னாததுபோல” எனக் கூறிப்போந்ததே சான்றாம். ஆகையால் சுத்தம் என்பது அடைமொழியாகாது. அன்றியும் கேவலம், மறுதலை, விசிட்டம் என்னும் அடைகொடுத்த அத்துவிதம் என்னும் பிரயோகம் வேதத்திலும் உபநிடதங்களிலும் காணக்கிடையா. சுத்தாத்துவித பிரயோகமோவெனில் மண்டலப் பிராமணோபநிஷத் முதலியவைகளில் காணப்படுவதை வடமொழி வல்லார் வாய்கேட்டுணர்க.

பண்ணையும் ஓசையும்போலவென்றதும், பழமுஞ் சுவையும்போலவென்றதும் எதுக்கெனில், பண் என்பது ஒன்று, இசை என்பது ஒன்று, பண் இசையாகாது, இசை பண்ணாகாது; அதைப்போன்றே, பழம் என்பது ஒன்று, சுவை என்பது ஒன்று, பழம் சுவையாகாது, சுவை பழமாகாது. இவ்விதம் இரண்டாகக் காணப்பட்ட இவற்றுள், பண்ணினிடத்திருந்து இசையையும் பழத்தினிடத்திருந்து சுவையையும் பிரித்துப்பார்க்கலாமோவெனில் முடியாது அத்துவிதப் பட்டிருக்கும்.

அதுபோலவே ஆத்மா சிவத்துடன் கலந்த முத்தித் திசையில் மேற்கூறிப்போந்தபடி ஆத்மா வேறென்றும், சிவம் வேறென்றும் பிரிக்கக்கூடாததாய், ஆன்மாவே சிவம் என்றும் சிவமே ஆன்மாவென்றுஞ் சொல்லக்கூடாததாய் இரண்டறக் கலந்துநிற்பதே சுத்தாத்துவித முத்தியாம்.

கண்ணொளி கதிரொளிபோலவென்றது, கண்ணிற்குரிய வொளி சிற்றொளி சூரியனுக்குரிய ஒளி பேரொளி இவ்விரண்டொளியும் அத்துவைதப்பட்ட காலத்திற்றான் பிரபஞ்சங்காணப்படும். கண்ணொளியிருந்தும் கதி

ரொளி யில்லாவிடினும், கதிரொளி யிருந்தும் கண்ணொளி யில்லாவிடினும் பயனிலவாமெனக் கொள்க. கண்ணொளியுங் கதிரொளியும் அத்துவிதப் பட்டகாலத்து இதுதான் கதிரொளியென்றும், இதுதான் கண்ணொளி யென்றும் பிரித்துப் பார்ப்போமெனில் எப்படி பிரிக்கக் கூடாத்தன்மையைப்பெற்று விளங்குகின்றதோ அதைப்போன்றே முத்தித் திசையில் ஆன்மா சிவமேயாகிவிடாமலும் சிவத்திற்கன்னியமாயிராமலும் இரண்டறக்கலந்து சுத்தாத்துவித முத்தியைப்பெற்றிருக்குமென் றறிக. இதுதான் வேதத்தில் பிரதிபாதிக்கப்படும் அத்துவிதமாகும். இதைத் தான் தோத்திர ரூபமாகவும் சாத்திர ரூபமாகவும் வைதிக சுத்தாத்துவித சித்தாந்தத்தை விளக்கவந்த சைவ சமயாசாரிய திருஞான சம்பந்தாதி பிரபுக்களும் சந்தானாசாரியர்களாகிய மெய்கண்டதேவ .மெய்ஞ்ஞானிகளும் நாமெல்லோரும் வழிபடுவதற்காகத் திருவாய் மலர்ந்துள்ளார்.

அவை வருமாறு

திருநாவுக்கரசு சுவாமிகள் தோத்திரமாகிய திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

கண்ணவன்காண் கண்ணொளிசேர் காட்சியான்காண்
கந்திருவம் பாட்டிசையிற் காட்டுகின்ற
பண்ணவன்காண் பண்ணவற்றின் றிற லானான்காண்
பழமாகிச் சுவையாகிப் பயக்கின்றான்காண்
மண்ணவன்காண் டீயவன்கா ணீரானான்காண்
வந்தலைக்கு மாருதன்காண் மழைமேகஞ்சேர்
விண்ணவன்காண் விண்ணவர்க்கு மேலானான்காண்
விண்ணிழிதன் வீழி மிழலையானே.

மெய்கண்டதேவ நாயனார் சாத்திரமாகிய திருவெண்பா.

பண்ணையு மோசையும்போலப் பழமதுவு
மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமா—மண்ணரு
ளத்துவித மாத லருமறைக ளொன்றென்னா
தத்துவித மென்றறையு மாங்கு.

இவற்றானுண்மை தேர்ந்துய்க

Essentials of Hinduism 3-0-0.



புறச்சமயத் தவக்கிருளா யகச்சமயத் தொளியாய்
புகலளவைக் களவாகிப் பொற்பணிபோ லபேதப்
பிறப்பிலதா யிருள்வெளிபோற் பேதமுஞ்சொற் பொருள்போற்
பேதாபே தமுமின்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதா யுடலுயிர்கண் ணருக்க
னறிவொளிபோற் பிரிவருமத் துவித மாகுஞ்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவ
சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்றாம்.

---

மெய்கண்ட தேவர் மெல்லடி வாழ்க
சிவஞானயோகிகள் சேவடி வாழ்க.

வல்லை. சண்முகசுந்தர முதலியார்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவசமய மெய் மாட்சி.

பிறப்பாகிய கடலுள் வீழ்ந்து, துன்பமாகிய அலைகளால் அடியுண்டு, நிலை யிழந்து தத்தளித்துத் தடுமாறித்திகைக்கும் ஆன்மகோடிகட்குக் கலங்கரை விளக்கம்போல* நின்று அறவாழிஅந்தணன் தாள் சேர்வதற்குச் சாதனமாய் விளங்குவது சைவசமயமெனப்படும் நமது சமயமேயாகும். இத்தகைய சமயம், பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே, திராவிட சமுதாயத்திற் பிறந்து தமிழ் மக்களிடை வளர்ந்து, இந்தியநாடு முழுமையும் பரவிச் சிவமணம் கமழ்ந்து இப்பொழுது சைவநன்மைகளாலும், ஆங்கிலேய அமெரிக்க அறிவாளிகளாலும் பொன்னேபோற் போற்றப்பட்டு வருகின்றது. இக்காலத்தில் நாகரிகத்திலும், நூலாராய்ச்சியிலும் ஒப்பாரும் மிக்காருமின்றி உயர் வுற்றிருப்பதாகப் பல்படப் பாராட்டும் சமுதாயங்கள் அஞ்ஞானமென்னும் அந்தகாரத்தில் அமிழ்ந்து கிடந்தகாலத்தே, நமது

* Lighthouse.

திராவிடசமுதாயம், சீரும் திருவும் பொலிந்து விளங்கும் சைவ சமயத்திற்கு விளைநிலமாயிருந்ததென்பதைச் சிறிது சிந்திப்போமாயின், நமது உயர்வு உள்ளங்கையின் நெல்லிக்கனிபோல் விளங்கும். இவ்வுலகில் தோன்றி, நின்று, அழிந்து ஒழிந்த ஏனைய சமயங்களாகப் போகாது நம்சைவ சமயம் எஞ்ஞான்றும் சீரிளமைத்திறம்பெற்று ஒளிர்வதே அதன் உயர்வை யுணர்த்துவதாகும்.

இதுவன்றியும் ஏனைய சமயக்கொள்கைகளை யெல்லாம் தன்னகத்தே யடக்கித் தனக்கு அங்கங்களாயமைத்து, அவைகட்கெல்லாம் தலைமை பூண்டு நிற்கும் தகுதியுடையது சைவசமயமேயென்பது தக்கோர் துணிபு. இத்தகைய உயரிய கொள்கைகள் நம் தமிழ்மக்கள் மனதில் எவ்வாறுதித்தனவெனில் அவர்கள் பண்டைக்காலமுதல் நடையையும், உடையையும் நாகரீகமெனக்கருதாது, அழிவில்லாத ஆன்மலாபமே, மக்கள் அடைதற்பாலனவாய பேறுகளுள் தலையாயதென்று ஒருதலையாகக்கொண்டு, மனதைச் சென்றவிடத்தாற் செலவிடாது நன்றின்பாலுய்த்து, நன்னெறியினை யுணர்ந்தார்களென்பது நம் தேசச்சரிதத்தினை ஒருமுறை ஓதினோர்க்கும் இனிது விளங்கும் உண்மையிதுவாயினும், யானை காணச்சென்ற குருடனொருவன் அம்மிருகத்தின் காலைமட்டும் தடவிப்பார்த்து அது தூண்போன்றதென்றும், பின் அதன் வாலை மட்டும் தடவிப்பார்த்துக்கழி போன்றதென்றும், பின் அதன் காதினை வருடிப்பார்த்து அது முறம் போன்றதென்றும் இவ்வாறே அம்மிருகத்தின் ஒவ்வோர் உருப்பினையே அதன் முழுவடிவமாகக்கொண்ட கதைபோல, சைவ சமயத்தின் உண்மைத்தன்மையை உணர ஆற்றலில்லாத ஆன்மாக்கள் தத்தம் அறிவிற்குத் தக்கதாக, சைவசமயத்திற்கு அங்கங்களை பிறசமயங்களையே உயரிய சமயங்களெனக் கொண்டொழுகுவர். ஆனால் அஞ்ஞானம் என்னும் இருளை அகற்றி, மெய்ஞ்ஞானமென்னும் ஒளிபரப்ப உலகில் அவதரித்த அருளாளர் நமது சமயக்கொள்கைகளை ஆராய்ச்சியென்னும் அழற்கோட்டத்திட்டு, அவை ஏனைய போலிச்சமயக் கொள்கைகளைப்போல் தோன்றி யொழியாது சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடுதலை உலகினர்க் குணர்த்தியுள்ளார்கள். இக்கொள்கைகளைப்பற்றி விரிவாகப்பின்னர்க் கூறுவாம். கானகத்தே யுள்ள மண்டபத்தைக்கண்டா னொருவன் அதனை நிருமித்த மய னொருவன் உளன் என்று ஊகித்து உணர்தல்போல, காணப்படுகின்ற இவ்வுலகத்தைப்படைத்துக் காத்து, அளித்து, அழித்து, அருளும் அருட்கடலாய பரம்பொருள் ஒன்றுண்டென்றும், அவ்விறைவனுக்கு ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும்



இல்லை யெனினும் ஆன்மாக்கள் தத்தம் அறிவிற்கும் அன்பின் பெருக்கிற்கும் ஏற்ப ஆயிரம் திருநாமங்களை அமைத்துப் போற்றி வழிபடுகின்றார்களென்றும் அப்பரம்பொருள் அன்பேயுருவாய் அமைந்திருத்தலின் அன்பை வளர்த்து அதன் குழவியாய் அருளைப்பெருக்கி மன்னுயிரனைத்தையும் தன்னுயிர்போல் பாவித்து, எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும் இலகுமுயிர் உடலனைத்தும் ஈசன் கோவில் என்ற உண்மையைக்கடைப்பிடித்தொழுகுதலே இறைவனுடன் இரண்டறக் கலத்தற்கு ஏற்ற சாதனமாகுமென்றும் வெள்ளிடை விலங்கல்போல் விளக்கி நிற்பது நமது சமயமேயாகும்.

(இன்னும் வரும்.)

R. P. சேதுப்பிள்ளை, B A.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# வேதாகமங்களின் முப்பொருட்டுணிவு ஒன்றே.

——:o:——

தொகுதி - 7 - பகுதி - 1 - பக்கம் - 16 - தொடர்ச்சி.

இனி, தேகேந்திரிய கரணபிராணாதிகளுக்கு விலட்சணமாய் எஞ்சினின் றறிவித்தாலறியுஞ் சிற்றறிவாகிய ஆன்மாவுக்கே பரத்துவங்கூறி சுதந்தர வறிவாகவைத்து அதற்குமேலொரு அறிவிருந் தறிவிக்குமானால் அனவத்தாதோஷமுண்டாமென்னும் பொருளைத் தரும், "அறிவினுக் கறிவுசெய்யு மறிவுவேறுண்டென்றெண்ணு மறிவற்ற குதர்க்க மூடர்க்கனவத்தை பலமாய்த்திரும்" என்னுஞ் செய்யுளால் ஏகான்மவாதஞ் சாதித்து விட்டதாக எண்ணி யிறுமாக்கின்றனர். இவர்களே பூர்வபுண்ணியத்தின் பலனாகிய திருவருட் டுணைகொண்டு "காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே" என்றும், "அறிவித்தாலன்றி யறியாவுளங்கள்" "காணுங் கண்ணுக்குக் காட்டுங்கதிரென காணவுளத்தைக்கண்டு காட்டலின்," என்றும், "நீயுணர்த்த நானுணருநேசத்தாலே வறிவென்றே யெனக்கோர் நாமமிட்டதே" என்றும் 'அறிவினுக்கறிவாகி இகபரமிரண்டினு முயிரினுக் குயிராகி" என்றும் வரும் கோடி சித்தாந்த வசனங்களைச் சித்த சமாதானத்தோடு கொஞ்சம் ஊன்றி விசாரிக்கி னுண்மை கடைப்பிடிப்பர்.

இனி ஏகான்மவாதஞ் சாதிப்பான் வெளிவந்தாசையோடு வெளியிட்ட அச்செய்யுளுக்கே அவர்கள் மனம்போலப் பொருளிருக்கின்றதாவென வாராயின் சாதிக்க வாசைப்பட்டது ஏகான்மவாதமுஞ் சாதித்தது முப்பொருட்டுணிவுமே என்பது மேலே யாங்கூறிவந்துள்ள பொருள் நுட்பங்களை யறிவாரறியு நிலையாமானதால் அதற்கெனப் பொருள் கூறவில்லை.

இனி, "வள்ளலார் சாத்திரம்" என்னும் நூலில் "துவித சைவனை மறுத்தல்" என்னுந் தலைப்பின்கீழ் "ஒன்றாவுலகனைத்து மாணுவென் றப்ப முனி பொன்றுமொழியாற் புகன்றிருக்கக் குன்றாத முத்தியிலு மும்முதலு முண்டென் றுரைத்த லெவன் பித்தமுறுஞ் சைவா நீ பேசு" என்ற வெண்பாவான வொன்றை ஏகான்மவாதஞ் சாதிப்பவர்கள் பிரமாணமாய்த் தேடிக்கொள்கிறார்கள். இதனை யாக்கிய ஆசிரியர் கருத்தானது முத்தியிலு மும்முதலு மில்லையென்று சாதிக்கவேண்டியதே துணிவாயின், முத்தியில் பிரமமாத்திரந் தனித்திருக்கவேண்டும் அங்ஙனந் துணிதல் "முத்தாமுத்திதரவல்ல முதல்வா" என்றுஞ் சுருதி யநுபவ விருத்தமாதலால் முத்தி ஆன்மாவுக்கென்றே பெறவேண்டும். அங்ஙனமாம்போது முத்தியில் ஆன்மா வில்லையென்று சொல்லமுடியவில்லை. எந்தவகையாற் றுணியினும், முத்தி தசையில் சிவ சீவர்களிருப்பு அசைக்கமுடியாத நிலையிலிருப்பதால் ஒன்றென்றும் இரண்டென்றுங் கூறமுடியாத அத்வைத நிலையைச் சாதித்ததே யதன்முடிவாமென்பது நிர்விவாதமே யாம் இன்னும் முத்தியில் பிரமமாத்திரம் தனித்திருக்கின்றது வென்பதே யொருவர் பக்ஷமாகட்டும். இதனாற் போந்த பொருளென்னை? முத்தியில் பிரமம் தனித்திருக்கிறதெனக் கண்ட ஆன்மாவு முளதென்னும் பொருளைச் சூசித்துணர்த்தும் நலமே வெளியாகின்றது. முத்தியில் பிரமம் ஒன்றே உள்ளது என்று ஒருவர் கூறுகிறார். அங்ஙனங்கண்ட வான்மாவுமுண்டென்று மற்றொருவர் கூறுகிறார். இவ்விரண்டின் றுணிவுஞ் சிவ சீவர்களினிருப்பையே நிரப்படுத்துவதை மேலே யாம் விளக்கிக்காட்டிய நியாயங்களை யுள்ளபடி யறிவார் தெள்ளிதினறிவதாம். அன்றியும் ஓர் கால் லீலையாக ஈஸ்வரனே பிரத்தியக்கமாய்த்திரிபதார்த்தமென்பது கிடையாது நாமே யுளோம் எனக்கூறினும் இவ்வுண்மையை யாருக்குணர்த்த வந்ததோ வென்னுங் கேள்விக்கு விடையளிக்கும் பொறுப்பு ஈஸ்வரன் பெயரிலிருக்கின்றது வென்பதைச் சிந்திக்கவேண்டுமென்பதும் "சொல்லிற் பதர்களைந்து சொன்முடிவு காணாதார் நெல்லிற்பதர்போல நிற்பார்பராபரமே" என்ற பிரமாணப்படிக்காகா

Sivajnana Siddhiyar Rs. 3—0—0.



மல் ஒவ்வொரு சொல்லாலும் விளையும் பயனியாது, பயனளிப்பாரியார், பயனடைவாரியார், என்று தெரிந்துகொள்ளவில்லையாயின் வேதாகமங்கங்களின் பிரயோசனமொன்றுமில்லையா மென்பதும் இங்ஙனந் துணிவோருய்தியில்லதோர் குற்றத்துக்கே யிலக்காவரென்பதும் உணரவேண்டும்.

(இன்னும் வரும்.)

தி. சு. சீனியா பிள்ளை,
சைவப்பிரகாச சபை, விருதுபட்டி.

———:o:———

## சமாச்சாரங்கள்

சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன்சபை:- பதின்மூன்றாம் ஆண்டு திருவிழாவில் பிப்ரவரி௴ 1௳ நீதிபதி - ஸ்ரீ - T. சதாசிவஐயரவர்கள் மனைவியார் அக்கிராசனராகவிருக்க பண்டிதை-ஸ்ரீமதி S. கிருஷ்ணவேணியம்மாளும், ஸ்ரீமதி-வா. கோ. ஜெயலட்சுமியம்மாளும் உபந்நியாசஞ்செய்தார்கள். 2௳ 3௳களில் ஸ்ரீமான் - T. கனகசுந்தரம் பிள்ளை B A., அவர்களும் பிரமஸ்ரீ-T. சதாசிவ ஐயர் B. A., M. L, அவர்களும் அக்கிராசனராகவிருக்க பல உபந்நியாசங்களும் நடந்தன.

தாதாம்பேட்டைப்பழூர் சன்மார்க்கசபை.—ஜனவரி௴ 23, 24௳களில் திருக்கோவலூர் புலிசை ஸ்ரீமத் ஞானியார் மாணவர் கழகம்-காரியதரிசியார் கனம்-மா.ரா. குமாரசாமிபிள்ளை யவர்கள் அக்கிராசனராக வீற்றிருக்கப் பல உபந்நியாசங்கள் நிறைவேற நான்காவது வருட மகோற்சவம் நிறைவேறியது.

சென்னை ஸ்ரீயோகானந்த முனீஸ்வரர் ஆஸ்ரமம்.-பிப்ரவரி௴ 4, 5, 6௳களில் முறையே அத்தியாச்சிரம ஸ்ரீமது பாம்பன் குமரகுருதாச சுவாமிகளும், சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம்-சிவஸ்ரீ- கலியாணசுந்தரயதீந்திரசுவாமிகளும், திவான்பகதூர் ஆனரபில் ஜஸ்டிஸ் ஆர்ய ஸ்ரீ-T.சதாசிவ ஐயரவர்களும் அக்கிராசனராக வீற்றிருக்க, ஸ்ரீமத் தாயுமான சுவாமிகளின் 247-வது வருடத்திய குருபூஜா விசேஷமாகப் பத்தாவது ஆண்டு நிறைவுவிழாவில் பற்பல உபந்நியாசங்கள் நடந்தேறின.

ஜலகண்டபுரம் ஸ்ரீ சன்மார்க்க சபை.—பிப்ரவரி௴ 16, 17௳களில் ஸ்ரீமான்-க. சதாசிவ செட்டியார் B. A., அவர்கள் அக்கிராசனராக வீற்றிருக்கப் பல உபந்நியாசங்களுடன் ஆறாவது ஆண்டு நிறைவுகொண்டாட்டம் பூர்த்தியாயது.

விச்சூர் தமிழ்வேதபாராயணசபை.—ஜனவரி௴ 20௳ உத்திரமேரூர் திருவன் கா-உ-பொன்னுசாமி முதலியாரவர்கள் அக்கிராசனராக வீற்றிருக்க முதலாமாண்டு திருவிழாவில் பல உபந்நியாசங்கள் நிறைவேறின.

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 1918ஹு ஜனவரி மாதத்தின் வரவு செலவு கணக்கு.

| வரவு. | தொகை. ரூ. | அ | ப | செலவு. | தொகை. ரூ. | அ | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 1917ஹு டிசம்பர்மீ 31உ இருப்பு ... | 226 | 0 | 10 | லிகிதர் சம்பளம் ... | 20 | 0 | 0 |
| ஆயுள் சமாசிகர் சந்தா ... | 20 | 0 | 0 | காகிதம் ... | 24 | 6 | 0 |
| சாமாசிகர் வருட சந்தா ... | 12 | 0 | 0 | தபால் செலவு முதலியன ... | 19 | 9 | 6 |
| விளம்பர வரவு ... | 1 | 0 | 0 | | | | |
| | | | | | 63 | 15 | 6 |
| | | | | ஜனவரிமீ 31உ இருப்பு... | *195 | 1 | 4 |
| | | | | *ஆயுள் சமாசிகர் சந்தா ரூபா 575-0-0 | | | |
| ஆக மொத்தம்... | 259 | 0 | 10 | ஆக மொத்தம்... | 259 | 0 | 10 |

K. Subramaniyam Pillay, M.A., M.L., Secretary. M. Kandasawmy Mudaliar, B.A., Auditor. W. T. Govindaraja Mudaliar, Treasurer.

1-MAY 1918

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி எ.] 1918ஹு மார்ச்சமீ [பகுதி ௩.

## சாந்தோக்யோபநிஷத்து.

ஆறுவது பிரபாடகம்.

கண்டம் ௧௩.

பிதா—ஒரு உப்புக்கட்டியை ஒரு பாத்திரத்திலிட்டு வைத்துக் காலையில் கொண்டுவா வென்றனர்.

புத்திரன்—அங்ஙனமே செய்துகொண்டு வந்தனர்.

பிதா—பாத்திரத்திலிட்ட உப்பினை யெடு.

புத்திரன்—கையிலொன்றும் அகப்படவில்லை.

பிதா—நீரைக்குடித்துப் பார்.

புத்திரன்—உப்பாயிருக்கிறது.

பிதா—அடியிலுள்ள நீரைக்குடி.

புத்திரன்—அதுவு முப்பாயிருக்கிறது.

மெய்கண்ட சாத்திரம் பதினுன்கு மூலம் விலை அணா 8.

பிதா —இங்குவா.

புத்திரன்—வந்தேன்.

பிதா—நீரில் உப்பு எக்காலத்து முள்ளது. எங்ஙனம் நீரில் உப்பு மறைந்திருக்கிறதோ அங்ஙனமே சத்து அணுப்பிரமாணமாக எல்லாவஸ்துகளிடத்துமிருக்கிறது. அதுவே சத்தியம் அதுவே ஆத்மா (பரமாத்துமா). அதுவே நீ (சிவோகம்பாவனையில்)

## கண்டம் ௧௪.

காந்தாரதேயத்தில் வாழுமொருவனது கண்ணைக்கட்டி, கரங்களைக் கட்டி யழைத்துவந்து ஒரு வனத்தில் விட்டுவிட, அவன் எவ்விடத்தும் போகாது கதறுகையில், ஒருவன் வந்து கட்டவிழ்த்துவிட உடனே தன் தேயத்தை விசாரித்துக்கொண் டடைவன்.

அதுபோல (ஆத்துமா) சத்தினிடமிருந்து ஆணவத்திற் கட்டுப்பட்டுத்தேகாரண்ணியத்தை யடைந்து திகைத்திருக்கையில், ஆசாரியன் ஆணவபந்தத்தை நீக்கிவிடச் சாதனங்களை விசாரித்துக்கொண்டனுஷ்டித்துச் சத்தினை யடைவன்.

## கண்டம் ௧௫

மரணாவஸ்தைபடுகிற ஒருவனை அவன் சுற்றத்தினர் அவனைச் சூழ்ந்துகொண்டு, நான் தெரியுமா? நான் தெரியுமா? எனக்கேட்க, எதுவரையில் வாக்கு மனதிலும், மனது பிராணனிலும், பிராணன் ஒளியிலும், ஒளி பரமான்மாவிலும் அடைகிறதில்லையோ அதுவரையில் நீ தெரியும், நீ தெரியுமென்கிறான், பிறகு ஒன்றுந் தெரியவில்லை யென்கிறான்.

## கண்டம் ௧௬.

ஒருவனை இராஜசேவர்கள் பிடித்துவந்தார்கள். இவர்கள் அவர்களை நோக்கி இவன் என்ன செய்தானென்றனர். இவன் திருடினனென்றனன். அவன் திருடவில்லை யென்றனன். அங்ஙனமானால் ஒரு இருப்புக்கோடரியை நெருப்பில் காய்ச்சி இவன் கையில் கொடுங்கள் இவன் திருடியிருந்

செய்யுளிலக்கணம் விலை அணா 8.



தால் அது இவன் கையைச் சுடும். திருடாதிருந்தால் கை சுடாது என்றனர். அதுபோலப் பிரமஞானியாக விருந்தால் சத்தினிடமடைந்து விடுகிறான் (அல்லாதவன் திரும்பி விடுகிறான்.)

## ஏழாவது பிரபாடகம்.

ஒரு காலத்தில் நாரதர் சனற்குமாரரிடம் சென்று எனக்கு அத்யயநம் சொல்லிவையென்றனர். அதற்கவர் உனக்குத் தெரிந்ததைச்சொல் பின்னர் உனக்குத் தெரியாததைச் சொல்லுகிறேனென்றனர்.

நாரதர், எனக்கு நான்குவேதம், இதிகாசம், புராணம், வியாகரணம், கல்பம், இராசிகணித சாஸ்திரம், தைவசாஸ்திரம், நீதிசாஸ்திரம், தர்க்கசாஸ்திரம், எகாயநம், தேவவித்தை, பூதவித்தை, க்ஷத்ரவித்தை, நட்சத்திரவித்தை, சர்ப்பவித்தை, கந்தர்வவித்தை இவை யனைத்திலும் அத்யயநம் உண்டு.

இவ்வளவும் தெரிந்து நான் மந்திரவித்தாயிருக்கிறேன். ஆத்மவித்தாகவிருக்கவில்லை. ஆத்மவித்தையே சோகத்தைக் கடக்குமெனத் தங்கள் போன்ற பெரியர் சொல்லுகின்றனர். ஆகலின் சோகத்தைத்தாண்டும் வித்தையினைப் போதிப்பீராக வென்றனர்.

மணவழகு

## நீதி.

"ப்ருதிவியாம்த்ரீணிரத்நாநி
அந்நமாபஸ்ஸுபாஷிதம்
அஸுகோரத்நபாஷாணே
ரத்நஸப்தோநிரர்த்தகா."

உலகில் மூன்றே உயர்ந்த இரத்தினங்களுண்டு. அவை யெவையெனின்? முதலாவது இரத்தினம் அன்னம், இரண்டாவது இரத்தினம் நீர், மூன்றாவது இரத்தினம் முகமனுடன் அன்புடன் பேசும் சொல். மற்ற இரத்தினங்கள் கல்லுருவாயிருக்கும். இரத்தினங்கள் சௌக்கியத்தை தாராதாகையால் அவைகட்கு இரத்தினமென்ற பெயர் அவலமாம்.

தாயுமான சுவாமி பாடல் மெய்கண்ட விருத்தியுரை ரூபா 3—8—0

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அவாவறுத்தல்.

—:0:—

அவா என்பதே பசுக்களின் (சீவன்) பிறவிக்குவித்து, என்பதினையும், அவாவற்றவரே பற்றற்றோ ரென்பதினையும் அவாவொழித்தவர்க்கே துன்பமில்லை யென்பதினையும் இடையறாத வின்பத்தை யனுபவிக்க வேண்டின் அவாவினை யொழித்தல் வேண்டுமென்பதினையும்; "அவா வென்ப வெல்லாவுயிர்க்கும் ..............பிறப்பீனும் வித்து," எனவும், "அற்றவ ரென்பா ரவாவற்றார்" எனவும், "அவாவில்லார்க்கில்லாகுந் துன்பம்" எனவும், "இன்பமிடையறா தீண்டுமவா வென்னும்—துன்பத்துட்டுன்பங் கெடின்" எனவும், எழுதியுள்ள திருக்குறளாலறிகிறோம். "இச்சை வித்து" எனப் பட்டினத்துச்சுவாமிகளும் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்.

அத்துணை வலிமையுற்ற அவாவின்தன்மையினைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். அவா-ஆசை- இச்சையென்பன ஓர்பொருட் சொற்களாம்.

நாம் ஒரு பொருளைப்பற்றி, புலன்வாயிலாய் ஒரு "எண்ணம்" எண்ணுகிறோம். புலன்முகத்த தாயறிந்த பொருளை, அடையவோ, பார்க்கவோ, கேட்கவோ, முகரவோ, தொட்டுணரவோ, இன்னும் எவ்வகையானும் அநுபவிக்கவோ எண்ணுகிறோம். இவ்வெண்ணமே ஆசைக்கு அடிப்படை யாகும் ஒழிப்பதற்குரிய பருவமு மிதுவே.

மனத்தில் எண்ணிய பொருளைப்பற்றி நினைத்து, அதை அடிக்கடி "நினைப்பி"ற்குக் கொண்டுவருகிறோம். ஆகவே, எண்ணத்திற்கு அடுத்தபடி நினைப்பு என்னும் காரியமாம். இந்நினைப்பு "எண்ணிய" பொருளை அடைவதற்கே பெரும்பான்மை ஏற்படுவதுண்டென்கிறார்கள். எண்ணத்தின் சார்பே நினைப்பென்னலாம்.

பகவத்கீதார்த்த பங்கம் விலை அணா—1.



இந்நினைப்பு அதிகரித்து முதிர்ச்சிபெறின், அதனை "விருப்பம்" என்று கூறலாம். அதாவது, எண்ணி நினைந்த பொருளை அடைய விரும்புதலாம்.

இவ்விருப்பம் மிகுதிப்படின், அதுவே அவா—(ஆசை—இச்சை) என்றுரைக்கப்படுவதாம், இவ்வாசையை யுடையவன் அகிலலோகத்தினுக்கும் அடிமை யென்னப்படும் கீழ் நிலைமையை யடைகிறான். இவ்வாசையுடையவனுக்கே எண்ணியபொருளை அடைவதற்கேற்ற முயற்சியாதியவைகள் (நன்முயற்சியோ தீயமுயற்சியோ) புலப்படுகின்றன.

ஆசை வைத்த பொருளை யடைவதற்குச் சிறிது துன்பமுண்டாவதாயிருந்தாலும் அப்பொருள் சுலபத்திற் கிடைக்கப்படாததாயிருப்பினும், ஆசை தடித்து முற்றி "மோகம்" என்ற பெயரை யடைகிறது. மோகம், அறிவை மழுக்கி, மனதைத் தன்வயப்படுத்தி, பொறி புலன் கரணங்களை இயக்கி, தொழில் நடத்த வாரம்பித்து ஆன்மாக்களை இடர்க்குழியில் வீழ்த்தி விடுகிறது.

எண்ணம் உதித்தபோழ்தே "இப்பொருளின் தன்மை எப்படி? இப்பொருளால் நாமடையும் நன்மை தீமைகளின் அளவென்ன? இதனையுடையும் மார்க்கம் சுலபத்திற் கிடைக்கக்கூடியதா? என்பன வாதியவினாக்களாற் பரிசோதித்து "தீமை" என்னப்படுமவைகளை மனத்தில் எண்ணாமல், (எண்ணம் என்னும் செய்கை உண்டான பொழுதே) ஒழித்துவிட வேண்டும். இதுவே நச்சுமரத்தின் விதையை நாசமாக்குதலொக்கும். இதுவன்றி ஆசை-மோகம் என்னும் பெரிய பருவம் வரையில் எண்ணத்தினைப் பலப்படுத்திவிடின் பின்னர் இன்னலையே விளைவிக்கும் என்பது துணிபு.

இனி, தண்ணீரானது மதுவுடன் சிறிதளவு கலக்கப்பட்டால் "மது" வெனவும், பாலுடன் சிறிதளவு கலக்கப்பட்டால் "பால்" எனவும் கூறப்படுவது போலவே, மேற்கூறிய எண்ணம்..........மோகமென்பவைகளை, பிரபஞ்ச விஷயத்திற் செலுத்தினாற் "பற்று" எனவும், அரனடி மலரிற் செலுத்தினால் "ஞானம்" எனவும், சொல்லலாம்—சொல்ல வேண்டும். "மங்கையர்கள் யோனிமிசை வைத்திருக்குமாசைதனைப்—பங்குசெய்து நூற்றிலொரு பங்கெடுத்துக்-கங்கைமதி—வேணியரன் பாதாரவிந்தத்தில் வைத்தக்கால்—காணலாங் காணுக்கதி" என்பது ஆன்றோர் வாக்கேயன்றோ".

முழுமுதற்கடவுளாம் "சிவபெருமானது" திருவடியை அடையவேண்டுமென்னும் எண்ணமுண்டாகி, அவ்வெண்ணம் இடையறாமல் மனத்துள் நினைப்பாயிருந்து, அந்நினைவு முற்றி விருப்பமாகி, அது முதிர்ந்து, (ஆசை) அவா வாக மாறி, மோகமாய் முற்றினால் அதை "பத்தி—தியானம்—ஞானம்" ஆதியவைகளெனவும், அதன் பயன் சிவபரஞ்சுடரின் திருவடியில் இன்பத்தை யனுபவிப்பதாகிய முத்தியெனவும் நாம் கொள்ளவேண்டும்.

"பற்றுக" பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. என்பதினைத் தள்ளாது, கொள்ளவும் உள்ளமையாலெண்க. பரமசிவத்தைப் பத்தியுடன் பணிவோமாகவும்.

K S ஆறுமுகம்,
போர்டிஸ்கூல் மாஸ்டர்,
வேலாயுதம்பாளையம்,
தாராபுரம்.

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீராமருக்கு 129-தேவிமார்.

சகல ஜனங்களையும் காப்பாற்றுவதின் பொருட்டு அவதரித்த ஸ்ரீராமமூர்த்திக்கு லட்சுமி சொரூபமாகிய சீதாதேவிமாத்திரம் தேவியா? அல்லது வேறு பத்தினிமார்களு மிருந்தார்களா? என்னும் விஷயத்தைப் பற்றி விசாரிக்கலாம்.

ஸ்ரீமத் ராமாயணம் பாலகாண்டம் 73-வது சர்க்கத்தில் சீதா தேவியின் பாணிக்கிரஹணம் ராமரால் செய்யப்பட்டதென்ன வால்மீகி ரிஷியினால் சொல்லப்பட்டிருப்பதைப்போல், வேறு ஸ்திரீகளின் பாணிக்கிரஹணம் அவரால் செய்யப்பட்டதென்று அயோத்தியாகாண்டம் முதலான



காண்டங்களில் சொல்லப்படவில்லை. இராமநாமங்களில் சீதாபதி ஜானகிபதி, முதலானசப்தங்களிருக்கின்றனவன்றி வேறுதேவி நாமமில்லை. ஸ்ரீராமசகஸ்திர நாமத்தில் "ஏகபத்நி விரதன்" என்று கூறப்படுகிறது. இராமாயணத்தில் சில சந்தர்ப்பங்களில்(ஸ்ரீராமர்)தேவி விஷய ப்ரயோகங்களில் பஹுவசனம் (பன்மை) ஆகக் கூறப்பட்டிருப்பினும் மரியாதைக்காக வால்மீகரிஷியினால் பஹுவசனம் (பன்மை) உபயோகப்பட்டிருக்கிறதே ஒழிய சீதாபிராட்டியாரைத் தவிர வேறு தேவிமார்களும் உண்டு என்பதை விளக்குவதற்காக அல்லவென்று வியாக்கியான கர்த்தர்கள் எடுத்தோதியிருக்கிறார்கள்; ஆனதால் சீதா தேவியார் ஒருவரே தேவி என்று நிச்சயிக்கவேண்டியிருக்கிறது.

அப்படியிருப்பினும் ஸ்ரீராமபிரானுக்குச் சீதையைத்தவிர வேறுதேவிமார்களும் உண்டு என்பதற்குச் சில உதாரணங்களும், மேற்கூறியவற்றிற்குச் சமாமாதானமும் இருக்கிறது.

இராவணன் முதலான ராக்ஷஸர்களின் நாசத்துக்கு முக்கிய ஹேதுவாக இருந்த சீதாதேவியின், விவாகத்தைப்பற்றி மாத்திரம் வால்மீக ராமாயணம் கூறிற்று. வேறு தேவிமார்களின் விவாகத்தைப் பற்றி "தௌர்வாச ராமாயணம்" முதலிய கிரந்தங்கள் அந்தந்த இடங்களில் கூறுகின்றன.

அசுவமேதயாகம் செய்பவருக்கு மூன்று பெண்சாதிகள் அவசியமாயிருக்கவேண்டியது. யாகம் செய்விப்பவர்களின் பத்தினிகள் அவரவர்களின் கிரியைகளுக்கு ஒத்து மஹிஷி, பரிவிருத்தி வாவாதா என்னும் பெயர்களுடன் தனித்தனியாய் விவரிக்க வேண்டியதென்று வேதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அதேமாதிரியாகப் பாலகாண்டத்தில் அசுவமேதயாகத்தைப்பற்றிச் சொல்லும் 14-வது ஸர்க்கத்தில் கௌசலியை முதலானவர்கள் மஹஷி முதலான சப்தங்களால் விவரிக்கப்பட்டிருக்கிறார்கள். இதே மாதிரியாய் ஸ்ரீராமரால் அனுஷ்டிக்கப்பட்ட அசுவமேத யாகங்களில் அவருக்கு மூன்று பத்தினிகள் இருந்திருக்கவேண்டியது. மேலும் பிரமாண்ட புராணம், வால்மீக சரித்திரம், தௌர்வாச ராமாயணம் முதலான கிரந்தங்களில் அவ்வவ்விடங்களில் சீதாதேவியின் விவாகத்தின் பின் அவளுடைய அனுமதியைப்பெற்று, பூ, நீளை, விமலை முதலான உத்தம ராஜகன்னிகைகளின் பாணிக்கிரஹணம், ஸ்ரீராமபிரானாற் செய்யப்பட்டதென்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகட்கு ஆதாரமான வசனங்களைக் கொடுக்கிறேன்.

தூர்வாச ராமாயணத்தில்:—சுலோகம் "கோசலோ பாநுமந்தச்ச மகதச்சித்ரபூஷண, யுதாசித்கேகயா தீசோ, காசிநாதப் ரதாதன: கோசலன், பாநுமந்தன், மாதன், சித்ரபூஷணன், யுதாஜிது, கேகயாதீசன், காசிநாதன், பிரதானன் முதலான எட்டு அரசர்கள், நல்ல லட்சணங்களோடு கூடியவர்களாயும், சர்வாபரண சம்பன்னர்களாயும், ஸ்ரீராமரிடத்தில் மோஹத்தை யுடையவர்களாயும், அவர்கள் பிறந்தகாலத்தில் ஸ்ரீராமருக்கு வேண்டுமென்று கேட்கப்பட்டவர்களாயுமான,

பாஞ்சராத்திராகமம், பத்மஸம்ஹிதை.

சீதா சீதம் தசங்காசா, பூமிர் நீளா மஹாயசா,
விமலோத் கர்ஷிணீ ஞான க்ரியாயோக பிதாசஸா,
ப்ர்ஹசந்தித தேசாநு. நுக்ரஹா துளசீபலா
சாந்திஸ்ஸரஸ்வதி ப்ரீதி, ரதிகாந்தி ப்ரபாவதி
பத்ரா சுபத்ரா விஜயா, ப்ரஜ்ஞாகாந்திர் தயாமதி,
மஹீபலா மதுமதி, பத்ராங்கி பதமினிஹ்யுஷா
லாஜ்ஜாப்ரபாஸா வஸுதா ரேவதி சுபலாகலா
இத்யாதி புண்ய நாரீணாம், நவவிம் சோத்தரம் சதம்.

சீதை, பூ, நீளை, விமலை, உத்கர்ஷிணி, ஞானக்கிரியை, யோகை, ப்ரஹசந்தி, சுக்கிரை, குலவிமலை, சாந்தி, சரஸ்வதி, ப்ரீதி, ரதி, காந்தி, ப்ரபாவதி, பத்திரை, சுபத்திரை, விஜயை, ப்ரஜ்ஞானை, தயைமதி, மஹீ, பலை, மதுமதி, பத்ராங்கி, பதுமினி, உஷை, லஜ்ஜை, பிரபா, வசுதை, ரேவதி, சுபலை, கலை முதலான 129-புண்ணிய மாதர்களை அதாவது ஒவ்வொரு அரசனும் 16-பெண்கள் வீதம் 8-பேரும் 128-மாதர்களைக் கொடுத்தார்கள். அப்பெண்களை ஸ்ரீராமரானவர், வசிஷ்டர் வாமதேவர் முதலான ரிஷிகளின் சந்நிதானத்தில் அக்கினி சாக்ஷியாகச் சீதாபிராட்டியாரின் அநுமதியின் பேரில் விவாகம்செய்துகொண்டு ஏகபத்னிவிரதனாய் இருந்தாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் ஸ்ரீராமருக்கு அநேக ஸ்திரீகள் உண்டென்று நிர்மானிக்கவேண்டி யிருக்கிறது. தவிரவும் பிரஹ்மாண்ட புராணத்தில் பிரமநாரத சம்வாதத்தில் நூறு பெண்சாதிகளோடு கூடினவனும், பத்மநாபனும், சதுர்புஜனுமிருக்கிற ஸ்ரீராமனை என்று சொல்லப்பட்டிருப்பதானது முற்கூறிய தூர்வாச ராமாயணத்துக்கு ஒத்திருக்கிறது.

சைவாகமப்பிரமாண்யம் விலை அணா—12.



பிரமாண்ட புராணத்தின் வசனத்தில் 'ஸ்ரீ பூநீள' என்பதில் ஸ்ரீ என்று சொல்லியிருப்பதானது லட்சுமிசொரூபிணியாகிய சீதையைக் குறிக்கிறது. பூ, நீளை, சப்தத்தால் கோசலாதி ராஜாக்களால் கொடுக்கப்பட்ட பெண்களைக் குறிக்கிறது. சத சப்தம் 100-பெண்சாதிகளென்கிற லட்சணையினால் 129-என்பதைக் குறிக்கிறது என்று அறிந்துகொள்ளவேண்டும். அன்றியும் வால்மீகி சரித்திரத்தில் "பந்துக்களாயும் தெற்குத் திக்கில் இருக்கப்பட்டவர்களாயும் பந்துத்வத்தைக் கொண்டாடுபவர்களாயுமிருக்கிற கோசலாதி ராஜாக்கள் தங்கள் தங்கள் பெண்களை ஸ்ரீராமருக்குக் கொடுத்தார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் ஸ்காந்தத்தில் பிரமகண்டத்தில் பிரம்மாவைப் பார்த்துப் பகவான் சொன்னதாவது "பூமியில் தசரத சக்கிரவர்த்தியிடம் நான் ஜனிக்கப்போகிறேன் விசுவாமித்ரருடைய யாக சம்ரக்ஷணைசெய்து, அகலிகை சாபவிமோசனம்செய்து மிதுலா நகரத்தில் தநுர்பங்கம்செய்து, சீதையைப் பாணிக்கிரஹணம்செய்து அயோதிக்கு இராமனாக வரப்போகிறேன். பிறகு பூமி நீளை முதலான 128-பெண்களை அக்னி சாக்ஷியாய் பாணிக்கிரஹணம் செய்யப்போகிறேன்." என்றிருப்பதுமன்றி "அஷ்டாவிம்சோத்தரம் கன்யா, சதம் சோத்வாஹனம்சு" என்று சொல்லியிருப்பதால் ஸ்ரீராமருக்குச் சீதையுடன் 129-ஸ்திரீகளென்று தெரிகிறது. இராமருக்கு அநேக ஸ்திரீகள் உண்டென்பதற்கு ஆதாரமான வசனங்கள் பிரமகண்டத்தில், சிவரஹஸ்யத்தில் பிரம விஷ்ணு சம்வாதத்திலும், அகஸ்திய ராமாயணத்திலும், வாசிஷ்ட ராமாயணத்திலும் இருக்கின்றன.

ஆனால் ஏகபத்நிவிரதன் என ஸ்ரீராமருக்கு ஒரு பெயர் இருப்பதால் ஒரே பெண்சாதியுடன் கூடினவரென்று மேற்படி புராண வசனங்களுக்கு விரோதமாக சிலர் அர்த்தம் செய்கிறார்கள் அப்படிச் செய்வது பிசகு. ஏக என்கிற பதத்துக்கு முக்கிய என்ற அர்த்தம் இருப்பதால் முக்கிய ஸ்திரீகளோடு (அதாவது கலியாணம் செய்துகொண்ட ஸ்திரீகளோடு) கூடினவரென்று அர்த்தம் செய்யவேண்டியது. இப்படிச் சொல்வதானது மேற்கண்ட புராண வசனங்களுக்கும், வால்மீகி ரிஷியினால் இராமாயணத்தில் பல இடங்களில் அநேக ஸ்திரீகள் உண்டென்று விளக்கக்கூடிய புன்மை வாக்கியங்களை உபயோகிக்கப்பட்டிருப்பதற்கும் ஒத்து இருக்கிறது.

விவேக திவாகரன்.

திருத்தொண்டர் வெண்பா (திருநகருளுத்தாரத்துடன்) விலை அணா—1,
2

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வேதாகமங்களின் முப்பொருட்டுணிவு ஒன்றே.

——:0:——

**தொகுதி - 7 - பகுதி - 2 - பக்கம் - 47 - தொடர்ச்சி.**

இனி ஏகான்மவாதஞ் சாதிப்பான் வந்த எந்த ஆசிரியர் கூறும் எந்த நூலும் அந்நூலினுண்மைப்பொருளாம் திரிபதார்த்தங்களுங் காலத்திரையத்து முள்ளதெனக்கூறும் அருணூலாம் வேதசிவாகமங்களைப் பின்பற்றி வாழ்பவர்களாஞ் சைவசித்தாந்திகட்கே சாதகமாகிய பொருள்களைத்தருவதன்றி விரோதம் பயக்குமென்பதில்லையாம். அதனையாக்கியோர் கருத்தோடு மாறுபட்ட பொருளை யதுதானே பயந்து நிற்பதை யநுபவமுடையாரறியக் கிடத்தலின்.

இனி வேதத்திற் காணப்படு மொவ்வொரு வசனமும் அவ்வசனத்தினுண்மைப்பொருளுந் திரிபதார்த்த நிட்சயத்தையே விளக்குவதாம். அவ்வசனங்கட் கவர்கொண்ட திரிவுணர்ச்சியாங்கருத்தும் அவர் கொள்கையுமே விரோதமன்றி அவர் சொல்லும் ஒவ்வொரு வசனமும் திரிபதார்த்த நிட்சயமுடையார்க்கே பரமசாதகமென்க. இவ்வுண்மைகளை யெல்லாந் தன்னுளடக்கி யிலகும் வைதிக சைவசித்தாந்தத்தின் பெருமை நோக்கியே "அயர்வறச் சென்னியில் வைத்து ராசாங்கத்திலமர்ந்தது வைதிக சைவமழகி தந்தோ" என்றும், "அந்தோ வீததிசயம் இச்சமயம் போலின்று— இதுவன்றித்தாயகம் வேறில்லை யில்லை" என்றும், "சைவசமயமே சமயம் சமயாதீ தப்பழம் பொருளைக்கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டுமிந்தக் கருத்தைவிட்டுப் பொய்வந்துழலுஞ்சமய நெறிபுகுத வேண்டாம்" என்றும், "தெய்வஞ்சிவமே சிவனருள் சமயஞ் சைவஞ்சிவத்தோடு சம்பந்தமென்றான்" என்றும், "சைவத்தின்மேற் சமயமுமதிற் சார்சிவமாந் தெய்வத்தின்மேற்றெய்வமில்லெனு நான்மறை" என்பதாதி பிரமாணங்களைச் சிவாநுபவச் செல்வர்கள் திருவாய் மலர்ந்தருளினர்.

மணவழகு சரித்திரம் (படத்துடன்) விலை அணா—4.



"விரிவிலாவறிவினார்கள் வேறொருசமயஞ்செய்து எரிவினாற் சொன்னாரேனு மெம்பிராற்கேற்றதாகும்." என்றும். யாதொரு தெய்வங்கொண்டீரத் தெய்வமாகி யாங்கே மாதொருபாகனார் தாம் வருவர்" என்பதாதி, சப்பிரமாணங்களையே பிரமாணமாகக் கொண்டுவாழுஞ் சைவ சித்தாந்திகளாகிய நமக்கு விரோதம் பயக்கும் ஓர் மதமும் ஓர் நூலும் என்றுந்தோன்றவில்லை. தோன்றுமென்பதும் அது சிவத்துக்கன்றிப் பரத்துவமுண்டேல் சித்தாந்த நெறிக்கு மேனெறியுண்டாம். என்பதுபோல்வதேயாமென்பதும், உணரவேண்டும்

அங்ஙனமாயின் விரோதம்பயப்பதாய் அவைகளை நம்மாசிரியர் கடியவேண்டிய தெற்றுக்கெனின் அவரவர்கள் தத்தம் மளவைகளைக்கடந்து விவகரிக்கு மவசவ்யங்களிற் சிக்கிப் பரிபாகிகள் மயங்காவண்ணம் அதனுண்மையை யுணர்த்துவகையாலுணர்த்திச் சைவ சமயத்தினேற்றம் பிரகாசிக்கச் செய்தனரே அன்றி வேறில்லை என்பதும் சைவ சமயத்தையே யடையும் உத்தம பரிபாகிகளாகவே எல்லா வான்மாவு எக்காலத்திலிருக்கமுடியாதாதலால் எல்லாப் பரிபாகமுமுடைய ஆன்மாக்களின்பொருட்டு வேதாகமவரம்பினுள்ளிட்ட எல்லா மதங்களும் நிலைத்திருக்கவேண்டியதே எல்லாம் வல்ல விறைவன் றிருக்குறிப்பென்பதும் எவ்வெம்மதத்தர் கூறுமுடிவும் பிருதிவி தத்துவமுதல் நாத தத்துவமீறுகக்கிடந்த தத்துவங்களொவ்வொன்றின் இலயமடைவதைத் தெரிந்து இந்த நிலைவரை வந்தார்களே இனி தத்துவாதீத நெறியாஞ் சைவ சித்தாந்த நிலைக்கணெய்து முண்மையின்பமென்றடைவார்களென்னுங் கருணையைத் திருவுள்ளத்தடைத்தே நம் பெருமக்கள் அந்நிய மதத்தினிலையின் பூர்வபக்கமும் சிவமத நிலையின் சித்தாந்தமுஞ் சாதித்துள்ளார்கள். அன்றி, சித்தாந்தத்துக்கு இல்லாத ஏற்றத்தைப் புதிதாகச்சாதித்து அந்நிய மதத்துக்கில்லாத தாழ்வை யுண்டு பண்ணினார்களென்பதில்லை என்பதும் அங்ஙனம் பூர்வபக்கம் பண்ணுங்காற் பெறப்படுங் கண்டனங்களுங் கருணையே காரணமாமன்றி வீண்பொறாமை காரணமன்று என்பதும் பூர்வபுண்யத்தால் உண்மை நிலையாஞ் சைவநிலை என்பதை யுணரவரினும் நாமீதுவரை கொண்ட கொள்கைக்கும் இதுவரை சத்தியமா யெண்ணியிருந்த நிலைக்கு மறுதலையாகவா சித்தாந்த நெறி பேணுகிறது என வரும் "பிடித்ததையே சாதிக்கும் பேராணவத்தை யடித்துத் தூரத்துவதென்றையா பராபரமே" என்னும் அருமருந்தருந்தி ஆணவ மலவலியினுபாதியை நீக்கவேண்டும் என்பதும் உணரவேண்டும்.

இதுவரை யாங்கூறிவந்தது நம்பெருமக்களாங்கார்க்குக் கூறிவைத்துள்ள சேமவைப்பின் லேசமே என்பதூம் இனி யார் கூறவரினு மவ்வணமேயாமென்பதும் இவ்வுண்மை உள்ளவாறு உணரவருங்கால் இதனைச் சொன்னோம் இதனை எழுதினோம் என்னு முதலைகளால் விழுங்கப்படோமென்பதும் உணரவேண்டும். "தன்பெருமை யெண்ணுமை தற்போதமே யிழத்தல், மின்பெருமை யாஞ்சகத்தை வேண்டாமை—தன்பா, லுடலைத் தினம்பதித்த லோங்கு சிவத்தோன்றல், நடலைப்பிறப்பொழியு நாள்" என்னுந் திருவெண்பாவி னமுதவுரையைச் சிந்தித்து அதனிலக்கணத்திற் சிறிது குறையினும் பூர்த்திசெய்து எல்லாம்வல்ல விறைவன் றிருவருட்குப் பாத்திரராய்ச் சர்வான்மாக்களுமாக வேண்டுமென்னும் பரமதருமத்தைக் கைக்கொள்ளவும் அங்ஙனஞ் சர்வான்மாக்களுமாக வேண்டுமென்றெண்ணுமாறும் அதனை யிக்கழகத்திற் கூடிய பெரியோர்கள் சன்னிதானத்தின் விண்ணப்பிக்குமாறும் வழிவிட்ட புண்ணியத்தின் பலனைக்கூட்டி யுபகரிக்கும் அறக்கருணைத் தாதா பொன்னடியை யனவரதஞ் சிந்திக்க வென்னு மாசைமாத்திரமுடையேன். இதுகாறுங் கூறிவந்த விஷயங்களில் பல வழுக்கள் காணப்படுத லியல்பேயாம். ஆயினும், தத்தம் மதலை குதலை மொழியினகமகிழும் பிதா மாதா போன்று கல்லாவொருவன் சொல்லாமிதுவென் வென்னுமுண்மை கண்டாரியாருஞ் சந்தோஷமடைவரென்னுமாசையினடியாகவே யிவ்வெழுதுமாறு திருவருள் செய்ததென் றெண்ணுகின்றேன்.

உருவின் அழகுடையார் நாவென்ன அழகு என்பதே யழகாம் கற்றுவல்லுனரே கல்லாவொருவனெனக் கழறல்தக்கதாம் உருவின் என்போனூர் நாவென்னவழகு என்பது போல்வதே இயல்பிற் கல்லாத நான் கல்லாவொருவன் சொல்லாமென்றது ஆயினுந் தொடங்கிய விஷயம் திரிபதார்த்த நிட்சயமே முப்பொருளுண்மை என்பதே இதற்குப் போதிய நாமமாயினும் வேதத்தின் றுணிவு பிரமம் ஒன்றுதானென்றும் ஆகமத்தின் றுணிவு மூன்றுதானென்றும் வியக்தமாய் வழங்கலால் அவ்விரண்டின் றுணிவு மொன்றே என்னுமீ பொருள் பெயராலும் விளங்கவேண்டுமென்னுமாசையே "வேதாகமங்களின் முப்பொருட்டுணிவு ஒன்றே" என்னும் நாமமிடும்படி செய்தது.

நானடையவேண்டிய எல்லா நலமும் அடையவும் அடியேன் மேன்மேலுப்பிரவர்த்தியின் முயலவு மாசீர்வதிக்குமாறு பெரியோரனைவர்க்கும் விண்ணப்பித்துக் கொள்கின்றேன். சுபம்! சுபம்!!

மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

தி. சு. சீனியா பிள்ளை,

சைவப்பிரகாச சபை, விருதுபட்டி

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சமயம்.

———:o:———

சமயங்கள் பஞ்சபூத முதலிய தத்துவ சமூகங்களையும் ஆன்மாவையும் இவை யொழிந்த திருமால் முதலிய தேவ சமூகங்களையும் பிரமேயமாகக்கொண்டிருப்பனவே யாம். அவையன்றித் தனித்துச் சொன்மாத்திரையானே யிருப்பதன்று. ஆகவே அவ்வச்சமயங்களால் பிரதிபாதிக்கப்படும் பூத முதலியவைகட்கு எவ்வளவு ஆற்றலுள்ளனவோ அவ்வாற்றலளவினதாகவே நிலைபெறுமென்பது திண்ணம்.

2. ஈண்டெடுத்துக்கொண்ட சமயம் சைவம். இது சிவசம்பந்தமுடையது. அச்சிவம் எவ்வளவு ஆற்றலுடையதோ அவ்வளவு ஆற்றலுடையது சைவ சமயமும் என்பது தானே போதரும்.

3 இனி அச்சிவத்தினது ஆற்றல் யாதெனின் "அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேறுங்குறியது வுடைத்தாய் வேதாகமங்களின் குறியிறந்தங் கறிவினில் அருளான் மன்னியம்மையோடப்பனாகிச் செறிவொழியாது நின்ற சிவன்" என்னும் திருவிருத்தத்திற் காணப்படும் பொருளாற்றலுடையது.

அஃதென்னையெனின் தனித்தனி அறுவகைப்பட்ட முப்புறச் சமயங்களினின்று கொண்டு அவற்றுள்ளும் பலவேறு வகைப்பட ஆராய்ந்துணர்கின்ற அவரவர்கொண்ட முதற்பொருளாய், அஃதேபோல் பாடாணவாத முதலிய அகச்சமயிகட்கு அருவம் அருவுருவம் உருவம் என்னுந் தடத்தக் குறியே குறியாகவுடைத்தாய், சித்தாந்த சைவர்க்கு அத்தடத்தக்குறியேயன்றி வேதாகமங்களின் கருத்திற் கதீதமாய் உயிர்க்குயிராய், உயிர்கட்கெல்லாம் அம்மையப்பனாய் எங்கணும் எக்காலத்தும் செறிந்து வியாபகமாய் நிற்பதுவே யாம்.

முப்புறச் சமயிகளால் கொள்ளப்படும் பொருளாயும் அகச்சமயிகளால் கொள்ளப்படும் தடத்தக்குறியாயும் நிற்கும் என்றதனால் ஒன்றாயும் சித்தாந்த சைவர்க்கு வேதாகமங்களின் கருத்துக் கதீதமாயென்றதனால்

வேறும், உயிர்க்குயிராய் அம்மையப்பனாய் எங்கணும் எக்காலத்தும்செறிந்து வியாபகமாய் நிற்பதென்றதனால் உடனாயும் விளங்குவதாகிய அத்வைதார்த்த இலக்கணமும் உடையதாம். முற்கூறிய ஆற்றலும் இவ்வத்வைதார்த்த விலக்கணமும் முடையது சைவமென்க.

4 வேதாகமங்கள் தமது கருத்துக்கதீதமாய் விளங்கும் பரமான்மாவாகிய பரசிவத்தைப் பசுவாகிய ஆன்மாக்கள் குறித்து உணர்தற்குப் பாசம், பசு, பதி என மூன்று குறிகளைக் கூறியுள்ளன. அவைகூறிய குறிகளின்வழியே சென்று அக்குறிகட்கதீதமாகிய பரசிவத்தைக் கண்டு அதனைத்தன்னுட்கொண்டது சித்தாந்த சைவசமயம் ஆகலின் சைவ சமயமே ஆற்றலுடையதென்க. இவ்வாற்றலைக் கொள்ளப்பெறாதன ஏனைச் சமயங்கள்.

எங்ஙனமெனின் பாசகாரியங்களையே ஆன்மாவாகவும் பரமான்மாவாகவுங்கொண்டு பசுவையும் பசுபதியையும் இழந்த சமயங்களாகவும், பசுவையே பரமான்மாவாகிய பரசிவமாகக்கொண்டு பாசத்தையும் பதியையும் இழந்த சமயங்களாகவும், பரசிவத்தின் தடத்தக்குறிபுள்ளனவே கொண்டு சொரூப விலக்கணத்தை யிழந்த சமயங்களாகவும் நிற்பனவாம் முப்புறச் சமயங்களும் அகச்சமயமு மென்க.

இங்ஙனமான தலை தடுமாற்றத்திற்குக் காரணம் யாதெனின், முப்பொருளையும் வேதாகமங்கள் கூறியவாறே அநாதி நித்தியமாகக்கொள்ளப் பெறா தொழிந்தமையினாலே யாம்.

5. இனிச்சைவம் அத்வைதார்த்தம் உடைத்தென்பது எங்ஙனமெனின், சித்தாந்த சைவம் ஒழித்து ஒழிந்த ஏனைச் சமயங்களெல்லாம் சித்தாந்த சைவத்தாற் கூறப்படும் பாசத்தையே பொருளாகவும், பசுவையே பொருளாகவும் பதியின் தடத்த வுருவத்தையே பொருளாகவும் கோடலின் சித்தாந்த சைவமாகிய சமயம் அவையேயா (எல்லாச்சமயங்களேயா)ய், சித்தாந்த சைவத்தின் சொரூப விலக்கணத்தை நோக்குழி அது ஏனைச்சமயங்கட்கு இன்மையான் தானே யா(வேறு)ய், வேதாகமங்களின் கருத்துக்கதீதமாய்க் காணப்படும் சொரூபவிலக்கண முணரப்பெற்றார் அறிவின்மயமாய் விளங்கும் சித்தாந்த சைவத்துக்கே ஏனைச்சமயங்களெல்லாம் புறப்புறமும் புறமும் அகப்புறமுமே யன்றி மற்றொன்றுக்கின்மையான் தானே யவை





யே யா(உடனா)ய் நிற்பதாகக் காணப்படுதலின் சைவ சமயமே அத்வைதார்த்த இலக்கணமு முடையதென்க. ஆகலின் இச்சித்தாந்த சைவத்தை அத்வைத சமயமென்றுங் கூறுவர் பெரியோர். எல்லாச் சமயங்களையும் புறமென்று ஒருங்கே ஒழிக்காது புறப்புறம் புறம் அகப்புறம் அகம் என வகுத்துத் தழுவிக்கூறியவாறென்னையெனின், சித்தாந்த சைவத்திற்குத் தலையாய பரசிவம் சிற்றறிவுடைய வுயிர்கள் வினைநோய் தீர்ந்து உய்யும் வண்ணம் இரக்கங்கொண்டு பணித்தனவாகிய ஒழுக்க முதலிய பணிகள் எல்லாச்சமயிகளும் தத்தம் அறிவுக்கேற்றவாறு கைக்கொண்டொழுகலின் அவற்றின் நூனாதிகங்களை நோக்கி அங்ஙனம் வகுக்கப்பட்டதென்க.

ஒழுக்க முதலிய பணிகளாவன:—ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம், வழுக்கிலாத்தவம், தானங்கள், வந்தித்தல், வணங்கல், வாய்மை, அழுக்கிலாத்துறவு, அடக்கம், அறிவு, அர்ச்சித்தல் இப்பதினாறுமாம்.

இப்பதினாறும் பாசவுண்மையான் பசுவுண்மையும், அப்பசுவுண்மையான் பதியுண்மையும், அப்பதியுண்மையான் அப்பதியின் சொரூப விலக்கணமும் உணர்ந்து உய்யும்வரை யுடைய வுண்மைச் சைவர்க்குப் பயன்படுமேயன்றி ஏனையோர்க்கும் பயன்படுமாறில்லை ஆயினும் மேலே காட்டிய சிவபிரான் எங்கணும் செறிவொழியாது நிற்கும் வியாபகப்பொருளாகலின் அவனது கருணையாகிய சத்தி, எல்லாச் சமயங்களிடத்தும் வியாபகமாய் நின்று ஒழுக்க முதலிய பணிகளை அவரவரறிவுக்கேற்றவாறு கைக்கொள்ளும்வண்ணம் உண்ணின்றுணர்த்தி அவ்வழியின் ஒழுகச்செய்யுமென்க.

இதனால் இங்ஙனங்கூறிய பதினாறும் இவைபோல் வனபிறவும் சைவ சமயத்துக்கே உண்மையாமென்றும் ஏனைச்சமயங்கட் கவ்வாறின்றென்றும் அறியக்கிடக்கின்றமை காண்க.

இதுகாறுங் கூறிவந்த நியாயத்தால் சைவம் தனக்கு மேலொரு பொருளுளதென்று கூற இல்லாததும் வியாபகப்பொருளா யுள்ளதுமான சிவத்தையே தலைமையாகக் கொண்டதெனவும், அதனால் சைவமே சித்தாந்தமா (முடிவா)ன சமயமெனவும் ஏனைச்சமயங்களெல்லாம் வியாபகமாகிய் சிவத்தினிடத்தில் வியாத்தமாயும் வியாப்பியமாயுமுள்ள பொருள்களையே தலைமையாகக்கொண்ட தெனவும், அதனால் ஏனைச்சமயங்களெல்லாம் பூர்வ பக்ஷமான சமயங்களெனவும், பூர்வபக்ஷ மில்வழி சித்தாந்தம்

வெளிப்படா வாகலான் சைவ சமயம் அத்வைதார்த்தத்தால் எல்லாச் சமயங்களையும் இகழாது அங்கமாகக் கொண்டுதான் பிரகாசிப்பதெனவும் உணரக்கிடக்கின்றமை காண்க.

இனி இரண்டாம் பத்தியிற் கூறியபடி தெய்வத்தினளவே யன்றி அவ்வச்சமயங்களை உத்தாரணம் பண்ணவருகின்ற ஆசாரியர்களுக்குள்ள அருட்பிரகாசம் எவ்வளவோ அவ்வளவுக்கேற்ற வன்மையானும், அவ்வருட்பிரகாசத்தைக்கொண்டு அவர்கள் முக்காலத்துக்கும், அனுமானம் ஆகமம் பிரத்தியக்ஷம் என்னும் மூவகைப் பிரமாணங்கட்கும், சுருதி யுக்தி அனுபவம் என்னும் மூன்றினுக்கும் மாறுகோளில்லாமலும், விரோதமில்லாமலும் எடுத்துக்கூறும் நாற்றிறத்தானும் சமயம் நிலைபெறுமென்க.

இனி அருட்பிரகாசத்தின் அளவையாவது-நட்சத்திரப் பிரகாசம் போலும், தீபப்பிரகாசம்போலும், சந்திரப்பிரகாசம்போலும், சூரியப் பிரகாசம்போலும் பிரகாசிக்கும் அளவினையுடைத்தாய்ப் பிரகாசிப்பதென்க.

இனி நாற்றிறமாவது-பாச காரியங்களாகச் சொல்லப்பட்ட தத்துவ சமூகளாலாகிய பிரபஞ்ச இலக்கண முழுவதையும், ஆன்ம இலக்கண முழுவதையும், பரமான்மாவாகிய பதி இலக்கண முழுவதையும் அறியவும், அவை யிற்றை அறிவதற்கு வேண்டும் சாதனங்களையும், அச்சாதனங்களால் அடையவரும் பயன்களையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டவல்ல திறமென்க,

இனி, மேலே கூறிய பிரகாசத்தினளவாக சமயங்கள் பிரகாசிக்கும் வகை எத்திறமெனின்:—நக்ஷத்திரங்கள் பிரகாச முடைத்தாய்க் காணப்படுவனவே யன்றி அந்தப் பிரகாசத்தால் ஒரு பொருளையும் தெற்றென அறிவதற்கில்லாமைபோல் ஒரு பொருளையும் விளக்க அறியாது சமயம் சமயம் என்று சொல்லும் சொல்மாத்திரையான் பிரகாசிக்கும் சமயங்கள் பல.

வளர்ந்து தேய்ந்து பின் தோன்றுத சந்திரனைப்போல் பிரபஞ்சம் ஒன்றுளதென்றும், உயிர்கள் உள என்றும், கடவுள் ஒருவன் உளனென்றும் பேசிவருவதுபோல் பேசி முடிவுரை கூற வருமிடத்தில் உயிர்களும் போய் கடவுளும் போய் அஃதாவது அவ்விரண்டுபொருளும் உளவென்ப

Sivajnana Siddhiyar Rs. 3—0—0.



தற்குரிய பிரமாணங்களும் இலக்கணங்களும தேய்ந்து தேய்ந்து பிரபஞ்சம் ஒன்றே உளதாய் நிற்கப்பெற்றும், அஃதேபோல் பிரபஞ்சமும் கடவுளும்போய் (தேய்ந்து தேய்ந்து) உயிர்கள் ஒன்றே உளவாய் நிற்கப்பெற்றும்; பிரபஞ்சம் உயிர்கள் கடவுள் என்ற அம்மூன்றும்போய் (தேய்ந்து தேய்ந்து) இம்மூன்றுக்கும் வேறாய் நிர்விகாரமாய் நிராமயமாய்ப் பிரகாசிப்பதாகிய பிரமம் ஒன்றுளது அந்தப் பிரமத்தினிடத்தில் சீவேஸ்வர சகத்துக்களாகிய அவை இரஜ்ஜு சர்ப்பம்போலும். சுக்திகா ரஜிதம்போலும், ஸ்தாணு புருஷனைப்போலும் கற்பிதப்பொருளாமென்று யாவையும் பொய்யாக்கி நான் என்றெழுந்த அகங்காரமே பிரமம் என்று வாய்ப்பறை சாற்றித்திரியும் சமயங்கள் பல. தீபப்பிரகாசம்போல் பரம் உயிர் சகம் என்னும் மூன்றினிலக்கணங்கள் தத்தம் சிற்றறிவுக்கேற்றவாறு விளங்கிய விளக்கங்கொண்டு பேசும் சமயங்கள் பல.

இங்ஙனம் கூறிவந்த முறைப்படி சிற்றொளியுடையனவாய்ப் பிரகாசிக்கும் நக்ஷத்திரம் பிரகர்சம்போலு மன்றும், வளர்ந்தும் தேய்ந்தும் பின் அமாவாசை திதியில் தோன்றாதுபோகும் ஒளியினையுடைய சந்திரப்பிரகாசம்போலு மன்றும், சிற்சில இடங்களிலிருந்து அங்கங்குள்ள சிற்சில பொருள்களைக் காட்டும் தீபப்பிரகாசம்போலு மன்றும், எங்கும் பரந்திருக்கும் இருளையோட்டுவதாய், இருளை என்றும் அறியாததாய், இருள் வசப்பட்டிருந்த எல்லாம் பொருளையும் விளக்குவதாய், அவரவர்களுக்குள்ள ஞானக்கிரியைகளுக்கேற்றவாறு அறியவேண்டியவற்றை அறியவும், செய்யவேண்டியவற்றைச் செய்யவுமாய்ச் செய்து என்றுந் திரியாத இயல்பினையுடைத்தானதாய்ப் பிரகாசிக்கும் சூரியனைப்போலும் திறமுடைய சமயம் சைவ சமயம் ஒன்றே.

அன்றியும் சைவம் என்னும் சொல் அமங்கலங்களைப்போக்கி மங்கலங்களைக் கொடுப்பது என்னும் பொருள் தருதலான் இருளைப்போக்க அறியாது அவ்விருளோடு கலந்து அமங்கலமாய்ப் பிரகாசிக்கும் நக்ஷத்திரம் சந்திரன் தீப முதலியனபோலப் பிரகாசிக்கும் அமங்கலமொழிந்து, சூரியன் உதயமானவழி அச்சூரியன் நக்ஷத்திர முதலானவைகளை ஒர் முதலாய்ப் பிரகாசிக்கும் செயலைச் செய்யவொட்டாமலும் ஒழிந்துபோம்படியும் செய்யாமலும், உள்ளனவென்னும் சொல்லளவாயும், காணுங்காட்சியளவையானும் இருக்கச்செய்வதுபோல் புறச்சமயங்களெல்லாம் அவரவரது பரிபாகத்தளவாய்ப் பிரகாசிக்கும் அறிவுக்கேற்றவாறு ஆங்காங்குப்பிர

காசிக்கித்திருக்கச்செய்து தான் அவைகளில் அடங்காது எங்கும் சுயம்பிரகாசமாய்ப் பிரகாசிக்கும் மங்கலத்தை யுடைத்தென்க.

இவ்வாறு புறச்சமயங்களை அப்பிரகாசப்படுத்தி அகச்சமயப் பேரொளியாய்த் தோன்றும் சித்தாந்த சைவமாகிய இச்சமயத்தில் யாவர் கூடுவரெனின், எண்ணிறந்த பிறவிகளை எடுத்தெடுத்து அவைகளால் இளைப்புத் தோன்றி, அது தோன்றிய துணையானே இருவினையொப்பும் மலபரிபாகமும் உண்டாய், இனிப் பிறவாநெறி கூட வருவதாகிய ஓர் தவப்பிறப்பு வரப்பெற்றவரே கூடுவரென்க.

அங்ஙனங் கூடப்பெற்றார்க்கு, சிவனெனும் நாமந் தனக்கேயுடையவனாய், உலகுக்கெல்லாம் அம்மையப்பனாய் விளங்கும் இறைவன் தன்னையும், ஆன்மாவையும் விளக்கி, பின்னர் இறைவனாகிய தன்பால் ஆன்மாவாகிய அவன் அடிமை குலையாது சிவமாய் நிற்கு நிலையினைப் பிரகாசமாய் உணருமாறு செய்யவல்ல அருள் நூலெனப்படும் சிவஞானபோத நூலையும், சிவமாக்கிய பின்னர் அவ்வான்மாவுக்குப் பாசப்பொருள்கள் சிவனையே தனக்கு உடைமையென்னும் பொருளை விளக்கி உடைமையாகிய அப்பாசங்களான் சிவானந்தானுபவத்தை அனுபவிக்கச் செய்யவல்ல அன்பு நூலெனப்படும் பெரிய புராண நூலையும் அனுக்கிரகஞ் செய்திருக்கின்றனர். ஆகலின் பற்றற்றான் பற்றினைப் பற்ற அவாவும் சிவாபிமானிகள் விபரீதவுணர்ச்சியை விட்டு அருணூலெனப்படும் சிவஞானபோத நூலைக்கேட்கு முறையானே கேட்டுச் சிந்திக்கு முறையானே சிந்தித்து மேற்கூறியவாறு சிவாமாந்தன்மையைச் செய்யவல்ல அருளுண்மையைத் தெளிதல்வேண்டும். அங்ஙனம் தெளிந்த பின்னர் அவ்வருட் குருவைக்கொண்டு நாம் இறைவனுக்கு அடிமையாயுள்ளோம் என்னும் உண்மையைக்கண்டு அடிமையாயிருக்கின்ற நம்மால் இதுகாறும் ஆளப்பட்டனவாகிய பாசபதார்த்தங்களெல்லாம் நமதென்றெண்ணி யன்றோ, பிறப்பிறப்பிலாழ்ந்து துன்பக்கரை காணாது அலைந்து நொந்தோம். அப்பாசபதார்த்தங்களெல்லாம் நம்மையடிமையாகவுடைய இறைவனது உடைமை. இனி அவ்வுடைமையை நாம் அவனுடைமையாக்கி அவனது பணியில் நிற்கச்செய்தல் வேண்டும். அங்ஙனம் செய்யாதொழிவோமாயின் நாம் சிவாநந்தக கரைகாணுமா றெங்ஙன் என்று மனமுருகி அவனுடைமை யாக்குவதில் அவாமிக்கும். பெரியபுராணமாகிய அன்புநூலை ஒருநெறிய மனமுடையவராய் உய்த்துநோக்கி அந்நூலிற் காணப்படும் நெறியே நன்னெறியெனக் கடைப்பிடித்துப் பாசபதார்த்தங்களையெல்லாம் அவனுடைமையாக்கி அவனால் ஆளச்செய்து அதுவே நிட்டையெனக் கொண்டு இன்புற்றுச் சிவானுபூதிமான்களாய் வாழ்தல் வேண்டுமென்க.



இவ்வுண்மையை உணரவே ஆன்றோர்கள் அவ்விருவகை நூலுள் அருள்நூலை முன்கேட்டும் பின் சிந்தித்துந் தெளிந்தாலன்றி அன்புநூலால் நிட்டை கூடுதல் கூடாதாகலான் சிவஞானபோதநூலைக் கேட்டலளவைக்கெளிதாகப் பன்னிரண்டு சூத்திர ரூபமாக முதனூலென வெளியாக்கினர். பின்னர் ஐயவுணர்வுக்கிடனின்றிச் சிந்தித்தலுக்கெளிதாகச் சிவஞானசித்தியென்று வழிநூலை வெளியாக்கினர். அதன்பின்னர் தெளிந்து நிட்டை கூடுவதற்கெளிதாகச் சிவப்பிரகாசமெனச் சார்பு நூலை வெளியாக்கினர். அஃதேபோல் அன்பு நூலாகிய திருத்தொண்டத்தொகையை முதனூலாகவும் திருத்தொண்டர் அந்தாதியை வழிநூலாகவும் பெரிய புராணத்தைச் சார்பு நூலாகவும் வெளியாக்கினர். இங்ஙனம் அருள் நூல் முதல் வழி சார்பென மூன்றாகவும் அஃதேபோல் அன்பு நூல் மூன்றாகவும் வழங்கப்பட்டு வருகின்றமையான் சைவாபிமானிகளாயுள்ளார் தாம்தாம் சொல்லத் தொடங்கும் விஷயங்களாகிய பிரமேயங்களுக்கு மேலே சொல்லிய இருநூலையுமே பிரமாணங்களாகக் கொண்டு விவகரித்தல் வேண்டுமேயன்றி அவ்வளவினைக்கடந்துபேசின் அப்பிரமாணமாக முடியும் என்பது கண்கூடாக அறியத்தக்கது. அடிமைத்தன்மையுடைய ஆன்மாவை அடிமைகுலையாது சிவமாக்குவது அருளால் என்னும் உண்மையைச் சிவஞானபோதத்தால் காணலாமாறு எங்ஙனமெனின், பயனியல் கூறுமுகத்தில் பாசக்ஷயம் பண்ணுமாறுணர்த்துத லென்றும் பரமேச்வரனது ஸ்ரீபாதங்களை அணையுமாறுணர்த்துத லென்றுங் கூறி இறுதியில் அசிந்திதனாய் நின்றபதியைச் சிந்திதனாகக் கண்டு வழிபடுமாறுணர்த்துதலென்றுங் கூறப்பட்டிருக்கு முண்மையால் காண்க.

அஃதாவது பாசக்ஷயம் பண்ணுதலும் பரமேச்வரனது ஸ்ரீபாதங்களை அணைதலும் அசிந்திதனாய் நின்றபதியை சிந்திதனாய்க்காணுதலும் அருளன்றி ஆமாறில்லை யென்பது சித்தாந்தமாகலின் சிவமாக்குவது அருளாலென்றும், ஸ்ரீபாதங்களை யணைதல் என்று கூறுமிடத்து பத்தியினால் மறவாதேத்த அவனது ஸ்ரீபாதத்தையணையும்என்றதனாலும், சிந்திதனாய்க்கண்டு வழிபடுமாறுணர்த்துதல் என்று கூறுமிடத்துச் சிவபக்தர்களோடிணங்குக, பக்தர்து திருவேடத்தையும் சிவாலயத்தையும் பரமேச்வரனெனக்கண்டு வழிபடுக என்றதனாலும் ஆன்மா அடிமையினின்றும் குலையாததன்மை வெளிப்படலால் அடிமைக் குலையாது சிவமாக்குவது என்றதென்க.

௧௦-௧௧-௧௨-சூத்திரங்களில் கூறப்பட்டுள்ள பயன்களில் முதலின் பாசக்ஷயம்பண்ணுமாறும் இறுதியில் சிவாலயத்தையும் திருவேடத்தையும் சிவனெனக்கண்டு வழிபடுமாறும் வெளிப்படலால் அவ்வாதியந்தமாகியஇரண்டும் அன்பின்றிக் கூடாதாகலான் அவ்வன்பின் திறமுடைய பெரிய புராணத்தை அன்பு நூலெனப்பட்டது. ஆகவே பெரிய புராணத்துட் கூறப்பட்டுள்ள அன்புநெறி கைகூடவே சிவஞானபோத முதலிய சித்தாந்த நூல்கள் உண்டாயினவென்பது திண்ணம்.

(இன்னும் வரும்.)

கா. ஏ, ஆலாலசுந்தரம் பிள்ளை.

சித்தாந்தபோத ரத்னாகரம்.

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## தீவினை யச்சம்.

—:o:—

தீவினையச்சமாவது பாவச் செயல்களை மனம் வாக்குக் காயங்களால் செய்ய அஞ்சுதலாம். அவற்றுள் மனத்தாற் செய்யப்படும் பாவங்கள் வஞ்சகம், அழுக்காறு, கோபம், செய்நன்றி மறத்தல் முதலியனவாம். வாக்காற் செய்யப்படும் பாவங்கள் பொய், கோள், கடுஞ்சொல், மித்திரபேதம் முதலியனவாம். காயத்தாற் செய்யப்படும் பாவங்கள், கொலை, மாமிசம்புசித்தல், வியபிசாரம், மதுபானம், களவு, பொய், சூது முதலியனவாம்.

நல்வினை செய்தவர்களுக்கு மோட்ச வின்பமும், தீவினை செய்தவர்களுக்கு நிரயத்துன்பமும் எய்துமென்பது எச்சமயத்தாராலும் மறுக்கொணாத சத்தியம். இத்தன்மைகளை யாவருமுணர்ந்திருந்தும், மிகச் சிலரே பவ நெறிகளை யகற்றி நன்னெறிகளைக் கடைப்பிடித்தொழுகுவர். ஏனையர்கள் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை யென்னும் மூவாசைகளால் சிந்தைமயங்கி உலப்பற்ற தீவினைகளை யீட்டி யிடர்ப்படுவர். பெரியோர்கள் தமக்குச் சகித்தற்கரிய அல்லல்கள் வரினும், நல்வினைகளையே அநவரதமுஞ் செய்துவருவர். தீவினைகளை மனச்சாட்சியைக் கைவிட்டு மறந்தும் புரியார். நாம் மும்மலங்களினாலும் பிணிக்கப்பட்டவர்களாதலினால், தீவினைகளை யறவேயொழித்து, நல்வினைகளையே செய்ய வல்லவர்களல்லேம். ஆயினும் நாம் அவ்வித அந்தகாரத்துள் மூழ்கிக்கிடக்கும் கேவல நிலைமைக்கு அஞ்சி, ஆன்ம நாயகராகிய சிவபெருமானுடைய திருவடிகளில் இடையறாத அன்புவைத்து அவர் பணிசெய்து கிடப்போமாயின் பாவம் நம்மை யொருபோதும் அணுகாது.

சிலர் உலகத்திலே தீவினை செய்வோர் அட்ட ஐஸ்வரியங்களும் பெற்று வாழுதலையும், நல்வினைசெய்வோர் நல்குரவெய்தி நலிவடைவதையுங்கண்டு, நல்வினை தீவினைகளால் பாவபுண்ணியங்கள் உண்டாகின்றன என்பது சுத்தப்பொய் யெனக்கூறிச் சிறிதுமஞ்சாது எண்ணிறந்த பாவங்களை யியற்றிவருகின்றார்கள். ஆன்மகோடிகளைப் பந்தித்துநின்று இயக்கும் சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என்னுங் கன்மங்களின் இலக்கணங்களை அறியாதவர்களே இவ்வாறுகூறி யிடர்ப்படுவர். மேற்கூறிய கன்மங்களின் பாகுபாடுகளினாலேயே மனிதர்களுக்கு இம்மையிலே சுக துக்கங்களுண்டாகின்றன. வேறு சிலர் ஒருவன்செய்யும் நல்வினையின் அளவும், தீவினையின் அளவும் சமமாயிருந்தால், அதுவே இருவினையொப்பு என மயங்கிக்கூறுவர். இருவினையொப்பாவது நல்வினையின் பயனாகிய இன்பத்தில் விருப்பும், தீவினையின் பயனாகிய துன்பத்தில் வெறுப்புமின்றி, இன்பதுன்பமிரண்டையுஞ் சமபுத்திபண்ணி சுட்டுநிலை கெட்டு வருவதை யனுபவித்தலாம். வேறு சிலர் நான் நீ, அவன், அவள், அது, என்று வேறுபடுத்திக்கூறுவது வெறும் மித்தையென்றும், அந்தப் பிரம மொன்றே எல்லாமாயிருக்கின்றது என்றும் வாய்ஞானம் பேசி அஞ்சாது தீவினைகளைச் செய்து வருகின்றார்கள். இவர்கள் உண்மைஞானநூல்களை ஐயந்திரிபறவுணர்ந்த நல்லாசிரியரிடம் கிரமமாகப் பாடங்கேட்காமல், தான்தோன்றிகளாய்ப் பிஞ்சிலேபழுத்த போலிஞானிகளாதலால், இவர்களுக்கும், இவர்களுடைய உபதேசத்தைக்கேட்டு அவ்வாறு ஒழுகுபவர்களுக்கும் நிரயத்துன்பம் உண்டாதல் தப்பாது. வேறு சிலர் எல்லாஞ் சிவன்செயல் நமக்கொரு சுதந்திரமுமில்லை: சூத்திரப்பாவை ஆட்டுவோனுடைய எண்ணப்படி ஆடுவதுபோல, நாமும் அவர் ஆட்ட ஆடுகின்றேம் என்று சொல்லிக்கொண்டு மனதில் எழுந்தபடி தீவினைகளை அஞ்சாமற் செய்கின்றார்கள். எல்

லாஞ் சிவன்செயல் என்பதும் எக்கருமத்தையும் அவர் செய்விக்க நாம் செய்கிறோம் என்பதும் உண்மையே. உண்மைஞானிகளனைவரும் எல்லாஞ் சிவன்செயல் என்றுணர்ந்து தீவினைகளைக் கனவிலும் நினையாதவர்களாய் எல்லாஞ் சிவமயமாக எண்ணி ஒழுகுவார்கள். இன்பதுன்பங்களிரண்டையும் ஈசனருளாகக் கண்டு அநுபவிப்பார்கள். இத்தகைய மெய்ஞ்ஞான ஒழுக்கங்கள் ஒரு சிறிதுமின்றி ஆசை வசப்பட்டுத் தீவினைகளைச் செய்து, துன்பம் வந்தபோது துயரத்தின்மூழ்கியும் இன்பம் வந்தபோது மகிழ்ச்சியில் அமிழ்ந்தியும், மலத்தையுண்டு சேற்றிற்கிடந்து புரளும் வராகங்களைப் போல, உலகவாழ்க்கையி லுழன்றுகிடக்கும் எம்போலியர்கள் எல்லாஞ் சிவன்செயலென்று எட்டுணையு மிரக்கமின்றித் தீவினைகளைச் செய்யில் அது எங்ஙனம் சிவன் செயலாகும்? இவர்கள் உண்மையாய்ச் சிவன் செயலாலே எக்கருமங்களு மெய்தற்பாலனவெனச் சமபுத்திபண்ணி மனச்சேட்டையற்று ஒன்றிலும் பற்றற்றிராமல், ஆசைவாய்ப்பட்டுத் தீவினைகளையீட்டும் பாவிகளாதலினால், இவர்களுக்கும் நிரயத்துன்ப முண்டாமென்பது திண்ணம்.

இந்துசாதனம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மாம்ஸ போஜனக் குறைவும் மரக்கறி ஆகார உயர்வும்.

:o:

கடவுள் ஸ்வரூபம் கருணை ஸ்வரூபமென்று எல்லாச் சமயத்தவர்களும், எல்லாத் தத்துவவாதிகளும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். கடவுள் நமது தந்தை; கடவுளால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவைகளெல்லாம் நமது சகோதர நிலைமையி லிருக்கின்றன. கடவுளை வழிபடுவது நமது கடமையென்று கடவுளிருப்பது உண்மையென ஒப்புக்கொள்ளும் ஒவ்வொருவரும் கூறுகிறார்கள். நாம் கடவுளை வழிபடுவதால் நாதராகிய அவருக்கு என்ன களிப்புண்டாகப் போகின்றது? அவரைக் கேவலம் ஸ்தோத்திரப் பிரியரென்று



மாத்திரம் சொல்வது அசம்பாவிதமென்று அறிவாளிகள் ஒப்புக்கொள்ளாமலிரார். எல்லாம்வல்ல இறைவனுக்கு, நாம் சுண்டைக்காயவ்வளவு உண்டைச்சாதம் காட்டுவதால் பசிதீருமென்றாவது, கவரிவீசுவதாற் காற்றுவருமென்றாவது, கற்பூரம் கொளுத்துவதால் கண்தெரியுமென்றாவது நாம் நினைப்பது நகைக்கத்தக்க காரியமே!

ஆயின், மற்றெதனால் அன்னவருக்குக் களிப்பையுண்டாக்கலாமென்றால், அவருடைய புத்திரஸ்தானத்திலிருக்கும் அகில ஜீவஜெந்துக்களிடத்திலும் நாம் அன்பு பாராட்டி, அருளைக்காட்டிக் கருணைவிளக்குவதனாலேதான் அஃது முடியும். கருணையென்பதைக் காததூரமோட்டி, அன்பென்பதை அறவேயொழித்துக் கொடுமையென்பதையும் கோரமென்பதையுமே உரிமையாய்ப்பூண்டு, நிரபராதிகளான குற்றமற்ற, வலியையற்ற ஜீவராசிகளைச் சித்திரவதைசெய்து, ஆவியைப்போக்குமுன் ஆயிரக்கணக்கான கொடுமைகளுக் குட்படுத்தி, அவைகளைக்கொன்று அவைகளைத்தின்று ஆனந்தசாகரத்தில் அதிகமாய் மூழ்கி, ஐயனைப்பூசித்தால், ஐயன் மகிழ்வானோ? அத்தகைய பூஜையை ஐயன் ஏற்றுக்கொள்ளவே மாட்டான்! அவ்விதமான பக்தியை ஐயன் அங்கீகரிக்கவேமாட்டான்! அம்மாதிரி தோத்திரங்களால் ஐயன் அகங்களிக்கவே மாட்டான். இன்னும் வரும்.

தி. பக்தவத்சலம் பிள்ளை, B. A; M. P. P. I.

---

## சமாச்சாரங்கள்

பூவாளூர் சைவசித்தாந்த சங்கம்:—மார்கழி௴ 2-3-தேதிகளில், ஸ்ரீமான் - கயப்பாக்கம்-சதாசிவ செட்டியாரவர்கள் அக்கிராசனராக வீற்றிருக்கப் பற்பல உபந்நியாசங்கள் பல பல வித்துவசிகாமணிகள் செய்ய அதன் எட்டாவது ஆண்டு நிறைவிழா கொண்டாடப்பட்டது.

---

தாரமங்கலம் ஸ்ரீ சண்முகாநந்த சபை:—மார்கழி௴ 15-16-17-௳களில் முதலாவது ஆண்டு நிறைவுகொண்டாட்டம் முதலிரண்டுநாள் ஸ்ரீமான் P. U பொன்னுசாமி நாய்க்கர் அவர்கள் அக்கிராசனத்திலும் மூன்றாம்நாள் ஸ்ரீமான் S நடராச ஐயரவர்கள் அக்கிராசனத்திலும் பல வித்துவான் உபந்நியாசங்கள் செய்ய நிறைவேறின.

---

ஆத்தூர் மெய்கண்டான் கழகம்;—மார்கழி௴ 30-31-தேதிகளில் ஸ்ரீ வைகுண்டம் நியாய துரந்தரரும், சிவதேவஸ்தான கமிட்டி மெம்பருமாகிய ஸ்ரீமான்-S. V. பொன்னம்பல முதலியாரவர்கள் அக்கிராசனத்தில் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவாகப் பல பண்டித சிரோமணிகளைக் கொண்டு பல உபந்நியாசங்கள் செய்விக்க நிறைவேறியது.

:o:

## சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 1918-வருடம் பிப்பிரவரி மாதத்தின் வரவு செலவு கணக்கு.

| வரவு. | தொகை. ரூ. | ஆ | ப | செலவு. | தொகை. ரூ | ஆ | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 1918வருடம் ஜனவரிமீ 31வ இருப்பு ... | 195 | 1 | 4 | லிகிதர் சம்பளம் ... | 20 | 0 | 0 |
| ஆயுள் சமாஜிகர் சந்தா ... | 5 | 0 | 0 | காகிதம் ... | 27 | 12 | 0 |
| சாமாஜிகர் வருட சந்தா ... | 29 | 8 | 0 | தபால் செலவு முதலியன ... | 21 | 8 | 9 |
| பழையபிரதிகள் விற்பனை .. | 0 | 4 | 0 | | 69 | 4 | 9 |
| | | | | பிப்பிரவரிமீ 31வ இருப்பு... | *169 | 8 | 7 |
| | | | | *ஆயுள் சமாஜிகர் சந்தா ரூபா 580-0-0 | | | |
| ஆக மொத்தம்... | 229 | 13 | 4 | ஆக மொத்தம்... | 229 | 13 | 4 |

K. Subramaniyam Pillay, M.A. M.L., Secretary. M. Kandasawmy Mudaliar, B.A. Auditor. W. T. Govindaraja Mudaliar, Treasurer.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

4-JUN1918

# சித்தாந்தம்.

தொகுதி எ.] • 1918வருடம் ஏப்ரல்மீ [பகுதி ச.

## சாந்தோக்யோபநிஷத்து.

### ஏழாவது பிரபாடகம்.

### கண்டம் க.

ரு. சநத்குமாரர் நாரதரை நோக்கி முனிவரே! நீர் அத்யயநம் செய்தவையனைத்தும் பெயர் மாத்திரந்தான். இருக்குவேத முதலியனவும் அங்ஙனமே. ஆகலின் அப்பெயர்களைப் பிரமமாகவெண்ணி உபாசனை செய்வாயாக.

உ. பெயர்களைப் பிரமமாகவெண்ணி யுபாசிக்கின், அப்பெயர்களைத்தினு மடங்கியுள்ள விஷயங்களனைத்தும் கோசரமாகும். அப்போது நாரதர் அப்பெயர்களைக்காட்டிலும் பெரிது ஏதாவதிருக்கிறதோ அங்ஙனமிருந்தால் சொல்லுக என சனத்குமாரர் சொல்லுகிறார்.

### கண்டம் உ.

பெயராகிய நாமத்தைக்காட்டிலும் வாக்கானது பெரிது, வாக்கினால் இருக்குவேதம் முணரப்படுகிறது. அங்ஙனமே மற்றைய வேதங்களும்,

மெய்கண்ட சாத்திரம் பதினுன்கு மூலம் விலை அணா ௪.

அன்றியும் சுவர்க்கம், பிருதிவி, வாயு, ஆகாயம், ஜலம், தேஜசு, தேவர்கள், மனிதர்கள், மிருகங்கள், பட்சிகள், செடி, மரங்கள், துஷ்ட ஜெந்துக்கள், தருமம், அதருமம், சத்தியம், அனிருதம், சாது, அசாது, மனதிற்குப் பிரியமுள்ளவை,இல்லாதவை,யனைத்தையுந் தெரிவிக்கிறது. வாக்கொன்று இல்லாமற்போனால் தருமா தரும முதலிய யாவுந்தெரியாது. ஆகவே எல்லாவற்றையும் தெரிவிப்பது வாக்கு அவ்வாக்கினையே பிரமமாக உபாசனை செய்க.

உ. வாக்கினைப் பிரமமாக யுபாசிக்கின் அவ்வாக்கினடங்கியிருக்கும் விஷயங்களனைத்தும் கோசரமாகும். அப்போது நாரதர் வாக்கினைக் காட்டிலும் பெரிது ஏதாவதிருக்கிறதோ அங்ஙனமிருந்தால் சொல்லுக எனச் சனத்குமாரர் சொல்லுகிறார்.

### கண்டம் ௩.

வாக்கினைக்காட்டிலும் மனது பெரிது எங்ஙனமெனில், இரண்டு நெல்லிக்காய், அல்லது இரண்டு இலந்தம்பழம், அல்லது இரண்டு தாலிக்காய்களை ஒரு அங்கையிலடக்கிக்கொள்ளுமோ அங்ஙனமே நாமத்தையும் வாக்கினையும் மன மடக்கிக்கொண்டிருக்கிறது. மந்திரங்களைத் தியானம் செய்யவேண்டுமென மனத்தில் நினைத்தால் தான் தியானஞ்செய்ய முடியும். நினைத்த பிறகே கர்மங்களு நிகழுகிறது. நினைத்தால்தான் புத்திரர் முதலானவர்களையும் உலகங்களையுமடைகின்றான். ஆகவேமனமே ஆத்துமா, லோகம், பிரமம். ஆதலினால் மனத்தினையே பிரமமாக வுபாசி.

உ. நாரதர், மனதைக் காட்டிலும் பெரிது உண்டோ, உண்டெனிற் சொல்லுக என்றனர் சனத்குமாரர் சொல்லுகிறார்.

### கண்டம் ௪.

மனதினைக்காட்டிலும் சங்கற்பம் பெரிது. சங்கற்பமென்றுண்டாகிறதோ? அப்போதே நினைவுண்டாகிறது மனமுண்டாகிறது பிறகு வாக்கைக் கிளப்புகிறது. வாக்கு நாமத்தையுண்டாக்குகிறது. நாமங்களில் மந்திரம் அடங்கியுள்ளது. மந்திரங்களில் நாமங்கள் அடங்கி யிருக்கின்றன.

செய்யுளிலக்கணம் விலை அணா 8.



உ. இவையனைத்தும் சங்கற்பத்திலடங்கி யுற்பத்தியாகின்றன. சுவர்க்கமும், பிருதிவியும் சங்கற்பத்தாலுண்டாகின்றன. வாயு, ஆகாயம், அப்பு, தேஜசு முதலியவும் அங்ஙனமே. இவையின் சங்கற்பத்தால் மழை, மழையாலன்னம், அன்னத்தால் பிராணன், பிராணனால் மந்திரம், மந்திரத்தால் அக்கினி கோத்திராதி கருமம், அக்கர்மத்தால் சுவர்க்காதிபலன், அப்பலத்தால் எல்லாசங்கற்பமு மூலமாம். ஆகவே சங்கற்பத்தைப் பிரமமாக உபாசி.

௩. இங்ஙனம் உபாசிப்பவனுக்குத் துருவமாயிருக்கின்ற உலகங்கள் கிடைக்கின்றன. துருவனாகவே பிரதிஷ்டிக்கப்படுகிறான். நாரதர், சங்கற்பத்தைக் காட்டிலும் பெரிது உளதோ இருந்தால் சொல்லுக என்றனர். சனத்குமாரர் சொல்லுகிறார்.

(மணவழகு.)

### நீதி.

ஆயு: கர்ம சவித்தஞ்ச
வித்யா நிதந மேவச
ஏதே பந்து விலிக்யந்தே
கர்ப்பஸ் தஸ்யைவ தேகிந:

ஒவ்வொரு ஜீவனுக்கும் அது கர்ப்பத்துக்குள் ளிருக்கும்போதே அதன் வயது தொழில்களும் கல்வி மரணம் ஆகிய இவ்வைந்தும் நிச்சயித்து எழுதப்படுகின்றன.

தாயுமான சுவாமி பாடல் மெய்கண்ட விருத்தியுரை ரூபா 3—8—0

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# இராமமூர்த்தி.

இராமன் என்னும் பெயர் சுப்பிரமணியக் கடவுட்கே யுரியது. இரம்மியத்தை யுடையவர் சகலகுண சம்பன்னர் அவராகவே விளங்கலானென்க. இரம்மியம் என்பது மகிழ்ச்சி முதலிய பல பொருளைத்தரல் சப்தார்த்த நிர்ணய முதலியவற்றிற் காண்க. விட்டுணுவின் பிறவிகளுளொன்றாய தசரதன் மகனுக்கு உரைப்பாருமுளர். அஃதவர்க்கு இடுகுறியாக்கப் பெயராமன்றி யிடுகுறி மரபன்றென்பது தெள்ளிதிற் றுணியப்படுமென்க. என்னை? அவர் தம் மிருபானைந்து பிறவிகளுட் சமதக்கினி முனிவரின் குமாரனாகப் பிறந்தாற்கும் இராமன் என்று பெயர். வசுதேவர்க்கு உரோகிணி வயிற்றிற் றோன்றியாற்கும் இராமன் என்று பெயர். இங்ஙனம் இராமனென்று மற்றையர்க்கும் வைக்கப்பட்டிருத்தலானும், அதுபோல இற்றை ஞான்றும் நம்மனோர் பலர் குகப்பரம்பொருளின் திருப்பெயர்களான ஆறுமுகன், வேலன், குமாரனாதிய பெயர்களைத் தத்தம் குமாரர்க்கு வைத்தல் கண் கூடாகலானும், தசரத புத்திரர் பல்வகைத் துன்பங்களினுழந்து போதலானும் அஃதவற்குப் பொருந்தாமை யறிக. இங்ஙனமே வேதங்களில் வரூஉம் நாராயணன், கோவிந்தன், கோபாலன், மாதவன், கேசவன் முதலிய பெயர்களெல்லாஞ் சிவபெருமானுக்குங் குகப்பெருமானுக்கும் வாச்சியமாகப் பொருந்தற்பாலனவென்பது ஆன்றோர் துணிபாம்.

அதுபற்றியன்றே அப்பய தீக்ஷித சுவாமிகளும் கேசவாதி நாம சிவபரத்துவ நிருபணத்துக் கூறியுள்ளார். அந்நூலின்கண் இந்நாமங்களையெல்லாஞ் சிவபர மாக்கினமைகண்டு தெளிக. வைணவ நண்பர்கள் மற்றைய நாமங்களெல்லாவற்றையு மியைக்கினு மியைக்கலாம். நாராயணனென்ற பெயர் மற்றையோர்க்கு எவ்வாற்றானும் மியையாதென்பர். அதனையு மெமது சிவகுகக் கடவுட்கு ஆக்கிக்காண்பாம். நாராயணனென்பது நரசமூகங்களிலிருப்பவன் எனப் பொருள் ஆற்றல் கோடலால் ஆன்மாக்கடோறும் பரமான்மாவா யிருப்பவனென்பது போதரும். இங்ஙனம் பொருள் கொள்ளுங்கால் ணத்துவம் பாதிக்குமெனின் அற்றன்று,



நரருடைய தொகுதி நாரம் எனத் தொகுதிப்பொருள் பற்றி அண் விகுதிவருமென்னும் பாணினி சூத்திரத்தால் அண்விகுதிபெற்று நிற்ப, அதன்மேலர்சாரப்பொருளுணர்த்துங் ககர ஙகர வித்துக்களையுடைய யகர விகுதிவந்து அயனீண்டு நாராயவென நின்றவழி, அதுவும் பகுதித் தன்மைப்படுதலின் அதன்மேல் வினைமுதற் பொருண்மையுணர்த்தும் லகர டகர வித்துக்களையுடைய யுகர விகுதியனவெனத் திரிந்து நாராயநனென நின்றவழி, வினைப்பெயர் விகுதியினின்ற நகரம் ணகரமாய்த் திரியுமென்பதனால் அங்ஙனந் திரிந்து நாராயணனென வொருமொழியாய் உயிர்த்தொகையை யொத்து நிற்பனென்னும் பொருட்டாய்க் காரணக்குறியாயவாறு காண்க. இங்ஙனம் நாராயணனென்பது லகர டகர வித்துக்களையுடைய யுகாவீற்றுச் சொல்லாகலினன்றே பெண்பாலின் நாராயணீயென ஙகர ரகர வித்துக்களையுடைய ஈகார விகுதியீற்றான் யாண்டும் வழங்குவதூஉமென்க. யுகர விகுதியீற்றுச் சொல்லெனக் கொள்ளாக்கால் நாராயணீயென ஈகார விகுதிபெறுதற்கு விதியின்மை யுணர்க. நாராயணனெனும் வடமொழிக்கு இங்ஙனம் விகுதிமேல் விகுதிபுணர்த்துச் செய்கை செய்வனவெல்லாம் வடமொழி வியாகரணத்திற் கண்டு கொள்க.

இங்ஙனம் நாராயண சப்தமே யாகுங்கால், இராமசப்தம் ஆவது வியப்பன்றென்க. இரகுவமிசத்திற்றோன்றிய தசரதன் மகா சிவபத்தியுடையவன். தனக்குப் புத்திரசந்தான மின்மையாற் கௌசலையன்றிக் கைகேயி சுமித்திரை யென்பாரையு மணந்தான். அவர்க்கு மங்ஙனமில்லாமைகண்டு மனம் வருந்தி யிருந்தகாலை, இருசிய சிருங்கர் என்னுங் கலைக்கோட்டுமுனிவர் தோன்றி,

“இஷ்டிந்தேஹம் கரிஷ்யாமி புத்ரீயாம்
புத்ரஸாரணாத்
அதர்வசிரஸிப்ரோக்தை: மந்த்ரக்ரு
ஷ்டைர் விதாநத:”

(ஓ அரசனே! நிற்குயாம் அதர்வ சிரசு என்ற வேதபாகத்திற்கூறப்பட்ட மந்திரங்களால் அமைந்த விதிப்படி புத்திர காமேட்டியைப் புத்திரோற்பத்திக்காகச் செய்விப்பேம்.)

என்றிவ்வாறுரைத்து அதர்வசிர மந்திரங்கூறி இட்டிசெய்தமையாலோர் புருடனளித்த பாயசத்தினால் இராமன் இலக்குமணன் பரதன் சத்

---

பகவத்கீதார்த்த பங்கம் விலை அணா—1.

துருக்கள் என்பார் தோன்றினர். தாசரதி தாடகையை வதைத்துச் சீதையை மணந்து தன் றந்தைவரத்தைக் காக்கும் படிமனையாளுடன் காட்டிற்குச் சென்றிருந்த காலை, மாயமானை யுண்மைமானென்று துரத்தப்போங்காலை இராவணன் சீதையைக் கவர்ந்துசென்றான். அதனாற் றுக்கக்கடலின் மூழ்கிய இராகவன் தாமிர சூடத்துவசம் என்னுந்தலத்தையடைத்து குகக்கடவுளைநோக்கித் தவமுஞற்ற அவர்தோன்றித் திருவாய்மலர்ந்தருளுவார்.

கோதண்டராகவனே! ஓர் பெண் பொருட்டாக நீ யிரங்குவது அழகன்று "வழும்புதடி சூடரென்பு வார்நரம்பு மேதை செய்த்தோர் தழும்புழுக்கண் மூளை மயிர்சரும மாதிகள் குழுமுங்-கொழும்பொதியைப் பகுத்திடுங் காற்கோற்றொடியா ளவள்காட்டாய்-விழும்பிணத்தெவ்வுறுப்பில்லை விழையாமை விடல்கிளவாய்"

என்பதுணர்ந்து கொள்க, பயனில்லாத சானகியைப் பெரும்பேறாக மதித்து அலைகின்றனை. அறிவு மிக்க மானுடப்பிறவியை யெடுத்துப் பெற வேண்டிய பயனை விடுத்துச் சிறிது கணச்சுகத்தை நினைத்து மாழ்கின்றனை. இராகவ! பசுபாசமென்று சொல்லப்படுகின்ற சராசர மெல்லாவற்றையுந் தொழிற்படுத்துகின்ற பதியா மெம்மையும் மலமென்னும் வலியநோயினால் நொந்த நின்னையும் உள்ளவாறு அறிதி, இடம், பொருள், ஏவல் முதலியனபோல ஒழியாது உன்னோடு கூடப்பிறந்த உடம்பே உனக்கு வேறாய்ப் பிரிந்தழியுமாயின் பெண் என்னும் அவ்வுடல் சொந்தமாகுமோ! சீதையைச் சனகன் மகளென்று நினைக்கின்றாய் அவ்வாறல்லள். தூக்கிக் கொண்டு சென்ற இராவணனது புத்திரியே. அதையுஞ் சுருங்கச் சொல்வேம்.

முன்னர் வேதவதி என்னும் பெண் திருமாலினை விவாகஞ்செய்ய வேண்டுமென்று நினைத்துத் தவஞ்செய்தாள். அவ்வழிவந்த இராவணன் அவளைக் கண்டுமோகித்துக் கற்பழிக்கத் தொடங்கினன். வேதவதி வருந்தி நினக்கே மகளாகப்பிறந்து உன்னையும் உன்னூரையுந் துணை சுற்றங்களையும் படைகளையும் அழிப்பிக்கின்றேனென்று அக்கினியில் வீழ்ந்து பின் வண்டோதரி வயிற்றில் வந்து பிறந்தாள். அவன் சோதிடர்களை வருவித்துப் பலன் கேட்க, அவர் இக்குழந்தை யிங்குளதேல் இலங்கை முற்றும் நாசமாகும் என்று சொல்ல, குழந்தையைக் கடலிலெறியும்படி இராவணன் உத்தரவிட வண்டோதரி யோர் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிட்டு மனம்

சைவாகமப்பிரமாண்யம் விலை அணா—12.



வருந்தி அழுதுகொடுத்தாள். அது கடலிலெறியப்பட்டு மிதிலைக்கரையிற் சேர்ந்து மணலான் மூடப்பட்டுக்கிடந்தது. சனகன் புத்திர காமேட்டி யாகஞ் செய்தற்காக உழுவித்தான். கலப்பைச் சால்வழியாகப் பெட்டி காணப்படத் திறந்து பெண்ணுயிருத்தல்கண்டு வளர்த்தான். கலப்பைச் சாலிற் கண்டெடுத்தமையாற் சீதை என்று பெயரிட்டான். ஆதலால் தன் மகளென்று அறியாமல் இராவணனும் மோகித்தெடுத்துச் சென்றான். சீதைக்கும் இராவணன் தந்தையென்று தெரியாது. உனக்கும் இவ்வுண்மைகள் தெரிந்தில.

பெண்களாலே துன்பம் பெரிதும் வருமென்பது துணிபு. உனது தந்தை பெண்ணின் சொல்லால் இறந்தான். நீயோ அப்பெண் பிரிவால் வருந்துகின்றனை. இவையிரண்டுமே தக்கசாட்சி ஆதலாற் பெண்ணாசையைவிடுதி. அதற்காகக் கலங்காதே. அன்றிச் சீதையை மீட்பது கருத்தாயின் மந்திரமொன்று உபதேசிக்கின்றேம். நுந்தையும் அவன் வழிவந்தாரும் நம்மடியவர். தசரதன் எம்மிடத்துப் பக்தியுடையவன். அதனாற்றான் உனக்கு, எமக்கும் எமது தந்தையார்க்கும் உரியதாகவுள்ள "இராமன்" என்னும் பெயரைவைத்தான். உனக்கு முன்னேதோன்றிய இராமர்க்கு யாம் சாரூப்பியம் கொடுத்துள்ளேம். வேதங்களிற் கூறப்பட்ட எனது பெயர் இராமன் என்பதற்கு ஐயமின்று. உன்னைப்போலப் பற்பலராமரைக் கண்டுள்ளேம். வேதத்திலே கூறப்பட்ட இராம சப்தத்திற்குரிய பொருள் நீயேயென்று கருவங்கொண்டாய். அதனாற்றான் இத்துன்பம் அநுபவிக்கின்றாய். தசரத ராமனாகிய நீ இவ்வாறு கொள்ளின், பரசுராமன், பலராமன் என்பார் என் சொல்வார்! இன்னும் மற்றைய இராமர்கள் என் கூறுவார். அதர்வணவேதம்-இராமரகசியோப நிடதத்திலே,

ராமந்திரிணேத்திரம் சோமார்த்த தாரிணம் சூலிநம்பரம்!
பஸ்மோத்தூளித சர்வாங்கம் கபர்த்தி நமுபாஸ்மஹே!

என்று கூறப்பட்டதனாற் சிவபெருமானென்பதே நன்கு வெளியாம் நிற்குஆயின் கூறிய மூன்று கண்களெங்கே, பிறைச்சந்திரதாரணம் எங்கே, உமையை நீ பாதியுடம்பாகத் தரித்திருக்கின்றனையா, அதற்கு மாறாகப் பெண்டிழந்தாயன்றோ, சூலமில்லையே. கோதண்டந்தரித்துக் கோதண்டராமன் எனப்பெற்றனையே யன்றிச் சூலராமன் ஆனாயல்லை. இதனால் இரா

திருத்தொண்டர் வெண்பா (திருக்குறளுத்தரார்த்தமுடன்) விலை அணா—1.

மனென்னும் பெயரும் மந்திரமுஞ் சிவபெருமானுக்கும் எமக்குமே யுரியதாம். திருமால் இதற்கு முன்னெடுத்த மூன்று இராமாவதாரத்தில் எம்மையும் பூசித்து மூலசேதுவுஞ் செய்தமையினால் இந்த மந்திரத்தை யுபதேசித்துளோம். சடக்கர மந்திரம் தூலம் சூக்குமம் காரணம் என மூவகைப்படும். தூலசடக்கர மந்திரத்திலேயுள்ள இரண்டாமெழுத்தும், சூக்குமசடக்கரத்தின் இரண்டாமெழுத்துங் கூட்டின் "ராம" என்னு மந்திரமாதல் காண்க. சூக்கும சடக்கரத்திலே நிலைமாறலாலே "(கு)மாரா" என்று நிற்றலையு மறிகுதி. வேதங்கள் இராமன், இலக்குவன் என்று கூறியது முறையே எமையும், எமது துணைவன் வீரவாகுவையும், சீதை என்று கூறியது தெய்வயானை யம்மையையும் என்றறிவாயாக.

"ஷடக்ஷரஸ்ய மாகாத்மியம் சிவோஜா நாதிதத்பர!
ஸ்ரீராமமந்திர ராஜஸ்ய சம்யகர்த்தோய முச்யதே!
யஏதம்மந்த்ர ராஜம் ஸ்ரீராமச்சந்த்ர ஷடக்ஷரம் நித்ய!
மதிதே சோக்நி பூதோபவதி! ஸவாயு பூதோபவதி"

எனவரும் வேத மகா வசனங்களானும்,

"காணுபத்யாதி மந்த்ரேஷு கோஷகோ மகணுதிக!
மந்தரஸ்தேஷ்வப்ய நாயாஸபலதோ யஷடக்ஷர!
ஷடக்ஷரோயம் மந்த்ரஸ யாத்ஸர்வா கௌக நிவாரண"

எனவரும் வேத வசனங்களானும் சடக்கர மந்திரம் எல்லாமந்திரங்களினும் விசேடமுற்றதென்றும், ஸ்ரீராமச் சந்திரனுடையதே சடக்கரமென்றுங் கூறியிருக்கின்றமை தெளிவாகும். என்று கூறி, சீதையைப் பிரிந்ததனாலுண்டாகிய காமாக்கினியைத் தணித்தற்கியலாதிருந்த தசரத இராமனை ஆற்றித்தெளிவித்து, இராமதாரகம் என்னுந் தமது சடக்ஷர மந்திரங்களுள் ஒன்றை யுபதேசித்து, இராக்கதரை வெல்லும் சக்தியையும் அளித்து, ஆகமங்கள் கூறிய வேதாந்தசார சித்தாந்த மகா வாக்கியங்களாகிய சிவத்துவமசி முதலிய நான்கனையு முபதேசித்தருளினார். பின்னரும் நின் ஐயத்தை மாற்றுகின்றேம் என்று, விபூதியுத்தூளனமாகத்தரித்த திருமேனியும், சூலாயுதம், பாசம், அங்குசம், தனு பாணங்கள் தரித்த திருக்கரமும், மூன்று திருக்கண்களும் சந்திரதாரண திருமுடியுஞ் சீதையுருவாந் தெய்வயானை யம்மையாரும், பொருந்தத் தரிசனங்காட்டியருளினார். தசரத ராமர் தெளிவுற்று இன்பக்கடலுண் முழுகிச் சென்றார். இதனாலே சிவராம மூர்த்தி, இராமமூர்த்தி, இராமச்சந்திர மூர்த்தி எனப் பெயர் பெற்றார் குகனார்.



அதர்வணவேதம்.

"சிவோமாராம மந்த்ரோயம் வஸ்வர்ண ஸ்துவசுப்ரத!
ருஷிஸ்ஸதாசிவப் புரோக்தோ காயத்ரி ம்சந்த உச்யதே!
சிவோமாராமச் சந்த்ரோத்ர தேவதா பரிகீர்த்தித!"
"ராமாபிராமாம் ஸௌந்தர்யஸீமாம் சோமாவதம் சகாம்!
பாசாங்குச தநூர்ப்பாணாத ராந்தியாயே த்த்ரலோசநம்!
ராமம் த்ரிணேத்திரம் சோமார்த்த தாரிணம் சூலிநம்பரம்!
பஸ்மோத்தூளித சர்வாங்கம் கபர்த்திந முபாஸ்மகே"

திருச்செந்தூர்ப் புராணம்.

தண்டக வனத்துக் கோதாவரிக்குத் தென்பாங்கர்ச் சீதை
யொண்டொடிப் பிரிந்து காமத் தொள்ளழற் பொருதிராமக்
கொண்டனெஞ் சகமுன்றேறக் கோதில்வாக்கியமோர் நான்கும்
பண்டுரைத்தருளி ராமனெனப் பெயர் பரித்தாங் குற்றான்.

இராம மூர்த்தயே நம:

சுப்பிரமணிய பராக்கிரமத்தில் கண்டது

அ. பழனிவேலாயுதம் பிள்ளை,
காரைக்கால்.

---

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# தமிழ்ப்பழமை.*

[illegible] முதற்சங்க காலத்தில் நான்குபக்கமும் கடலாற்சூழப்பெற்று நாவலந்தீவு என்ற பேர் பெற்றிருந்தது. பின்னர் விந்தமலைக்கு வடக்கிலிருந்த கடலிருந்த பூமி மேற்கிளம்பி மலையாகி இமயமலை என்ற பேர் பெற்றது. இமயமலை தோன்றிய பின்னர் பெர்சியாவிலிருந்து ஆரியர் இந்நாட்டுக்கு வந்து குடியேறினர்.

* சிதம்பரம் ஸ்ரீமத்-ஆறுமுக நாவலர் கல்லூரியில் மறைத்திருவன்விருதை சிவஞானயோகிகள் செய்த உபந்நியாசம்.

மக்கண் முதலிற் றோன்றிய இடம் இப்பொழுது இந்துமாக்கடலின் மூழ்கிக் கிடக்கும். லெமூரியா (தமிழகம்) என்பது ஆங்கில நூலாசிரியர் பலர் கொள்கை "பாண்டி நாடே பழம்பதி" என்பது முதலிய தமிழாசிரியர் கொள்கையும் அதை ஆதரிக்கின்றது. தமிழகத்திற்றோன்றி இயல்மொழியாகிய தமிழ் பேசிப் பல்கிப்பெருகிப் பல நாடுகளிற் சென்று குடியேறிய தமிழர் அவ்வவ்விடங்களுக்குத் தக்கபடி பலவாறு மாறுபட்ட மொழிகள்படைத்துப் பேசி வெவ்வேறு சாதியார் ஆயினர். இந்நாட்டுக்கு மறுபடி திரும்பி வந்தவர்களில் ஆரியரும் ஒரு கூட்டத்தார் ஆவர்.

தமிழர் ஐந்திணைமாக்களாக எண்ணப்பட்டனர். ஆனால் சாதி வேற்றுமை கிடையாது. உலகம் நடைபெறு முறையில் அந்தணர் அரசர் வணிகர் வினைஞர் என்ற தொழிலினராயினர். தொழில்கண் முப்பகுப்பிற்பட்ட பதினெண்வகையன. தமிழர் சைவவைணவம்பற்றிக் கொலையை யிழிவெனக்கொண்டனர். ஆரியர் வேள்வி பற்றிய கொலையை உயர்வெனக் கொண்டனர். தமிழர் முப்பொருளுண்மை தேர்ந்தவர். ஆரியர் உயிர் மாயைகளுக் கின்மைகூறிப் பதியொன்றுக்கே யுண்மைகூறுபவர். ஆரியர் இருக்கு முதலிய வேதங்கள் தமிழ்த்தொல் காப்பியத்துக்குப் பிற்பட்டனவென்று நச்சினார்க்கினியார் முதலியர் கூறுகின்றனர். பல ஆராய்ச்சிக்காரர் இருக்கு முதலிய வேதகாலம் ஏறக்குறைய 5000 - ஆண்டு என்று தீர்மானிக்கின்றனர்.

வைவசுதமநு தமிழரசனென்று பாகவத முதலிய புராணங்கள் கூறுகின்றன. வேதங்களு மதையொத்துக்கொள்ளுகின்றன. மனுவழிவந்த சூரியகுலம் சந்திர குலங்களும் தமிழர்க்குரியனவே. அவ்வழி வந்தவரே சேர சோழ பாண்டியர். ஆதலால் படைப்புக் காலந்தொட்டுத்தமிழ்மொழி உலக வழக்கில் நிலையுற்று வருகின்றது. ஆரியர் புகழ்ந்துகூறும் இருடிகளும் பேசிய மொழி தமிழே.

வடமொழி ஆரியர் வேள்வி முதலிய எல்லாக் கிரியைகளுக்கும் வேண்டிய மந்திரங்கள் அமைத்துவைத்தற் கேற்படுத்த நன்றாக்கப்பட்ட (சம்ஸ்கிருதம்) மொழி நெடுநாள் பரம்பரையாய் ஓதிவந்ததே யன்றி எழுதிவைக்கப் படவில்லை. அதனானே அதற்குரிய எழுத்தமைக்கப்படவில்லை. அத்தகைய வடமொழியில் பல அரிய விடயங்கள் எழுதிவைக்கப் பட்டுள்ளன.

மணவழகு சரித்திரம் (படத்துடன்) விலை அணா—4.



தமிழில் எல்லா நூல்களும் நிரம்பியிருந்தன. முதலாவதூழி இரண்டாவதூழிகளில் அளவிறந்த நூல்கள் கடல்கொள்ளப்பட்டன. தமிழினின்று மொழி பெயர்க்கப்பட்ட வடமொழி ஆகமங்களில் தமிழ் நூற்கள் பல உயிர்த்திருக்கின்றன. இவ்வாறு மிகச்சிறப்புடைய தமிழ் மொழியை இப்பொழுது போற்றுவாரில்லை. இக்காலத்தில் சிவாலயங்களைப் பழுது பார்த்து நன்னிலையில் வைத்துப் போற்றும் நாட்டுக்கோட்டை பிரபுக்கள் தமிழ் நூற் கல்லூரிகள்வைத்து அவற்றில் தமிழ் இலக்கண இலக்கியங்களும் தமிழ் மறையும் ஓதுவிப்பார்களானால் தமிழ் நன்னிலைமை யடையும் அவர்கள் புதுப்பித்த சிவத்தளிகளை முறையில் தொழும் அடியார் தொகையும் பெருகும்.

ஆறுமுக நாவலரவர்கள் தமிழ்ப் பாடசாலை யேற்படுத்தியிருப்பது கொண்டாடத்தக்கது இப்பொழுது ஷை யார் பரம்பரையில் வந்த திருவன் பொன்னம்பலம் பிள்ளையவர்கள் கல்லூரியமைத்து இதில் வித்வான் வருப்பு ஏற்படுத்தி நடத்தல் மிகப்போற்றத் தக்கது.

இத்தென்னிந்தியாவில் இத்தகைத் தமிழ்க் கல்லூரிகள் நூற்றுக்கதிகமிருக்கவேண்டும்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீ சேக்கிழார் கவி நலமாண்பு.

## பெரிய புராணம்.

—:0:—

சிவானுபூதிச் செல்வர்களாகிய சான்றோர் நூல்களுள் செம்பொருளேயன்றி குறிப்பிற்றருபொருள் மிகுதியும உள்ளன. அவை நுணுகி யறிவார்க்கே சமுத்திர கலச நியாயமாக புலப்படற்குரியன.

அந்நூல்களுட் சிலவற்றையேனும் பன்முறை நுணுகி யறியப்புகுங் கருமத்தை மேற்கோடற்கு நம் ஆயுட்பிரமாணம் பற்றாததாகும். ஆயினும் அச்சிவானுபூதிச் செல்வர்களது நூற்பொருள் ஆராய்ச்சியில் மனத்திற் குண்டாம் இன்பம்போல் வேறெக்கருமத்தினும் உண்டாவதில்லையென்பது அறிவுடையோரது அநுபவ சித்தமே.

நூல் என்பது பல பாஷைகளில் பன்னூல்களிருப்பினும் மானிடப் பிறப்பெய்தியார்க்குரிய நான்கு பொருளையும் அளிக்கக்கூடிய நூல்கள் எதுவோ, அவற்றைத் தான் ஈண்டு நூல் என்று கூற முன் வந்தனே னென்பது கூறுமதே யமையும்.

"அறம் பொரு ளின்பம்வீடடைத னூற்பயனே"
"அந்நூல்களை நவில்தொறும் நூனயம்போலும்" என்னும்

வாக்கிற் கிலக்கியமாய்ப் பலமுறை யாராயப்புகினும் ஒவ்வொரு முறையி னும் புதிய புதிய விஷயங்களை அறிதற்கிடனு யுளவென்பது தெளியக் கிடந்தன.

நாயிற்கடையினுங் கடையனாகிய நான் எனது சிற்றறிவிற்குத் தோற்றியதை வெளியிடுகின்றேன்.

அறிஞர்கள் குணத்தைக் கொண்டு, குற்றத்தைப் பொறுத்தருள் வார்களெனப் பெரிதும் நம்புகின்றேன்.

"உலகெலாமுணர்ந் தோதற்கரியவன்
னிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில்சோதிய னம்பலத் தாடுவான்
மலர்ச்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்."

இத்திருவருட் பாசுரத்தில் உலகமென்னும் பல பொருள் ஒரு சொல் ஈண்டு அறிஞரை உணர்த்தி நின்றது. எல்லாம் என்னும் விரவுப்பெயர் உணர்த்தற்குரிய அறிஞர் எல்லாரையும் தழுவி நின்றது.

உணர்ந்தென்பது சொரூப இயல்பாமென்க. எனவே உணர்ந்தவா ரோதுதற்கு அவ்வுணர்ச்சி பொருள் மாத்திரமாய் உணரும் இந்திரிய பிரத்தியட்சமென்னும் நிருவிகற்ப ஞானத்துக்கும் பொருள், கன்மம், குணம், சாதி, பெயர் என்னும் ஐந்தனோடு விசேடித்துணரும் மானசப் பிரத்தியட்சமென்னும் சவிகற்ப ஞானத்துக்கும். வேறாய் இந்திரியங்களையும், அந்தக்கரணங்களையும் அபேட்சியாத நிருவிகற்ப ஞான மாதலின் ஓதுதல் பொருந்தாது அதனால் ஓதுதற்கரியவன் என்றும் அருளினார்.

ஒளியுள்ள பொருள்களாகிய சூரியன், சந்திரன், அக்கினி என்னும் புறவொளிகட்கும். இந்திரியம் மனசு, ஆன்மபோதம் என்னும் அகவொளி கட்கும் ஒளிகொடுக்கும் பொருளாய் சுயம்பிரகாசமாய் நிற்றலில், அலகில்



சோதியன் என்றும் அவ்விதத் தன்மையுடையனேனும் யாவருங்காண அருளுருவங்கொண்டு சிற்றம்பலத்தின்கண் ஆனந்த நிருத்தஞ் செய்தருளு கின்றாரென்பது தோன்ற அம்பலத்தாடுவான் என்றும் அருளினர். பக்கு வான்மாக்களின் உளத்தடத்தில்மேலாம் அதிசய குணங்களோடு மலர் தலில் மலர்ச்சிலம்படி என்றும் அருளினர்.

வாழ்த்தி வணங்குவாம் என்றதனால், வாழ்த்தும் வணக்கமுமாகிய இருவகை மங்களத்தையும் உணர்த்திற்று. யாம் என்னும் எழுவாய் மறைந்து நின்றது.

வணங்குவாமென்பது உயர்வின்கண் வந்த தனித்தன்மைப் பன்மை வினை முற்று.

(குறிப்பு) தெய்வத் திருவருளுருவாய் தோன்றிய நமது ஸ்ரீ சேக் கிழார் சுவாமிகள் பாய இவ்வுலகிற்கு அறுபத்துமூன்று நாயன்மார்களின் திருவருட் பெருக்கை விளக்க வந்தமையால் முதற்பாசுரத்தை அறுபத்து மூன்று அட்சரத்தாலமைத்த மாட்சியையும் எவ்வாறு கூறுவேன்.

"ஊனடைந்த வுடம்பின் பிறவியே
தானடைந்த வுறுதியைச் சாருமால்
தேனடைந்த மலர்ப்பொழிற் றில்லையுண்
மாநடஞ்செய் வரதற்பொற் றாடொழ"

இப்பாசுரத்தில் வரதற்பொற் றாடொழ பிறவி அடைந்த வுறுதியைச் சாருமெனக் கூட்டுக.

(குறிப்பு) ஊனடைந்த வுடம்பின் பிறவியே என்றது புருடார்த்தங் களுள் மக்கட்பிறப்பே சிறந்த வீடுபேற்றை யடைதற்குரியனவென்பது விளங்கத் தக்க தோன்றும்.

பயன்படாது கழிந்த பிறவிகளினின்றும் பிரித்தமையின், ஏகாரம் பிரிநிலை. ஊனாலாய உடம்பின் பிறப்பென உடம்போடுயிர்க்கு ஒற்றுமை நயம்பட அருளினர். அருளினாரேனும் பயனடைவது உயிர் எனக் கோடற் பாலதாம்.

மெய்ப்பொருணாயனார் புராணம்.

(கஉ) "மங்கலம்பெருகமற் றென்வாழ்வு வந்தணைந்ததென்ன
விங்கெழுந் தருளப்பெற்ற தென்கொலோ வென்றுகூற
வுங்கணாயகனார் முன்னமுரைத்த வாகமநூன் மண்மே
லெங்குமில்லாத தொன்று கொடுவந்தே னியம்பவென்றான்."

மெய்ப்பொருளுயனார் சிவவேடந்தரித்து வந்த முத்திநாதனைப் பார்த்து தேவரீர் இங்கெழுந்தருளப்பெற்ற காரணம் யாதென வினவியதற்கு உங்கள் கடவுளால் ஆக்கப்பட்ட ஆகமம் ஒன்றை உனக்கு உபதேசிக்க வந்தேனென்று கூறினமையால் கள்ளவேடம் பூண்டுவந்த தன்னியல்பையும் உங்கள் என்னும் சுட்டுப்பொருளால் தான்வேறு என்பதையும் உணர்த்திற்று.

கொடு வென்பது இடக்குறை.

ஷை புராணம்.

(கரு)" கைத்தலத் திருந்தவஞ்சக் கவளிகை மடிமேல்வைத்துப்
புத்தக மவிழ்ப்பான்போன்று புரிந்தவர் வணங்கும்போதிற்
பத்திரம் வாங்கித் தான்முன் னினைந்தவப் பரிசேசெய்ய
மெய்த்தவ வேடமேமெய்ப் பொருளெனத் தொழுதுவென்றார்"

இப்பாசுரத்தில் முத்திநாதன்செய்த கொடிய காரியத்தை, நமது ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் தமது திருவுளத்தால் அருளச் சகியாராய், தான் முன்னினைந்தவப் பரிசேசெய்ய, என்றருளிய அருட்பெருக்கி லாழ்ந்துய்ய நமது ஆயுட்பிரமாணம் எத்தனையோ மடங்கு அதிகரித்தல் வேண்டும்.

இவ்வாறு செய்தவன் மாற்றான் என மெய்ப்பொருளுயனார் உணர்ந்தும் தாம்கொண்ட கொள்கை சிவபிரான் திருவுருவாகிய தவவேடமேயாதலின் அக்கொள்கையிற் பிழையாது அதனையே பொருளாகக்கொண்டாரென்பது தோன்ற மெய்த்தவ வேடமே என்றும் அம்மெய்யுணர்ச்சியில் தவறுது அப்பொய்வேடத்தையும் வேட வொப்புமையால், பொருளாகக் கொண்டு தொழுதாரென்பது தோன்ற மெய்ப்பொருளெனத் தொழுதென்றும் அவ்வுணர்ச்சி வாயிலாய் அவ்வேடத்துக்குத் தன் பணி யிழந்து நிற்றலின் அஞ்ஞானத்தை வென்றனரென்பது தோன்ற வென்றார் என்றும் அருளினர். சுபம், இன்னுந் தொடரும்.

இங்ஙனம்.
S. நடேச தேசிகன்.
கவர்ன்மெண்ட் ஸ்கூல், தமிழ்ப்பண்டிதன்,
திருமலைராஜன் பட்டணம்.

Studies in Saiva Siddhanta Rs. 3—0—0.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# சைவ சித்தாந்த மகாசமாஜத்தில் தமிழ் மொழியைப் பற்றிய விசேஷக் கூட்டம்.

சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் ஆதரவில் சென்ற வெள்ளிக்கிழமை (15-3-18) மாலை 5-45 மணிக்குப் பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில் தமிழ் மொழிக்குரிய சில தீர்மானங்கள் செய்தற்பொருட்டு ஏறக்குறைய 400 தமிழ் மக்கள் கூடினர். பல பண்டிதர்களும் வித்துவான்களும் ஆங்கிலேய பட்டதாரிகளும் கூட்டத்தைச் சிறப்பித்தனர். தமிழ் அகராதிக்கழகத் தலைவரான கனம் சாண்டலர் M. A. அக்கிராசனராக அமர்ந்து தமிழ் மொழியின் உயர்வைக் குறித்துச் சில விஷயங்கள் பேசிய பின்னர்,

தீர்மானம் 1.

" திராவிட மொழிகளுள் தொன்மையும் சீர்மையும் தலைமையும் பெற்றொளிர்கின்ற உயர் தனிச்செம்மொழி தமிழேயாம். இயற்கைச் செவ்வொலிகளானியன்ற எழுத்துடைமையின், என்றும் வழங்குமியல்பிற்றாய், தொன்மையே தனக்கென வகுத்த வரி வடிவுடையதாய்ப் பல் வளமிக்க பண்டையிலக்கண இலக்கிய நுண்ணூற் பெருக்குடையதாய்த் தனக்கே சிறக்கும் அகப்பொருள் நுணுக்கமும் புறப்பொருட் பொலிவும் அருணூற் செம்மையும் உடையதாய்த் திகழாநிற்றலின், அது சர்வ கலாசங்கத்தாரால் ஆரியம், அரேபியம், பாரசீக முதலிய ஏனைத்தனி மொழிகளோடொப்ப வைத்துப் போற்றப்படவேண்டுமென்னும் முதல் தீர்மானத்தை ஸ்ரீமான் K. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் M A ,M.L., பிரேரேபித்தனர். தமிழ்மொழி மிகத்தொன்மையும் சிறப்பும் வாய்ந்த ஒரு பாஷை என்றும், திராவிட நூல்களைக்குறித்துச் சில வடமொழி உபநிஷதங்களில் குறிக்கப்பட்டுள்ளமையே அதன் பழமையை நன்கு விளக்குமென்றும்,

Essentials of Hinduism. 3—0—0.

தமிழ்ப் பண்டை இலக்கணமாகிய தொல்காப்பியம் வடமொழிப் பாணினீயம் என்னும் இலக்கணத்திற்கு முன்னரே செய்யப்பட்டதென்றும் தமிழ் மொழியின்கண் உள்ள எழுத்துக்கள் இயற்கை ஒலிகளால் அமைந்த எழுத்துக்களென்றும், தமிழ் நூல்களை நன்கு ஆராய்ந்தால் அவற்றின் நுணுக்கங்கள் வெளியாகுமென்றும் கூறி முடித்தனர். பின்னர் அப்பிரேரேபனையை ஸ்ரீமான் R P சேதுப் பிள்ளை அவர்கள், B A. ஆமோதித்துப் பேசும்பொழுது தமிழ் மொழியானது ஏனைய உயர் தனிச்செம்மொழிகளோடு ஒப்பவைத்து எண்ணுதற்குரிய உயர்வும் சீர்மையும் உடையதென்றும், இக்காலத்தில் தமிழ் தனிமொழியென்றும் தொன்மொழியென்றும் பல அறிவாளிகள் ஒப்புக்கொண்டபோதிலும் அம்மொழி, நூல் வழக்கோடு உலக வழக்கிலும் காணப்படுகின்றமையால் அது உயர் தனிச் செம்மொழி அன்று என்னும் ஆசங்கை நிகழ்த்துபவர்கள் செம்மொழியின் உண்மை இலக்கணம் உணர்ந்தவரல்லர் என்றும், ஒரு மொழியானது திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்தியதாயிருப்பின் அதுவே உயர் தனிச்செம்மொழி என்ற பெயருக்கு உரியதென்றும், தமிழ் மொழியின் திருந்திய பண்பு அதன் பண்டை இலக்கணமாகிய தொல்காப்பியத்தின் திட்ப நுட்பங்களால் தெளியப்படுமென்றும், ஆதலின் தமிழ் ஏனைய உள்நாட்டு இலக்கண வரம்பில்லா மொழிகள்போல எண்ணப்படுதல் கூடாது என்று நடுவுநிலை தவறாத ஆங்கிலேய நூல் ஆசிரியர்கள் கூறியுள்ளாரென்றும், தமிழ் நூல்களின் தலையாய்ச் சிறப்பும், அகப்பொருள் புறப்பொருள் நுணுக்கமும், சொற்சுவை பொருட்சுவைகளும் அதன் சீர்த்த நாகரிகத்தை விளக்குகின்றனவென்றும், தமிழ்ப் பண்டை இலக்கியங்களில் ஒன்றாகிய திருக்குறள் இக்காலத்தில் வழங்கிவரும் பல ஐரோப்பிய பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதே அப்பாஷையின் உயர்வை உணர்த்துமென்றும் இன்னும் ஏனைய உயர் தனிச் செம்மொழிகள் பல கிளைப் பாஷைகளுக்குத் தாயகமாய் நிற்றல்போல தமிழ் மொழியும் திராவிட மொழிகளாகிய தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய கிளைப் பாஷைகளையுடைய தென்றும், ஏனைய செம்மொழிகளினும் தமிழ் மொழி தொன்மையுள்ளது என்பது இன்றைக்கு 2500 - வருடங்களுக்கு முன் இயற்றப்பட்டுள்ள தொல்காப்பியமென்னும் இலக்கணத்தாலே நன்கு விளங்குமென்றும், எவ்வாறெனில் இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புதல் முறையாதலானும் இலக்கியத்தினின்று எடுபடுவதே இலக்கண

Sivajnana Siddhiyar Rs. 3—0—0.



மாதலானும், நம் தமிழ்மொழி சரித்திர காலத்திற்கு மிகவும் அப்பாற்பட்ட காலத்திலேயே பல இலக்கியங்களையுடையதாய்ச் சிறப்புற்று ஓங்கியிருத்தல் வேண்டுமென்றும் ஆகவே தமிழ் தொன்மையும் சீர்மையும் திருந்திய பண்பும்வாய்ந்த செம்மொழியாயிருத்தலின் சர்வகலா சங்கத்தார் தமிழையும் உயர் தனிச் செம்மொழிகளோடு ஒன்றாகவைத்து எண்ண வேண்டுவ தவசியமென்றும் கூறி முடித்தனர். பின்னர், தமிழ்க் களஞ்சியம் பத்திராதிபரான ஸ்ரீமத் ஈசுவர அய்யரவர்கள் தமிழ் தனிமொழியென்பதற்குத் தக்க சான்றுகள் உள்ளன என்று கூறி ஆமோதித்த பின்னர், பண்டிதை ஸ்ரீமதி அலர்மேல் மங்கைத் தாயாரவர்கள் தமிழ்ப்பாஷையின் சிறப்பை உணர்ந்துகொள்ளாத சர்வகலாசாலை அங்கத்தினர் சிலர் தமிழ்மொழியைக் குறை கூறுகின்றாரென்றும் தமிழ் சிறந்த பாஷைகளுள் ஒன்றாகவைத்து எண்ணுதற்கு உரிய உயர்வுடைமையால் அதனைச் சர்வகலாசாலைச்சங்கத்தார் அங்கீகரித்தல் அவசியமென்றும், சொல்லி முடித்த பின்னர் முதல் பிரேரேபணை அங்குக் கூடியிருந்த தமிழ் நன்மக்கள் அனைவராலும் ஒரு மூகமாக அங்கீகரிக்கப்பட்டது.

## தீர்மானம் II.

இரண்டாவது தீர்மானமாவது ‟சர்வகலாசாலை உயர்தரப் பரிக்ஷைகட்குச் செல்லும் தமிழ் மாணவர் யாவரும் கற்றற்குரிய நீதி நூல்கள் சிறுகாப்பியங்கள், பிற்காலத்துப் பெருங்காப்பியங்கள், உரை நடை நூல்கள், தருக்கம், எழுத்துச் சொல் விரிபொருள் யாப்பணிச் சுருக்க முதலியவற்றைப் பொதுவெனவும் எஞ்சிய தமிழ் நூற் பெருந்தொகுதியை.

**1.** அகப்பொருட் பிரிவு:—அகப் பொருளிலக்கணவிரி, அகப்பொருட் சங்க இலக்கியம், அகப்பொருட் சார்பாய பெருங்காப்பியம், யாப்பணிவிரி, நூலாராய்ச்சி முறை என்பனவற்றை யொரு பகுதியாகவும்,

**2.** புறப்பொருட் பிரிவு:—புறப் பொருளிலக்கணவிரி, புறப்பொருட் சங்க இலக்கியம், புறச்சார்பாய பெருங்காப்பியம், சரித்திர வாராய்ச்சி என்பனவற்றைப் பிறிதொரு பகுதியாகவும்,

**3:** சமயநூற் பிரிவு:—(1) பன்னிரு திருமுறை சைவ சித்தாந்த நூல்கள் இவைகளை யொரு கிளையாகவும்.

(2) நாலாயிரப் பிரபந்தம் வியாக்கியானங்கள் பிற வைணவ தத்துவ நூல்கள், இவைகளைப் பிறிதொரு கிளையாகவும் பெற்றுள்ள சிறப்பெனவும்

வருத்து, பொதுப் பாகப் பாடங்களுடன் சிறப்புள் முதல் இருபிரிவினுளொன்றுதல், இறுதிப் பிரிவினுள் ஒரு கிளையாதல் சிறப்பாகக்கொண்டு ஆழ்ந்து பயின்று தேர்ந்த மாணவர்க்கு அன்னார்புலமை காட்டும் பட்டமளித்தல், தமிழ் மொழிக்கண்ணே நன்மாண் புலமை தழைத்தோங்குதற்கு இன்றியமையாத சாதனமாமென்பது "-அதனைப் பண்டிதர் மணி மங்கலம்-திருநாவுக்கரசு முதலியாரவர்கள் பிரேரேபிக்கும்பொழுது நமது சர்வகலா சங்கத்தில் வடமொழியாகிய ஆரியத்தைப் பல பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் புலமை காட்டும் பட்டமளித்தல் போலத் தமிழ் நூல்களையும் மூன்றுபிரிவாக வகுத்து தனிப்பட்டம் கொடுத்தல் அவசியமென்றும் தமிழ் நூல்களை அகப்பொருள் நூல்கள், புறப்பொருள் நூல்கள், சமய நூல்கள் எனப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பட்டம் அளித்தல் அவசியமென்றும் அகப்பொருள் நுணுக்கங்கள் தமிழுக்கே சிறப்பாக உரியன ஆதலின் அகப்பொருள் இலக்கண இலக்கியங்களே ஒரு பகுதியாக இருப்பதற்குத் தகுதியுடையன என்றும் புறப்பொருள் இலக்கண இலக்கியங்கள் தமிழ் நாட்டுச் சரித்திர ஆராய்ச்சிக்கும் பண்டைப் பழக்க வழக்கங்களை உணர்தற்கும் இன்றியமையாத சாதனமாதலின் அவை ஒரு பகுப்பாதலால் அவசியமென்றும் மூன்றாவது சமய நூல்களாகிய சித்தாந்த சாஸ்திரங்கள் வைணவ நூல்கள் தத்துவங்கள் இவை மிகப்பெருமையும் நுண்மையும் வாய்ந்தன வாதலின் அவை ஒரு பகுப்பாக அமைக்கப்படுதல் வேண்டுமென்றும் கூறிமுடித்தனர். பின்னர் இத்தீர்மானத்தை சுவாமி உருத்தரகோடீசுவரரவர்கள் ஆதரித்துப்பேசியபின் ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள் அழகிய ஒரு உபந்நியாசத்தில் பிரேரேபணையைத் தழுவிப் பேசினர். பாஷையானது மக்கள் சமுதாயத்தில் பிறந்து சமுதாய நிகழ்ச்சிகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதென்றும், பண்டைக்கால நிகழ்ச்சிகளைத் தற்கால நிகழ்ச்சிகளோடு ஒருங்கு சேர்த்துச் செல்லுகின்ற பாஷையே உயர்வுடைய பாஷையென்றும், தமிழ் மொழியானது ஏனைய ஆரியம் முதலிய உயர்தனிச் செம்மொழிகளைப்போல் உலக வழக்கு வீழாமல் வற்றாநீருடைய வளமுடைய ஆறுபோல் பண்டைதொட்டு இக்காலம்வரை சிறந்து விளங்குதலால் தமிழே உயர்வுடைய பாஷையென்றும், நூல் வழக்கில் மட்டுமே காணப்படுகின்ற இறந்த மொழிகளை விடப்பேசுதற்கும் உறவினரோடு உரையாடுதற்கும்உதவுதலால் உலகத்தில் வழக்கிலுள்ள தமிழ் மொழியே சிறந்ததென்றும், தமிழ் மொழி மிகப் பழயமொழியென்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன என்றும் இப்பொழுது கடலாற் கொள்ளப்பட்ட 'லெமோரியா' என்னும் நாட்டில் தமிழ்



தலை சிறந்து விளங்கிற்று என்பது பண்டைநூல் ஒன்றால் தெரிகின்றது என்றும், வடமொழி வேதங்கள் போல தமிழ் மொழியிலும் மறையென்னும் நூல்கள் எழுதப்பட்டிருந்தன வென்றும், தமிழ் மிகத் தொன்மையேயுள்ள பாஷையே யாயினும் மற்றைய மொழிகளைப்போல வழக்கு வேறுபடாமல் நாம் வழங்கிவரும் பாஷைக்கும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய சங்க காலத்திய பாஷைக்கும் பெரிதும் வித்தியாசம் இல்லை என்றும் இது தமிழுக்கே சிறப்பாக உரிய ஓர் இலக்கணமென்றும், பண்டைத்தமிழ் நூல்களில் இயற்கைத் தோற்றங்கள் சிறிதும் மாறுபடாமல் அமைத்து எழுதப்பட்டுள்ளன என்றும், செய்யுள், மொழி ஆராய்ச்சி, தத்துவம் முதலிய பல துறைகளிலும் தமிழ் நூல்கள் சிறந்து காணப்படுகின்றனவென்றும், அருள் உடைய ஆங்கில அரசாங்கத்தார் இந்நாட்டிற்கு வந்தபொழுது தமிழ் மொழியின் சிறப்பை எவரும் எடுத்துச்சொல்லாததாலும் தமிழ் மொழியே பயின்று வந்த சிலரும் ஆரியத்தையே உயர்த்திப் பாராட்டினமையாலும் அரசாங்கத்திலும் சர்வ கலாசாலையில் தமிழ் தாழ்ந்த பதவியடைய நேர்ந்ததென்றும் பிற்காலத்தில் தென் நாட்டில் வந்த பாதிரிமார்கள் நம் பாஷையில் ஆர்வங்கொண்டு மொழிபெயர்த்த திருக்குறள் திருவாசகம் நாலடியார் முதலிய நூல்களாலும் தமிழின் உயர்வு ஒருவாறு உணரப்பட்டு நம் சர்வ கலாசங்கத்திலும் டாக்டர் மில்லர் அவர்கள் இருக்கும்வரை தமிழ் மொழி உயர்ந்த வகுப்புகளில் கட்டாயப்பாடமாக இருந்தது என்றும், அவர் தம் நாடு சென்ற பின்னர்த் தமிழ் மக்களது ஊக்கக்குறைவாலும் நம் பாஷையைத் தாழ்த்திப் பேசுதலையே தம் தொழிலாகக்கொண்ட பிறரது இடையறா முயற்சியாலும் தமிழ் மொழி இந்நிலை யடைந்தது என்றும், இனியாயினும் நம் தாய்மொழி உயர்வுடைய வேண்டுமாயின் நாம் ஊக்கத்துடன் முயற்சித்தல் வேண்டுமென்றும் விரிவாகப் பேசி முடித்தபின்னர் இரண்டாவது தீர்மானம் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டது.

பின்னர் மூன்றாவதாக, இரண்டு தீர்மானங்களும் சர்வகலா சங்கத்தாருக்குத்தெரிவிக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்ட பின்பு தலைவர் அவர்களுக்கும் தீர்மானங்களைப் பற்றிப் பேசியவர்க்கும் சபைக் காரியதரிசி வந்தனமளிக்க சுமார் 8-45-மணிக்குக் கூட்டம் கலைந்தது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மாம்ஸ போஜனக் குறைவும் மரக்கறி ஆகார உயர்வும்.

தொகுதி - 7 - பகுதி - 3 - பக்கம் - 71 - தொடர்ச்சி.

இவ்வித மிருந்தும், இவ்வுலகமுழுவதும் ஜீவவதை யென்கிற சித்திரவதையே பெருத்திருக்கின்றது. ஆயிரக்கோடிகள் கணக்காய் ஆடு மாடுகளையும், கோழி குருவிகளையும், கொன்றுதின்பதே குணமெனக் கொள்ளப்படுகின்றது! ஐரோப்பா, அமெரிக்கா முதலிய இடங்களில், அதிகமாய்ப் பரவியிருக்கும் இந்த அக்கிரமத் தொழிலை அடியோடே ஒழிக்கவேண்டுமென்கிற நல்ல எண்ணத்தோடே வல்லசபைகளை வகை வகையாய் நாட்டியிருக்கின்றார்கள். இங்கிலாந்து, அமெரிக்கா, ஜர்மனி முதலிய பற்பல இடங்களிலும், மாம்ஸபோஜன நிவிர்த்தியும் சுத்த * சைவபோஜனமாகிய மரக்கறி யாகார விர்த்தியும் இப்பொழுது வரவரப் பிரபலமாய்க்கொண்டு வருகின்றன, எங்குபார்த்தாலும் ஆசாரச் சாப்பாட்டிற்கென்று சத்திரங்களும் சாவடிகளும், காபிஹோடல்களும் ரெஸ்டாரண்டுகளும் ஏற்பட்டு விளங்குகின்றன.

இப்படியிருக்கும்பொழுது, தொன்று தொட்டு, சைவ ஆகாரத்தையே சிறப்பாய்க் கருதிக்கொண்டு வந்திருக்கிற நமது நாட்டில், புலாலுண்ணுதலும் ஜீவஹிம்சை புரிதலும் பெரிதும் நடமாடுகின்றனவென்பதை நோக்கப் பெரிதும் நமக்கு வருத்தத்தை விளைக்கின்றது. பொருளென்பதையே பொக்கிஷமெனக் கருதாது, கருணையையும் அருளையுமே கடைத்தேற்றும் வழியெனக்கொண்டிருக்கும் நமது நாட்டில், காரமான செய்கையையும் கோரமான கொலைத் தொழிலுணவையும் சாம்ராஜ்யமெனக்கருதிச் சகஜமாயேற்பது உசிதமானதென்று ஒருவராலும் கூறமுடியாது. ஆக இத்தகைய அநாகரீகமானதும், இரக்கமுள்ள மனதிற்கு இணங்காததானதும், ஆலோசனை யுள்ளவர்கள், அறவே ஒழிக்கத் தக்கதானது

* மங்கள உணவு எனப்பொருள்.



மாயுள்ள புலாலுண்ணலை நம்மனோர் பெரும்பாலும் கையாடிவருவது ஆச்சர்யத்தையும் துக்கத்தையும் விளைக்கின்றது. ஆகையால் இக்கொடிய வழக்கத்தை அடியோடே போக்குவதற்கு, புலாலுண்ணல் புலான் மறுத்தல் என்னும் கட்சிகளின் ஏற்றத் தாழ்வுகளைப் பற்றி நம்மவர் தெரிந்து கொள்வது இன்றியமையாததாகின்றது.

## முதலாவது—மனிதனது தேக அமைதி புலாலுண்ணலுக்கு ஏற்றதா?

அனடமி (Anatomy) என்கிற தேகக்கட்டு நூற்படி ஆலோசிக்கும்போது, மனிதனது உடம்பின் அமைதி, மரக்கறி ஆகாரத்திற்கே யமைந்ததென்பது பெறப்படுகின்றது. மனிதனது பற்களைப்பற்றி முதலில் ஆலோசிப்போம். மனிதனது பற்களில் நாய்ப் பற்கள் (Canineteeth) என்கிற ஒருவகைப் பற்களிருப்பதால், நாங்கள் மாம்ஸம் தின்பது போலேயே, புலாலுண்ணும் இயற்கை யுடையவனாய்க் கடவுளால் படைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று அநேகர் அபிப்பிராயப் படுகிறார்கள். இது தப்பான கொள்கை மாம்ஸம் தின்னும் மிருகராசிகளில், மேற்கூறியபற்கள் கூறியவையாயும் நிகளமாயுமிருக்க, மனிதராசியில் அவைகள் கூரில்லாமலும், மற்றப்பற்களோடு சமமாயும் அதிக நிகளமில்லாமலு மிருப்பதே, மனிதராசியில் காணப்படும் அந்தப்பற்கள் மாம்ஸ போஜனத்திற் கென்று அமைக்கப்படாதவை யென்பதை ஆக்ஷேபனை யில்லாமல் ஸ்தாபிக்கின்றது. இன்னும் மாம்ஸம் தின்னும் மிருகராசிகளுக்கும் மனிதராசிக்கும் காணப்படும் வேற்றுமைகளில் குடலைப்பற்றியது முக்கியமான மற்றொன்றும். மாம்ஸ பக்ஷணிகளாகிய மிருகங்களின் குடல் அவற்றின் உடம்பைக்காட்டினும் மூன்று பங்கு நிகளமாயிருக்க, மனிதனின் குடல் அவன் உடம்பைக் காட்டினும் பன்னிரண்டு பங்கு நிகளமாயிருக்கிறதென்பதே, மனிதன் மாம்ஸ போஜனத்திற்காகக் கடவுளால் உத்தேசிக்கப் பட்டவனல்லன் என்பதை நிலை நிறுத்துகிறது. மாம்ஸ உணவு வயிற்றில் ஒருவித கெடுதியடைந்து அதிக நேரம் குடலில் தங்குவது கெடுதியுண்டாக்குமென்றும், மனிதனுடைய குடல் அதிக நிகளமாயிருப்பதால் அதிக நேரம் அங்குத் தங்கிக் கெடுதிவிளைக்க நேரிடுகிறதென்றும், மாம்ஸத்தையே தின்னும் விலங்குகள் குடல் அதிக நிகளமில்லாதிருத்தலால் அதிக நோம் அங்கே தங்காமலும் கெடுதி விளைக்காமலும் இருக்க நேரிடுகின்றதென்றும் சில வைத்திய நிபுணர்களின் அபிப்பிராயம்.

மேற்கூறிய வித்தியாசங்களல்லாமலும், மாம்சமே தின்னும் மிருகங்களுக்கும் மனிதனுக்குமுள்ள இன்னும் சில வித்தியாசங்கள் காணப்படுவனவற்றை அடியிற் குறிக்கின்றோம் :—

1. மாம்ஸ பக்ஷிணிகளாகிய மிருகங்களுக்கு நான்கு கால்களிருக்கின்றன ; மனிதருக்கு இரண்டு கால்களிருக்கின்றன.

2. அம்மிருகங்கள் நான்கு கால்களாலும் நடந்துபோகின்றன : மனிதன் இரண்டு காலில் நடக்கிறான்.

3. அவைகட்கு வாலிருக்கின்றன . மனிதருக்கு வாலில்லை.

4. அவைகளின் கண்கள் பக்கத்தே பார்க்கும் பார்வையுடையனவாயிருக்கின்றன : மனிதன் எதிரே பார்க்கும் பார்வையுடையவனாயிருக்கிறான் :

5 அவற்றின் தசையில் துவாரங்களில்லை : மனிதன் உடம்பில் தசலக்ஷக் கணக்கான துவாரங்களிருக்கின்றன.

6. அவைகட்கு இன்ஸைஸர் (Incisor) பற்கள் அவ்வளவாய்ப் பெருத்துக்காட்டவில்லை. மனிதனிடம் அவைகள் நன்றாய்ப் பெருத்திருக்கின்றன.

7. மோலார் பற்கள் அவைகளுக்கு கூரியவையா யிருக்கின்றன : மனிதனுக்கு அவைகள் அவ்வளவு கூர்மையாயில்லை.

8. அவைகட்கு நாவில் சாலைவா (Saliva) என்னும் திரவத்தையுண்டாக்குகிற சிறு பைகள் மிகச் சிறியவையாயிருக்கின்றன : மனிதனிடம் காணப்படும் அந்த சாலைவா க்ளாண்டுகள் (Salivary glands) மிகப்பெருத்திருக்கின்றன.

9. மாம்ஸம் தின்னும் மிருகங்களினுடைய நாக்குகள் முட்களைப் போல் சுறசுறப்பா யிருக்கும் : மனிதருடைய நாக்கு வழவழப்பாயிருக்கும்.

10. அம்மிருகங்களுக்கு முலைக்காம்புகள் வயிற்றிலிருக்கின்றன : மனிதருக்கு மார்பிலிருக்கின்றன.

11. அம்மிருகங்களுக்கு இரைப்பை சாதாரண பையாகவும் உருண்டை வடிவினதாகவுமிருக்கிறது : மனிதருக்கு இரைப்பை (Stomach) யோடு டியோடீனம் (Duodenum) என்கிற இரண்டாவது தீனிப்பை இருக்கிறது.



12. கோலன் (Colon) என்கிற பெருங்குடல், மாம்ஸபக்ஷணமிருகங்களுக்கு வழவழப்பாயிருக்கிறது : ஆனால் மனிதருக்கு அதில் 'பொருக்குகள்' அல்லது 'உபுக்குகள்' இருக்கின்றன.

13. அம்மிருகங்களுக்கு கூரிய நகங்களிருக்கின்றன : மனிதருக்குத் தட்டையான நகங்களிருக்கின்றன.

14. மிருகங்கள் நாலுகாலாலும் கவிழ்ந்து நடக்கின்றன : மனிதரோ நிமிர்ந்து இரண்டு காலால் நடக்கிறார்கள்.

மேற்கூறிய சில வித்தியாசங்களால், மனிதர் காய் கனிவர்க்கங்களைத் தின்பதற்கு ஏற்ற அமைதியுடையவர்களென்பதும், மற்ற மிருகங்களைப்போலல்லாது கனிவர்க்கங்களையும் கொட்டை வர்க்கங்களையும் புசிப்பதே அவர்கள் இயற்கைக்கு அமைந்ததா யிருக்கிறதென்பதும் ஏற்படுகின்றன. கார்போஹைட்ரேட்டைப் போன்ற உஷ்ணம் தரும் ஆகாரம் சாப்பிடும் காரணத்தால் உண்டாகும் கொதிப்பை வியர்வையால் போக்குவதற்காகவே, அவர்கள் தேகத்தில் துவாரங்கள் அதிகமாயுண்டாயிருக்கின்றனவென்றும், ஜீரணமாகாத அனுவசியமான சில உணவுப்பகுதிகள் சரியான உணவுகளோடு கலந்து வயிற்றில் செல்லுமானபடியால், குடலில் அவை மெதுவாய்ப்போகும்படியாக 'உபுக்குக' ளிருக்கின்றனவென்றும்; மிருகங்கள் பாய்ந்து பிராணிகளைப் பிடிப்பதுபோல் மனிதரால் லாகாதென்றும் சொல்லப்படுகின்றன. எந்தவிதமாய்ப் பார்த்தாலும் மனிதருடைய அங்கங்கட்கு மரக்கறி ஆகாரத்திற் கேற்றதாயிருக்கின்றதேயன்றி மாம்ஸம் புசிப்பதற் கேற்றதாயில்லையென்று நன்கு ஏற்படுகின்றதென் அநேக சாஸ்திர நிபுணர்கள், ஆங்கில விஞ்ஞான சாஸ்திரம் கைவந்த வித்தகர்கள், அபிப்பிராயப்படுகிறார்கள்.

மிகப் பெயர்போன ஜீவதத்துவ சாஸ்திரியாராகிய பாரன் குயுவியர் (Baron Cuvier) பின்வருமாறு சொல்லுகிறார் : ஒற்றுமை வேற்றுமை நோக்கி அங்கங்கட்குச் சாஸ்திரம் வாசித்தல் மனிதன் கனிவர்க்கங்களைத்தின்னும் மிருகங்களுக்கு ஒவ்வொன்றிலும் ஒத்தும் மாம்ஸ பக்ஷணஞ் செய்யும் மிருகங்களுக்கு எதிலும் ஒவ்வாமலும் இருக்கின்றான்."

இன்னும் வரும்.

சி. பக்தவத்சலம் பிள்ளை, B. A; M. P. P. I.

### சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 1918-ஞு மார்ச்சு மாதத்தின் வரவு செலவு கணக்கு.

| வரவு. | தொகை. ரூ. | அ | ப | செலவு. | தொகை. ரூ. | அ | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 1918ஞு பிப்பிரவரிமீ 28உ இருப்பு ... | 160 | 8 | 7 | லிகிதர் சம்பளம் ... | 20 | 0 | 0 |
| சாமாசிகர் வருட சந்தா ... | 82 | 8 | 0 | காகிதம் ... | 31 | 11 | 0 |
| | | | | அச்சுக்கூலி ... | 4 | 4 | 0 |
| | | | | தபால் செலவு முதலியன ... | 73 | 1 | 0 |
| | | | | | 129 | 0 | 0 |
| | | | | மார்ச்சுமீ 31உ இருப்பு... | *114 | 0 | 7 |
| | | | | *ஆயுள் சமாசிகர் சந்தா ரூபா 580-0-0 | | | |
| ஆக மொத்தம்... | 243 | 0 | 7 | ஆக மொத்தம்... | 243 | 0 | 7 |

K. Subramaniyam Pillay, M.A. M.L., *Secretary.* M. Kandasawmy Mudaliar, B.A. *Auditor.* W. T. Govindaraja Mudaliar, *Treasurer.*

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௭.] 1918ஞு மேமீ [பகுதி ௫.

## சாந்தோக்யோபநிஷத்து.

### ஏழாவது பிரபாடகம்.

### கண்டம் ௫.

சங்கற்பத்தைக் காட்டிலுஞ் சித்தம்பெரிது. சித்தமுதித்தபின் சங்கற்பிக்கிறது. உடனே மனம், மந்திரம், கர்மம் முதலானவை கிரமமாக வுண்டாகின்றன.

௨. இவையனைத்தும் சித்தத்தி லயிக்கின்றன, மறுபடியும் அதிலுண்டாகின்றன. அதிலேயே நிலையுறுகின்றன. ஆகவே, எவ்வளவு கற்றவனாயிருக்கினும் சித்தமிலையேல் அவனை மதிப்பதிலை. சிறிது கற்றவனாயிருந்தும் சித்தமுடையவனாயின் அவனை யாருமதிக்கின்றனர். ஆகையால் சித்தமெல்லாவற்றிற்கு மூலம். அதனையே உபாசி.

௩. சித்தத்தைக் காட்டிலும் பெரிதுண்டோவென நாரதர் கேட்கச் சனத்குமாரர் சொல்லுகின்றனர்.

மெய்கண்ட சாத்திரம் பதினான்கு மூலம் விலை அணா 8.

## கண்டம் ௬.

சித்தத்திலும் பெரிது தியானம். பிருதிவி, அந்தரக்ஷம், சுவர்க்கம், பர்வதம், தேவர், மனுஷர் தியானம் செய்யப்படுகிறவர்களாகக் காணப்படுகிறார்கள். ஆனதால், இவ்வுலகில் தனம், வித்தை, குணம் இவைகளால் மனுஷ்ய மகத்துவத்தைப் பெற்றவர்கள் தியானபலத்தினை யடைந்தவராவர். தியானமில்லாதவர்கள் சமானியர், கலாம்விளைப்பவர், கோள் சொல்பவர், அன்னியரை வைபவர்களாக ஆவார்கள். தியானமுடையாரே பரோபகாரிகள் ஆகவே தியானத்தினை யுபாசி.

௨ தியானத்தினைக் காட்டிலும் பெரிதுண்டோவென நாரதர் கேட்கச் சனத்குமாரர் சொல்லுகிறார்.

## கண்டம் ௭.

தியானத்தைக் காட்டிலும் விஞ்ஞானம் பெரிது. விஞ்ஞானத்தால் வேதமறியப் படுகிறது. ஆகவே விஞ்ஞானத்தை யுபாசி.

௨ விஞ்ஞானத்தைக் காட்டிலும் பெரிதுளதோவெனச் சனத்குமாரர் சொல்லுகிறார்,

## கண்டம் ௮.

விஞ்ஞானத்தினைக் காட்டிலும் பலம் பெரிது. நூறு விஞ்ஞானவான்களை ஒரு பலவான் நடுங்கச் செய்கிறான். பலமிருக்கின் எழுந்து ஆசிரியர்கட்கும், குருக்களுக்கும் தொண்டுசெய்து, நோக்கி உபதேசங் கேட்டு, நினைத்து, அறிந்து, கர்மங்களை யியற்றிப் பலத்தை யனுபவிக்கின்றான். உலகமுழுவதும் பலத்தாலே நிலைபெறுகின்றன. ஆகவே யதனை உபாசி.

௨. பலத்தைக்காட்டிலும் பெரிதுண்டோவென் நாரதர் கேட்கச் சனத்குமாரர் சொல்லுகின்றார்.

## கண்டம் ௯.

பலத்தினைக் காட்டிலும் அன்னம் பெரிது. அன்னத்தினாலே பலமுண்டாகிறது. பத்து நாளைக்குப் பட்டினியாக விருந்தால் பலத்தையிழந்துவிடுகிறான். அதிக நாளானுலிறந்து விடுகிறான். பின்னர் அன்னமுள லோகங்களையே யடைகிறான். நாரதர் பழையபடி கேட்கச் சனத்குமாரர் சொல்லுகிறார்.



## கண்டம் ௰.

அ[illegible]னத்தினும் ஜலம் பெரிது. மழையில்லையேல் அன்னம் விளைவதில்லை. ஜலமே நாம் காணு மூர்த்தங்களாகத் தோன்றுகின்றன. ஜலமே பிருதிவியாய்ப் பரிணமிக்கின்றன. ஆகவே ஜலத்தை உபாசி. பழையபடி நாரதர் கேட்கச் சனத்குமாரர் சொல்லுகிறார்.

## கண்டம் ௧௧.

ஜலத்தைக் காட்டிலும் தேஜசு பெரிது. தேஜசு வாயுவைச் சலனமறச்செய்து, ஆகாயத்திற் பரவி, தபித்து, மழைக்குக் காரணமாக மின்னி மேகத்தைத் கித்து மழை பெய்யச்செய்கிறது. நாரதர் பழையபடி கேட்கச் சனத்குமாரர் சொல்லுகிறார்.

## கண்டம் ௧௨.

தேஜசைக் காட்டிலும் ஆகாயம் பெரிது. ஆகாயத்திலேயே சூரியன், சந்திரன், மின்னல், நட்சத்திரங்கள், அக்னி முதலியவை அடங்கியிருக்கின்றன. கூப்பிடுதல், கேட்டல், பதில் சொல்லுதல், விளையாடல், முளைகள் மேனோக்கிக் கிளம்பல் முதலிய ஆகாயத்திலேயே நிகழுகின்றன. ஆகவே அதனையே உபாசி. பழையபடி நாரதர் கேட்கச் சனத்குமாரர் சொல்லுகிறார்.

மணவழகு.

## நீதி.

"மாதா ப்ராதா பிதா சத்ரு
யேந பாலோந பம்யதே
கோஷ்ட மத்யே நலோ பேத
அம்ஸ மத்யே பகோ யதா".

பிள்ளைகட்கு இளமைப் பருவத்திலே கல்வி கற்றுக்கொடுக்காத தாய் தந்தை சகோதரர் இவர்கள் அப்பிள்ளைகட்கு சத்துருவாகிறார்கள். (கல்லாத) பிள்ளை ஒரு சபைக்குச் சென்றால் அவன் அங்கே அம்சகூட்டத்தின் மத்தியில் சேர்ந்த கொக்கு போன்று விளங்குவான்.

---

செய்யுளிலக்கணம் விலை அணா 8.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

## சிறுதேவதைகட்கு

# உயிர்ப்பலி இடலாமா?

"எவ்வுயிரும் என் உயிர்போல் எண்ணி இரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"—தாயுமான சுவாமி

கல்வியறிவும் நல்லோர் சேர்க்கையும் இரக்கமான நெஞ்சமும் இல்லாமையால், மிகவுந் தாழ்ந்த நிலைமையிலுள்ள மனிதர்கள் தாம் தாம் தமது குலதெய்வமாகக் கும்பிட்டுவருங் காளி பிடாரி மாரி சூரங்குணி எசக்கி கருப்பண்ணன் மதுரைவீரன் முதலான சிறுதேவதைகளுக்கு அளவிறந்த கோழி ஆடு எருமை முதலான குற்றமற்ற பிராணிகளை வெட்டிப் பலி இடுகிறார்கள். தாழ்ந்த நிலைமையில் உள்ள ஏழையான மனிதர்கள் இங்ஙனஞ் செய்து வருதலைப் பார்த்துப், "பன்றியோடுகூடிய கன்றும்" செயல் மாறுபட்ட பான்மைபோற் சைவவேளாளர் சிலரும் இச்சிறுதேவதைகளை வணங்கப்புகுந்து இவர்களும் மேற்சொன்ன ஏழைப்பிராணிகளின் கழுத்தை அறுத்து அவற்றைப் பலி யூட்டுகிறார்களாம். உயிர்க்கொலையாகிய புலைத்தொழிலைச் செய்யும் தாழ்ந்த வகுப்பாரைப்போலவே உயர்ந்த வகுப்பாரும் செய்யத் தலைப்பட்டால், உயர்ந்தோர் இவர் தாழ்ந்தோர் இவர் என்று எங்ஙனம் பகுத்துச்சொல்லக்கூடும்? உயர்ந்தோரும் தாழ்ந்தோராய் மாற உலகம் எங்கும் பாவமாகிய இருள் அன்றோ பரவும்? மனிதரிற் பலர் தாழ்ந்தோர் ஆனதும் சிலர் உயர்ந்தோர் ஆனதும் அவரவர் குணத்தினாலும் செய்கையினாலும் அறிவினாலுமே என்பது எல்லார்க்கும் எல்லா நூலுக்கும் உடன்பாடாம். தெய்வத் தன்மைவாய்ந்த திருவள்ளுவரும் இதனாலன்றோ,

"பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்" என்றும்
"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்" என்றும்
"மேலிருந்தும் மேல் அல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழ் அல்லார் கீழ்அல்லவர்" என்றும் அருளிச்செய்தனர்?



160958

இழிகுணங்களும் இழிந்தசெய்கைகளும் உலகிற் பலவகைப்பட்டனவாய்ப் பெருகி இருப்பினும் இவை எல்லாவற்றுள்ளும் மிகக்கொடியனவை இரக்கமற்ற வன்னெஞ்சமும் கொலைத்தொழிலுமேயாகும். உயிர்க்கொலை [illegible] அவற்றின் ஊனைத் தின்னலுமாகிய புலைத்தொழில் எல்லாப் [illegible] விலுங் கடைப்பட்டதென்னும் உண்மை,

"நன்றாகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கங்கடை" என்னும் தமிழ்வேதமான திருக்குறளினாலும், "உயிர்களைக் கொல்லச் சொன்னவன், கொன்றவன், அதனை அறுக்கிறவன், அதனை விற்கிறவன், அதனை வாங்குகிறவன், அதனைச் சமைக்கிறவன், பரிமாறுகிறவன், தின்கிறவன் என்னும் இவர்கள் அனைவரும் கொலைக்காரர்களென்று சொல்லப்படுகிறார்கள்." வடமொழியில் மனுஸ்மிருதியினாலும் தெளியப்படும்.

இவ்வளவு இழிந்ததாக இருத்தலினாலேதான் உயிர்க்கொலை செய்பவர்களும் அதற்குக் காரணமாய் இருப்பவர்களும் இழிகுலத்தவரென்றும், அப்புலைத்தொழிலை விட்டுச் சைவவொழுக்கம் பூண்டவர்கள் உயர்குலத்தவரென்றும் வகுக்கப்படுவாராயினர். கொலைப்பாவக் கடலைத்தாண்டிப் புண்ணியக்கரை ஏறின மேற்குலத்தவர்கள் கொல்லா விரதத்தின் மேன்மையை எடுத்துச் சொல்லுதலாகிய படகைக்கொண்டு சென்று அப்பாவக்கடலிற் கிடந்து தத்தளிக்கும் மற்றைத் தாழ்ந்தசாதியாரை எடுத்து உயர்த்திக் கரைசேர்த்தலே புகழும் புண்ணியமும் ஆகும். கொலையையும் புலால் தின்றலையும் ஒருவன் அறவே ஒழித்து விடுவானாயின். 'அதனால் எத்தனையோ ஆடு மாடுகள் கோழி குருவிகள் மான்கள் மீன்கள் உயிர் பிழைக்குமல்லவோ? இங்ஙனமே ஒவ்வொருவராய்ப் புலைத்தொழிலைப் பலரும் நீக்க நீக்க எண்ணிறந்த உயிர்களும் தத்தம் உடம்புகளில் நிலைபெற்றுநின்று இனிது உயிர்வாழும் அல்லவோ?' நம்முடைய உயிர்வாழ்க்கை நமக்கு இனியதாய் இருத்தல்போலவே எல்லாச் சீவர்களுக்கும் தத்தம் உயிர் வாழ்க்கை இனிப்பாயிருக்கின்றது. எல்லாத் தருமங்களினும் மேலதாய் விளங்கும் கொல்லாவிரதத்தைக் கைப்பற்றி ஒழுகும் புண்ணியம் வாய்ந்து அதனைப் பிறர்க்கு அறிவுறுத்தும் நிலையிலுள்ள சைவரும் பார்ப்பனரும் தம உயர்வை மறந்து, தாமும் ஆடு கோழி மாடு வெட்டிப்பலியிடும் பாவப் படுகுழியில் வீழ்ந்தால் இனி உலகத்தில் நல்லறம் நிலைக்குமோ சொல்லுங்

தாயுமான சுவாமி பாடல் மெய்கண்ட விருத்தியுரை ரூபா 8—8—0

கள்! கொல்லா அறத்திற்கு ஒரு பாதுகாவலாய் அமைந்த மேற்குலத்தவரே அதனை அழித்தால் அதனினும் பெரும்பாவம் வேறுண்டோ? "வேலியே பயிரைத் தின்றால் விளைவதெப்படி?"

இனி, இச்சிற்றுயிர்களை நம்பொருட்டுக் கொல்லாமல் சிறு தேவதைகளின் பொருட்டுக் கொல்விக்கின்றேமாதலால் அது பாவமாகமாட்டாதெனின், அது பொருந்தாது. பிடாரி குரங்குணி எசக்கி மதுரைவீரன் முதலானவை யாவை? தாம் உயிரோடிருந்த காலங்களிற் பலவகையான கொடுஞ்செயல்களைச் செய்து அவற்றிற்காக அரசனாலும் பிறராலுந் தண்டிக்கப்பட்டுப் பருவம் முதிராமுன்னரே இறந்தொழிந்த மனிதரின் பேய் வடிவங்களே யாகும்; இவை தாம் செய்த பாவத்தால் இந்த நிலவுடம்பை விட்டுப் பேயுடம்பிற் புகுந்து இருள் உலகத்தில் அலைந்து திரிகின்றன; தாம் செய்தபாவம், பேய் உடம்பில் தாம் அனுபவிக்குங் கொடிய நரகதண்டனையால் தீர்ந்தவுடன், முழுமுதற் கடவுளின் திருவருளாணையால் மறுபடியும் அவை மனிதவுடம்பிற் பிறக்கும். அறிவில்லா மாந்தர்கள் வணங்கிவரும் சில்லரைத்தேவதைகளிற் பல இப்போது மனிதராய்ப் பிறந்திருக்குமாதலால், அவைகள் இவர்களாற் செய்யப்படும் பூசையை ஏற்றுக்கொள்ள மாட்டாதனவாய் இருக்கின்றன. "இப்போது இத்தேவதையின் ஆட்டம் இங்கே ஓய்ந்து போயிற்று." என்று அவற்றை வணங்குவோர் சிலகாற் சொல்லுஞ் சொற்களே இதற்குச் சான்றாம். மனிதராய் இருந்தபோது கொலைகளவு காமங்கட்குடி முதலான பாவங்களைச் செய்து சடுதியில் இறந்து கடவுளின் ஆணையாற் பேய்வடிவங்களாய் அலைந்து திரியும் அவ் ஆவிகளை வணங்குதலே குற்றமாகும். ஏனென்றாற் கொலைக்காரர்களோடு பழக்கஞ்செய்பவன் அக்கொலைஞராலும் கள்வரோடு நேசஞ்செய்பவன் அக்கள்வர் கூட்டத்தாலும், வேசிக்கள்வரோடு சேர்க்கையுள்ளவன் அவ் வேசிக்கள்வராலும், கட்குடியரோடு சேர்ந்தவன் அக்கட்குடியராலும் சூழப்பட்டுப் பெரிதுந் துன்புறுதல்போல, இத்தீய பேய்வடிவங்களைத் தெய்வங்களாக வணங்குவோர் இவ் ஆவேசங்களால் எந்நேரமும் சூழப்பட்டு அவற்றால் மிகவுந் துன்புறுத்தப்படுவார்கள். கொலை முதலான பாவங்களைச்செய்வோர் நல்லோரை அணுகாமல் அஞ்சி விலகிப்போதல் போல, எல்லாம்வல்ல முழுமுதற்கடவுளான சிவத்தை வழிபடும் நல்லோரைக்கண்டு இக்கொடும் பேய்கள் அஞ்சி விலகி ஓடும். இவ் இயல்புகளெல்லாம் யாம் எழுதிய "மரணத்தின்பின் மனிதர்நிலை" என்னும் நூலில் விரிவாக எடுத்துக் காட்டியிருக்கின்றேம்; அவை எல்லாம் இங்கு விரிப்பதற்கு



இடம் இல்லாமையால் அதிற் கண்டுகொள்க. நம்போன்ற சிற்றுயிர்களிற் சேர்ந்த இப்பேய்களையும் மற்றெல்லா உயிர்களையும் ஆக்கவும் அழிக்கவும் வல்லது சிவம் ஒன்றேயாம். பாவங்களைச் செய்து பிறப்பிலும் இறப்பிலுங்கிடந்து சுழன்று வருந்தும் பேய்கள் எதனையும் ஆக்கவேனும் அழிக்கவேனும் சிறிதும் வல்லனவல்ல. இத்தகைய பேய்களைத் தெய்வங்களாக வணங்குவது எதுபோலிருக்கின்றதென்றால், ஓர் அரசன் கீழ் இருந்து வாழும் குடிகள் தம் அரசனை வணங்காமல் அவ்வரசனால் தண்டிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருக்குங் குற்றவாளிகளை அவ்வரசனாகப்பாவித்து வணங்குதலையே ஒத்திருக்கின்றது. ஆக்கவும் அழிக்கவும் வல்லவனான ஈசனாற்படைக்கப்பட்டு அவ்வீசனுக்குப் பிள்ளைகளாய் உள்ள எல்லா உயிர்களுள்ளும், மனிதரான உயிர்கள் மற்ற ஏழையுயிர்களான ஆடு கோழிமாடு பன்றி முதலியவற்றைவெட்டிப் பலியிடுவது எதனை ஒத்திருக்கின்றதென்றால், ஓர் அரசனுக்குரிய குடிமக்களிற் சிலர் தம்மினும் வலிகுறைந்த மற்றவர் சிலருடைய கைப்பொருள்களைப் பறித்துக்கொண்டுபோய் அக்குற்றவாளிகளுக்குக்கொடுத்து அவர்களை அரசராப்பாவித்து வணங்குவதையே ஒத்திருக்கின்றது. தன்னால் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளை இங்ஙனம் வணங்குபவர் இன்னார் என்று தெரிந்தமாத்திரத்தாலே, அரசன் அவர்களைக் கடுந்தண்டனைக்கு உள்ளாக்குவதுபோல, ஈசனும் தன்னால் தண்டிக்கப்பட்ட பேய்களுக்குத் தான்படைத்த உயிர்களைக்கொன்று பலியூட்டும் அறிவில்லா மாந்தரை யமதூதரால் மிகவுங் கடுமையாகத் தண்டிப்பான் என்பது திண்ணம். சிறுதேவதைகளுக்கு உயிர்களைக்கொன்று பலியிடுவோர் இம்மையிலே தம் பிள்ளைகளைப் பறிகொடுத்து வருந்துவர்; தாமும் தம்மக்களும் நச்சுக்காய்ச்சல், அம்மை, குட்டநோய், கக்கற்கழிச்சல், பொருட்கேடு முதலான துன்பங்களுக்கு ஆளாகிப் பதைபதைப்பர்; மறுமையிலும்,

"கொல்லிடுகுத்தென்று கூறியமாக்களை
வல்லிடிகாரர் வரிகயிற்றாற் கட்டிச்
செல்லிடுநீரென்று தீவாய்நரகிடை
நில்லிடுமென்று நிறுத்துவர் தாமே" என்றும்

"கொன்றிலாரைக் கொலச்சொல்லிக் கூறினர்
தின்றிலாரைத் தினச்சொல்லித் தெண்டித்தார்
பன்றியாய்ப் படியிற்பிறந் தேழ்நரகு
ஒன்றுவார் அரன் ஆணையி துண்மையே." என்றும்

திருமூலமுனிவர் திருவாய் மலர்ந்தருளியவண்ணம் யமனூதரால் அனல் நிறைந்த நரகத்திலும் மற்ற எழுவகை நரகங்களினும் அழுத்தப்பட்டு மிக நொந்து, திரும்பவும் இந்நிலவுலகத்திற் பிறக்குங்கால் பன்றியாய்ப்பிறந்து நைவார்கள். எல்லா வுயிர்களையும் படைக்கும் ஈசன் ஒருவனே அவற்றின் பருவம் அறிந்து அவற்றை அழித்தற்கும் உரியவன் அன்றி, மற்ற மனிதர்கள் தம்போன்ற உயிர்களான பேய்வடிவங்களின்பொருட்டு வாய்அற்ற ஏழைஉயிர்களின் கழுத்தைவெட்டிப்பலியூட்டுதல் மன்னிக்கப்படாத பெருங்குற்றமும் பாவமுமாய் முடியும் என்று அறிந்துகொள்ளுங்கள். முழுமுதற்பொருளான சிவபெருமானை நேரே வணங்கும் புண்ணியமும் நல்லறிவும் இல்லாதவர்கள் காளி கூளி எசக்கி கறுப்பண்ணன் மதுரைவீரன் முதலான சில்லரை வடிவங்களை வணங்கினாலும் அவற்றிற்கு ஆடு கோழி மாடு முதலிய உயிர்களைப் பலியிடாமல் வணங்குதலே செயல்வேண்டும்; அங்ஙனம் இன்றி அவற்றைப்பலியிட்டால், அவ்வுயிர்ப்பலி பூசையை அவை ஏற்றுக்கொள்ளமாட்டா. ஏனெனில், நிலவுலகத்தில் தாம் செய்த பாவங்களுக்காக ஈசனால் தண்டிக்கப்பட்டு முன்னமே அலறித்திரியும் அப்பேய்கள் மனிதர் அறியாமையாற் செய்யும் உயிர்ப்பலியை ஏற்றுக்கொள்ளுமாயின், ஈசன் படைத்த உயிர்களை மனிதர் கொலைசெய்த பாவத்திற்குக் காரணமாய் இருந்ததுபற்றி அப்பேய்களை நம்பெருமான் இன்னும் கடுமையாகத் தண்டிப்பான். ஆனதுபற்றி, மனிதர் உயிர்ப்பலி இடுங்காலங்களில் எல்லாம் அப்பேய்கள் ஈசத்தண்டனைக்கு மிக நடுநடுங்கி அவற்றை ஏற்றுக்கொள்ளாமல் அப்பால் விலகி ஓடிப்போகின்றன. அதனால் அப்பாவத்திற்கு அவைகள் ஆளாவதில்லை; அவற்றைச்செய்யும் மனிதர்களே அப்பாவத்திற்கு முற்றும் உரியவராகின்றார்கள். அப்பேய்கள் மனிதர்மேல் ஏறிநின்று ஆடிய சில சமயங்களில் யாம் அவற்றின் நேரேயிருந்து கேட்டபோது அவை தமக்குஉயிர்ப்பலி ஆகாதென்றே கூறின. பொய்யாக ஆவேசம் ஆடும் பொல்லா மனிதர்களே உயிர்ப்பலி யிடவேண்டும் என்றுசொல்லிப் பழிக்கும் பாவத்திற்கும் ஆளாகி இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் சிவபெருமானால் தண்டிக்கப் படுகிறார்கள். ஆதலாற் சைவராய்ப் பிறந்த மேன்மக்களே, சிறுதேவதை வணக்கத்தையும் உயிர்ப்பலியையும் அறவே விடுத்து, மற்றக் கீழ்மக்களும் அவற்றை விடும்படி செய்வித்துப் புகழையும் புண்ணியத்தையும் வளர்த்து எல்லாச் செல்வங்களோடும் பொலிந்து நம் முழுமுதற்சிவத்தின் திருவருளுக்கு உரியவரால் வாழ்மின்கள்!

சுவாமி-வேதாசலம்,

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சமயம்.

தொகுதி - 7 - பகுதி 3 - பக்கம் - 68 - தொடர்ச்சி.

"பெரிய புராணத்துள் கூறப்பட்டுள்ள அன்புநெறி கைகூடவே சிவஞானபோத முதலிய சித்தாந்த நூல்கள் உண்டாயின என்பது திண்ணம்" என்று கூறியிருக்கின்றோம். அதனைச் சிவஞான சித்தியார் அவையடக்கத்தில் "மறையினால் அயனால் மாலால் மனத்தினால் வாக்கால்மற்றும் குறைவிலா அளவினாலும் கூறொணாதாகின்ற இறைவனை" எனவும், அவ்விறைவனை அறியவேண்டுமாயின் "அருளினால் ஆகமத்தே அறியலாம் அளவினாலும், தெருளெலாம் சிவனை ஞானச்செய்தியால் சிந்தையுள்ளே, மருளெலாம் நீங்கக்கண்டு வாழலாம் பிறவிமாயா, இருளெலாம் இரிக்கலாகும் அடியரோடு இருக்கலாமே" எனவும் கூறப்பட்டிருக்கும் பாசுரங்களின் உண்மையை நோக்கின் நன்கு விளங்குமென்க.

அஃதாவது ஆகமத்தே என்றதனால் சித்தாந்த நூல் எனவும், அடியரோடிருக்கலாமே என்றதனால் அன்புநெறி எனவும் அறியக்கிடக்கின்றமை காண்க. ஆகவே சைவத்துக்குத் தெய்வமாகிய சிவத்துண்மையை அறியவேண்டுமாயின், மறைமுதலாகக் கூறப்பட்ட எந்த நூல்களாலும் தெள்ளிதில் அறியமுடியாதென்றும், அஃதேபோல் அன்புநெறி கூடுவதற்கு அடியரோடிருத்தலாகிய வகையன்றி வேறு வகையான் அடையமுடியாதென்றும் ஐயமின்றி விளக்கமாயறியலாம்.

இனி, சிவனை "மறையினால் அயனால் மாலால் மனத்தினால் வாக்கால் மற்றுங் குறைவிலா அளவினாலுங் கூறொணாதாகின்ற இறைவன் என்றும், ஆகமத்தே அருளினால் அறியலா"மென்றும் கூறியதனால் மறை முதலியவற்றில் அருட்கலப்பு உளதென்றும் வெளியாகின்றது.

ஆகவே அருட்கலப்புடைய சிவனை யறியவேண்டுமாயின் அருட்கலப்புடைய ஆகமநூலால் அறியவேண்டுமேயன்றி, அருட்கலப்பில்லாத மறை

முதலியவற்றால் அறியப்புகின் அது ஆனைகண்ட அந்தகர் கதையைப்போலாகுமென்க.

அருட்கலப்புடையது ஆகமம் என்பதை தெள்ளிதின் அறியவே, "சித்தாந்தத்தே சிவன்றன் திருக்கடைக்கண் சேர்த்தி" என்று எட்டாஞ் சூத்திரத்தில் கூறிற்று. அதுவேயுமன்றி அத்திருப்பாட்டு அருளினால் ஆகமத்தே யறியலாம் என்ற திருப்பாட்டின் பொருள் முழுவதுங்கொண்டு நிற்கின்றது.

எங்ஙனமெனின் (௧) சிவனை அருளினால் அறியலாம், (௨) ஆகமத்தே அறியலாம், (௩) அளவினாலும் தெருளலாம், (௪) ஞானச்செய்தியால் சிந்தையுள்ளே மருளெலாம் நீங்கக்கண்டு வாழலாம், (௫) பிறவிமாயா இருளெலாம் இரிக்கலாகும், (௬) அடியரோடிருக்கலாமே, என்று எண்ணப்படும் ஆறுவகைப்பயனைக் குறித்து நிற்கின்றது. அஃதேபோல் "சித்தாந்தத்தே சிவன்றன் திருக்கடைக்கண் சேர்த்திச் ஜெனனம் ஒன்றிலே சீவன் முத்தராக வைத்து ஆண்டு, மலங்கழுவி ஞானவாரிமடுத்து ஆனந்தம்பொழிந்து வரும் பிறப்பை யறுத்து, முத்தாந்தப் பாதமலர்க்கீழ் வைப்பன் என்று மொழிந்திடவும் உலகரெலாம் மூர்க்கராகிப் பித்தாந்தப் பெரும் பிதற்றுப் பிதற்றிப் பாவப்பெருங்குழியில் வீழ்ந்திடுவர் இது என்ன பிராந்தே" என்ற இப்பாட்டும் அறுவகைப்பயனையும் குறித்து நிற்கின்றது.

என்னை (௧) சிவன் தன் திருக்கடைக்கண் சேர்த்தல், (௨) ஞானவாரி மடுத்தல், (௩) ஆனந்தம் பொழிதல், (௪) மலங்கழுவி சீவன் முத்தராக வைத்தல், (௫) ஆண்டுவரும் பிறப்பை யறுத்தல், (௬) முத்தாந்தப் பாத மலர்க்கீழ் வைத்தல்.

இங்ஙனம் அறுவகையாக வகுத்த இரண்டு வகையினையும் ஒற்றித்துப் பார்த்தல் வேண்டும். எங்ஙனமெனின்:-திருக்கடைக்கண்—என்றது—அருள். (௧) அவ்வருளாகிய திருக்கடைக்கண்ணைச் சிவன் சேர்ப்பனாயின் (௧)சிவனை அறியலாம், சிவனை அறியவரவே (௨) அவனுள்ளத்தே ஞானவாரிமடுக்கும் ஞானவாரி மடுக்கவரவே, (௨) முப்பொருளுண்மையை ஆகமத்தே யறியலாம். அது அறியவரவே தநுகரண முதலிய பாசத்தை உடைமை என்றும், பசுவாகிய தன்னை அடிமை என்றும் உணர்ந்து உடைமையை இறைவன் வசப்படுத்தி, தான் இறைவனை நோக்கி தற்சுதந்தரமிழந்து (௩) அள

பகவத்கீதார்த்த பங்கம் விலை அணா—1.



வினாலும் தெருளலாம், எனவே சுதந்தரமிழந்து நிற்குங்காலத்தில் எப்பொருள் வந்துற்றிடினும் தற்போதந் தோன்றுதலொழிந்து அப்பொருளிடத்து இறைவன் நின்றுகாட்டும் உபகாரத்தினளவையினாலும், அப்பொருளைக் காண்கின்றதன்னிடத்து இறைவன் நின்று காண்கின்றதாகிய காணும் உபகாரத்தினளவையினாலும் இறைவனருளைத் தெருளலாம். அங்ஙனம் தெருளத் தெருள (௩) ஆனந்தம்பொழிதல், உண்டாம். அது உண்டாகவே (௪) ஞானச்செய்தியால் சிந்தையுள்ளே மருளெலாம் நீங்கக் கண்டு வாழலாம். அவ்வாழ்வு வரவே இறைவன் அவரை (௪) மலங்கழுவி சீவன் முத்தராக வைப்பன். அங்ஙனம் வைக்கவே (௫) பிறவிமாயா இருளெலாம் இரிக்கலாகும். மாயா இருளெலாம் இரிக்கவரவே இறைவன் (௫) ஆண்டுவரும் பிறப்பை அறுப்பன். பிறப்பை யறுத்த பின்னர், (௬) அடியரோடு இருக்கலாம். (அடியரோடிருக்க வைத்தலே) (௬) தனது முத்தாந்தப் பாதமலர்க்கீழ் வைத்தலாகும். இம்முறைதான் ஒற்றித்துப் பார்த்தலாமென்க.

(௧) இனி, சிவன்-தன் திருக்கடைக்கண் சேர்த்தலாவது:—சரியை கிரியை யோகம் என்னும் நற்றவத்தைப் பிறவிதோறும் விடாதுசெய்து வந்து முற்றுப்பெற்ற ஒருபிறப்பினையுடைய ஆன்மாவினிடத்துச் சிவன்-மீண்டும் மீண்டும் பிறவியுட்படுத்தும் முத்தொழிலியற்றும் நோக்கத்தை விட்டு, மீண்டும் பிறவாநெறி யுட்படுத்த ஆசிரியனாய் வந்து அனுக்கிரக நோக்கம் வைத்தலாம்.

அஃதாவது-தன்னை அறிவன் என்று உணரும் உணர்வற்று அறியாமையின் வசப்பட்டு ஜனன மரணப் பட்டுழல்வதாகிய பெத்தநிலையில் நிற்கும் ஆன்மாவிற்கு அப்பெத்தநிலை இஃதென அறிவித்து, மேல் ஜனன மரணப் பட்டுழல்வதாகிய அல்லலற்ற முத்திநிலை இஃதென அறிவித்து, அவ்விரண்டு நிலையும் அறிவித்தவண்ணம் அறிந்த பின்னர் அவ்வான்மாவை நோக்கி உன்னை அறிவன் என்று அறியாவண்ணம் செய்த அசத்தாகிய பாசத்தையும், இப்போது உன்னை அறிவன் என்றுணர்த்திய சத்தாகிய சிவத்தையும் உணரும் உணர்வு உனக்குளது. அவ்வுணர்வுடைய உனக்கு ஆன்மா என்று பெயர். ஆகவே அசத்தாகிய பாசத்தை அறிகின்றவனே யன்றி, பாசமாகாய். அஃதேபோல் சத்தாகிய சிவத்தை அறிகின்றவனே யன்றி சிவமாகாய். ஆகவே ஆன்மாவாகிய உன்னைச் சதசத்தென்று சித்தாந்தத்தே கூறும்.

எனவே அருட்சத்தி பிரவேசித்துச்சத்தெனப்படும் சிவத்தினது அநுபவம் இத்திறமென வுணர்த்தி அச்சிவானந்தத்தை நுகர்விக்க அப்போது விளையும் அச்சத்தின் திறத்தை அறியும் அறிவும் உளது. திரோதானசத்தி பிரவேசித்து அசத்தெனப்படும் பெத்தாநுபவம் இத்திறமென வுணர்த்தி விடயானந்தத்தை நுகர்விக்க, அப்போது விளையும் அசத்தின் திறத்தை அறியும் அறிவும் உளது.

இதனால் அவ்விரண்டையும் அங்ஙனம் அறிந்து அவ்விரண்டின் அநுபவத்தில்விளையும் சிவானந்தத்தையும், விஷயானந்தத்தையும் பெற்றுச்சுகித்திருக்கும் அவ்வளவே யன்றி நீ அந்தச் சத்துப்பொருளுமாகாய், இந்த அசத்துப்பொருளுமாகாய் என்று உணர்த்தியவாறும்.

இரண்டுபொருளும் ஆகாய் என்றது என்னையெனின் உன்னைச் சுதந்தரஹீனன் என்று சொல்லப்பட்டமை யாலெனக. அஃதாவது பெத்தாநுபவத்தில் விளையும் விஷயானந்தத்தைத் திரோதான சத்தியின் பிரேரேபணையால் அநுபவித்தும், சிவாநுபவத்தில்விளையும் சிவானந்தத்தை அருட்சத்தியின் பிரேரேபணையால் அநுபவித்தும் வருபவனேயன்றி அவ்விருசத்தியின் பிரேரேபணையின்றித் தானே சுதந்தரமாய் உன்னறிவால் அநுபவித்ததின்று. அதனால் ஆன்மாவாகிய உன்னைக் கண்போன்றவனென்று கூறியதுமாம். அஃதாவது—கண்ணானது இருள் வசப்பட்டகாலத்து இருள்மயமாயிருப்பதேயன்றி இருளான தில்லை. அஃதேபோல் ஒளி வசப்பட்டகாலத்து ஒளிமயமாயிருப்பதே யன்றி ஒளியானதில்லை. என்று சிவன் ஆசிரியனாய் வந்து தனது அருள் நோக்கத்தை ஆன்ம அறிவின்கண்ணே சேர்த்தி உணர்த்துவதாம் என்க.

(உ) இனி ஞானவாரி மடுத்தலாவது—சிவன் அநுக்கிரக நோக்கத்துடன் ஆசிரியனாய் வந்து தனது சிவஞானத்தால் ஆன்மாவாகிய அவனைச் சார்ந்திருக்கும் அசத்தினியல்பும், அவனுக்கு ஆதாரமாய் அவனுடனாய் நிற்கும் சிவசத்தாகிய தன்னியல்பும் விளக்கி அவனைத் தனது ஞானானந்தவாரியாகிய ஸ்ரீபாதத்தில் அணைவித்து இன்புறச் செய்தலாம்.

அஃதாவது ஆசிரியன்-மாணவகனை நோக்கி! படிகத்தின் வைத்த பல்வேறு வகைப்பட்ட நிறமுள்ள பொருள்கள் எப்படி ஒளியைக் கீழ்ப்படுத்தித்தத்தம் நிறத்தின் இயல்பினையே விளக்கி நிற்குமாறுபோல, படிகம்

சைவாகமப்பிரமாண்யம் விலை அணா—12.



போன்ற உன்னிடத்தில் ஐம்பொறிகள் பொருந்தி நின்று உனது சொரூபத்தைக் கீழ்ப்படுத்தித் தம்மாற் காட்டப்பட்ட தத்தம் விடயத்தையே உனக்குக் காட்டிநிற்ப, நீ அப்பொறிகளின் வழியே ஐபுணர்வுகளால்மயங்கி உன்னை உணராது நிற்கும் அவ்வியல்பினை உடையனாய் வாழ்கின்றனை என்றுணர்த்துவதே அசத்தின் இயல்பு.

(இன்னும் வரும்.)

கா. வ. ஆலாலசுந்தரம் பிள்ளை,
சித்தாந்தபோத ரத்னாகரம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# அன்பர் பெருமை.

—:0:—

அன்பர் பெருமை என்பது கடவுளின் திருவடியையே தஞ்சமென நடைந்து தமக்கு வேறொன்றையும் பொருளாகக் கருதாத அடியார்களுடைய பெருமை எனப்பொருள்படும். இவ்வன்பர்களது பெருமையை யார்க்கும் சொல்லுதல் அரியதென்பது,

"பெரியது கேட்கில் தனிநெடு வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகனோ கரியமாலின் உந்திவந்தோன்
கரியமாலோ அலைகடல் துயின்றோன்
அலைகடலோ குறுமுனி கையடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறையவர் பாகத் தொடுக்கம்
இறையவரோ தொண்ட ருளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் அரிதே"

என்னும் மூதன்னையின் வாக்கே வெளிப்படுத்தும் என்றலும், ஏதோ என் சிற்றறிவிற்கு எட்டியவண்ணம் இங்கெடுத்துக் கூறுவேன். அடியவராவார் எம்மதத்தவராயினும் அவரவர் ஆசாரியர் சொல்வழிநின்று அவரவர் போற்றும் தெய்வத்தை வழிபடுவோ யாவர் ஆதலின் எம்மதத்தவராயினும் இறைவனை வழிபடின் அன்பரென்னும் பெயருக்கு அமைந்தவராயினும் நான் வழிபடுங் கடவுளாகிய சிவபெருமான் திருவடியைத் தியானித்த அன்பரின் பெருமையை இங்குச் சிறிது எடுத்துரைக்க யான் ஆசைப்படுகின்றேன். சிவபெருமான் திருவடியைத் தஞ்சமென்றடைந்து பிறவியென்னும் பெருங்கடலைத் தாண்டி முத்தியென்னுங் கரைசேர்ந்தார் முடிவிலா எண்ணினை யுடையவராயினும் இப்போது நாம் தொழும் தொண்டர் புராணத்துள் அடங்கிய அறுபான்மும்மை நாயன்மார்களில் சமயாசாரியராகிய நால்வரையும் இன்னும் சில நாயன்மார்களையும் பற்றியே இங்கெடுத்துப் பேசலானேன். முதலாவதாக நம் ஆசாரிய சுவாமிகளது பெருமையை நோக்குங்கால் அவர்கள் சிருட்டி, திதி, சம்மாரமாகிய முத்தொழிலுக்குரியராகவே காணப்பட்டார்கள். அவ்வித தன்மை,

"புனலி லேடது செல்லெனச் செல்லுமே
புத்தனார் தலைத் தத்தெனத் தத்துமே
கனலி லேடிடப் பச்சென் றிருக்குமே
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனைப் பெண்பனை யாகுமே
பழைய வென்பு பொற்பாவைய தாகுமே
சினவரா விடம் தீரெனத் தீருமே
சிறந்த சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே."

என்றமையால்

எலும்பைப் பெண்ணாக்கியதும், விடம் தீர்த்ததும், புத்தன் தலை இடறிவிழச் செய்ததும், ஆண்பனையைப் பெண்பனையாகச் செய்ததும் இவையெல்லாம் முத்தொழிலுக்குரிய காரியங்களாகவே முடியும்.

"தொடைவா ழைமடவா ரல்குல் பாம்பு தொடமயங்கி
கடைவாய்ப் பிணம்எனப் பட்டார் பெறுகிலர் நச்சுகுலை
உடைவா ழைமேல் உரகந்தீண்ட மாய்ந்த ஒருவன்உயிர்
அடைவான் அருள் புரியும் திருநாவுக்கர சனையே."

என்ற செய்யுளும்,



"இடுக்கண் பட்டிருக்கினும் இரந்து யாரையும்
விடுக்கிற் பிராவென்று வினவு வோமல்லோம்
*அடுக்கிற்கீழ் கிடப்பினும் அருளின் நாம்உற்ற
நடுக்கந் தீர்ப்பது நமச்சிவாய வே."

என்னும் செய்யுளும்,

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென் றலும் வீங்கிள வேனிலும்
மூசுவண் டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே."

என்ற செய்யுளும் பெருமான் திருவடியை நம்பினோர் அடையாதபொருள்கள் யாவும் இலை யென்பதாம். உதாரணமாக மேற்சொல்லிய தேவாரங்களில் திருநாவுக்கரசு சுவாமிகளை நீற்றறையிலிட்ட காலத்து அப்பெருமான் அருள்செய்த அனுபவஞானமானது கேட்போர் யார்க்கும் வியப்பைத்தருமென்பதில் ஐயமில்லை. என்னை? நீற்றறையிலிட்டான் ஒருவர் இறந்துபடுவதேயன்றி குற்றமில்லாத வீணைவாத்தியமும் மாலைக்காலத்துத் தோன்று மனமகிழ்ச்சியைத்தரும், சந்திரோதயமும் இனிமையையுடைய விரும்பும் உயிர் ஒன்று அபேட்சிக்கும் தென்றல் காற்றும் மனமுவந்த தலைவரிருவர் விரும்பும் இளவேனிற்பருவமும் குளிர்ந்த தாமரைத்தடாகம் சூழ்ந்த சோலையும் ஆக இருப்பது இயற்கையாகுமோ. இது இயற்கை விரோதமன்றோ. இவற்றையெல்லாம் நோக்குங்கால் "முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ" என்னும் மூதுரைக்கிணங்க இறைவன் திருவடியே தஞ்சமென்றடைந்த அடியவர்க்கு ஆகாதது ஒன்றுமில்லையென்பது * அன்பரது பெருமையே பெருமை யென்றும் போதருகின்றதன்றோ. அன்றியும் நம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலைவாய்ப்பிள்ளையை அழைத்ததை நோக்கின் அதனினும் மேற்பட்ட பெருமை யொன்றும் இல்லை யென்றே சொல்லுதல் வேண்டும். அவரது பெருமையை "போதமுண்டபிள்ளை என்புபொருகண்மாது செய்ததோ" என்னும் செய்யுளை நன்கு விளக்கும்.

* (மாணிக்கவாசக சுவாமிகள் ஊமைப்பெண்ணைப் பேசுவித்ததும், புத்தரை வாதில் வென்றதும் சிவபெருமானையே திருக்கோவையை எழுதச் செய்ததும் பசுமரத்து ஆணி அறைந்ததுபோலாம்.)

இன்னும் மற்றநாயன்மார்கள் செய்த அற்புதங்களையும் அவர் பின் வந்த எண்ணிறந்த அன்பர்கள்செய்த திருவிளையாடல்களையும் அறிந்தோர் பால் அறிந்து அகமகிழ்வதே அமைதியாகும் இன்னும் வைஷ்ணவ சமயாசாரியர்களில் ஒருவராகிய பக்திஸாரமுனிகள் என்னும் திருமழிசையாழ்வார் அவர்காலத்து அரசனாகிய பல்லவராயன் என்பான் அவரிடம் அன்பு பூண்ட கணிகண்ணனிடம்கோபித்துத் தன்னாட்டைவிட்டு அவரைப்போகும் படிக் கட்டளையிடவும் அதனையுணர்ந்த ஆழ்வார் காஞ்சி திருவெஃகாவில் துயிலமர்ந்த பெருமானை நோக்கி,

"கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டாம் — துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்."

என்று விண்ணப்பம் செய்த மாத்திரத்தில் அப்பெருமான் தம்முடைய சேஷசயனத்தைச் சுருட்டித் தோளில்வைத்துத் தம் நாயகியார் இருவருடன் பிரயாணப்பட்டு அவ்வன்பர் சொன்னவண்ணமே செய்து அவர் பின் சென்றார் என்றால் அன்பரது பெருமை என்னவெனச் சொல்வது. அன்பு இன்னதென்பது,

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பு சிவமாவ தாரு மறிந்திலர்
அன்பு சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே." என்ற திருமூல நாயனார்

வாக்கால் நன்கு விளங்குகின்றதாதலால் நாம் எப்போதும் அன்பரைத் துதிசெய்து கொண்டிருப்போமாக.

"அன்பர்தம் உருவே சிவபர வுருவ
மன்பர்வா ழிடஞ்சிவ லோகம்
அன்பர்த மன்பே மும்மல மொடுக்க
மவர்தரிசனை குரு மூர்த்தம்
அன்பர்தம் பணியே மானத பூசை
அன்பர் வாயுறையே வேதம்
அன்பர்தஞ் சரிதங் கேட்பதே ஞான
மவரொடு வாழ்தலே முத்தி."

கி. இராஜு கிராமணியார்,
திருவஞ்ஞம்பேட்டை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அருளிலக்கணத்தின் ஓர் பகுதி.

—— ·o: ——

தொகுதி - ௬ - பகுதி - ௧௧ - பக்கம் - ௨௬௦ - தொடர்ச்சி.

அண்டப்பரப்பினுள் கண்டதுபோலவே பிண்டத்திலும் காணப்படும் நிலை பல. இனி மனோ நிலைகளின் விரிவை சிறிது விவகரித்தல் முறையாகும். பௌதிக ஆராய்ச்சியாளர் பௌதிகங்களின் நுணுக்கங்களை அளக்கப்புகுந்ததுபோல மனோ தத்துவங்களையும் அவைகளின் சாமானிய விசேட லக்ஷணங்களையும் பகிர்முகமாகப் பௌதிக ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்ததுபோலன்றி அந்தர்முகமாகப் பல திறமாகக் கவனித்து மிருகம், குழந்தை, நோயாளி, பித்தன், கிழவர் முதலானோர் சித்த விசேடங்களை ஆழ்ந்தறிந்து ஆன்மாவின் நிலைமையைத் தத்துவநூல் உணர்ச்சியுடையார் தெரிவிப்பர்.

கரு உண்டாகும் காலமுதல் பல நன்மைகள்செய்து கடவுள் காப்பாற்றி வருகிறார். பேரணுவுருவில் ஆன்மசத்தி கலைகள் வெளிப்படவும், உத்பாதங்கள் நேரிடாதபடியும் காப்பாற்றுகிறார். உபகரிப்பு அதிகரிப்புகளுக்குரிய உபயோக தத்துவ உறுப்புகள் எல்லாவற்றையும் வகுத்தும் அமுதக்காற்றை வீசுவித்தும், பூதகாரிய அமுதத்தை ஊட்டுவித்தும், நாத ஒலியால் பேய் வெருட்டையும் விந்து விளக்கத்தால் பேரிருட்டையும் தவிர்த்தும் ஓரறிவையும் விளக்கியும், சுக அனுபவப்பெருக்கம், ஆயுட்பெருக்கம் அமைத்தும், தந்தையிடம் ஒரு கோடி ஒன்பது லக்ஷத்து அறுபதினாயிரம் கணப்போது பரியந்தம் அன்போடும் அருளோடும் காப்பாற்றியும், தாயிடம் தங்கி உலகில் வெளிவருவதற்கு ஆறுகோடி நாற்பத்தெட்டு லக்ஷம் கணப்போது பரியந்தம் காப்பாற்றியும் வருகிறார். பூதப்பிருதிவி பூதநீர், பூதாக்கினி, பூதவாயு, பூதவெளிகளின் தோற்றங்களும் உபப்பிருதிவி உபநீர், உபாக்கினி, உபவாயு தோற்றங்களும் அவைகள் தொழிலிடங்களும், ஐவகைக் குண அறிவுகளும், உள்ளிடப் பொறிகளும், வெளியிடப் பொறிகளும், ஐவகைத்தொழிலறிவுகளும், கரும உள்ளிடப் பொறிகளும்

கரும புற இடப்பொறிகளும், சூக்குமக்கரணத்தொழில்களும் சூக்குமக் கரணங்களும், அதிசூக்குமக் கரணங்களும், முக்குணங்களும், இடைப்பாட்டுத் தொழில்களும் பாத்துவத்தொழில்களும் இயற்ற சத்தி சத்தர்களும் வாதபித்த சிலேட்டும விருத்திகளும் சூரியசத்தி முதலிய சத்திகளும் நடத்தும் சத்தர்களும், அவத்தைகளும் இன்னும் பல அக உறுப்புகளும், அகப்புற உறுப்புக்களும், தோல் நரம்பு எலும்பு இரத்தம் இறைச்சி சுக்கிலம் மூளை அமுதம் வண்ணம் முதலிய வகைகளும் வண்ணபேத வகைகளும் இவைகள் இருக்க இடம், செயல் பயன் வகைகளும், இன்னும் பல புற உறுப்புகளும் புறப்புற உறுப்புக்களும் இப்பிண்ட பவுதிக வடிவிலே அமைத்தருளுகின்றார். இவ்வளவு உறுப்புகளைக்கொடுத்துதவிய கடவுளின் திருவருளை என்றும் மறக்கக்கூடாது.

Personality என்று கூறப்படும் மனிதன் உண்மை நிலைமை (மானுஷீகம்?) என்பதைப் பற்றி பூத பௌதிகங்களுள் காணப்பெறும் நியாய முறைகளைப் பார்க்கிலும் கோடிபங்கு அதிகமான உண்மைகளும் அனுபவங்களும் ஏற்படுகின்றன. (The abysmal deeps of Human Personality—Tennyson) மனிதர் அறிவு வளர வளரக் கடவுளைப்பற்றிய அறிவும் கூடவே வளர்கின்றது. ஆயினும் தர்க்க நூல் என்னும் அளவை நூல்களும் தத்துவசாஸ்திரங்களும் கோடி கோடி உண்டாகி மனிதனுடைய தேகம் அறிவு முதலியவைகளையும் ஆன்மாவின் லக்ஷணத்தையும் விளக்குகின்றனவாயினும் தத்துவ சாஸ்திரங்களே மனிதனுக்கு முடிவான உண்மை நிலைகளையும் தேகம் எடுத்ததினால் பெறவேண்டிய பெரும்பயனையும் போதுமான அளவுக்கு திருவருள் அனுபவத்தைக் காட்டுகின்றனவா எனின்

Religious Consciousness என்ற நிலையில் வரவேண்டியிருக்கிறது. ஏனெனில் தத்துவ நூல்கள் மனிதன் அறிவும் ஆற்றலும் மிகச் சிறியது என்றும் மனிதன் அறிவு வெகு கொஞ்சகாலமும் வெகு கொஞ்சதூரமுமே செல்லும் என்றும் காட்டும். எனவே ஆன்மாவின் சிறுமை நன்கு பெறப்படுகின்றது. அற்ப உணர்ச்சியும் அற்ப ஆற்றலும் உடையவர் மனிதர் என்றும் பேரறிவும் வரம்பிலாற்றலுடைமையும் உடையவர் கடவுள் என்றும் முடிவுகட்டும்.

திருத்தொண்டர் வெண்பா (திருத்துபருத்தபாரத்துடன்) விலை அணா—1



Psychology (ஆத்மிகசாஸ்திரம்) தனி மனிதனுடைய குணகுணங்களை ஆராய்ச்சிசெய்து மனிதன் மனோ நிலைமைகளை வெளியிடுகின்றது. மக்கள் தொகுதியின் கூட்டுறவுகளையும் நட்பநோக்கங்களையும் அறிவு அனுபவங்களையும் ஆசாரம், நடை உடை பாவனைகளையும், ஒழுக்கம் நீதி அன்பு முதலிய அறங்களையும் அந்தந்த தேசத்தார்களிடத்தே அவ்வக்காலங்களில் உள்ளவாறு ஆராய்ச்சிசெய்வதே Sociology என்னும் நூலின் அபிப்பிராயம் இதனாலே கடவுளைப்பற்றிப் பண்டைக்காலத்திருந்து பற்பல தேசத்தார்கள் அனுசரித்துவந்த பக்திமார்க்கங்களும் வெளியாகும். மக்கள் தனித்தனியே கடவுள் வழிபாடு செய்வதோடு வெகு ஜனக்கூட்டங்களாகத் திரண்டு மலைமீதும் ஆற்றோரங்களிலும் சோலைகளிலும் விசேஷகாலங்களில் கடவுள் வழிபாடு செய்து வருகிறார்கள் என்பதும் அறியக்கிடக்கின்றது.

இப்படி முறையாகப் பௌதிக முதலாய் எழும்பிய ஆராய்ச்சியானது இப்பொழுது மனிதர் தனித்து ஆன்மாவின் சிறுமையும் கடவுளின்பெருமையும் அறிந்தும் கூட்டமாகத்திரண்டு குதுகலித்துக் கடவுள் வழிபாடு செய்தும் தேர்ந்து ஒப்பற்ற பேரின்ப லாபத்தை எங்ஙனம் அடைதல் கூடும் என்று எழுகின்றவினாவுக்கு (Religious Consciousness) என்னும் நிலையில் உள்ளவர் உவந்து விடைகொடுப்பர். அதாவது தர்க்கசாஸ்திரங்களும் தத்துவ சாஸ்திரங்களும் உலகத்தில் தோன்றிய உயிருள்ள பொருள்களுள் மனிதப் பிறப்பு மிக அரிது என்றும் பெருப்பேறுகிய பேரின்ப வாழ்வு பெறுவதற்கு இச்சாஸ்திரங்கள் (Life is morethan Logic) பேரின்ப வாழ்வு அளவை நூல்களுக்கு மேற்பட்டன என்று போதித்தும் பிரத்யக்ஷமாகவும் பிரமாணமாகவும் நாம் அறியக் கிடக்கிற பொருள் கொஞ்சமே என்றும், உருவத்தாலும் அறிவினாலும் உண்மையாக ஆராய்ச்சியில் காணப்பட்டவைகள் சில என்றும் ஆன்ம அனுபவத்தால் நிகழ்ந்து திருவருளால் சுரந்து உதிக்கும் அனுபவங்கள் ஆராய்ச்சிக்கும் அளவைக்கும் அகப்படாது மேற்செல்லும் இயைபுடையதாக இருத்தலின் (Philosophical Consciousness) என்ற நிலையே போதாதென்றும் (Religious Consciousness) என்ற நிலை அடையவேண்டும் என்றும் காட்டுகின்றன.

அப்படி அவாவுகின்ற காலத்து உதிக்கும் எண்ணமாவது பௌதிகங்களின் முறைமைகளைக் கண்டு பிடிப்பதும் அல்ல. மனிதனுடைய அறிவு மேம்பாட்டால் வெளிவந்துள்ள அறிவு நூல்களின் ஆராய்ச்சியுமல்ல அரு

மனைவழுத சரித்திரம் (படத்துடன்) விலை அணா—4.

னோடுங்கூடி அறிவுருவான கடவுளின் திருவருளைப் பெற்று வாழ்தலே என்பதாம். இனி எங்ஙனம் அதனை அடைதல் கூடும் என முயற்சிக்கிறுன் அப்பொழுது தனித்தனி ஆன்மாக்களாக இயங்கும் மனிதர்களுக்கும் ஒப்பற்ற கடவுளுக்கும் நடுவிலே ஒருவர் உதவிவேண்டியிருக்கிறது. அதாவது (Ultra Sociological Divinity) என்பது. மானைக்காட்டி மானைப்பிடிப்பதுபோல பெரியோர்களின் துணைவேண்டும். பெரியோர்களின் அனுபவங்களின் பொக்கிஷங்களாக நமக்குத் தொன்றுதொட்டு வந்துள்ள பாசுரங்களை ஓதியும் அவர்களுடைய திருவுருவங்களை வழிபட்டும், இவ்வியற்கையுடைய அன்பர்களுடைய கூட்டத்திலே சேர்ந்தும் உயிர்களிடத்தும் கடவுளிடத்தும் அன்புடைமை கொண்டும் சிறிய நெருப்பிலிருந்து பெரிய நெருப்பு பெறுவதுபோல உயிர்களிடத்துக் கொண்டுள்ள சிறிய அன்பைக்கொண்டு கடவுளுடைய அருளாகிய பெரிய தயவைப்பெற்றும் சன்மார்க்க நெறியிலே நிற்க முயல்வதே எல்லாருக்கும் ஒப்ப முடிந்த விஷயமாகும்.

"நம்முடைய தலைவராகிய கடவுளை நாம் அடைவதற்கு அவர் எழுந்தருளியிருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள்வேண்டும். இவ்வருள் அன்பினுலல்லது வேறுவகையில் அடைவதரிது. இவ்வன்பு ஜீவகாருணியத்தாலல்லது வேறுவகையால் வாராது. ஜீவகாருண்யத்தின் லாபமே அன்பு. இந்த ஜீவகாருண்யம் உண்டாவதற்கு வழியாதெனில் கடவுளுடைய பெருமையும் தரத்தையும் நம்முடைய சிறுமையும் தரத்தையும் ஊன்றி விசாரித்தலே. அன்னிய உயிர்களுக்கு இம்சை உண்டாகாது நடத்துவதே ஜீவகாருண்யம். இதுதான் சித்தியை அடைவதற்கு முதற்படியாக இருக்கின்றது. ஆதலால் இதைப் பாதுகாத்தல்வேண்டும்."

"அருளில் பிறந்திட்டு அருளில் வளர்ந்திட்டு
அருளில் அழிந்து இளைப்பாறி மறைந்திட்டு
அருளான ஆனந்தத் தாரமுதூட்டி
அருளால் என்நந்தி அகம் புகுந்தானே."

"அகம் புகுந்தான் அடியேற் கருளாலே
அகம் புகுந்துந் தெரியான் அருளில்லோர்க்கு."

"அருட்கண் ணிலாதார்க் கரும்பொருள் தோன்று
அருட்கண் ணுளோர்க் கெதிர்தோன்றும் அரனே
இருட்கண் ணிேனுர்க் கங்கிரவியும் தோன்று
தெருட்கண் ணினேர்க் கெங்குஞ் சீரொளியாமே."





னும் திருமந்திரப் பாசுரங்களின் கருத்தை வல்லவர்வாய் கேட்டுணர்தல் வேண்டும்.

கடவுளைப் பற்றிக் கூறுகிற அவசரங்களில் அருள் மிக முக்கியமான அடைமொழியாகும். அருள் என்பதை குரு, பேர், சீர், பேறு, ஒளி, நலம், நெறி, அமுது, அறிவு, சுகம், வல்லபம், நிலை, வடிவு, இயல், உரு, அடி, முடி, மனம், குணம், பதி, பதம், இடம், ஆணை, தொழில், விருப்பு, குலம், அரசு, விளக்கு, சுபம், ஆசை, வெளி, உகைம், பீடம், திரு, நிதி, சித்தி, மயம், பழம், மணம், வழி, அறிவு சோதி ஆகிய மொழிகளில் ஒவ்வொன்றுக்கும் அருள் எனும் மொழிபுணர்த்திக் கூறியிருக்கிறதை நோக்குங்கால் "அருளலாது அணுவும் அசைந்திடாது" எனும் உண்மை புலனுகின்றது.

மானைக்காட்டி மானைப்பிடிக்கும் மாணிடச்சட்டை தாங்கியுந்து அடிமைகொள்ளும் பெரியோர்களுக்கு விளங்காத விஷயமில்லை. அவர்கள் இருந்த இடத்திருந்தே எல்லா விஷயங்களையும் அறிவார்கள். இருந்த இடத்திலிருந்தே எல்லாக் காட்சிகளையும் அவர்கள் கண்கள் பார்த்தறியும். இருந்த இடத்திருந்தே அவர்கள் செவிகள் எல்லாக் கேள்விகளையும் கேட்டறியும், இருந்த இடத்திருந்தே அவர் மூக்கு எல்லா வாசனைகளையும் முகர்ந்தறியும். இருந்த இடத்திருந்தே அவர் நா எல்லாச்சுவைகளையும் சுவைத்தறியும் என்றுர் வள்ளலார்.

பேரின்ப வாழ்வு அடைய அவாவுகின்ற அருளாளர் பெருமை (சித்தாந்தம் 2-தொகுதி-பகுதி-2-3-4ல்) ஜீவகாருணிய ஒழுக்கம் எனப் பதித்துள்ளதை ஊன்றிப் படித்தால் நன்குவிளங்கும். அதனைப் படிக்கின்றகாலத்து (Personality) என்பதின் பெருமையை நுண்மையாக வசனநடையிலே விளக்கிய வள்ளலார் இனி எழுத உத்தேசித்திருந்த மற்றப் பாகங்களும் எழுதி முடித்தனரோ இல்லையோ எனும் ஐயம் உண்டாகி மற்றப் பாகங்கள் எங்கு பெறக்கூடும் என்று முயற்சிக்க நேரிடுகின்றது.

மேலும் அவர்கள் பெருமையான இன்பம் அடைபவர்கள். அனுபவிக்கப்படும் இன்பம் அனுபவிக்கும் பக்குவியைப் பொறுத்தது. உதாரணமாக கேவலமானவன் கேவலம் சிற்றின்பமே என்ஞான்றும் நிலைபுதலான பேரின்பமென மகிழ்ந்து தத்துவக் கெடுதியை நோக்காது அளவு கடந்த காம வசத்தனுய் பரத்தையால் மகிழ்ந்து அறிவு அருள் முதலிய மறந்து

வியாதியாளனாய்த் தேகத்தைக்கெடுத்துக் கொள்ளுகிறான். இவனுடைய இன்பம் கேவலம் மிருக சுபாவ இன்பம் (Animal Pleasure) பெருங்காமியாமிவன். மோகமாந்தர் ஆவர்.

இதே இன்பத்தை கடவுளருளால் நேர்ந்த மனைவியோடு தரும வழியே அளவாகக் காதல்கொண்டு அன்புடைமையராய் வாழ்ந்து கடவுளிடத்தும் உயிர்களிடத்தும் பிற்காலத்து அன்பு பூண்டு திருவருளைப் பெறுவதற்கு நன்மக்களைப்பெற்று நீண்டகாலம் இன்பம் நுகர்ந்து உடம்பை நல்ல நிலையில் தமக்குரிய பிராயம்வரை வைத்துக்கொண்டு வாழ்கிறார். இது (Human Happiness) மனித சுபாவ இன்பம். போகமாந்தர் ஆவர்.

இனி இவ்வுடம்பு நெடுங்காலம் நிலையுடையதல்ல. உள்ளகாலத்தும் கால வேறுபாடுகளால் சிறு பருவ முதல் கிழத்தனம்வரை மிக விரைவில் கழிந்து விடுகிறது. சிறு பருவத்துள்ள வலிவும் படிக்கக்கூடிய சக்திமுதலியன அற்பகாலத்துள் கழிகின்றது. நுகரப்படும் இன்பம் மனைவியிடமாயினும் அம்மனைவியும் அற்பகாலத்துள் உருமாறி விடுகிறாள். குடும்ப பாரம் மேலிடுகின்றது. நோய்தாக்குகிறது. உடம்பு ஆற்றல் இழக்கின்றது. கண் ஒளி மழுங்குகிறது. நடை சாயலாகின்றது. இளம்பிள்ளைகளும் ஏச இடமுண்டாகிறது.

இங்ஙனம் இருக்கினும் பெரும்பேறு பெற்றேமா என்று ஆழ்ந்து அறிவர். விகற்ப உணர்ச்சியால் நேரிடும் விபரீதம் பல என்று துணிவர். இப்பிறப்பில் காணும் விஷயங்களோடு நிற்காமல் தேகம் முன் இருந்த நிலையை நுனித்தறிந்து நன்னிலையில் பயன்படுத்தாது விடுத்தோமோ என்று அயர்வர். புல்லாகி பூடாகி நேர்ந்த பிறவிகள் பல என்பதையெண்ணி இம்மானிடப் பிறவி பின்னரும் கிடைக்குமோ என்று ஐயுற்று நேர்ந்த இப்பிறவியிலே எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளின் திருவருள் ஒன்றே எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வைப்பெற ஆராய்ச்சியைவிட்டு ஆனந்த முயற்சியில் பழகுவர். கருணையே வடிவமாகி ஒழுக்கம் நிரம்பிய பெரியோர் இவர்களே. இது கடவுள் சுபாவ இன்பம் (Divine Blessedness) யோகமாந்தர் ஆவர்.

(இன்னும் வரும்.)

மோ. கந்தசாமி முதலியார். B. A.

Essentials of Hinduism. 3—0—0.



## சமாச்சாரங்கள்.

காவித்தண்டலம் சைவசித்தாந்த சமயாசாரியர் பக்தஜனசபையார்:- ஏப்ரல்மீ 26, 27, 28-தேதிகளில் ஆறும் வருட மகோற்சவம் கொண்டாடினர். சிவஸ்ரீ-யதீந்திர சுவாமிகள் அக்கிராசனராக வீற்றிருக்க பல வித்துவ சிகாமணிகளாலும் ஒரு பெண்மணியாலும் பற்பல உபந்நியாசங்கள் நடந்தன.

பரங்கிமலை ஆலந்தூர் சிவனடியார் திருக்கூட்டத் தமிழ்வேத பாராயண சபை:—மேமீ 5-தேதி முதல் 26-தேதி வரையில் எட்டாவது வருடத்திய மகோற்சவம் கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு நாளும் அநேக வித்துவான்கள் அரிய பெரிய உபந்நியாசங்கள் செய்தனர்.

சென்னைச் சிவனடியார் தலயாத்திரைச் சங்கம்:—இச்சங்கத்தினர் 1918ஞு மேமீ 18உ திருக்கோவூருக்கும், 25உ அணைவைமா நகருக்கும் சென்று, சிவாலய பழிபாடு தேவார பாராயணஞ் செய்துகொண்டு திரும்பினர். இச்சங்கத்தலைவர் சிவஸ்ரீ-யதீந்திர சுவாமிகள் கோவூர் சுந்தரேஸ்வர சுவாமிகள் மீது ஒரு பதிகம் பாடி அரங்கேற்றினர்.

திருப்பாதிரிப்புலியூர் வாணிவிலாச சபை:—இத்தலத்தில் நடந்த பிரமோற்சவ காலத்தில் மேமீ 20உ முதல் 25உ வரையில் பலதேயத்து வித்துவான்கள் ஒருங்குகூடி அரிய உபந்நியாசங்கள் ஷை சபையில் ஸ்ரீமத் ஞானியாரவர்கள் சந்நிதானத்தில் நிறைவேறின.

Sivajnana Siddhiyar Rs. 3—0—0.

### சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 1918-ளு ஏப்பிரல் மாதத்தின் வரவு செலவு கணக்கு.

| வரவு. | தொகை. ரூ | அ | ப | செலவு. | தொகை. ரூ | அ | ப |
|---|---|---|---|---|---|---|---|
| 1918ளு மார்ச்சுமீ 31உ இருப்பு ... | 114 | 0 | 7 | லிகிதர் சம்பளம் ... | 20 | 0 | 0 |
| சாமாசிகர் வருட சந்தா ... | 378 | 0 | 0 | காகிதம் 40-ரீம் ... | 240 | 0 | 0 |
| | | | | அச்சுக்கூலி(டிசம்பர் 17, ஜனவரி பிப்ரவரி 18) | 50 | 14 | 0 |
| | | | | தபால் செலவு முதலியன ... | 36 | 4 | 6 |
| | | | | | 347 | 2 | 6 |
| | | | | ஏப்ரல்மீ 30உ இருப்பு... | *144 | 14 | 1 |
| | | | | *ஆயுள் சமாசிகர் சந்தா ரூபா 580-0-0 | | | |
| ஆக மொத்தம்... | 492 | 0 | 7 | ஆக மொத்தம்... | 492 | 0 | 7 |

K. Subramaniyam Pillay, M.A. M.L., *Secretary.* M. Kandasawmy Mudaliar, B.A. *Auditor.* W. T. Govindaraja Mudaliar, *Treasurer.*

3-AUG1918

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி எ.] 1918ளு ஜுன்மீ [பகுதி சு.

## சாந்தோக்யோபநிஷத்து.

ஏழாவது பிரபாடகம்.

கண்டம் கங.

ஆகாயத்தைக்காட்டிலும் ஸ்மரணம் (நினைப்பு) பெரிது. ஸ்மரணையிருக்கின் ஆகாயாதி பிரயோசனமாம். ஸ்மரணையில்லாவிடில் ஆகாயாதிகளை அறிதல் கூடாது. ஒருவர் சொல்லை மற்றொருவர் கேட்கமுடியாது. ஒன்றையறிந்து அந்தப்படி நடக்கமுடியாது. ஸ்மரணையினாலே தான் புத்திரன் பசு முதலானவற்றை அறியக்கூடும். ஆகவே ஸ்மரணையை உபாசி.

உ. ஸ்மரணையை விடப் பெரியது எது? என நாரதர் கேட்க, சனத்குமாரர் சொல்லுகிறார்.

கண்டம் கச.

ஸ்மரணத்தைக்காட்டிலும் இச்சை பெரிது. இச்சையினாலேயே ஒன்றை ஸ்மரணஞ்செய்கிறான். வேதங்களை அத்தியயனஞ்செய்கிறான்.

கர்மங்களை நடத்துகிறான். புத்திராதிகளைப் பெறுகிறான். உலகங்களை அநுபவிக்கிறான். ஆகவே இச்சையை உபாசி.

௨. இச்சையைவிடப் பெரியது எது? என நாரதர் கேட்கச் சனத்குமாரர் சொல்லுகிறார்.

கண்டம் ௧௫

இச்சையைக்காட்டிலும் பிராணன் பெரிது. ஒருவண்டியின் சக்கரத்திலுள்ள குடத்திற்கு ஆரங்கள் எங்ஙனம் கோர்க்கப்பட்டிருக்கிறதோ அங்ஙனமே இச்சை முதலிய சகலமும் பாய்ந்திருக்கின்றன. பிராணன் (மற்றவைகளை நோக்க) சுதந்திரன். பிராணன்போகிறது வருகிறது. தாய் தந்தையர்களும் பிராணனே.

௨. தாய் தந்தையர்களை அவமரியாதையாகப் பேசின் பிராணனை உலகத்தினர் வைவர்.

௩. பிராணன் நீங்கின் தேகத்தை யெரித்து விடுவர். இக்காரியத்தை யாரும் தோஷமாகக் கொள்ளுகிறதில்லை.

௪. பிராணனே எல்லாமாயிருக்கிறது பிராணனே பெரிதென்று பார்த்து எண்ணி அறிந்து அநுபவிக்கிறானோ அவனே அதிவாதி*.

கண்டம் ௧௬.

இவ்வதிவாதியும் நாமாதியை விரும்பி அதிவாதியே ஒழிய பரமார்த்தப்படி யன்று. எவன் சத்தியனோ அவனே பிரமஞானி, பிரமவித்து.

நாரதர்-என்னைச் சத்தியவாதியான அதிவாதியாக ஆக்கவேண்டும்.

சனத்குமாரர்-சத்தியமென்னவென வறியவேண்டும்.

நாரதர்-அச்சத்தியத்துண்மை தங்களிடமே யறிய விரும்புகிறேன்.

கண்டம் ௧௭.

சனத்குமாரர்-விஞ்ஞானமெப்போது ஏற்படுமோ அப்போது சத்தியம் விளங்கும்.

---

* அதிவாதி என்பவன் ஆகாயாதிகளைக்காட்டிலும் பிராணன் உயர்ந்தவனென்று எண்ணுகிறவன்.



நாரதர்-விஞ்ஞானம் தங்களிட மிருந்தறிய விரும்புகிறேன்.

கண்டம் ௧௮.

சனத்குமாரர்-விஞ்ஞானம் மதியைக்கொண்டு ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

நாரதர்-மதியை அறிய விரும்புகிறேன்.

கண்டம் ௧௯.

சனத்குமாரர்-மதிக்குக் காரணம் சிரத்தை. சிரத்தையிருந்தால் தான் மனனஞ்செய்ய வேற்படும்.

நாரதர்-சிரத்தையை அறிய விரும்புகிறேன்.

கண்டம் ௨0.

சனத்குமாரர்-சிரத்தைக்கு ஏதுவாயுள்ள நிஷ்டை புரியவேண்டும்.

நாரதர்-நிஷ்டையை யறிய விரும்புகிறேன்.

கண்டம் ௨௧.

சனத்குமாரர்-நிஷ்டைக்கு ஏதுவாகப் பஞ்சேந்திரியங்களைப் பகிர்முகத்தில் விடாமல் அந்தர் முகமாக அடக்கும் கிருதிவேண்டும்.

நாரதர்-கிருதியை யறிய விரும்புகிறேன்.

மணவழகு.

நீதி.

பிதா ரட்சதி கௌமாரே
பர்த்தா ரட்சதி யவ்வனே
புத்ரோ ரட்சதி வார்த்தக்யே
நஸ்திரீ ஸ்வாதந்திரிய மாஹதி.

ஸ்திரீகளை இளமையில் மாதா பிதாக்களும், யௌவனத்தில் கணவனும் முதுமையில் புத்திரனும் காப்பாற்றுகிறபடியால், ஸ்திரீகளுக்கு எப்போதும் ஸ்வாதந்திரிய மென்பது கிடையாது.

---

சிவஞானபோதச் சிற்றுரைவிளக்கம் விலை ரூபா ௩—௪—0.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சமயம்.

தொகுதி - 7 - பகுதி 5 - பக்கம் - 100 - தொடர்ச்சி.

அதன் பின்னர், அங்ஙனம் சார்ந்ததன் வண்ணமாய் விளங்குகிற்கும் படிகம்போல இந்திரியங்களின் வண்ணமாய் விளங்குகிற்கும் நீ சித்தாய் வியாபகமாயிருக்கும் தன்மையுடையாய். எங்ஙனமெனின்:-சாக்கிராவஸ்தையில் இருக்கும்போது உன்னறிவானது கண் முதலிய பஞ்சேந்திரியங்களோடு கூடினால் காண்டல் கேட்டல் முதலிய செயல்களை யுடையனவாய் இருக்கின்றனவே அன்றி, சுழுத்தி அவஸ்தையில் இருக்கும்போது அக்கண் முதலிய இந்திரியங்கள் காண்டல் முதலிய செயல்களைச் செய்கின்றனவா? இல்லை. ஆகலான் அவ்விந்திரியங்களைச் சடமென்றும், அவ்விந்திரியங்களின்வழி உழல்கின்ற உன்னறிவைச் சித்தென்றும் அறிவாய்.

அஃதேபோல் கண் என்னும் இந்திரியம் காண்டல் ஒன்றேயன்றிக் கேட்டல், உண்டல், உயிர்த்தல், உற்றல் என்னும் ஐந்தொழிலையும் செய்கின்றனவா? இல்லை. அஃதேபோல் ஐந்து இந்திரியங்களும் தனித்தனி ஒவ்வொன்றை மாத்திரம் அறியுந் தன்மையுடையன. ஆகலான் அவ்விந்திரியங்கள் ஏகதேச அறிவினை உடையன என்றும், உன் அறிவு கண்டறிய வேண்டியவற்றைக் கண்ணாலும், கேட்டறியவேண்டியவற்றைக் காதாலும், உண்டறியவற்றை நாவாலும், உற்றறியவேண்டியவற்றை உடம்பாலும், உயிர்த்து அறியவேண்டியவற்றை நாசியினாலும் அறிகின்றன. ஆகலான் உன்னறிவு வியாபக அறிவு என்றும் அறிவாய்.

இனி வியாபக அறிவுடைய சித்தாகிய உனக்கு அவ்விந்திரியங்களான் ஆகக்கடவது ஒன்றின்மையான் உன்னை அவ்விந்திரியங்களுக்கு வேறு என்றறிவாய்.

தாயுமான சுவாமி பாடல் மெய்கண்ட விருத்தியுரை ரூபா 3—8—0



இனி இந்திரியங்கள் சடமென்றும், உன்னைச் சித்தென்றும், அவைகள் ஏகதேச அறிவுடையன என்றும், நீ வியாபக அறிவுடையை என்றும் நீயே அறிந்தாயில்லை. இப்போது சிவசத்தாகிய நாம் உணர்த்த நீ உணர்ந்தனை. ஆகலின் உனக்கு ஆதாரமாய் இருப்பது நாம் என்று அறிவாய், ஒன்றுணர்த்துவதே சிவசத்தினியல்பு.

இங்ஙனம் அசத்தின் இயல்பும், சிவசத்தின் இயல்பும் உணர்த்திய பின்னர், உன்னறிவுக்கும் வேறாகக்கண்ட இந்திரியங்களோடு ஒற்றித்து விடயானந்தானுபவத்தில் இன்புற்றிருந்ததுபோல் இனி உன் அறிவுக்கு ஆதாரமாகக்கண்ட சிவசத்தியோடு ஒற்றித்து நின்று சிவானந்தானுபவத்தில் இன்புற்று வாழ்வாய் என்று வாழச்செய்தலாம்.

(௯) ஆனந்தம் பொழிதலாவது:—(ஊசலானது கயிறற்றால் அவ்வூசலுக்குப் பூமி ஆதாரமாய் நிற்பதுபோல) அசத்தாயுள்ள பிரபஞ்சத்தை அசத்தென்றும், ஆன்மாவாகிய தன்னை அவற்றிற்கு வேறென்றும் ஆசிரியன் உணர்த்த அங்ஙனம் உணர்ந்த வழி உணர்த்திய ஞானசொரூபமாகிய பதியே தனக்கு ஆதாரமென அந்த ஞானசொரூபத்தில் நிலைபெற்று அவனது உபகாரத்தை நினைந்து நினைந்து கசிந்து நிற்ப-(கருடோஹம் பாவனை செய்யும் மாந்திரீகனுக்குக் கருடன் அவனுக்கு வேறுதலின்றி அவனிடத்தில் அத்துவிதமாய்த்தோன்றி விடத்தை நீக்கித் தெளிவு செய்வதுபோல) இவனில் வேறுதலின்றி அத்துவிதமாய்த் தோன்றி இவனிடத்து மலங்கள் வந்து வருந்தாவண்ணம் அவை முழுவதும் நீக்கிச் சிவானந்தத்தில் அழுந்தி நிற்கச்செய்தலாம்.

(௰) மலங்கழுவி சீவன்முத்தராய் வைத்தலாவது:—ஈண்டும் பரமேஸ்வரன் இவ்வான்மாவாய்நின்ற முறைமையான்-ஆன்மாவினது யான் எனது என்னும் செருக்காகிய அழுக்கை அகற்றி தனது ஸ்ரீபாதத்தை அணைவித்து தன்னிடத்து ஏகனாகி நிற்க வைத்தலேயாம்.

அஃதாவது பெத்தநிலையில் இறைவன் ஆன்மாவினுடனாய் நிற்பினும் அவ்விறைவன் அவ்வான்மாவினின் வேறாகக் காணப்படுமாறின்றி அவ்வான்மாவேயாய் ஒற்றுமைப்பட்டு ஆன்மாவின் வழிநின்ற முறைபோல, இம்முத்திநிலையில் ஆன்மா அம்முதல்வனோடு உடனாய் நின்று அவ்விறைவனை யறியினும் அவ்விறைவனில் தன்னை வேறுகாணாது அவ்விறைவனோடு

திருத்தொண்டர் வெண்பா (திருக்குறளுரைத்தாரார்த்தமுடன்) விலை அணா—1.

ஒற்றுமைப்பட்டு நிற்றலாகிய பணியில் வழுவாது யான் எனது என்னும் செருக்கற்று ஏகனாகி நிற்கப்பெறுவன். அங்ஙனம் நிற்கப்பெறின் அவ்விறைவனும் இவன் செய்யும் இதம் அகிதங்களெல்லாம் தான் செய்யும் இதம் அகிதங்களென உடனாய் நின்று ஏற்றுக்கொள்வன்.

அங்ஙனம் ஏற்றுக்கொள்வதனால் ஆகாமிய கன்மத்தினால் ஆர்ஜிக்கப்படும் ஆர்ஜிப்பும், பிரார்த்தானுபவத்தால் அனுபவிக்கப்படும் சுக துக்க ரூபமாகிய பிரார்த்தானுபவமும் அவனைப் பாதிக்காமலும் வேதிக்காமலும் ஒழியும். அங்ஙனம் ஒழியவே ஏனைச்சஞ்சித வினையும் மாயையும் ஆணவமும் ஆகிய குற்றங்கள் மூன்றும் இவனைப் பந்திக்கமாட்டாவாய் விட்டொழியும். அவை விட்டொழியவே அவன் சீவன் முத்தனாகவே நிற்கப்பெறுதலாமென்க.

(௫) ஆண்டுவரும் பிறப்பை அறுத்தலாவது.—இறைவன் காட்டும் உபகாரத்தையேயன்றிக் காணும் உபகாரத்தையும் உடையவனென்று உணர்ந்து அவனோடு ஏகனாகி நிற்பதாகிய சீவன் முத்தி நிலை கூடப்பெற்ற இப்பிறப்பின்கண்ணே பிறப்பொழிந்த பின்னர் கூடும் பரமுத்தி அனுபவமாகிய சிவானுபவத்தைக் கூட்டுதலால் பிறப்பறுத்தலாயிற்றென்க.

அஃதாவது பரமுத்தியின்கண் அனுபவிக்கப்படுவதாகிய சிவானுபவத்தை நிகழ்விப்பதாகிய இச்சையைக் கொண்டு இறைவனை இப்பிறப்பில் மறவாது, ஏத்துதலின் இப்பிறப்பினியல் ஒழிந்ததாயிற்றென்க.

எனவே கண்ணானது ஓர் உருவத்தைக் காண்பதில்லை. வேறு எப்படி காண்பதெனின்:-உயிர் அறிவானது ஓர் உருவத்தை இன்னதென்று தானே உணர்ந்து காட்டப் பின் காணுந்தன்மை யுடையது. அங்ஙனங் காணுந் தன்மையும் எவ்வாறெனின்:-கண்ணாற் காணவேண்டிய பொருளை உயிர் அக்கண்ணுடனாய் நின்று அப்பொருள் இன்னதெனக் கண்ணுக்குக் காட்டப் பின் கண் காணத்தொடங்கும். அங்ஙனங் காணுங்கால் அவ்வுயிர் கண்ணொளியோடுங் கலந்து அவ்வுருவத்தைக் காணுதலும் செய்யும். காட்டும் உபகாரம், காணும் உபகாரமாகிய இவ்விரண்டும் உயிர்க்குத் தானே உளதானதன்று. மற்றென்னெனின் அவ்வுயிரினுள் இருக்கும் ஈசன் உயிர் விடயத்தை அறியும்படி அவ்வுயிரினுள் உடனின்று அறிவிக்க அவ்வுயிர் அறிகின்றது. பின்னர் ஈசன் அங்ஙனம் அறிவித்தல் மாத்திரையேயன்றி அவ்வுயிர் உணர்வோடு கூட அத்துவிதமாய்ச் சென்று அறிதலுஞ்செய்து உபகரித்து வருகின்றான்.



இங்ஙனம் இறைவன் உயிருடன் அத்துவிதமாய் நின்று உபகரித்து வரும் முறைமையைக் கடைப்பிடித்து அதனை உயிர் அறிந்து கொண்டு நிற்ப, அத்தொடர்பு பற்றிய அம்முதல்வன் பின்னர் அவ்வுயிர் தனது திருவடிகளைத் தலைப்படுத்தற்கண் இச்சையை இடையறாது நிகழும் வண்ணம் செய்வன். அங்ஙனம்செய்யவே அவ்வறிவிச்சைகள் இரண்டும் பிறிதொன்றிற் சேருதலின்றி முதல்வன் திருவடியின் இடத்தனவாய் அதனை விட்டுப் பிரியாது நிகழும். அங்ஙனம் நிகழவே சரீரம் ஒழிந்தபின் மலம் நீங்கிச் சுத்தனாய் நிற்கு முறைமையாகிய அது இப்பொழுது உடம்போடு கூடியிருக்கும்பொழுதே வந்து கூடப்பெறுவன. அங்ஙனம் கூடப்பெறுதலால் எல்லா மலங்களையும் இப்பிறப்பிலேயே நீத்தொழிந்து அவ்வறிவிச்சைகளோடு அம்முதல்வனது திருவடிகளைத் தலைக்கூடப்பெற்று அந்நிலையினின்றும் மாறுபடாத சிவானுபூதியே சுவானுபூதியாகக்கொண்டு வாழ்தலே யாம்.

(௬) * முத்தாந்தப் பாதமலர்க்கீழ் வைத்தலாவது -சீவன் முத்தர்கள் தமது அறிவு இச்சை செயல்கள் மும்மலங்களின் வழி மயங்காது இறைவன் அருள் வசப்பட்டு அந்நிலையில் நின்று அனுபவிப்பதாகிய சிவானுபூதியாகிய தமது அனுபவமாக வாழும் இயல்புடையராகலான் அவ்வனுபவ முதிர்ச்சியான் அவர்களுக்கு அருள்மேலிட அம்மேலீட்டான் சீவன் முத்தியின் அந்தமாகிய பரமுத்தி அனுபவம் கூடுதற்கிடமாகிய அன்பரிடத்தும், திருவேடத்தினிடத்தும், ஆலயத்தினிடத்தும் நீங்காத அன்பினை வைத்து வாழ்தலாமென்க.

எனவே காமுகனாவான் ஒருவன் ஒரு ஸ்திரீயினிடத்து அன்புடையவன் என்றால் அவளது சுற்றத்தாரையும், அவளது வேடத்தையும், அவளது உருவத்தையும் காண்பானாயின் உண்டாகும் அன்பினளவுபற்றியே தெளியப்படும். அதுபோல சிவானுபவத்தையே தமது அனுபவமாக வுடையவர் என்றால் சிவானுபவச் செல்வர்களாகிய அன்பரிடத்துத் தமது அறிவும், திருவேடமுடையாரிடத்து இச்சையும், திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் சிவலிங்க வுருவத்தினிடத்து செயலையும் வியாபரிக்கச்செய்வர். செய்யவே அதனால் சீவன் முத்தர்க்கு அறிவிச்சை செயல்கள் ஏனைய விடயங்களிற் செல்லா தொழிந்தன என்பது திண்ணம்.

---

* முத்தாந்தம் எனவே பரமுத்திக்குமேல் முத்தி இல்லை என்பது பெற்றாம்.

அல்லதூஉம், செல்வப்பெருக்கம் உடையார்க்கு உண்டாகிய ஆண்பால் உடம்பு நோயின்றி வளரச்செய்யும் மருந்தும் ஆதல்போல அம்மூன்றிடத்தும் வழிபடுவதாகிய இவ்வழிபாடு மலவாசனை சிறிதுந் தாக்குதலின்றிச் சிவானந்தம் மேன்மேல் வளரச்செய்யும் சாதனமாதலும் உடைமையின் இவ்வழிபாட்டை விடாமற் கைக்கொண்டு பரமுத்தியனுபவமாகிய சிவானந்தத்தில் நீங்காது வாழ்வரென்பதாம்.

இனி, "உலகர் எலாம் மூர்க்கராகிப் பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பாவப் பெருங்குழியில் வீழ்ந்திடுவர் இது என்ன பிராந்தே" என்றது என்னையோவெனின்:—

இத்திருவிருத்தத்தில் சித்தாந்தம், முத்தாந்தம், பித்தாந்தம் என மூன்றந்தங் கூறப்பட்டுளது. இம்மூன்றந்தமும் பெத்தாந்தமாயிருக்கின்ற ஆன்மாக்களை நோக்கியே யாம்.

எனவே ஆணவாதி மூவகைப்பாசத்துள் மாயா பாசத்துக்கு எல்லையாயிருக்கின்ற பிறவிக்கு அந்தமா (முடிவான எல்லையா)யிருப்பது எண்பத்து நான்கு லக்ஷம் பேதமாயுள்ள எழுவகைப் பிறவிக் கடல்களே யாம். அப்பிறவிகளைத் தங்கட்கு எல்லையாகக்கொண்டு அதை விட்டு நீங்கும் கரை காணாது அதனுள்ளே யிருப்பவர்களாகிய ஆன்மாக்களை நோக்கியேயாம்.

இனி முத்தாந்தப் பாதம் எனவே எழுவகைப் பிறவிக் கடலுக்கும் அந்தம் (கரை யாயுள்ளது முத்தி அந்த முத்தாந்தமாகிய முத்திக்கரையில் ஆன்மாக்களைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் புணையாயுள்ளது இறைவனது பாதம் என்க.

இனி சித்தாந்தம் எனவே "மறையினால் அயனால் மாலால மனத்தினால் வாக்கால் மற்றுங் குறைவிலா அளவினாலும் கூறொணா தாகிநின்ற" இறைவனது பாதத்தைக் காட்டவல்ல ஆகமநூலே சித்தாந்தம் என்னும் பெயருடைத்தென்க.

அஃதாவது சித்தாந்த சைவமொழிந்த ஏனைச்சமயிகள் தத்துவமது சித்தா(அறிவா)ல் கூறப்படும் முடிவுரைகளை அந்தப்படுத்தும் (அடக்கும் அஃதாவது பூர்வபக்ஷமாக்கும் முடிவுரை என்க. இதனை சிவஞான சித்தியார்-அ-ம்-சூத்திரம்-செய்யுள்-கரு-ல் சிவாகமங்கள் சித்தாந்தமாகும் என்று கூறியவாற்றானறிக.

மணவழகு சரித்திரம் (படத்துடன்) விலை அணா—৳.



இனி, பித்தாந்தம் எனவே "இறைவன் அடிசேர்ந்தார் பிறவிப் பெருங்கடல் நீந்துவர், இறைவன் அடிசேராதார் நீந்தார்" எனவும் "கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழார் எனின்" எனவும் கூறிய உபதேசமொழிகளை நுனித்துணரும் உணர்வினால் தெள்ளிதின் உணர்ந்து பெத்தாந்தமாயிருக்கின்ற பிறவிக்கடலுக்குக் கரையாகிய முத்தாந்தத்தைச் சேருதற்குப் புணையாயுள்ள இறைவனது பாதத்தைச் சேருதற்கு வேண்டும் முடிபுரைகளைச் சித்தாந்தம் இனிதாக எடுத்துக்கூற அதனைத் தெளியமாட்டாது தத்தமக்கு வேண்டியவாறெல்லாம் தூரபிமானங்கொண்டு பித்தமுடிவாகிய பித்துரைகளைப் பிதற்றும் பித்துரைகளாகிய சமயவுரைகளாமென்க.

சைவ சமயிகளே! சித்தாந்தத்திற்கூறும் சித்தாந்த வுரைகளன்றி ஏனையரது வுரைகளைப் பித்துரைகளெனவும், பாவப்பெருங்குழியில் வீழ்த்தும் பாவ வுரைகளெனவும் கண்டு ஒழுகுவீர்களாக.

(இன்னும் வரும்.)

கா. வ. ஆலாலசுந்தரம் பிள்ளை,
சித்தாந்தபோத ரத்னாகரம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அருளிலக்கணத்தின் ஓர் பகுதி.

———:0:———

**தொகுதி - எ - பகுதி - ரு - பக்கம் - ககஅ - தொடர்ச்சி.**

ஆகவே பற்றுவது இன்பமே ஆயினும், ஒருவன் கொள்வது காமம். அவன் பெயர் காமி, அவன் நோக்கம் ஊன் நோக்கம். அவன் இன்பம் மிருக சுபாவ இன்பம். அவன் வாழ்வு இம்மை இன்பவாழ்வு. மற்றொருவர் கொள்வது காதல், இவர் பெயர் காதலர், இவர் நோக்கம் உணர்ச்சி நோக்கம். இவர் இன்பம் மனித சுபாவ இன்பம். இவர் வாழ்வு மறுமை இன்ப வாழ்வு.

செய்யுளிலக்கணம் விலை அணா 8.

இன்னோர் உலக நடையை ஒட்டி ஒழுகுவார். இவர்களினும் மேம்பட்டோர் நாட்டார் நகைசெய்வதைக் கவனிக்கமாட்டார்கள். பிறர் மதிப்பு அறியார். இவர்கள் பெயர் அருளாளர். இவர்கள் நோக்கம் அருள் நோக்கம். இவர்கள் இன்பம் கடவுள் சுபாவ இன்பம். இவர்கள் வாழ்வு பேரின்ப வாழ்வு. ஊன்முகப்பார்வை விட்டவர்கள் உண்முகப் பார்வை கொண்டவர் காலங்கடந்த பெரியாரவர்கள். செயற்கரிய செய்தவர்கள். "சிந்தை பரங்கொள நின்றவர்கள்" "உள்நிறை காதலோடும் ஒழுகுவர்" "புண்ணியப் பொருளாயுள்ளவர்" "முடிவிலா இன்பமான அன்பினை எடுத்துக்காட்டியவர்" "அன்பு பிழம்பாய்த்திரிவர்" கடவுளை "யல்லால் அறிவுருமொழி" யுடையவர். செந்நின்ற மனப்பெரியோர். "அலகில் கலையின் பொருட்கு எல்லை ஆடுங்கழலே" எனத்தெளிந்த சிந்தையர். சிறுநெறிகள் சேராமே திருவருளே சேர்ந்தவர். வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியன் தடக்கையின் நெல்லிக்கனி எனக்கு ஆயினன் என்று அனுபவிப்பர். இன்பப்பெருமான் தயாவான தத்துவன் அன்பருக்கன்பன். தானேயாகிய தயாபரன். பக்திவலையிற் படுவோன். உரை உணர்வு இறந்த ஒருவன். ஊனை நாடகம் ஆடுவித்தவன். கரம் குவிவார் உள்மகிழும் கோன். சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன். தாயிற்சிறந்த தயாவான தத்துவன். இன்ப ஊர்தி ஊற்றிருந்து உள்ளங்களிப்போன். ஏழை பங்காளன். விழுத்தொண்டர்க்கல்லால் தொடர்க்கரியவன். அன்பர்க்கு மெய்யான். தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அவரினும் அன்பன். சிந்தையே கோயில்கொண்ட எம்பெருமான்.

சித்தம் அழகியார். கண்ணுக்கினியார் நித்த மணாளர் நிரம்ப அழகியர். ஆகிய இவர் தொன்மைக் கோலமே கண்டுகளித்து சிரிப்பார் களிப்பார் திரண்டுதிரண்டு அவன் திருவார்த்தை விரிப்பர் கேட்பார் மெச்சுவர்.

கங்கைச் சடை அழகும் திங்கட்கொழுந்தின் திருவழகும் கொன்றை மலர்த்தார் அழகும், தேர்ந்தவர்க்கும் நோக்கரிய நோக்கழகும் நன்னுதலில் பொட்டழகும் திரிபுண்டரத்தின் அழகும் தன் எழிலைக்கண்டவர்பால் அருள் ஊற்றுகின்ற கண் அழகும் நல்லவரை வாவென்றருளு மலர்வாயழகும் சங்கக்குழை அழகும் அன்பர்மொழித் தேன்பரவும் வள்ளைச்செவி அழகும், சைவ முதலாய்த் தழைக்க அருள்சுரக்கும் திருமுகத்தின் அழகும் உள்ளங்குளிர உயிர்குளிர மெய்குளிரக் கொள்ளும் கருணைக்குறிப்பழகும்

சைவசமயப்பிரமாணம் விலை அணா—12.



அமுதச்சிரிப்பழகும், அருளின் திறத்துக்கு இலச்சினையாம் நீலமணிமிடற்றின் அழகும் அன்பர் மனம்போலும் வெண்ணீறு விளங்கும் தோள் அழகும் அண்டமெலாஞ் சத்தம் உறக்கூவும் ஒருமானேந்தும் செங்கை அழகும் ஆணவத்தின் கூற்றை அழிக்க ஒளிர்மழுவேந்தும் கை அழகும், அடியர் அச்சம் தீர்க்கும் அபயமலர் அழகும், அரவப்பூண், வெண்பொடி, என்பு மாலை மேவும் மார்பு அழகும், புலித்தோல் உடை அழகும், அன்பர் உள்ளம் கவரும் கழலழகும், செம்மைமணி மலையைச் சேர்ந்த மரகதம் போல் அம்மை ஒருபால் வாழ்ந்தருளழகும் பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப் பக்கநின்று கேட்டாலும் பரிந்து உள்உணர்ந்தாலும் ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டி அணைத்தாலும் இத்தனைக்கும் தித்திக்கும். இத்தொன்மைக் கோலத்தை நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழுங் கண்ணீரதனால் உடம்பு நனைந்து நனைந்து கடவுளின் பெருமையைச் சாற்றிட நினைத்திட மதித்திடச் சார்கின்றதோறும் வாயெலாம் தித்திக்கும் மனமெலாம் தித்திக்கும் மதியெலாம் தித்திக்கும் மெய்யறிவெலாம் தித்திக்கும். அலகில் சோதியான் அம்பலத்தாடுவான் கழல்பேணுவர்.

"விண்ணெலாங் கலந்த வெளியில் ஆனந்தம்
விளைந்தது விளைந்தது மனனே
கண்ணெலாங் களிக்கக் காணலாம் பொதுவிற்
கடவுளே யென்றுநங் கருத்தில்
எண்ணலாம் எண்ணி எழுதலாம் எழுதி
ஏத்தலாம் எடுத்தெடுத் துவந்தே
உண்ணலாம் விழைந்தார்க்கு உதவலாம் உலகில்
ஓங்கலாம் ஓங்கலாம் இனியே."

(இன்னும் வரும்.)

மோ. கந்தசாமி முதலியார். B. A.

பகவத்கீதார்த்த பங்கம் விலை அணா—1.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவோஹம் பாவனை.*

## முன்னுரை.

அன்பர்காள்!

இப்பூமியின்கண்ணே இந்த யுகத்திலே இப்போது ஐரோப்பாவில் நடக்கும் பெரிய யுத்தம்போல் வேறொரு யுத்தம் நடக்கவில்லை. இப்போ யாவர் வாக்கிலும் இந்த யுத்தத்தைப் பற்றிய விசாரமும் பேச்சுமாகவேயிருக்கிறது. ஆயினும் ஆன்மகோடிகளெல்லாம் தத்தம் புலன் முதலிய தத்துவக்கூட்டங்களுடன் நித்தமுஞ்செய்யும் பிரபஞ்சப் போரைப்பற்றி உலகத்தார் அவ்வளவு விமரிசையாய்ப் பேசுவதில்லை. இதற்கு நியாயம் ஒரு கட்சி மற்றக்கட்சிக்குள் ளடங்கித் தமது போரை மும்முரமாய் நடத்தாது, வாளாவிருத்தலாலாம். ஐம்புலன்கள் அகங்காரம் முதலியனவே வெற்றியோடு விளங்கி நெடிது நிற்பதாலாம். இந்தப் பிரபஞ்சப் போரிற் பிரயோகிக்கவேண்டிய பிரதானமான ஆயுதம் ஞானம் என்னும் வாள். முரசப்பறை பிரணவம் சிரசைக்காக்கும் தொப்பி இளம்பிறை கவசம் அல்லது சட்டைவிழுதி. சத்துராதிகள் மாயப்படை

"ஞானவாளேந்துமையர் நாதப்பறை யறைமின்
மானமாவேறுமையர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற்றுக் கவசமடையப் புகுமின்கள்
வானநாடாள்வோநாம் மாயப்படைவா ராமே."—திருவாசகம்

இப்போரிலுள்ள சேனைகாருட வியூகமாய் வகுக்கப்பட்டது தொண்டர்கள் அக்கருடனது அலகுஆகிய தூசிப்படை அல்லது முன்னணியாயும் பத்தர்கள் இருசெட்டைகளாகிய சூழணியாயும் யோகிகள் மார்பு உதரமாகிய பேரணியாயும் சித்தர்கள் வாலாகிய கடைக்கூழைப்படையாயும் உளர். இதனால் தொண்டர்கள் மகாவீரரும் சித்தர்கள் வீரமில்லாதப்படையும் ஆகிறார்கள்.

"தொண்டர்காள் தூசிசெல்லிர் பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்டிறல் யோகிகளே பேரணியுந் தீர்கள்
திண்டிறற் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள்
அண்டர்நா டாள்வோநா மல்லற்படைவா ராமே."—திருவாசகம்

இப்போரின் நோக்கம் புலன் அகங்காரம், காம குரோத லோப மத மார்ச்சரியம் முதலிய சத்துராதிகளால் உண்டாகும் பிறவிப்பிணியென்னும் சிறைத்தனத்தை நீக்கிச் சுயாதீனமென்னும் முத்தியைப் பெறுதலாம்.

இந்தப் போர்த்தொழில் வித்தைக்குரிய நூல் யாதோவெனின் இறைவனாலருளப்பட்ட வேதாகமங்களாம் இவற்றை முழுச்சேனையுங் கற்கமுடியாத படியால் சேனாதிபதிகளாகிய சமயாச்சாரிகள் முதலியோர் கற்றிருந்துசெய்யுங் கட்டளைகளாகிய போதனைகளுக்கு அமைந்து மற்றையோர் நடந்தால் வெற்றியடைவது திண்ணமாம்.

போர் வித்தை கற்று யுத்தப்பயிற்சி யில்லாதவன் சேனாபதியாயிருந்து ஒரு போரைச் சரிவர நடத்தி முடிக்க இயலாது, படிப்படியே யுத்தப் பயிற்சிசெய்து வரவேண்டியவனாயிருக்கிறான். அதுபோல மேற்படி நூல்கள் போதிப்பது, சரியை கிரியை யோகம் பயிற்சிசெய்து ஞானசாதனஞ் செய்யவேண்டுமாம். இவற்றை முற்பிறப்பிலேனும் பயின்றவர்க்கே ஞானசாதனஞ் சித்தித்து முத்தியுண்டாம். பிறவிப்பிணியுண்டென்பது அளவையா னறியற்பாலது.

### அளவை.

யாம் ஒன்றை அறிவது காட்சி மூலமாய் அல்லது அனுமானம் மூலமாய் அல்லது ஆப்தர்வாக்கியம் மூலமாயாம். புகையைக்கண்டு புகையிங் குண்டு என்று அறிவது காட்சிப்பிரமாணத்தாலாம். புகையை மாத்திரங் கண்டு அக்கினி தோற்றாவிடினும் ஆங்கு அக்கினியுண்டென்றறிவது அனுமானப்பிரமாணத்தாலாம். அக்கினியில் நெய் முதலியனசொரிந்து மந்திர சகிதமாய் ஆகுதி செய்தால் பிதிருக்கும் பிரீதியுண்டாகுமென்றறிதல் ஆப்தர் வாக்கியத்தாலாம்.

* யாழ்ப்பாணம் சைவசித்தாந்த மஹாசமாஜத்தின் 14-ம் வருடக்கூட்டத்தில் (1918 வைகாசி 4) பிறக்தர் (ஹைகோட் வக்கீல்) ஸ்ரீ ந. சிவக்கொழுந்து அவர்கள் செய்த உபந்நியாசம்.



Sivajnana Siddhiyar Rs. 3—0—0.

## பிறப்பு அநேகம்.

நாம் அநேகம் பிறப்புப்பிறந்து வந்திருக்கின்றோம் இது பெரும்பான்மையும் ஆப்தர் வாக்கியங்களாலும் சிறுபான்மை அநுமானத்தாலும் அறியக்கிடப்பது. ஒரே வகுப்பான ஜீவர்களில் வெளிப்படையான காரணமின்றி உயர்வு தாழ்வு சுகதுக்காதிகள் தோன்றுவதாலும் கன்மானுபவம் அழியாது என்னும் தத்துவத்தாலும் புனர்ஜன்ம உண்மை அனுமானத்தாலறியப்படும்.

ஆப்தர் வாக்கியம் அநேகம் உண்டு. அவற்றிற் சில வருமாறு:—

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்
செல்லாஅ நின்ற வித்தாவர சங்கமத்துள்
எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன்"— திருவாசகம்

"துறக்கப்படாத உடலைத்துறந்துவெந் தூதுவரோடிறப்பன், இறந்தாலிருவிசும்பேறுவ னேறிவந்து பிறப்பன் பிறந்தாற் பிறையணிவார் சடைப் பிஞ்ஞகன்பேர், மறப்பன் கொலோ வென்றெனுள்ளங் கிடந்து மறுகிடுமே." (இது பஞ்சாக்னி வித்தையுங் குறிக்குமாறு காண்க)

(அப்பர் சுவாமிகள்)

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா நின்னடி யென்மனத்தே
வழுவாதிருக்க வரந்தர வேண்டும்" (அப்பர் சுவாமிகள்)

"அன்னையெத்தனை யெத்தனை யன்னையோ
அப்பனெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னையெத்தனை யெத்தனை பிள்ளையோ
பெண்டிரெத்தனை யெத்தனை பெண்டிரோ"

(திருவெண்காடர்)

"பெற்றனுத்தாள் தாயார் பிறந்தனுத்தேன் யானும்"—திருவெண்காடர்

"உறங்குவதுபோலுஞ் சக்கா டுறங்கிவிழிப்பதுபோலும் பிறப்பு"

(திருக்குறள்)

Studies in Saiva Siddhanta Rs. 3—0—0.



"அவாவென்ப தெல்லார்க்கு மெஞ்ஞான்றுந் தவாஅ ப்பிறப்பீனும்வித்து"

(திருக்குறள்)

"வெஹூனிமே வியதீதானி ஜன்மானி தவ சார்ஜுன
தான்யஹம்வேத சர்வாணி நத்வம் வேத்தபரந்தப"—கீதை.

நானும் நீயும் அநேகம் பிறப்புப் பிறந்திருக்கின்றோம் நீயறியாய் யானறிவேன்.

"முடியாப்பிறவிக் கடலுட்புகார்" (அருணகிரிநாதர்)

"எண்ணரிய பிறவிகளில் மானுடப்பிறவியே யாதினுமரிதரிதுகாண்
இப்பிறவி தப்பினால் எப்பிறவிவாய்க்குமோ யாதுவருமோ அறிகிலேன்"

(தாயுமானவர்)

"மலத்துளதாம்" ... ... (சிவஞானபோதம்)

"நரத்வம் தேவத்வம் நகவன மிருகத்வம் மஸகதா பசுத்வம்
கீடத்வம் பவது விஹகத்வாதி ஜனனம்" (சங்கராச்சாரியர்)

முற்பிறப்பிருந்தாற் றெரியுமே என்பார்க்கு இப்பிறப்பிற் கருப்பாசயத்திலும் ஓராண்டுப்பிராயத்திலும் நடந்தவை தெரியுமோ எனக்கேட்டு அவர் சந்தேகம் தெளிவிக்கலாம்.

## அப்படிப்பிறக்கும் உயிரின் சொருபலக்கணம்.

உயிர் சார்ந்ததன் வண்ணமானது. பளிங்குபோன்றது. "பளிங்கு போன்றதுன் றன்மையத்தன்மையா லுடல் பலவெடுத் துழன்றாய்"

(திருவாதவூரர் புராணம்)

உயிரானது சிவத்தையுமறியக்கூடும் பிரபஞ்சத்தையும் அறியக்கூடும்.

"சத்தேயறியாத சத்திலதறியா திருதிறனறிவுள திரண்டலா வான்மா"

(சிவஞானபோதம்)

ஆகையால் உள்ளத்திற் பிரபஞ்சத்தைவைத்தாற் பிரபஞ்சமயமாகவும் சிவத்தைவைத்தால் சிவமயமாகவும் வருகிறது அவ்வுயிர். ஐரோப்பியரும் இவ்வுண்மையைக் கைக்கொள்ளுகிறார்கள். எவன் என்ன என்ன நினைத்து வருகிறானோ அவன் அது அது வாகிறான். உன் நண்பன் யாரென உரை நீ எப்படிப்பட்ட நீ யென யானுரைப்பேன் என்பதும் இதுவே. பிரபஞ்

சத்தொகுதி பிறப்பிறப்புக்குட்பட்டது சிவம் பிறப்பிறப்புக்குட்படாதது ஆகையால் சிவமான சீவனுக்குப் பிறப்பு வாராது. சிவமாவது எப்படியெனில்:

## சிவோஹம்பாவனை

யாலாம். இப்பிறவித் துன்பத்தை நீக்குவதற்குச்சிவத்தை உள்ளத்தில் வைக்கச் சிவத்துக்கு உருவம் வேண்டப்படும். ஆன்மாவி னன்மைக்காக நம்மை இப்படித் தியானஞ்செய்க இதுவே நமதுஉருவம் என்று அந்தச் சிவமே வெளிப்படுத்தியிருக்கின்றார்.

"உருவமிலாறுக் குளதாமுருவம் புனற்கண் பனிக்கட்டியற்று" என உணரற்பாலது. சரியையில் சகளமாய் காயத்தான் மாத்திரமும், கிரியையில் சகளநிஷ்களமாய் காயத்தானும் மனத்தானும், யோகத்தில் நிஷ்களமாய் மனத்தான் மாத்திரமும், இவையெல்லாம் கடவுள் வழிபாட்டுக்காகச் சோபான முறைக்காகக் கொண்ட திருமேனி என உணர்ந்து ஞானத்தில் அறிவுத்தொழின் மாத்திரையால் வழிபடுவதுவே இங்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

உருவத்து நின்ற மனமுறுவ தருவத்துச் சிற்றிலக்கிற் பின் பயில்தலற்று என்பதாலுணர்க.

இனி நாம் எடுத்துக்கொண்ட விஷயம் சிறப்பிலக்கணத்தால் சிவஞானபோதம் சூ-ம சூத்திரத்திருந்து பெறப்படுவது.

"சித்திருசாத்மனி திருஷ்ட்வேசம் தியக்த்வா விருத்திமரீசிகாம்
லப்த்வா சிவபதச்சாயாம் த்யாயேத் பஞ்சாக்ஷரீம் சுதீ:"
எனவருஞ் சூத்திரம்

அதற்கு ஸ்ரீமெய்கண்ட சிவாச்சாரியர் செய்த மொழிபெயர்ப்பு வருமாறு:

"ஊனக்கண் பாசமுணராப்பதியை ஞானக்கண்ணினிற் சிந்தைநாடி
யுராத்துனைத் தேர்த்தெனப் பாசமொருவத் தண்ணிழலாம்
(பதிவிதியெண்ணு மஞ்செழுத்தே."

சித்திர்சா ஆத்மனி திருஷ்ட்வேசம், ஈசனை ஞானக்கண்ணினாற் றன்னிற்கண்டு என்றும் இந்தப் பாகமே சிவோஹம்பாவனையை உணர்த்துகின்றது. சிவ-அஹம்-பாவனா, என்னைச் சிவமாய்ப் பாவித்தல் என்பதாம். இப்படிப் பாவிப்பதன் பயன் யாதோவெனின் மேற்சொன்ன சத்துராதிகள் வலிமைகுன்றிப் பின் காட்டுவார்கள் உயிருக்கு வெற்றியாகும் என்தே. இது அநுபவத்தாலும் அறியக்கிடப்பது.



இதற்குத் திருஷ்டாந்தம் கருடோஹம்பாவனை என்பதும் ஒன்று. கருட அஹம் பாவனா என்னையான் கருடனாக மந்திர தியானத்தாற் பாவிப்பது. ஒருவன் கருட மந்திரத்தோடு தன்னைக் கருடனாகப்பாவித்து வந்த பயிர்ச்சி முதிர்ச்சியினால் விஷத்துக்குப் பார்த்தால் விஷம் உடனே நீங்குவது பிரத்தியக்ஷப்பிரமாணத்தா லறியப்படுவது. இதுபோலவே சிவோஹம்பாவனையால் சீவனைப் பந்தித்திருக்கும் மலத்தை நீக்கிச் சிவத்தை அடைவதாகும். இச்சாதனத்தைப் பற்றி ஆன்றோர் கூறியிருப்பது பல. சிலவற்றை ஈண்டுத் தருவாம்.

"காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி லிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினேனே"

(அப்பர் சுவாமிகள்.)

"உடம்பெனு மனையகத்துள் உள்ளமே தகழியாக
மடம்படு முணர்நெய்யட்டி யுயிரெனுந் திரிமயக்கி
யிடம்படு ஞானத்தீயா லெரியெழ விருந்துநோக்கிற்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே"

(அப்பர் சுவாமிகள்.)

"தந்ததுன் றன்னைக்கொண்ட தென்றன்னைச்சங்கராயார் கொலோ
சதுரர் அந்தமொன்றில்லா ஆநந்தங்கொண்டேன் யாதுநீ பெற்றனை
யென்பார்"—திருவாசகம்

"உயிராவண மிருந்துற்றுநோக்கி யுள்ளக்கிழியி னுருவெழுதி
யுயிராவணஞ் மிட்டுன்கைத் தந்தாலுணரப்படுவாரோ டொட்டிவாழ்தி"

(அப்பர் சுவாமிகள்)

கண்ணனது உயிராற் காட்டப்பட்டு நின்று தன்னையுங்காணாது அதுபோல் முதல்வன் மறைந்துநின்று காட்ட உயிர் தன்னையுங்காணாது முதல்வனையுங் காணாது தன்னிலேயே முதல்வனைக் காணப்பயின்றால் தன்னையுங்கண்டு முதல்வனையுங் காணும்.

Essentials of Hinduism. 3—0—0.

"கள்ளரொடில்லமுடையார் கலத்திடில் வெள்ளவெளியா மென்றுந் தீபர" வென்றற்றொடக்கத்து வாக்கியங்களும் இதைக் குறிப்பன.

"த்யக்த்வா விர்த்திமரீசிகாம்" என்பது மேற்சூத்திரத்தின் மற்றப்பாகம்

இதனை ஸ்ரீமெய்கண்டார் தமது வார்த்திக உரையால் விரித்திருப்பதை உணரவேண்டியது.

"கண்டதை யன்றன்றெனை விட்டுக் கண்டசத்தா
லண்டனையான் மாவிலாய்ந் துணரப்—பண்டணைந்த
வூனத்தைத் தான்விடுமா றுத்தமனி னெண்கருட
சானத்திற் றீர்விடம்போற் றுன்" ... சிவஞானபோதம்

கண்டதை யன்றன்றெனை விடுதல் பின் வருவனற்றால் விளங்கக்கிடப்பது.

"மனோபுத்ய ஹங்கார சித்தானி நாஹம்:
நசசுரோத்ர ஜிஹ்வே ந ச கிராணநேத்ரே:
நசவ்யோம பூமிர்ந தேஜோந வாயு:
சிதாநந்தரூப: சிவோஹம் சிவோஹம்"

(சங்கராச்சாரியர் நிர்வாண ஷட்கம்)

அதன் மொழிபெயர்ப்பு:—

"மனமல்லேன் புத்தியல்லேன் சித்தமல்லேன்
மற்றொ ரகங்காரமல்லேன் மயக்குகின்ற
புனலல்லேன் பூதமல்லேன் பிராணனல்லேன்
பொருந்துமஞ்ச வாய்வல்லேன் சப்ததாது
வைபஞ்சகோச கன்மேந்திரிய மல்லேன்
கடுமோக மதமாச்சரிய லோபமல்லேன்
நலமான நாள்பொருளும் பாபபுண்ய
நானல்லேன் சிதாநந்த சிவமேயானே"

"சுகதுக்க மந்த்ரமொடு தீர்த்தமல்லேன்
சொல்லியதோர் வேதமொடு யாகமல்லேன்
தகவான வுணவுண்போன் உண்பதுவுமல்லேன்
தரியாத மரணபயம் ஜாதிபேதம்
அகலாத அன்னைபிதாப் பந்துஜன்ம
மரியதொரு மித்ரரொடு குருவுஞ்சீஷன்
பகருருவ விகற்பமொடு வீடுபந்த
பாசமலேன் சிதாநந்த சிவமேயானே"



சூத்திரத்தின் கடைப்பாகம் சிவோஹம்பாவனையினால் ஒருநிலைப்பட்ட உள்ளம் பழைய வாசனையால் பிரபஞ்சத்தை மீட்டுஞ்சாராது நிற்கும் பொருட்டுப் பஞ்சாக்ஷர செபம் முறைப்படி செய்யவேண்டும் என்றது. அண்டத்திலுள்ளது பிண்டத்திலுமுள்ளது. ஆகையால் இருதய கமலத்தில் சிவத்தைப் பூசிக்கத் தத்துவமசி முறையாகப் பஞ்சாக்ஷரத்தை வைத்து; கமலமெனில் நாளம் எது இதழ்கள் எவை கேசரம் எது பொகுட்டு எது வித்துக்கள் எவை என்ற வினாக்கள் நிகழ்வனவாகையா லவைக் குத்தரம் வருமாறு: நாளம் உந்தியிலிருந்து எட்டு விரற்கடை நீலமுள்ளது. அந்த நாளத்தில் பஞ்சவிதழ்களும் கன்மேந்திரியமைந்தும் ஞானேந்திரியமைந்தும் தன்மாத்திரை ஐந்தும் மனம் புத்தி சித்தம் அகங்காரம் ஆகிய அந்தக்கரணம் நான்குமாகிய 24-தத்துவங்களும் சூக்குமமாயுள்ளன. அக்கமலத்தின் எட்டிதழ்களாவன வித்தியாகலை 7-சுத்த வித்தைகளும் அவ்விதழ்களுக்கு அவற்றின்கணுள்ள கேசரத்தில் (அல்லி) ஈசுரத் தத்துவமும் சதாசிவ தத்துவமும் பொகுட்டில் சத்தி தத்துவமும் பொகுட்டின்கண்ணே பொருந்திய 51-பீஜங்களாகிய அக்ஷரங்கள் சிவதத்துவமும் ஆகிய இவ் முப்பத்தாறு தத்துவங்களுக்கும்மேல் சிவமுள்ளது என பந்திரத்துடன் தத்துவக் கூட்டங்களை நீக்கிச் சிவத்தைப் பூசிக்கவேண்டியது. "ஆறுறையு நீத்த தன்மேனிலையைப் பேருவடியேன் பெறுமா றுளதோ"—என்பது

(கந்தரனுபூதி)

(லப்த்வா சிவமதச்சாயாம் என்ற பாகத்தை ஈண்டுவிரிக்கிற் பெருகுமென விடுத்தாம்)

## இருதய கமலம்.

எமது சாஸ்திரங்களில் இருதயகமலம் எனக் கூறியிருப்பதன் காரணமறியும்படி சிறிது ஆராய்ச்சி செய்தேன். தற்காலம் அங்காதிபாத சாஸ்திரத்தில் ஐரோப்பாவிற் றனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒருபண்டிதர் (Encyclopœdia) என்ற கிரந்தத்தில் எழுதியிருக்கிறார்.

இருதயத்தை அவர் விவரித்திருப்பதை ஈண்டு அன்பர்களுக்கு அறிவிக்கிறேன். அதாவது பொகுட்டை (Auricle) என்றும் அதன்மேல் வெளியை (Ventricle) என்றும் கேசரத்தை சீப்புவடிவாயிருக்கிறதென்றும் நாளத்தை (Aorta) என்றும் விவரித்திருக்கிறது. விசேஷமாய் கேசரத்தைச் சீப்புப்போல் இருக்கிறது என்பதைப் பார்க்க மிக நூதனமாயிருக்கிறது. என்னை! எமது மேதாவிகள் தாமரைமலரின் கேசரம்போலிருக்கும் என்றதை அநாகரிக ஐரோப்பிய சாஸ்திரி சீப்புப்போலிருப்பதென்று சொல்லியிருக்கிறார். எமது ஆன்றோர்க்குக் கரதலாமலகம்போற்

றெரிந்த இந்த இரகசியங்களை ஐரோப்பியர் அறியார். அக்கேசரத்தில் ஈசுர தத்துவம் சதாசிவ தத்துவம் உள என்றும் மற்றைப்பாகங்களில் மற்றைத் தத்துவங்கள் உள என்றும் எமது மேதாவிகள் அறிந்தார்கள்.

### யாஞ் செய்யவேண்டியது.

பிணியாளி பிணியைத்தீர்க்க முயலானாகின் அவனுக்கு நாசமுண்டாவதுடன் மற்றையோர் அவனை மூடன் அல்லது பித்தன் என்பார்களன்றோ. ஆகையால் யாம் எமது சத்துராதிகளாகிய புலன் மனம் அகங்காரம் முதலியவற்றை அடக்கிச் சிவத்தை அடைய விரைந்து முயலவேண்டும். தெய்வத்தாலாகாதெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும் செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர் செயற்கரிய செய்கலாதார். "இதற்கும் நமக்கும் வெகுதூரம் என்றுபின்போட்டிவைப்பது சரியன்று. "மகன் மணம் பின்யோகு செய்வமெனி னன்னாண் மகன் மணமுமாகுந்தடை", "அன்றறிவா மென்னாதறஞ்செய்க" அப்படிச் செய்யாதிருப்பது குற்றமென ஆன்றோர் கூறினர்.

"வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றா யாழாமே காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே"

(திருவாசகம்)

"இப்பிறவியென்று மோரிருட்கடலுண் மூழ்கியே
யானென்னு மகரவாய்ப்பட்" ... (தாயுமானவர்)

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றெல்லாரு
மவஞ்செய்வா ராசையுட் பட்டு" .. (திருக்குறள்)

ந்தைதாய் தமர்தாரங்கவென்னு மிவையெலாஞ் சந்தையிற்கூட்டம்"

(தாயுமானவர்)

தந்தையார் தாயாருடன்பிறந்தார் தாரமார் புத்திரரார் தாந்தமாறே
வந்தவா றெங்ஙனே போமாறேதோ" (அப்பர் சுவாமிகள்)

"அத்தமும் வாழ்வு மகத்துமட்டே" ... (திருவெண்காடர்)

"மனையாளும் மக்களும் வாழ்வும் தனமும் தன்வாயின்மட்டே"

(திருவெண்காடர்)

"மண்ணிலிருவினைக் குடலாய் வானிரயத் துயர்க்குடலாய்"

(புராணம்)

ஸ்ரீ ந. சிவக்கொழுந்து.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மாம்ஸ போஜனக் குறைவும் மரக்கறி ஆகார உயர்வும்.

—— 'o: ——

தொகுதி - 7 - பகுதி 4 - பக்கம் - 95 - தொடர்ச்சி.

ப்ரோபஸர் வில்லியம் லாரன்ஸ் என்பவர் கூறுகிறார்: "மனிதனுடைய பற்கள், மாம்ஸ பக்ஷணஞ்செய்யும் மிருகங்களுடைய பற்களுக்குச் சிறிதேனும் ஒத்திருக்கவில்லை."

ப்ரோபஸர் ஜான் ரே, எப். ஆர். எஸ். என்பவர் கூறுகிறார்: "உண்மையில் மனிதன் மாம்ஸ பக்ஷணஞ்செய்யும் மிருகமாக உண்டாக்கப்படவில்லை."

டாக்டர் ஸில்வேஸ்டர் க்ரஹாம் என்பவர் சொல்லுகிறார்: "கம்பாரடிவ் அனாடமி என்னும் சாஸ்திரமானது பழங்கள், விதைகள், சர்க்கரைதரும் காய்கறிபதார்த்தங்களாகிய இவைகளைத் தின்று ஜீவிப்பதற்கு உண்டாக்கப்பட்ட பழம் தின்னி மிருக வகுப்பில் சேர்ந்தவன் மனிதன் என்று நிரூபிக்கிறது."

ஸ்வீடன் தேசத்துப் பெரிய விஞ்ஞான சாஸ்திரியும் இயற்கைத் தத்துவ சாஸ்திரியுமாகிய லின்னகஸ் என்பவர் கூறுகிறார்: "மனிதனுடைய தேகப் புற அவயவக்கட்டையும், உள்ளமைதியையும் மற்ற மிருகங்களின் தேகக்கட்டோடு ஒப்பிட்டு நோக்கும்போது, பழங்களும் தீஞ்சுவையுடைய காய்கறி வர்க்கங்களும் அவனுடைய இயற்கை உணவென்று அவை காட்டுகின்றன.

தேகதத்துவ சாஸ்திரமாகிற பிஸியாலஜியில் மஹாநிபுணராய் விளங்கும் வர்ச்சோ (Virchow) என்பவர், "இனி காய்கறி புசிப்பவர்களுடைய நாளாகத்தானிருக்கும்", என்றார்.

ஹெக்கல் என்பவரும் ஹக்ஸ்லி என்பவரும் டார்வின் என்பவரும் மேற்குறித்த கொள்கைகளையே ஒப்புக்கொண்டு, மனிதனுடைய தேகக்கட்டு பெரும்பாலும் பழம், கொட்டை முதலியவைகளைத்தின்னும் வாலில்லாக் குரங்குகளின் தேகக்கட்டையே ஒத்திருக்கிறதென்று கூறுகிறார்கள்.

மேற்கூறியவற்றால், மனிதன் தேகக்கட்டு மாம்ஸ போஜனத்திற்கே இயைந்ததென்று கொள்வது பிசகு என்பது நன்றாய் ஏற்படுகிறது. (மஹாதேவ் கன்தாரியாகர் வியாசத்தைப் பார்க்க.)

இரண்டாவது—சைவ ஆகாரத்தில் நம் தேகத்திற்கு வேண்டிய மூலாதாரங்கள் நன்கமைந்திருக்கின்றனவா என்பது.

தேகத்திற்கு வேண்டிய முக்கிய ஆகார வஸ்துக்கள்:—

1. ப்ரோடீட் (Proteid) என்னும் தசையுண்டாக்கும் வஸ்துக்கள்.

2. கார்போஹைட்ரேட் (Carbo-hydrates) என்னும் சர்க்கரை தரும் வஸ்துக்கள்.

3. கொழுப்புதரும் வஸ்துக்கள் (Fats)

4. நீர், உப்பு தரும் வஸ்துக்கள்—இவைகளே.

இவற்றில் முதலாவது ப்ரோடீட் என்னும் தசைதரும் வஸ்துக்கள் தேகத்திற்கு வெகு முக்கியமானவை. அவை மாம்ஸத்தில் தான் அதிகம் இருக்கின்றனவென்றும், அதனால் மாம்ஸம் சாப்பிடுவது அத்யாவஸ்யமாகின்றது என்றும், இந்த ப்ரோடீட் என்னும் வஸ்துக்கள் காய்கறி பதார்த்தங்களில் அவ்வளவாக இல்லையென்றும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இது தப்பான கொள்கை. பட்டாணி, கொட்டை தினுசுகள் பாற்கட்டி முதலிய வஸ்துக்களில் அவை மாமிசத்தில் காட்டிலும் மலிந்து கிடக்கின்றன என்று ஏற்படுகின்றது. அல்லாமலும் ஆகாரத்தில் இருக்கவேண்டிய இரண்டாவது மூலாதாரப் பொருளாகிய கார்போஹைட்ரேட் என்பது மாமிச உணவிற் கிடையவே கிடையாது. இது தானியராசிகளில் ஏராளமாய் இருக்கின்றது. இது தேகத்திற்கு மிகவும் அத்யாவஸ்யமானது. இது மாமிச உணவில் வெகு சிறிதும் காணப்படாமையால், மாமிச உணவின் குறைவும் சைவ ஆகாரத்தின் பெருமையும் நன்கு விளங்குகின்றன. முதல் கூறிய ப்ரோடீட் என்னும் தசைதரும் வஸ்துக்களும் சைவ ஆகாரத்தில் சுத்தநிலைமையிலிருக்கின்றனவென்றும், மாம்ஸ ஆகாரத்தில் அவை



கள் அழிந்து ஒருவாறு கெடுதலுற்று ஹீனஸ்திதியிலிருக்கின்றனவென்றும் தெரிகிறபடியால், சைவ ஆகாரமே அதியுன்னதமானதென்று சொல்வதில் வெகு சிறிதும் ஆக்ஷேபணையில்லை. கொழுப்புதரும் வஸ்துக்கள் இரண்டிலுமிருக்கின்றன. உப்பு தரும் வஸ்துக்கள் இரண்டிலுமிருக்கின்றன. அல்லாமலும் மாம்ஸத்தில் நீர் அதிகமாயிருப்பதால், தேகபோஷணை செய்வதற்குவேண்டிய சக்தியை அஃது உடைத்தாயிருக்கவில்லை.

மேற்கூறியவை யல்லாமலும் மாம்ஸமே சாப்பிட்டு, மரக்கறியாகாரமில்லாமலே ஒருவனிருப்பானாயின், ஸ்கர்வி (Scurvy) என்னும் கொடிய நோய்க்கு அவன் உட்பட்டு, ஆவி துறக்க நேரிடுகிறது. ஆகையால், மாம்ஸ மில்லாமலே ஒருவன் காலம் தள்ளலாமே ஒழிய, மரக்கறி ஆகாரமில்லாமலே ஒருவன் உயிர்வாழ்வது அநேகமாய் அசாத்தியமாகின்றது.

(இன்னும் வரும்.)

தி. பக்தவத்ஸலம் பிள்ளை, B. A, M. P. P. I,

## சமாச்சாரங்கள்.

—:o:—

மணிமங்கலம் திருநாவுக்கரசு சுவாமிகள் பக்தஜன சபை:—ஜூன் மீ 23, 24, 25-தேதிகளில் இருபத்தேழாவது வருஷ மஹோற்சவம் இச்சபையில் நிறைவேறியது. சித்தாந்த சரபம்-அஷ்டாவதானம்-சிவஸ்ரீ-கலியாண சுந்தர யதீந்திர சுவாமிகள் அக்கிராசனராக வீற்றிருக்கப் பல வித்துவ சிகாமணிகள் பற்பல உபந்நியாசங்களும், பிரசங்கங்களும் செய்தனர். ஸ்ரீமதி அகிலாண்டநாயகியம்மாள் என்னும் பெண்மணியால் ஜீவகாருண்ணியம் எனும் விஷயம் சொல்லப்பட்டது.

---

தேவகோட்டை, சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம்:—ஜூன் மீ 7, 8-தேதிகளில் இச்சங்கத்தில் ஸ்ரீலஸ்ரீ-அம்பலவாண நாவல சுவாமிகள் அக்கிராசனம் வகிக்க பற்பல பண்டிதர்களாகிய அறிஞர்கள் அநேகமான அரிய உபந்நியாசங்களைச் செய்தனர்.

---

சைவசித்தாந்த மகாசமாஜம்:—ஜூன் மீ 12உ தெய்வச் சேக்கிழார் பெருமான் குருபூசையானது, சுத்தாத்துவித சித்தாந்த சிகாமணிகள் பலர் ஒருங்குகூடி பற்பல மஹோபந்நியாசங்கள் சமாஜத்தில் செய்ய நிறைவேறியது.

## சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 1918-ஆம் மேமீ வரவு செலவு கணக்கு.

| வரவு. | தோகை. ரூ. | அ. | ப. | செலவு. | தோகை. ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 1918ஆம் ஏப்ரல்மீ 30உ இருப்பு ... | 144 | 14 | 1 | லிகிதர் சம்பளம் ... | 20 | 0 | 0 |
| ஆயுள் சமாசிகர் சந்தா .... | 20 | 0 | 0 | அச்சுக்கூலி ... | 7 | 8 | 0 |
| சாமாசிகர் வருட சந்தா ... | 193 | 8 | 0 | தபால் செலவு முதலியன ... | 3 | 15 | 3 |
| பழைய பிரதிகள் விற்பனை ... | 0 | 3 | 0 | | 31 | 7 | 3 |
| | | | | மேமீ 31உ இருப்பு... | *327 | 1 | 10 |
| | | | | *ஆயுள் சமாசிகர் சந்தா ரூபா 600-0-0 | | | |
| ஆக மொத்தம்... | 358 | 9 | 1 | ஆக மொத்தம்... | 358 | 9 | 1 |

K. Kuppusami Mudaliar, *Ag. Secretary.* W. T. Govindaraja Mudaliar, *Treasurer.* M. Kandasawmy Mudaliar, B.A. *Auditor.*

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி எ.] 1918ஆம் ஜூலைமீ [பகுதி எ.

## சாந்தோக்யோபநிஷத்து.

### ஏழாவது பிரபாடகம்.

#### கண்டம் உஉ.

எந்தகாலத்தில் ஒருவன் சுகமடையவேண்டுமென்று என் ... றுனோ அக்கரலத்தில் இருதியைச் செய்கிறான். ஒரு சுகத்தினை எண ... ல் ஒரு காரியத்தினைச் செய்யமாட்டான்.

#### கண்டம் உங.

பூமாவென்பது சுகம் அது மிகப்பெரிது சிறியதில் சுகம ... ாது. ஆகையால் பூமாவை யறியவேண்டியது. அந்த பூமாவை யறியவே ... ண்டுகிறேன் என்றனர் நாரதர்.

#### கண்டம் உச.

எதனிடத்தில் வேறு காணப்படவில்லையோ, எதனிடத்தில் வேறு கேட்கப்படவில்லையோ, எதனிடத்தில் வேறு அறியப்படவில்லையோ

அதுவே பூமா. இதுவே பெரிது இதற்கு அன்னியமெல்லாம் சிறிது பூமாவிற்கு நாசமில்லை. மற்றையவற்றிற்கெல்லாம் நாசமுண்டு. பூமாவை யறியவேண்டுகிறேன் என்றனர் நாரதர்.

### கண்டம் உரு

அந்தப் பூமாவே கீழும், மேலும், முன்னும், பின்னும், தெற்கிலும், வடக்கிலும் இருக்கிறது. காணப்படுகிறவெல்லாம் அதுவே. அதுவே நான், நானே எல்லாமாயிருக்கிறேன்.

உ. கீழ்மேலெங்குமான ஆன்மசொரூபமாயிருக்கிறது. எங்கும் ஆன்மா, எல்லாம் ஆன்மா இங்ஙனம்பார்த்து எண்ணி அறிகிறவனெவனோ அவன் ஆன்மாவினிடத்தில் ஆனந்த முறுகிறான், ஆத்மாவினிடம் விளையாடுகிறான், ஆன்மாவிடத்தில் கலந்திருக்கிறான், அவன் ஆத்மானந்தன். தானே தலைவன், அவன் எங்கும் சஞ்சரிப்பான். இதற்கு அன்னியமாக வேறொன்றை யறிகிறானோ அவனதனுக்கு அடிமை, அவன் நிலையில்லா லோகங்களை யடைவான். அந்த லோகங்களிலும் தனது இச்சையிற்படி நடக்க முடியாது.

### கண்டம் உரு.

இங்ஙனம் பூமாவை யறிகிறவன் பிராணன் முதலான எல்லாவற்றையும் அதன் சொரூபமாகவே பார்க்கின்றான். அவையனைத்தும் அதனிடத்திலிருந்து வந்ததாகவே அவனுக்குத் தோன்றுகிறது. இத்தகையனுக்கு மிருத்யு, துக்கம், ரோகம் இல்லை. எல்லாவற்றையும் ஆன்மாவாகப்பார்த்து, எல்லாவற்றையும் அனுபவிக்கின்றான். சிருஷ்டிக்கும் பூர்வத்தில் அவன் ஒன்றாகவேயிருந்தான். பிறகு மூன்றானான் பிறகு ஐந்து எழு, ஒன்பது, பதினொன்று விதமாக ஆனான்.

இங்ஙனம் சனத்குமாரர் நாரதருக்கு உபதேசித்தனர், நாரதர் இராகத்வேஷாதி கல்மஷ மற்று அஞ்ஞான பாரத்தை இறக்கிவிட்டனர்.

## எட்டாம பிரபாடகம்.

### கண்டம் க.

தேகத்தில் பிரமபுரமென்கிற பட்டணமுண்டு. அப்பட்டணத்தில், தாமரைப்போலொரு வீடுண்டு. அவ்வீட்டில் மிகவும் சூக்குமமான வெளியுண்டு. அவ்வெளியிலெது இருக்கிறதோ அதைத்தேடி யறியவேண்டும்



உ. இங்ஙனம் குறித்த குருவை நோக்கி மாணவகன் பட்டணம், வீடு, வெளி யென்பது எவை இவற்றை எங்ஙனமறிவது?

இருதயமானது பௌதிக ஆகாயம்போலப் பெரிதாயிருக்கிறது. சுவர்க்கம், பூமி, அக்கினி, வாயு, சூரியன், சந்திரன், மின்னல், நட்சத்திரங்கள் மற்று மெல்லாப்பொருள்களும் இருதய ஆகாயத்திலடங்கி யிருக்கின்றன.

பிரமபுரமாகிய தேகத்தில் பூதாதிகள் யாவும் அடங்கியிருந்தால், தேகம் ஜரையடைந்து நாசமடையுங்காலத்தில் அவையனைத்தும்நாசமடைந்து விடாதோ அப்போது மிஞ்சியிருப்பது எது என்று மாணவகன் கேட்க குரு சொல்லுகிறார்.

மணவழகு.

நீதி.

தீட்சணோ திவாகரோ பாதி
தீட்சணோ வக்கிர் திவாகராத்
திவாகராச்ச வக்நேச்ச
ஸுதீட்சணோ துர்ஜநோக்த்யா.

சூரியன் உக்கிரமாகக் காய்வதினால் ஜனங்கட்குக் கஷ்டத்தைக் கொடுப்பான். அக்னி சூரியனைக்காட்டிலும் பெருந்தீயாக வளர்ந்து ஜனங்களையும் மற்ற பண்டங்களையும் கொளுத்துவான். இவைகளைவிட துஷ்டர் கடுஞ்சொற்கள் அதிக உக்கிரமாக விருக்கும்.

சிவஞானபோதச் சிற்றுரைவிளக்கம் விலை ரூபா 3—8—0.

௧.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# அருளிலக்கணத்தின் ஓர் பகுதி.

தொகுதி - ௭ - பகுதி - ௯ - பக்கம் - ௧௱௧ - தொடர்ச்சி.

———'o:———

இத்தகைய அருளாளர் பெருமையை அளவைகளால் அளத்தல் கூடாது. அளக்கமுயல்வோர் "ஆழம் அறியாது காலையிட்டுக்கொண்டோம்" என்று ஏங்குவர். வந்தவேலை மறந்துவிட்டு வாய்த்தபொழுதை வாய்மதம்பேசி வாழ்நாளை வீழ்நாளாகக் கழித்தோம் என்று பின்னர் எண்ணுவர். பசையற்ற வார்த்தை பலசொல்லக் காமுறுவர். குரைத்துக் கோடி கனித்தவர். வரலாற்று மரபு வழிவாராதவன்கண்ணர் செந்தமிழ் வேத பரமாசாரிய பரம்பொருளாகிய ஆளுடைய பிள்ளையார் அருளிய

"நல்லார் அறஞ்சொல்லைப்
பொல்லார் புறங்கூற
வல்லார் அலர்தூற்ற
அடியார்க் கருள் செய்தான்"

என்னும் திருக்கடைக்காப்பின் திருவுள்ளக்கிடையை அறிந்து அடங்கி நில்லாது தம்மை மதிப்பதும் பிறர் குற்றம் ஆராய்வதும் தந்தொழிலாகக் கொண்டு அரற்றுபவர். தம்முடைய சிறுமைக்குணங்களை விட்டுக் கடவுள் வழிபாட்டில் கருத்தைச்செலுத்தித் திருவருளில் ஈடுபடாதவர். ஏழைக் குறும்புகள் பல செய்யும் சமர்த்தர். ஈசனுக்கு அன்பில்லார் அடியார்க்கு அன்பில்லார், எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தம் உயிர்க்கும் அன்பில்லார்.

"அடக்கம் அமரருள் உய்க்கும்" என்பதை முற்றும் மறந்தவர். திருவருளானது அகண்டிதமாய் அண்ட பிண்டங்களில் ஊடுருவிச் சென்று அவைகளை இயக்குகின்றது என்னும் தத்துவநூல் உண்மை மறந்தவர். தம் குறுகிய அறிவினால் அகன்ற அறிவுடைய பெரியோரை அளத்

தாயுமான சுவாமி பாடல் மெய்கண்ட விருத்தியுரை ரூபா 3—8—0



தலால் பெறுவது தாழ்மையும் கீழ்லோகமுமே என்று நினையாதவர் அஞ்சாநெஞ்சு படைத்த அகங்காரிகள் என உலகியல் உணர்வோர் ஒதுக்குவர் என்பதை சிறிதும் மானங்கொள்ளாதவர். ஆராய்ச்சிக்கு மேற்பட்டது அருள் எனும் தத்துவநூல் துணிபைக்கடைப்பிடித்து ஒழுகாதவர். வாய்கூசாது நிந்தைபேசுவர். உள் நடுங்காது உறத்த ஓசை இடுவர். அன்பின்வழியது உயிர்நிலை என்பதைப் பழகாதவர். முறுகிவளர்ந்த செந்தீயினும் மிக்க கோபமே இயல்பாக உடையவர். பாவம் என்னில் பதறா நெஞ்சர் எண்ணித் துணியாத ஏழைகள். "குலத்தளவே ஆகும் குணம்" என்பதை விளக்குவர் என்பர். உள்ளம் ஒன்று மொழி ஒன்று மெய் ஒன்றாகக் கொண்டு ஜாலஞ்செய்யும் நாடகாசிரியர்கள். இன்னோர்செய்யும் ஆராய்ச்சியானது நகை பிழை நாடகமாகவே (Comedy of Errors) முடியும். அன்புடைமைகொண்டோர் இன்னோர் வாசல்வழிச்செல்லார். ஆராய்ச்சியும் அருளும் எனும் விஷயம் பின் ஒரு சமயம் விரிவாய் விவரிக்கப்படும்.

ஆகவே பெரியோர்களை அளவைகளால் அளத்தல் முடியாத வேலை, அதனால் பெரும்பயனும் இன்று. பெரியோர்கள் முன்னிலையிலும் அவர்களைப்பற்றி அடிக்கடிப் பேசுகின்றபோதும் நம்முடைய சிறுமைக்குணங்கள் நமக்குப் புலனாகும். புலனாகும்போது அவைகளைக் கூடுமானவரையில் சீர்திருத்திக்கொள்ள முயல்வோம். அப்படி முயல ஆரம்பிப்பதே ஒழுக்க விருத்தி முறைமைக்கு ஆரம்பமாகும். பெரியோர்களின் அரிய உழைப்பினால் ஊன்முகப் பார்வையிட்டு உண்முகப் பார்வைகொண்டு நேர்ந்த அனுபவத்தில் ஓர் சிறிதே வாக்கு வெளிப்படத்தோடுங்கூடிய பாசுரங்களாக வெளிவருகின்றது.

"The instincts immature aud the purposes unsure
worth to God and nothing to man"—Browning.

அனுபவம் முழுவதையும் வாக்கினால் வெளிப்படுத்த இயலாது என்பதை வற்புறுத்தவே "கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்" எனும் பழமொழி எழுந்ததுபோலும். பாடலின் வழியாக வெளிவராத அனுபவங்கள் சாதாரண மனிதர் அறிவுக்கும் ஆற்றலுக்கும் புலப்படா, ஆகவே அவை மனிதர் அறியமுடியாதவை கடவுள் தான் அறிவர்.

பெரியோர்கள் காலங்கடந்தவர்கள். அவர்கள் எண்ணமும் சதா மனிதன் உண்மையான நிலைமை காலாதீதத்தையே பற்றும் என்றும் தற்

திருத்தொண்டர் வெண்பா (திருத்துறையூர்த்தாண்டவ்ன்) விலை அணா—1,

சமயம் தற்சமயம் என்பது குரங்கு நாய் முதலிய கேவல மிருகங்களுக்கே உரியது என்னும் துணிவு பிறக்கும்படி நிலையாக நிற்கும்.

"Leave Now for Apes and Dogs
Man has For Ever."—Browning.

அவ்வண்ணம் ஈடேறுவதற்குத் துணையாயுள்ளவைகளை மாத்திரங்கொண்டும் மாறுனவைகளை விலக்கியும் தம் உண்மை அனுபவநோக்கத்தை உறுதியாகக் கொண்டு ஒழுகுவார்கள்.

ஆராய்ச்சியால் உண்மை உள்ளது எனும் கொள்கைக்கு வர இயலுமேயன்றி அதுவே பெருப்பேருகிய பேரின்பம் விளைக்காது. அக்கிரமித்த அதிக்கிரமித்த ஆடவர்களைக் கண்டித்தற்கு ஆராய்ச்சி உரிய கருவியாகும். சிவானுபவப் பெருக்கத்தை அளவைகளால் அளக்கப்புகுதல் அளப்பரிய ஆகாயத்தை அளத்தல்போலாகும். வான்தண்டவன்போல் வாயால் கொஞ்சுதல் ஆகும்.

அருளால் அற்புதங்கள் நிகழும். அற்புதங்களை அளவைகளால் அளத்தல்கூடாது. எவ்வாறு எனின், நமக்குப் புலனுகாது கிடப்பதினுலேயே அற்புதம் நடந்தது பொய் எனத்துணிதல் கூடாது. பௌதிக சாஸ்திரத் துணிபுகளால் கண்டு பிடிக்கப்பட்ட இயற்கையமைப்பில் காணப்பட்ட உண்மைகளை (Laws of Nature) இன்ன இன்ன காரணங்களால் இக்காரியப்பாடு நிகழ்ந்தது நிகழ்கின்றது. நிகழ்கின்றவை கொண்டு இனியும் நிகழும் என உறுதியாக பௌதீக சாஸ்திர் ஆராய்ச்சியாளர் நம்புகிருர்கள். அப்படி நம்பாவிடின் அறிவு விசாலிப்பதும் குன்றும். ஆயினும், மத சரித்திரங்களால் வழங்கும் அற்புதங்கள் பலவற்றினுக்கும் காரணங்களைப் பகுத்துப்பார்க்க முயல்வது முடியாத காரியமாகும். மனிதன் அறிவு பௌதிக சாஸ்திர ஆராய்ச்சு மூலமாய் இயற்கை அமைப்பின் உண்மைகளின் காரணங்களை ஒரு சிறிதே கண்டுபிடிக்க இயலும். மனிதனுல் பாகுபடுத்திவிடமுடியாது நிகழ்ந்த தெய்வீக காரியப்பாடுகளை மனிதன் சிற்றறிவுகொண்டு அளக்க ஆரம்பித்தல் பொருந்தாது. தனக்கு விளங்காமையினுலே அற்புதங்கள் பொய் என அவசரப்பட்டு முடிவுகட்டுதலும் பொருந்தாது. தனக்கு விளங்காமையினுலே இயற்கை அமைப்பின் ஒழுங்குகளுக்கு விரோதம் என்று கொள்ளுதலும் பொருந்தாது. மற்று

மனைவாழ்த சரித்திரம் (படத்துடன்) விலை அணு—4.



உண்மை என்னெனில் மனிதன் அறிவால் அறியக்கிடக்கிற பொருள் வெகு சில என்றும் அவை அறிவதற்கே தனக்குள்ள காலம் போதாதென்றும் தன் அறிவால் அளக்கமுடியாத காரணங் கோடி கோடியாக உள்ளன என்றும் அக்காரணங்கள் முழுமையும் ஒருங்கே இயக்கி காரியப்பாடுகளை நடத்தல் கடவுளாது ஒப்பற்ற அருள் வல்லபம் என்றும் உணரவேண்டியது.

தற்கால மேற்றிசைத் தத்துவ நூலார்;

அற்புதம் என்பது?

காரண காரிய நிகழ்ச்சிக்கு விரோதம் அல்ல என்றும் காரிய காரண நிகழ்ச்சியைப்பற்றி நம் ஆராய்ச்சியால் அறிந்தவைகளுக்கு மட்டுமே விரோதம் என்றும் நம் அறிவு விசாலிக்க விசாலிக்க இன்று விளங்காத காரணங்கள் சிறிது காலம் கழித்து விளங்கும் என்றும், திவ்வியம் பழுத்த சைவ சித்தாந்தத்தில் பிரதிபாதிக்கப்படும் உண்மையாகிய கடவுளே காரணன் (True Cause) ஏனையர் கடவுளர், நகாரணர் என்பதையே வற்புறுத்துகின்றனர் (Miracles are not against Nature but against what we know of Nature) God alone is the CAUSE of all Causes. C என்பது Conation, A என்பது Activity, U என்பது Unity, S என்பது Self, E என்பது End என்று என் ஆசிரியர் Prof-Drew கூறுவர்.

"அருள் எங்குமான அளவை அறியார்" என்னும் திருமந்திரக் கருத்தை பெரியோரிடம் கேட்டு அனுபவித்தலே பொருந்தும்.

உலகத்தில் மூன்று பொருள் விசேஷமுற்றன அவை நக்ஷத்திரம் விளங்கும் ஆகாயம் (Starry heavens above) பசும்புல் தரையாகிய பூமி (grassy field below) உள் நிகழும் நீதி விசேடம் (Moral Law within) என்று Immanuel Kant என்பவர் கூறியுள்ளார்.

அதாவது பெரும்பரப்பாக பரந்து கிடக்கும் நிலவுலகத்தையும் விண்ணையும் அடக்கமுடைய் ஒருவர் உற்றுநோக்கின் கடவுளுடைய அருள் வல்லபம் விளங்கும்.

ஆனல் அற்புதம் விளங்காவிடின் பெரியோரல்லர் என்று ஆராய்ச்சி செய்தல் கூடாது. கடவுள் பக்குவர்க்கு அருள்செய்த விஷயத்தில் இது பொருந்தும் இது பொருந்தாது என்றும் இது இவ்வளவு பொருந்தும் அது அவ்வளவு பொருந்தாது. அவர் அருள்பெற்றது குறைவு இவர் அருள்

பெற்றது நிறைவு என ஆராய்ச்சி செய்பவர் தித்திப்பு கூட்டுக்கறி வேறு கார கூட்டுக்கறி வேறு என்று வகை வகையாய் விரும்பி அளவுகடந்து உண்டு இச்சையாதி விஷயங்களில் துச்சமாகக் கொள்ளாதவர்.

அற்புதம் பலரும் காணச்செய்தால் தான் பெரியோரெனக் கொள்ளல்வேண்டும் என்று கேட்போர் தம் மரபின் சமயநிலையைக் காட்டிவிடுவர். ஏன் எனின் அருளரசியற்றிய பெரியோர்களைக் குறும்புசெய்த சமணராதி புறமதஸ்தர்கள் தாமே கேள்வி கேட்டு தீங்குவிளைத்து பொய்யுரை புனைந்துரை கட்டி தூஷித்தார்கள். உள்மதப்பற்றுடையவர் இவைகேட்டு நெஞ்சு அழுங்கி கடவுளுடைய சந்நிதானத்தில் சென்று ஏழைக்குறும்புகளைத் தவிர்க்க விண்ணப்பிப்பார்கள் மற்றும் அற்புதம் தான் கடவுளருள் பெற்றதற்கு அடையாளம் எனின் இற்றைநாளிலும் பாளையம், நத்தம், பாடி, பேட்டை, குப்பம், சிற்றூர், பேரூர் எனப் பெயர் எய்தியுள்ள குக்கிராமங்கள் தோறும் சமயப்பற்றிலராய் புலால் தவிர்க்காதவராய் விசேஷ சமய சாதனங்கொள்ளாதவராய் மிக சாமானிய ஒழுக்கமுள்ளவர்கள் அச்சமயம் மரச்சிலையாகிய திரௌபதி முன்னிலையில் நெருப்புத் திருவிழா நடத்துதலை உற்றுநோக்கின், “வெந்நீர் பொருது என் உடல்” என்று கூறிய பெரியோரினும் நெருப்பு மிதிப்போர் மிகச் சிறப்புடைய சமயாசாரியர் ஆவர். தமிழ்ப்புலவர்களும் அற்புதங்கள் நிகழ்த்தியதை மறத்தல் கூடாது. ஆகவே அளவைகளாலும் ஆராய்ச்சியாலும் அற்புதங்களாலும் பெரியோர்களை அளத்தல் தத்துவநூல் உணர்ச்சியும் சமய மரபும் உணரார் கொள்ளும் விபரீத உணர்ச்சியே யாகும். தன்னை அதிகமாக மதித்துப் பிறர் குற்றம் ஆராயும் இயல்புடையோர் தமது சரித்திரத்தின் உண்மைகள் வெளியாதற்குக் காரணமாவர்.

இனி அருளடைவதற்கு நினைவுற்றோர் நாமேகடவுள் என்னும் விபரீதக் கொள்கை கொள்ளுதல் கூடாது. பௌதிக சாஸ்திர ஆராய்ச்சியாளர் பௌதிக நியாய முறைகளைக் கண்டு பிடிக்கப்போய் விபரீதத்தால் அவைகளே எல்லாவற்றையும் விளக்கும் என்று தப்பு அபிப்பிராயம் கொண்டு முடிந்ததுபோல் தத்துவ சாஸ்திர ஆராய்ச்சியாளருட் சிலர் உலகத்திற்கும் வேறாய உயிர் நிலைமை ஆராயப்புகுந்த அவசரத்தில் ஆன்மாவின் சிறுமையும் கடவுளின் பெருமையும் ஊன்றி அறியாது நாமே கடவுள் என்று முடிவுகட்டுகிறார். பேரறிவும் பேராற்றலும் பேரன்பும்உடையவர் கடவுள் சிற்றறிவும் சிறுதொழிலும் பாசமும் உடையவர் உயிர்கள். இது வாசா

பகவத்கீதார்த்த பங்கம் விலை அணா—1.



ஞானம். உலகந்தான் உண்டு புத்திதான் உண்டு என்று நின்றுவிட்ட நிலையிலுள்ளவர்களைக் கண்டித்து உலகத்துக்கும் புத்திக்கும் மேற்பட்ட ஆன்மாவொன்று இருத்தல்வேண்டும் என்று வாதித்த அவசரமேயன்றி உயிர் ஒன்று உண்டு என்று ஏற்பட்ட பிறகு உயிர்க்கும் உயிர்க்குயிராயிருக்கும் கடவுளுக்கும் எத்தகைய சம்பந்தம் என்று உணர்ந்து பொருத்தமுறக் கூறும் வார்த்தையன்று. கடவுளின் அருளைப்பெற முயல்வதே உயிர்தாங்கிய உடல் முயற்சிக்க வேண்டியது.

“இடந் தனித்திருத்தல் இச்சையின்றி நுகர்தல் செப தபஞ்செய்தல் தெய்வம் பரவல், பிறவுயிர்க்கிரங்கல் பெருங்குணம் பற்றல், பாடிப்பணிதல் பத்திசெய்திருத்தல் முதலிய நற்செய்கைகளில்” பழகவேண்டியது.

கீழுள்ளும் மேலுள்ளும் யாவுள்ளும் எள்ளும்எண்ணெயும்போலவும் பூவில் நாற்றம்போலவும் உயர்ந்து எங்கும் ஒழிவற நிறைந்து மேவிய தலைவரை ஓயாதே உள்குவார் தழலதுகண்ட மெழுகதுபோல உருகிப் பெருகி உளங்குளிர்ந்து தேன்புரையுஞ் சிந்தையராய் எங்குநிறைந்து அமுதூறும் பரஞ்சுடரை.

“செழுந் தண்பால் கடல்திரை புரைவித்து
உவாக்கடன் அள்ளுநீர் உள்ளகந் ததும்ப
வாக்கிறந்தமுத மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன்”—என்று எங்குமிலாததோர் இன்

பம்பெற்று மற்றோர் பற்று இங்கு அறியாராய் அனுபவிப்பர். “அருட்பெருந்தீயின் அடியோம்” என்றும் “அவயவஞ்சுவை தருகோற்றேன் கொண்டுசெய்தனன்” என்றும் மாறிலா மகிழ்ச்சியின் மலர்வார். சேழில் பரஞ்சோதியாகிய அருட்பெருஞ்சோதியையும் கெழில்பரங்கருணையாகிய தனிப்பெருங் கருணையையும் கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும் பெரியோர்,

“தோலெலாங் குழைந்திடச் சூழ்நரம் பனைத்தும்
மேலெலாம் கட்டவை விட்டுவிட் டியங்கிட
என்பெலா நெக்குநெக் கியலிடை நெகிழ்ந்திட
மென்புடைத் தசையெலா மெய்யுறத் தளர்ந்திட
இரத்தம் அனைத்தும் உள்ளிறுகிடச் சுக்கிலம்
உரத்திடை பந்தித் தொருதிரள் ஆயிட
மடலெலா மூளை மலர்ந்திட அமுதம்
உடலெலாம் ஊற்றெடுத் தோடி நிரம்பிட
ஒண்ணுதல் வியர்த்திட ஒளிமுகம் மலர்ந்திட

தண்ணிய உயிர்ப்பினில் சாந்தம் ததும்பிட
உள்நகை தோற்றிட உரோமம் பொடித்திட
வாய்துடித் தலறிட வளர்செவித் துளைகளில்
கூயிசைப் பொறியெலாம் கும்மெனக் கொட்டிட
மெய்யெலாம் குளிர்ந்திட மென்மார் பசைந்திடக்
கையெலாம் குவித்திடக் காலெலாஞ் சலவிட
மனங்கனிந் துருகிட மதிநிறைந் தொளிர்ந்திட
இளம்பெறு சித்தம் இயைந்து களித்திட
அகங்காரம் ஆங்காங் கதிகரிப் பமைந்திடச்
சகங்காண உள்ளம் தழைத்து மலர்ந்திட
அறிவுரு வனைத்தும் ஆனந்த மாயிடப்
பொறியுறும் ஆன்மதற் போதமும் போயிடத்
தத்துவம் அனைத்தும் தாமொருங் கொழிந்திடச்
சத்துவம் ஒன்றே தனித்துநின் றோங்கிட
உலகெலாம் விடயம் உளவெலாம் மறைந்திட
அலகிலா அருளின் ஆசைமேற் பொங்கிட
என்உளத் தெழுந்து உயிரெலா மலர்ந்திட
என்உளத் தோங்கிய என்தனி அன்பே.'

என்று ஆன்ம நெகிழ்ச்சியாகிய அன்பே சிவம் எனத் தேர்ந்து அநுபவிப்பர்.

அன்பினில் கலந்து அறிவினில் பயின்று இன்பினில் அளைந்து உள்ளமும் உணர்ச்சியும் உயிரும் இடமாகக்கொண்டு விடங்கும் கடவுளைச் சொல்லாலும் பொருளாலும் தோன்றும் அறிவாலும் துணிந்தளக்கமுடியாது. அநுபவிக்கும்போது,

"கள்ளுண்டாள் எனப்புகன்றார் கனகசபை நடுவே
கண்டதுண்டு சிற்சபையி லுண்டதும்உண் டடிநான்
எள்ளுண்ட பலவிடயத் திறக்குங் கள் அன்றே
என்றும் இறவாநிலையிலிருத்தும் கள் உகைர்
உள்ளுண்ட போது மயக்குற்றிடுங் கள்ளலவே
உள்ள மயக்கத்தினையும் ஒழித்திடும் கள் மடவாய்
அள்ளுண்டபிறரும் எனை அடுத்தடுத்துக் கண்டால்
அறிவுதரும் அவர்க்கும் இங்கே யானுண்ட கள்ளே."

என்று "பித்தரின் மயங்கி" என்னும் மணிவாசகத்தின் கருத்தை விளக்குவர்.

தெய்வத் தன்மையுள்ள தமிழ்மொழியானது அநாதியாகவே திருவருள் வலம் நிறைந்தது.



"இடம்பத்தையும், ஆரவாரத்தையும் பிரயாசத்தையும் பெருமறைப்பையும் போதுபோக்கையும் உண்டுபண்ணுகின்ற ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்லவொட்டாது பயிலுதற்கும் அறிதற்கும் மிகவும் லேசுடையதாய்ப்பாடுதற்குந்துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய்ச் சாகாக் கல்வியை லேசில் அறிவிப்பதாய்த் திருவருள் வலத்தால் கிடைத்த தென்மொழி யொன்றனிடத்தே மனம் பற்றச்செய்து அத்தென்மொழிகளாற் பலவகைத் தோத்திரப்பாட்டுகளைப் பாடுவித்தருளினீர்" என்று இராமலிங்க சுவாமிகள் எழுதி யுள்ளார்.

"சித்தாந்தம்" பத்திரிகையில் 1913௵ 213-215-வது பக்கங்களில் வந்துள்ள "தமிழ்" எனும் வியாசமும் படித்துப்பார்க்க.

(இன்னும் வரும்.)

மோ. கந்தசாமி முதலியார். B. A.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஆலய வழிபாடு.

—— °0: ——

"மூர்த்திதலந் தீர்த்தம் முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

(தாயுமான சுவாமிகள்)

தெய்வத்தன்மை பொருந்திய ஔவையார் "ஆலயந்தொழுவது சாலவும் நன்று" என்று அருளிச்செய்திருக்கின்றார். கோயிலுக்குச்சென்று கடவுளை வணங்குவது மிகவும் நல்லது, என்பதே அத்திருவாக்கின் பொருளாகும். மற்ற விடங்களிலிருந்து செய்யும் வழிபாட்டைக்காட்டிலுங் கோயிலுக்குச் சென்று அங்கே கடவுளுக்குச்செய்யும் வழிபாடு ஒன்றே சிறந்ததாம் என்பது அதனால் தெளிவாகப் புலப்படுகின்றது. கடவுளையன்றி வேறெதனையுங் காணமாட்டாத முற்றுணர்வுடையோர்க்குக் கோயிலிற் செய்யப்படும் வழிபாட்டிற்கும், வேறுபாடு சிறிதுந்தோன்றாதாயினும், உலகங்களையும் உலகத்துப் பொருள்களையுமே எந்நேரமும் நினைத்துக்கொண் டிருக்கும்

மற்றை எல்லார்க்கும் திருக்கோயில் வழிபாட்டைத் தவிரக் கடவுளை நினைந்து உருகுதற்கு வேறுவழி சிறிதுமே இல்லை. கோயில் அல்லாத மற்ற இடங்களெல்லாம் உணவுதேடுதற்கு இசைந்த முயற்சிகளும், தேடிய பொருள்களை வைத்து அனுபவிப்பதற்கு இசைந்த முயற்சிகளுமே நடைபெறுந்தன்மையுடையனவாய் இருக்கின்றன. அந்த முயற்சிகள் நடக்கும் இடங்களிலே செல்பவர்களுக்கு அங்கேயுள்ள பொருள்களைப் பற்றிய நினைவும், அம்முயற்சிகளைப்பற்றிய நினைவுகளுமே அடுத்தடுத்து உள்ளத்தில் தோன்றும். மாம்பழம் விற்குங் கடைப்பக்கமாய்ச் செல்வோனுக்கு மாம்பழத்தைப்பற்றிய நினைவும், சாராயம் இறைச்சி கஞ்சா அபின் முதலான தீய பண்டங்கள் விலையாகும் அங்காடிவழியே செல்வோர்க்கு அவற்றைப் பற்றிய நினைவுகளும், பழுகு மருக்கொழுந்து சந்தனக்கட்டை முதலான நறுமணங்கமழும் இனிய பண்டங்களுள்ள இடங்களிற் செல்வோர்க்கு அவற்றைப்பற்றிய நினைவுகளும், பயன் மிகுந்த கல்விப்பொருளை ஊட்டும் பள்ளிக்கூட வழிச்செல்வோர்க்குக் கல்வியின் அருமையைப்பற்றிய நினைவும், ஒருவர் பிணமாய்க்கிடக்க அவரைச்சூழ்ந்து சுற்றத்தார் ஓவென்றலறும் வீட்டின் ஓரமாய்ச் செல்வோர்க்கு நிலையாமையைப்பற்றிய நினைவும், அழகுமிக்க இருவர் மணஞ்செய்ய அவரைக்கண்டு எல்லாரும் மகிழ்ந்திருக்கும் வீட்டின்பக்கத்தே செல்வோர்க்கு அவ்வின்பத்தைப் பற்றிய நினைவுந் தோன்றுதலைத் தெளிவாக அறிந்திருக்கின்றனம் அல்லமோ? இவற்றைப் போலவே கடவுளைத் தொழுதற்கென்று ஆங்காங்கு அமைத்திருக்குங் கோயில்களான பரிசுத்த இடங்களுக்குச் செல்லும் நல்லோர்க்குக் கடவுளைப்பற்றிய நினைவும் இடைவிடாது தோன்றுவதாகும். உலகவாழ்வென்னுந் துன்பத்திற்கிடந்து உழன்றுகொண்டு கடவுளை நினைத்தற்கு இடமின்றி வருந்தும் மக்களுக்கு இடையிடையே நம் ஐயனைப்பற்றிய எண்ணத்தை எழுப்பும் பொருட்டாகவே ஓர் ஊரிற் பல இடங்களிலுங் கோயில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கோயில்களே இல்லாத நாடுநகரங்களில் இருப்பவர்களுக்குக் கடவுளைப்பற்றிய நினைவு சிறிதுந்தோன்றாதாகையால் அவர்கள் மிருகங்களினுங் கடைப்பட்டவராவார்கள், உயர்ந்த நினைவில்லா அவர்கள் தங்கியிருக்கும் அவ்விடங்கள் விலங்குகள் குடிகொண்ட காடுகளையே ஒப்பனவாகும். இவ்வுண்மையினை உணர்த்துதற்கன்றோ,

"திருக்கோயில் இல்லாத திருவிலூரும்
திருவெண்ணீறணியாத திருவிலூரும்
பருக்கோடி பத்திமையாற் பாடாஊரும
பாங்கினொடு பலதளிகள் இல்லாஊரும்



விருப்போடு வெண்சங்க மூதாவூரும்
விதானமும் வெண்கொடியு மில்லாவூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணாவூரும்
அவையெல்லா மூரல்ல அடவிகாடே"

என்னுந் திருவாக்கும் எழுந்தது?

"திருநீறு அணியாத நெற்றியைச்சுடு, சிவாலயம் இல்லாத ஊரைக் கொளுத்து." என்னும் உபநிடதத்திருவாக்கும் இவ்வுண்மையினையே அறிவிப்பதாகும்.

இனி, மனஉறுதி உடையவர்கள் எந்த இடத்திலிருந்துங் கடவுளை நினைக்கலாமாகையால், கடவுளைத் தொழும்பொருட்டுக் கோயிலுக்குத்தான் செல்லல்வேண்டுமென்று வற்புறுத்தியுரைத்தல் என்னையெனின்; மேலே சொல்லியபடி, கோயிலைத்தவிர மற்ற எல்லா இடங்களும் வேறு வேறு நினைவுகளை உள்ளத்தில் எழுப்பி மனவுறுதியைச் சிதைப்பனவாய் இருத்தலால், நம்மனோரில் எவ்வளவு மனத்திட்பம் வாய்ந்தவர்கள் இருந்தாலும் அவர்கள் மற்ற இடங்களிலிருந்து கடவுளை நினைக்கப் புகுவார்களாயின், அவர்களைச் சுற்றிலும் நடக்கும் உலகமுயற்சிகளாலும், அவ்வவ்விடங்களைப் பற்றிய எண்ணங்களாலும் அவர்களுடைய நினைவு கலைந்து பழுதுபட்டுப் போகும். மேலும், அத்தனை மனவுறுதி வாய்ந்தவர்கள், பலருங் கடவுளைத்தொழுதற்கென்று இடமாக வகுக்கப்பட்டமையாற் பலரின் தூயநினைவுகளால் மிகவும் பரிசுத்தமாய் விளங்குந் திருக்கோயிலின் உள்ளேசென்று நம் ஆண்டவனை வணங்குவதற்குப்பின் வாங்குவதுங் கூசுவதும் அருவருப்பதும் என்? மிகப் பரிசுத்தமான கோயிலை வெறுப்பது மனவுறுதிக்கு அழகாகுமா? பலருடைய நினைவாற் கடவுளுக்கென்றே சிறப்பாக அமைக்கப்பட்ட கோயிலிற்சென்று வணங்குவதால் மனவுறுதியுடையார்க்கு அவ்வுறுதி மேன்மேலும் உரம்பெற்று விளங்குவதோடு, அவரது நினைவும் அங்குள்ள இறைவன் திருவுருவத்தை நேரே கண்டு மகிழ்ந்து திருவருள் இன்பத்திற் படிந்திருக்குமன்றோ? ஆகையால், மனவுறுதியுடையவர்களுக்கும் திருக்கோயில் வழிபாடு இன்றியமையாது வேண்டற்பாலதே யாம் என்க. அளவற்ற மனவுறுதியும் கரைகடந்த அன்பும் தூயஉள்ளமும் தூயஅறிவும் நிறைந்த திருஞானசம்பந்தர் அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர் முதலான மேலோரே கோயில்கடோறுஞ்சென்று நம் ஐயனை வணங்கி வந்தனராயின், தாழ்ந்த தரத்திலுள்ள மற்றவர்கள் திருக்கோயில் வழிபாட்டைக் குறைவாகக்கருதுவதும், அதனை எளனஞ்செய்வதும் எவ்வளவு பொல்லாத குற்றமாய் முடியும்!

அப்படியானாலும், மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளுக்கும் மனதிற்கும் புலனாகாமல் அறிவுவடிவாய் எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் பிரிவறநிறைந்து நிற்கும் இறைவனை அவ்வறிவு வடிவாகவே நினைத்து வணங்காமல், கல்லினாலுஞ் செம்பினாலும் உருவாக்கப்பட்ட உயிர் அற்றவடிவங்களில் வணங்குவது குற்றமாகாதோவெனின்; குற்றமாகாது. சிறுகுழந்தையாய் இருந்த பருவத்திலே தன் தாய் தந்தையரைப் பிரிந்து தூரதேசத்திலே பிறரால் வளர்க்கப்பட்ட ஒரு சிறுவன் பருவம் முதிரமுதிர அறிவும் முதிரப்பெற்றவனாய்த் தன் தாய்தந்தையரைக் காணவிரும்பியபோது, அவனை வளர்த்துவந்தவர் அவன் தாய் தந்தையர் படத்தைக்காட்ட அவன் அதில் அவர்களைக்கண்டு வணங்கி அகம்மகிழ்ந்ததுபோல, எல்லையின்றி எங்கும் நிறைந்த இறைவனைப்பிரிந்து அவனது திருவருள் வடிவைக் காணமாட்டாமல் அறியாமையிற் கட்டுண்டு கிடக்கும் நம்மனோர்க்குச் சிறிது சிறிதாக அறிவை விளங்கச்செய்து வரும் திருஞானசம்பந்தர், மெய்கண்டதேவர் முதலான நம் வளர்ப்புத் தந்தைமார் நமது அவாவினை அறிந்து தாம் கண்ட நம் ஐயன் அருள் வடிவைக் கல்லினுஞ் செம்பிலும் அமைப்பித்துக்காட்ட அதனைக்கண்டு வணங்கி அதன் வழியே நம் ஐயனை அறிந்தவர்களாய் அகங்களித்து வருகின்றனம் அல்லமோ? படத்தின்கண்ணே தமது உருவங்களைக்கண்டு தம் புதல்வன் மனம் மகிழ்ந்து வணங்குகின்றான் என்பதைத் தூரதேயத்தில் உள்ள அவன் பெற்றோர்கள் அறிந்து அவனது அன்பிற்குத் தாமும் மனம் மகிழ்வார்களேயல்லாமல் அவன்மேற் சினங்கொள்வார்களோ? இங்ஙனமே, நாமும் நம் ஐயன் அருள்வடிவை நேரேகாண இயலாமையால், அதனை நம் ஆசிரியர் உதவிகொண்டு கல்லினுஞ் செம்பிலுங் கண்டு அன்பால் அகந்ததும்பி வழிபட, அதனையறியும் நம் ஆண்டவன் அதற்கு மகிழ்ந்து அவ்வழிபாட்டினை ஏற்றுக்கொண்டு நம்மைப்பாராட்டிச்சீராட்டி வருவான் என்பது திண்ணம். நம் முழுமுதற் றந்தையின் இரக்கத்திற்கு ஒரு வரம்பேயில்லை. சிற்றறிவினரும் ஏழைமக்களுமான நாம் நம்பெருமானை அடைதற்பொருட்டு, இத்துன்பக்கடலின்கண் அவன் திருவுருவ அடையாளங்களாகிய தெப்பங்களைக் கைப்பற்றிக்கொண்டு தத்தளித்து வருவதைக்கண்டு, அவன் நம்மேல் மிகவும் இரக்கம் உடையனாகி நமக்குத் தனது அருளைவழங்கி நம்மை இப்பிறவிக்கடலினின்றுங் கரையேற்றித் தனது பேரின்பநாட்டில் வாழ்விப்பானே யல்லது, நம்மேற்சினந்து நம்மை அதன்கண் அமிழ்த்தித் தாழ்விப்பான் அல்லன். ஆதலால், முழுமுதற்கடவுளான நம் ஐயனைச் சேருங்கருத்தோடு அவன் அருள்வடிவிற்கு அடையாளங்களாகக் கல்லினுஞ் செம்பிலும் அமைத்த திருவுருவங்களை வணங்கிவருதல் சிறிதுங் குற்றமாகமாட்டாதென்க. திருக்கோயிலிலுள்ள திருவுருவங்கள் ஈசனை யறிதற்கு வைத்த குறிகளேயல்லாமல் வேறல்ல. இவ்வுண்மை,



"குறிகளும் அடையாளமுங் கோயிலும்
நெறிகளும் அவன் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியி லீர்மனம் என்கொல் புகாததே" என்னும்

அப்பர்சுவாமிகள் திருவாக்கின்கண் நன்கு விளக்கப்பட்டமை காண்க.

இனி, முழுமுதற்கடவுளாகிய நம் சிவபெருமானையன்றி, வேறு நம் போன்ற சிற்றுயிர்களின் வடிவங்களைக் கல்லினுஞ் செம்பினுஞ்செய்து வைத்துக்கொண்டு அவற்றை வணங்குதலே பெரிதுங் குற்றமாவதாம். மாரி கூளி எசக்கி கறுப்பண்ணன் மதுரைவீரன் முதலிய ஆவேசங்களெல்லாம் நம்போற் குற்றமுடைய சிற்றுயிர்களாதலின் அவற்றைத் துணையாகக்கொள்வது, ஒரு குருடன் மற்றொரு குருடனைத் துணைகூட்டிச்சென்று இருவரும் பள்ளத்தில் வீழ்ந்ததற்கே ஒப்பாம். விவிலியநூலினுங் கடவுளுக்கு மாறான உருவங்களை வணங்குதல் ஆகாதென்று சொல்லப்பட்டதேயல்லாமல், கடவுளின் திருவுருவத்தை வழிபடுதல் வழுவென்று கூறப்பட்டதில்லை. ஈசாவாசியோபநிடதத்தின் ஒன்பதாவது மந்திரமும் "அறியாமையோடுகூடிய சிற்றுயிரின் வடிவங்களை வணங்குபவர்கள் இருள் நிறைந்த நரகத்திற்குச் செல்கின்றார்கள்." என்று இங்ஙனமே கூறுகின்றது. ஆகையால், முழுமுதற் பழம்பொருளின் உண்மை அருள்வடிவாய் அம்மையப்பராய் நின்ற திருவுருவத்தையும், அம்முதற்பொருளின் பேரருள் விளக்கத்திற்கு இடமாய் மேலோரால் பண்டைக்காலந்தொட்டு வணங்கப்பட்டுவரும் பிள்ளையார் முருகப்பிரான் முதலானோர் திருவுருவங்களையும், இவர்களின் அருள்வழிப்பட்ட அடியார் திருவுருவங்களையும் அன்றி வேறு எவற்றையும் வணங்குதல் சிறிதும் ஆகாது என்று கடைப்பிடித்தல் வேண்டும்.

இங்ஙனம் மிகவும் பரிசுத்தம் உடையதாய் விளங்கும் ஆலயத்தினையும், அதனுள் நிறுத்தப்பட்டிருக்கும் அருள் அடையாளங்களையும் சிவமென்றே நினைத்து உள்ளங்கரைந்துருகி வணங்கவே, கன்றை நினைந்த புனிற்றாப்போல ஈசன் அக்குறிகளில் விளங்கியிருந்து அவர்க்கு அருள் வழங்குவன். இதற்குத்,

"திருக்கோயில் உள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
சிவனெனவே தேறினர்க்குச் சிவன் உறைவன் ஆங்கே"-என்னுந்

திருவாக்கே சான்றாகும். சூரியன் ஒளியில் எங்கும்உள்ள நெருப்பானது சூரிய காந்தக்கண்ணாடியில் விளங்கித் தோன்றினாற்போல, எங்குமுள்ள இறைவன் அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி இவ்வாலயத் திருவுருவத்தின்கண் விளங்கித் தோன்றினான் என்று உண்மையாக எண்ணி வழிபடுவார்க்கு அவன் அங்கு முனைந்துத்தோன்றி அருள்புரிதல் திண்ணம், ஆனால், நம்மனோரிற் பலர் தாம் கோயிலுக்குச்சென்று கடவுளை வணங்குவதாக வெளியே பெருமை பேசிக்கொண்டாலும், உண்மையில் அவர்கள் அவ்விடத்தைக் கோயிலாகவும் அதனுள்ளிருக்குந் திருவுருவத்தைக் கடவுளின் அருளுருவ அடையாளமாகவும் நினைத்து நடக்கின்றார்களென்று நம்மால் நம்பக்கூடவில்லை. ஏனென்றால், அவர்கள் கோயிலின் உட்சென்றால் அடக்க ஒடுக்கமும், ஐயன் திருவடியிற் சிந்தையும் வையாமல், வீண்கதையும் வம்புவழக்குகளும் மணச்சடங்கு பிணச்சடங்குகளும் தமக்கு முன் உபசாரஞ்செய்யவில்லையென்னும் வீம்புமான இவற்றைப் பேசுதலிலும், ஒருவரோடொருவர் சிரித்துப் பகடிபண்ணுதலிலும், அன்பர்கள் அருவருக்கத்தக்க இன்னும் பல வீணான செயல்களிலுஞ் சிந்தை வைத்துப் பெருங்குற்றங்களை மூட்டை மூட்டையாகத் தொகுத்து வைக்கிறார்கள். அந்தோ! உலகத்திலே அழிந்துபோகுஞ் செல்வப்பொருள் சிறிது உடையவர்களைக் கண்டாலும் அவர்கள் முன்னிலையிற் கைகட்டி வாய்புதைத்துச் செல்லும் மாந்தர்கள் அளவிறந்த அண்டங்களையும் அவ்வண்டங்களில் உள்ள அளவற்ற பொருள்களையும் உடைய எல்லாம்வல்ல தலைவரான நம் ஆண்டவன் முன்னிலையிற் செல்லுங்கால் எவ்வளவு அடக்க ஒடுக்கமும் அன்பும் பணிவும் உடையராக இருத்தல்வேண்டும்! தம் தலைவராகிய கடவுள் இவ்வாலயத்துள் எழுந்தருளியிருக்கின்றாரென்று அவர்கள் உண்மையாகவே நினைத்திருந்தால் ஆ! இவர்கள் இப்படியெல்லாஞ் செய்வார்களா! இதற்கு முன்னெல்லாம் இவர்கள் இங்ஙனம் அறியாமையாற் குற்றமாக நடந்தாலும், இனியேனும் செருக்கு அற்று அடக்கமும் அன்பும் பணிவும் பூண்டு, ஐயன் முன்னிலையில் அகம் நெக்கு நெக்கு உருகக் கண்ணீருங் கம்பலையும் உடையராய் அவன் புகழ்பாடி அவனது திருவருட் பெருஞ்செல்வத்தைப் பெற்றுப் பிழைத்திடுவாராக!

சுவாமி - வேதாசலம்.

செய்யுளிலக்கணம் விலை அணா 8.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# மனிதப்பிறப்பி னருமையு மதனாலடையும் பயனும்.

கடலால் புடைகொண்ட இந்நில வரப்பின்கண் தோன்றிநின்று அழியும் பல்வகைத்தாய பிறப்புகளுள், மிக மேன்மையான பிறப்பு மனிதப் பிறப்பாம். எவனெனின், தேவர், மனிதர், விலங்குகள், ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் எனும் எழு பிறப்பினுள்,

"ஊர்வ பதினொன்றே டொன்பது மானுடம்
நீர்ப்பறவை நாற்காலோர் பப்பத்தாம்—சீரிய
பந்தமிற் றேவர் பதினான் கயன்படைத்த
வந்தமிற்சீர்த் தாவரநா லைந்து"—எனுங் கவிப்படி ஓர்

ஆன்மா தான் முன்னிட்டிய வினைக்கேற்ப இவ்வெண்பத்துநான்கு நூறாயிரம் யோனிகளிலொன்றில் பொருந்த வேண்டுவது உண்மையால் இவற்றுள் சுத்த மனிதயோனியைப் பொருந்தல் அதுகொண்ட நல்வினைமேற்றாகலின் மேற்போந்த எழு பிறப்பினும் மனிதப்பிறப்பு மேன்மையான பிறப்பு யெனக் கூறப்பட்டது.

இதனை இடைபோகாது வீசிக்கொண்டிருக்கும் தரங்கத்தினையுடைய சாகரத்திடத்தே ஓர் நுகத்தடி வீழ்ந்து அவ்வலையோடு தானும் ஓயாது புரண்டிருக்கு மவ்வளவிலே அக்கடலுள் தங்கிய ஆமையொன்று வெளிவரவேண்டி தனது சிரசைநீட்டி மேலெழுங்காலை திரையால்மொத்துண்டு புரண்ட்வண்ணமாக வுள்ள நுகத்தடியினது துவாரத்தில் அச்சிரம் அகப்பட்டுக்கொள்ளுமாயின் அது எவ்வள வியல்புடைத்தோ அதுபோன்று

சைவாகமப்பிரமாணியம் விலை அணா—12.

ஓர் உயிர் முன் தான் பலபிறவிகளில் ஈட்டிய வினைக்கேற்ப இம்மனிதப் பிறப்பு வருமென்பதாக. ஓர் பெரியார்,

" எறியுங் கடலி னுகத்தடியி னியாமைக்
கழுத்துப் புகுவது போல்,
பொறிவெம் பிறவி யனேகத் தாற்புருடன்
விவேகி யெனப் பிறந்தான் " .

என்றார்

* ஆகையால் எழு பிறப்பினுள்ளும் மனிதப்பிறப்பே மிக வருமையான பிறப்பாகும் இப்பிறப்பும் நல்வினையானே வந்தெய்தும் என்னை பிரபு லிங்கலீலை,

" புன்மர நெறி பழுப்புள் விளங்கெனும்
பன்மைய துயர்செயும் பவங் கடப்பியே
வன்மைகொ ணிலமிசை மக்க ளாகுத
லென்மைகொ ளுயிர்க்கலா லரிது நந்தியே "

என்று கூறுமாற்றானுணர்க.

இன்னணமோருயிர் பல பிறவியடைதலில்லை எப்பிறப்பு ஆதியிலுற்ற தேவப்பிறப்பே அது மீண்டு மீண்டும் அடையுமேயல்லாமல் மாறி மாறி பிறக்கும் என்பது அது சுத்த தவறு என ஓர் சாரார் கூறாநிற்பர். இதனை திருவாசகத்தில்,

" புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்ற வித்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான் "

என்று நம் மணிவாசகம் அருளியுள்ளமையால் அக்கூற்றவலுக்காதென்க.

இதனானும் வினையளவாக பிறப்பு வருகின்றதென்பது வலியுறுத்தப் பட்டதென்க.

எழுவகைப் பிறப்பினுள்ளும் மனிதப்பிறப்பே சிறந்ததெனல் யாது காரணம் பற்றி எனின் அறிவின் மிகுதியாலென்பது கொண்டாம்; அவ் வறிவானும் என்னண மிகுதியுற்றதென்னின் கூறுதுமும் தாவரமென்று

விபூதி விளக்கம் விலை அணா—4.



கூறப்படும் புல் மர முதலிய ஓரறிவுடையன, இவற்றினும் மிகுந்த இப்பி சங்கு ஈரறிவுடையன, இவற்றினும் மிகுந்த கரையானெறும்பு மூவறி வுடையன, இவற்றினும் மிகுந்த தும்பி வண்டு நான்கறிவுடையன, இவற் றினும் மிகுந்த பறவை மிருகம் மனிதர் ஐயறிவுடையன, இப்பறவை மிரு கத்தினும் மனிதப்பிறப்பே உயர்ந்தன. எவற்றாலெனின், பறவை மிருகம் போன்று ஊணுறக்கமைதுனம் பயம் இவை முதலிய உண்டாயினும் மனித ரிடத்து இதனினும் விசேடத் தன்மையுண்டு அது கார்த்தல், புளித்தல், துவர்த்தல், உவர்த்தல், கைத்தல், தித்தித்தலாகிய அறுசுவைப் பதார்த் தங்களும் திவ்யாமுதமாகிய போசனங்கள் அறிந்து புசித்தலும் சிறக்க ஒப்பனைசெய்த் தூங்குமஞ்சத்தின்கண்ணே நுண்ணிய பஞ்சுபெய்த மெத் தையின்மேல் தலையணைமுதலாகிய கொட்டைகள்பரப்பிச் சிறந்த பட்டுவி தானத்தின்கீழ் நித்திரைசெய்தலும் ஆலிங்கனமாதியாய அறுபத்துநாலு கரணங்களுடன் பெண்போகந் துய்த்தலும் மனோபிசாரத்தின் மிகுதியால் அச்சமுண்டான காலையினும் தேறி அதற்கேற்ற வுபாயஞ்செய்து துயரம் நீக்கிக்கொள்ளுதலும் பறவை மிருகாதிகளுக்கு இன்மையாலும் மனிதரால் அவற்றை யடக்கி தம் வழி நடத்தலாலும் அவற்றினுள்ளும் மனிதப் பிறப்பே உயர்ந்தனவென்பதும் பகுத்தறிவுண்மையால் ஆறறிவுடையன வென்றும் கூறப்படும் இதனை அருட்பிரகாசரும்,

" ஆறுசுவையோ டருந்துதலுண் பஞ்சணை துயிறல்
கூறுகரண விதங்களின் மாதரைக் கூடியுத
றேறிவிசாரத்தினு ளச்சநீங்குத றேறின் மண்மேல்
வேறு முயுர்கடமக் கின்மையாளர் மேலென்பவே "

என்று கூறவதுணர்க.

இன்னும் மிருகாதிக்கின்மையாகிய நாண முடைமையும் மனிதருக் குள்ளதால் அவற்றானும் மனிதப்பிறப்பே உயர்ந்தனவாம். இதனை தெய் வப்புலமை திருவள்ளுவர்,

" ஊணுடையெச்ச முயிர்க்கெல்லா மேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு "

என்று கூறுமாற்றானு முணர்க.

மனிதப்பிறப்பே உயர்ந்தன வென்பானேன் இதனின் மேற்பட்ட தேவப்பிறப்பன்றோ உயர்ந்தனவாகுமெனின் நன்கு வினவினாய் தேவப் பிறப்பானது ஒருயிரீட்டிய புண்ணியத்துக்கேற்ப தேவசரீரத்தையடைந்து

சித்தோபதேச மஞ்சரி விலை ரூபா 1—4—0

அப்புண்ணியம் உள்ளளவும் தேவபோகத்தை யனுபவித்து பின் அப்புண்ணியம் நீங்க வினைக்கீடான் பிறப்பெய்து மாதலினாலும் அத்தேவனாய்ப் பிறந்து அங்கிருக்குங் காலை இறப்பு பிறப்பு ஒழிதற்கேதுவாகிய நன்மை புரிந்து முத்தி கூடுந்தன்மை அப்பிறப்பிற்கு இல்லாமையானும், மனிதனாகப்பிறந்தே நன்மை தீமை முதலியனசெய்து முத்தியடையவேண்டுதலானும் தேவப்பிறப்பினும் மனிதப்பிறப்பே உயர்ந்தனவென்பது தெளியற்பாற்று. இதனை பிரபுலிங்கலீலை,

"போகபூமியினிற் போகதனுவினாற் பொருந்தலாகா
தேகமாயின்ப சித்தியியம்புரிற் கருமபூமி
யாகமானது கொண்டன்றி யாதலான் ஞாலத்தெய்தி
யோகமாம் நெறியினின்றோ ருண்மைசாதித்துக் கொள்வர்"

என்று கூறுவதுணர்க.

ஆகவே மனிதப்பிறப்பே இம்மை மறுமை வீடு என்பவற்றின் பாகுபாடுணர்ந்து இது செயத்தக்கன இது செயத்தகாதன என்று பகுத்தறிந்து நடத்தலினாலே எழு பிறவியினும் மனிதப்பிறப்பே உயர்ந்தனவாம். இதுவே யருமையுடைய பிறப்பாம். இதுநோக்கியே நமது தாயுமானார்,

"எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவிதான்
யாதினு மரிதரிது காண்" ... ... என்றும்,

நமது மூதாட்டியாம் ஔவைப்பெருமாட்டியும்

"அரிதரிது மானிடராதல் அரிது"—என்றும் கூறுவாராயினர்.

இத்தகைய வருமையான சரீரத்தைப்பெற்றவர் இதனது நிலையாமை நோய் மூப்பு சாக்காடென்பவற்றை யுணர்ந்து இது பெற்றதனாலடையும் பயனைக் குறித்தொழுகலே மானிட சரீரங்கிடைத்ததின் பயனும் என்னை யெனின்? அரிதாகக் கிடைத்த இச்சரீரம் நிலையுடைத்தாயதன்று. ஏனெனின், நமது தெய்வப்புலமை திருவள்ளுவர்;

"நெருநெலுள னொருவன் இன்றில்லையென்னும்
பெருமையுடைத்திவ் வுலகு" ... ... என்றும்

தாயுமானார்,

"இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையே" ... என்றும் வரும்





ஆப்த வாக்கியங்களாலும் அனுபவத்தால் அறிந்துள்ளோமாதலால் அவை வருவதன் முன்னரே அரிதாகப்பெற்ற இச்சரீரத்தாலடையும் பயனையடைதல்வேண்டும் அன்றி வீணாட்கழிப்பின் அவை என்னும் இதனை தேவர் திருவள்ளுவர்,

"வீழ்நாள்படாமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்" ... ... என்றும்

"அன்றறிவா மென்னாதறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை" ... என்றும்

"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் னல்வினை
மேற்சென்று செய்யப் படும்" ... ... என்றும்

நன்மதி புகட்டியுள்ளாராதலின் இச்சரீர நிலையாமையையுணர்ந்து அதனாலாம் பயனை யடைதலே இச்சரீரத்தை யடைந்ததனால் அடையும்பயனை யடைந்தவராவர் அங்ஙனமின்றி அரிதாகப்பெற்ற இச்சரீரத்தைவைத்து வாளாவிருத்தல் மனிதப்பிறப்படைந்த பயனை பெறுவேமாவோமா. ஆகோம் ஆகோம் என்னையெனின் பிரபுலிங்கலீலை,

"எய்தற்கரிய யாக்கைதனைக் கெய்திற்றென்று லதுகொண்டு
செய்தற்கரிய வறங்கள்பலசெய்து துயர்கூர் பிறவியினின்
றுய்தற்கொருமை பெறவொண்ணா துழல்வோனுடம்பு பொற்கலத்தில்
பெய்தற்குரிய பால்கமரில் பெய்ததொக்கு மென்பரால்" என்று

கூறுவதுணர்ந்து இவ்வுடம்பு நிலைபெற்றிருக்கு மிப்போதே ஒல்லும்வகை அறஞ்செய முற்படல்வேண்டும். ஏனெனின், நமது கபிலதேவர்

"மனிதற்கு வயது நூறல்லதில்லை
ஐம்பதி ரவிலகலுந் துயிலினால்
ஒட்டிய விளமையி லோரைந்து நீங்கும்
ஆக்கையிளமையி லைம்மூன்று நீங்கும்
எழுபதுபோக நீக்கிருப்பது முப்பதே'

அவற்றுள்,

இன்புறுநாளுஞ் சிலவேய தான்று
துன்புறுநாளுஞ் சிலவே யாதலால்.
பெருக்காறொத்தது செல்வம் பெருக்கா

பிடிகளையொத்த திளமை யிடிகளா
வாழ்மரமொத்தது வாழ்நா ளாதலால்
ஒன்றேசெய்யவும் வேண்டும் ஒன்றும்
நன்றேசெய்யவும் வேண்டும் நன்றும்
இன்றேசெய்யவும் வேண்டும் இன்றும்
இன்னேசெய்யவும் வேண்டும் இன்னும்
நாளை நாளை யென்பீராகில்
நமனுடை முறைநா ளாவதுமறியீர்
நம்முடை முறைநா ளாவதுமறியீர்
எப்போதாயினுங் கூற்றுவன் வருவான்
அப்போதந்தக் கூற்றுவன் றன்னைப்
போற்றவும்போகான் பொருளொடும் போகான
சாற்றவும்போகான் றமரொடும் போகான்
நல்லாரென்னான் நல்குர வறியான்
தீயாரென்னான் செல்வரென் றுன்னான்
தரியாதொருகணந் தறுகணாளன்
உயிர்கொடுபோவா னுடல்கொடு போகான்
ஏதுக்கழுவீ ரேழை மாந்தர்காள்"—என்று நமக்கு செவி

யறிவுறுத்திய வண்ணமோர்ந்து அறத்தைக் கடைப்பிடித்தல் வேண்டும். அவ்வறமே மனிதன் செய்யவேண்டி மறமென பெருநாவலர்,

"அறத்தினூங் காக்கமுமில்லை யதனை
மறத்தலினூங் கில்லை கேடு"—என்றமையால் அஃதே மனி

தப் பிறப்படைந்ததனால் எய்தும் பயனும். இப்பயனைப்பெறுதற்கு கல்வியின்றி யமையாதாதலின் அக்கல்வியை நமது மயிலிவர்முருகன் மலரடி வணங்கி அருள் செய்யுமாறு வேண்டி வாழ்வோமாக. சுபம்!.

க. பச்சையப்ப உடையார்,

திருமழிசை.





## சமாச்சாரங்கள்.

—:o:—

உருத்திராக்கவிளக்கம்—(ஒழுக்கநூல் பிரிவு 2.) உருத்திராக்க சம்பந்தமாக இதுகாறும் எழுதியுள்ள பலநூல்களில் காணப்படாத அநேக விஷயங்கள் இதிலுள்ளன. 1-வது இயலில் உருத்திராக்கம் தரிக்கவேண்டுமா என்பதைப்பற்றியும், 2-வது இயலில் உருத்திராக்க உற்பத்தியும் 3-வது இயலில் உருத்திராக்கவகை, பெயர், காரணமும், 4-வது இயலில் குணமும் பலனும், 5-வது இயலில் அணியும் காலம் இடம் முறையும் நன்குவிளக்கியிருக்கிறது. உருத்திராக்கம் என்னும்சொல் தமிழ்ப்பதமே யென நிரூபிக்கப்பட்டு இருக்கிறது. உருத்திராக்க வுற்பத்தி பௌராணிக மதத்திற்கு மாறாக வெழுதியிருப்பது மிக உசிதமாகவும் பொருத்தமாகவுமிருக்கிறது. இந்நூலியற்றியவர் ஆடிசைகிழார்-அ-சிதம்பரனார்.

இதன் விலை அணா 0 4 0

---

சென்னைச் சிவனடியார் தலயாத்திரைச் சங்கம்:—1918ளு ஜூலைமீ 20உ சனிக்கிழமை திருத்தணிகைக்குச் சென்று மகாவபிஷேகம் சிவாலய வழிபாடு, தேவார பாராயணம் செய்துகொண்டு ஞாயிற்றுக்கிழமை திரும்பினர்.

### சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 1918-ளு ஜூன்மீ வரவு செலவு கணக்கு.

| வரவு. | தொகை. ரூ. | அ | ப | செலவு. | தொகை. ரூ. | அ | ப |
|---|---|---|---|---|---|---|---|
| 1918ளு மேமீ 31உ | | | | | | | |
| இருப்பு ... | 327 | 1 | 10 | லிகிதர் சம்பளம் ... | 20 | 0 | 0 |
| சாமாசிகர் வருட சந்தா .... | 28 | 8 | 0 | மே, ஜூன் மாதங்களின் தபால் செலவு முதலியன ... | 33 | 10 | 0 |
| | | | | | 53 | 10 | 0 |
| | | | | ஜூன்மீ 30உ இருப்பு... | *301 | 15 | 10 |
| | | | | *ஆயுள் சமாசிகர் சந்தா ரூபா 600-0-0 | | | |
| ஆக மொத்தம்... | 355 | 9 | 10 | ஆக மொத்தம்... | 355 | 9 | 10 |

K. Kuppusami Mudaliar, *Ag. Secretary.* W. T. Govindaraja Mudaliar, *Treasurer.* M. Kandasawmy Mudaliar, B.A. *Auditor.*

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி எ.] 1918ளு ஆகஸ்டீ [பகுதி அ.

## சாந்தோக்யோபநிஷத்து.

எட்டாம் பிரபாடகம்.

கண்டம் க.

க. அவ்விருதயாகாசம் எங்ஙனமிருப்பதெனின், ஓர் அளவினதாய் நம்முன் காணப்படுகிற பௌதிக ஆகாயம்போன்றுளது. அவ்விருதாகாயத்தில் சுவர்க்கம், பூமி, தீ, வாயு, சூரியன், சந்திரன், மின்னல், நட்சத்திரங்கள் முதலியனவும், மற்றைய ரூபமானவைகளும் அடங்கியிருக்கின்றன. *

* சரீரத்தின்கண்ணே அதிசூட்சுமமாயுள்ள தகராகாசத்தின்கண்ணே, அதிதூலமாக விருக்கிற வஸ்துகள் எங்ஙனமடங்கியிருக்குமெனில், சிறு கண்ணாடியில் பெரிய பதார்த்தங்கள் பிரதி பிம்பப்பட்டு விளங்குவது போலாம். அது ஞானிகட்கு அநுபவமாம்.

மெய்கண்ட சாத்திரம் பதினான்கு மூலம் விலை அணா 8.

சு. இருதாகாயத்தில் சகல பூதங்கள் முதலிய அடங்கியிருக்குமேல் தேகத்திணுக்கு ஜரையுண்டாகி நசியுங்காலத்தில் அவையனைத்தும் நீங்க மிஞ்சியவை யெவையெனச் சீடன்கேட்க ஆசிரியர் விடையளிக்கின்றனர்.

ரு. ஜரை உடலுக்கன்றி ஆன்மாவுக்கில்லை. உடல் அநித்தியம், ஆன்மா நித்தியம், இவையனைத்தும் ஆன்மாவினிடத்திலுள்ளன. ஆன்மா பாவம்மிருத்தியு சோகம் பசி இல்லாதவர், சத்யசங்கற்பர் இவ்வான்மாவையே யறியவேண்டுவது. இங்ஙனமறியாதவன் ஆன்மாவை(பரமான்மா) தனக்கு அன்னியமாக விருக்கிறதாக வெண்ணுகிறான் அவரொரு இருப்பிடத்திலிருப்பதாக நாடிச்செல்கின்றான். அழியத்தக்க சில பதவிகளை யுத்தேசித்து வேண்டிக்கொள்ளுகிறான். இவையனைத்தும் ஆத்தும விசாரணை செய்யாதவன் சங்கற்பமாகும்.

## கண்டம் உ.

தனது தகாராகாசத்தில் பிரமத்தைக் கண்டறிந்தவன் தான் நினைத்த உலகத்தை நினைத்தமாத்திரத்திலடைகிறான். அங்கங்குள்ள சுகங்களையடையு மகிமைகளை வாய்ந்து வாழ்கின்றான். அங்ஙனமே தாய் தந்தை சோதரர் சிநேகர் இவர்களையும், கந்தம், அன்னபானம், கீதவாத்தியம், மாதர்சுகம் இவர்களையும் இச்சித்தமாத்திரத்தில் அநுபவிக்கின்றான். எந்தெந்தத் தேகத்தை விரும்புகின்றானோ எந்தெந்தப் பொருளை நினைக்கின்றானோ அனைத்தையு மநுபவிக்கின்றான்.

## கண்டம் ங.

சத்தியமாயுள்ள இச்சைகளை அநுபவிக்கவேண்டிய யாவும் தன்னுத் மாவினாலேயே கூடுமானதாவிருக்கவும் தனக்குள்ள அஞ்ஞான மறைப்பினால் யாதொன்றையும் அடையக்கூடவில்லை. ஆன்மாவின் உண்மைநிலையையடைந்தவன் அஞ்ஞானத்தைவிட்டு விலகி முதல்வனுடன் கலந்து விடுகிறான். அம்முதல்வனே சத்தியன். ஸ=அமிருதம், தி=மர்த்யம், யம்=இரண்டினையும் ஒன்று செய்கிறது.

மணவழகு.

சிவஞானபோதச் சிற்றுரைவிளக்கம் விலை ரூபா 0—8—0.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# குருபக்தி மகிமை.

———:0:———

"எனையாட்கொண் டாளவரும் என்குருநாதன் வடிவந்
தனையார்க்குஞ் சொல்லத்தகுமோ நிராமயமே"

சிறிய பொருள்களுள்ளது லோகம்; பெரிய பொருள்களுள்ளது பரலோகம் சிறுபொருளிடத்துள்ள இன்பம் சிற்றின்பம், பரம்பொருள் இடத்து உள்ளதே பேரின்பம். முறையே இச்சிற்றின்பப் பேரின்பங்கள் அவ்வப்பொருளைப் பற்றிய காலத்தே உண்டாவன. இன்பம் எவ்வுயிர்க்கும் பொது ஆனால் தடையுற்றதும் சிறிது நேரத்தே அழிவையுடையதும், பிறகே துன்பம் பயப்பதும் ஆகிய சிற்றின்ப விஷயமே தேடிடும் ஜீவன் அடைவது அதோகதி. ஆனால் தடையற்றதும், எங்கும் நிறைந்ததும், அளவிலாப்பேரின்பம் பயப்பதும், என்றும் உள்ளதும், எதற்கும் ஆதியானதும், அந்தமானதும் தன்னை அணுகுவாரையும் பின்னும் வளர்ப்பதும், தன்னை அடைந்தவனுக்குச் சொல்லொணாத ஆனந்தம் தருவதும், தன்னிகரில்லாததும், இன்னும் வாய்விட்டுப் பேசொணாததும், கண்டவர் மனத்தள்ளுறநிற்பதும், அவர் தம் உள்ளத்தடத்தில் உபசாந்தமாய் நிற்பதே பேரின்பம். ஆகவே காலம், அளவு, குணங்கள் இவற்றின் எல்லாவற்றாலும் மேம்பட்ட பேரின்பத்தையல்லவோ தேடவேண்டும். ஆனால் எந்த ஜீவனுக்கும் சுகத்தில் பிரியமாயிருந்தபோதிலும் அததனுடைய வர்க்கத்துக்குத்தக்கது பூரண சுகமெனக் கொண்டிருக்கும். இந்த மனிதப் பிறப்பிலும் ஜீவர்கள் அவர்களுடைய மனோநிலைக்குத்தக்கவாறு இதுதான் இன்பப்பூர்த்தி யெனக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் முன்னோர்கள் 'எல்லாக்கவலையு மற்றின்புற்றிருப்பதே சொல்லாருமுத்திச் சுகம்" என்பதைச்செவ்வனே பெரியோரிடத்திற்கேட்டுக் கண்டுதெளிந்து அநுபவித்திருக்கிறார்கள். அதுவே அளவிலாப்பேரின்பம். பரமானந்த சாகரம். மனிதப்பிறவியின் இன்பப் பூர்த்தியாகிய முத்திப்பேறு.

தாயுமான சுவாமி பாடல் மெய்கண்ட விருத்தியுரை ரூபா 3—8—0

ஆனால் இயற்கையோ வேறு, எப்படியெனில் ஸ்தூல அசேதனப் பொருள்கள் என்று சொல்லத் தகுதியையுடைய அணுக்களிடத்திலும் ஒன்றை ஒன்று பற்றிக்கொள்ளும் சக்தி இரக்கம் எங்கும் வியாபித்திருக்கிறது. ஆகவே தொண்ணூற்றாறு தத்துவங்களோடுகூடிய மனிதப்பிறப்பிலும் பற்று என்பது அற்று இருக்கிறார்களா? ஆசையல்லவோ பாசம் இந்த ஆசையென்னும் பெருங்காற்றா டிலவம்பஞ்செனவு மனதலையுங்கால் மோசம் வரும். இதனாலே கற்றதும் கேட்டதும் தூர்ந்து முத்திக்கான நல்நேசமும் வாசமும்போய் புலனாகிக் கொடுமைபற்றி நிற்பர் அந்தோ! இதன்றோ நம் தாயுமானார் திருவாக்கு; ஆசையன்றோ சர்வதுக்க காரணம். கோபம், மோஹம், லோபம், மதம், மாற்சரியம் என்ற பஞ்சலக்ஷணங்களுக்கு முதற்காரியம் சர்வதுக்க நிவர்த்தியும் பரமானந்த பிராப்தியுமல்லவோ புருஷார்த்த சித்தி. இது வன்றோ சர்வசாஸ்திர சம்மதம் சுருக்கிச்சொல்லின் பற்று அற்றது துக்கம் அற்றது, துக்கம் அற்றது எனின் உடனாற்றது மோக்ஷம். அற்றது பற்றெனில் உற்றது வீடு! மேலும் அதிக தேறுதலையாக நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி,

"நன்றாய் ஞானங்கடந்து நல்லிந்திரிய மெல்லாமேத்து
ஒன்றாய்க்கிடந்த அரும்பெரும்பாழ் உலப்பிலதனை யுணர்ந்துணர்ந்து
சென்றாங் கின்பதுன்பங்கள் செற்றுக்களைந்துபசையற்றால
அன்றே அப்போதேவீடு அதுவேவீடு வீடாமே"

"அரிது அரிது மானுடராதலரிது" அதைப்பெற்ற நம்மை எது அரிது எனக்கேட்பாராயின், அரியது அரியது பற்றறுதலே அரியது. இதுவே செயற்கரிய செய்கை! ஆகவே இந்தப் பற்றறுதலைச் சாதித்தல் தானெங்ஙனமெனின் இங்குச்சாதித்தலே ஒன்றுமில்லை. ஏனெனில் நாம் இன்பங்காரணமாகத்தானே பற்றுகிறோம். ஆகவே பேரின்பம் பெறுவான் வேண்டிப்பரம்பொருளைப்பற்றவேண்டுவதே, உலகப்பற்றைவிட்டு இதைப் பற்றவேண்டும். இதற்குச் சான்றாகப் பொய்யாமொழி புகல்வது, திருக்குறள்.

ஆகவே சகல பற்றுக்களையும் நீத்தான் ஒரு பரமபுருஷன். அவன்கண் நம்பற்றை வைப்போமாயின் நம்முடைய உலகப்பற்றாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி, என்னும் ஐவாய் வழிச்செல்லும் அவா அறுபடும். மேலும் இயற்கையிலேயே இரண்டு பொருள்கள் ஓரிடத்து தங்க முடியாது. ஒன்றுக்கொன்று மாறானதோ சொல்லவேண்டுமோ? புலி





யும் மானும் ஓர் துறையில் தண்ணீர்குடிப்பது கற்பனாலங்காரம் கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான் என்றால் கன இருள் அகன்றது, காலைப் பொழுதாயிற்று என்பது அநுபவசித்தம். சொல்லுதற்கொண்ணாத மாண்மையுடைய உத்தம குருமூர்த்தி என்னுள்ளங் குடிகொள்ளவும், முன்னர் இறைகொடுத்தடங்காது எங்கும் பரந்து திரிந்த பஞ்சேந்திரியப் பறவைகள் பிரிந்தோடின. நான் அங்கிங்கெனாதபடி யெங்கும்பிரகாசமாய கறைதடையில்லாத ஆனந்தசாகரத்தில் மூழ்கினேன், என்னும் இது அவன் திருவாசகம்,

"உறைமாண்ட உள்ளொளி யுத்தமன்வந் துளம்புகலுங்
கறைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
இறைமாண்ட யிந்திரியப் பறவை யிரிந்தோடத்
துறைமாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ"

குருவே தெய்வம். அவனை நாடுவதே சரியை. அவன் பணியே கிரியை. அவனைக் கூடுவதே யோகம். அவன் தானாவதே ஞானம். "ஏதுமதுவான குருநாதனிருபாத மதி லிச்சைவைப்பது சமாதி" ஆதலால் குருநாதனைவிட்டு மற்றொரு நாதனையும் நம் நாதனாகக்கொள்ளாதே யுங்கள், குருவே நமக்கு உற்றதுணை. அவனுக்கு அவனே யிணை, குருவே ஞானப்பாலூட்டுந்தாய். இவனே தாயினுஞ் சிறந்த தயாவுடையன். அவனே தந்தை. அவனே அம்மையப்பன். நம்முன்னறி தெய்வம். எல்லார்க்கும் நல்ல தெய்வம் எல்லாஞ்செய் வல்லதெய்வம். நமது நாட்டுத் தெய்வம் நமது வீட்டுத்தெய்வம். நம் தீவினைகள் ஓட்டுந்தெய்வம். தங்கள் குலதெய்வம். இஷ்டார்த்த சித்திதெய்வம் அது நம்மை யாண்ட தெய்வம். நமது பாசப்பற்றறுக்கவே நாம் பற்றிய தெய்வம். மெய்த்தெய்வம் நங்கள் குருதெய்வமே. இது குறிக்கவன்றோ,

"அத்தேவர் தேவர் அவர்தேவர் என்றுஇங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும் இல்லாது என்பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்ற மாணிக்கவாசகம் கிடைத்தது.

"ஞானநெறிக் கேற்றகுரு நண்ணரிய சித்திமுத்தி
தானந் தருமந் தழைத்தகுரு—மானமொடு
தாயெனவும் வந்தென்னைத் தந்தகுரு வென்சிந்தை
கோயிலென வாழுங்குரு"

இத்தகைய அரிய பெரிய உண்மையைவிட்டுப் பிரபஞ்ச மாயையி லயிர்ந்திருக்கும் மாந்தர் மனோநிலையை இதுதான் உண்மையெனத் தெளிவித்து ஆட்கொள்ளுவதே குருமொழி,

"பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாடோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை யாட்கொண்ட
ஐயாவென் னாருயிரே யம்பலவா வென்றவன்றன்
செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

இங்ஙனம் "இருள் கிழித்தெழுந்த சிந்தையர்" "சித்தம் சிவமாகச் செய்தனவே தவமாக்குவது" அத்தன் கருணை. "மனகுணசலன மலினமில் துரிய அதீத சுகானுபூதி மௌன நிரக்ஷரமந்திரமே" அவனது உபதேச மந்திரம். அவன் ஆணவ அழுக்கடையும் ஆவியைவிளக்கி அநுபூதி யடைவித்ததொரு பார்வைக்காரன்" "யான் எனது எனச்சருவும் ஈனசமயத்தெவரும் யாரும் உணர்தற்கரிய நேர்மைக்காரன்" யாது நிலையற்றலையும் ஏழுபிறவிக் கடலையேற விடுநற்கருணை யோடக்காரன்" "வாழியென நித்தமறவாது பரவிற் சரணவாரி சமளிக்குமொரு சகாயக்காரன்" இவன் வாதனை தவிர்த்தகுருநாதன். அன்பர்க்கு வெளிப்பட நிற்பதொரு சகாயக்காரன் இங்ஙனம் மேம்படி மொழிந்தது அருணையில் உபதேசம் பெற்ற சந்தானுபூதிக்காரர்

மாயவாழ்க்கையை மெய்யென்றெண்ணி மதித்திடாவகை நல்கிறுன் இதுவே குருச்செயல். "காயத்துள்ளமுதூற வூறக்கண்டுகொள்ளென்று காட்டினன். இதைக் காண்பதே சுவானுபவம். இதுவே வஸ்து நிச்சயத் துணிபு கொடுக்கும். அவனருள் என்பது அப்பொழுது விளக்கம். அதுதான் புருஷார்த்த முடிபு. வேதத்தின் அந்தம். சித்தாந்த முத்தி. சிவஞானபோதம். சமரசத்தின் சாரம். இதுவே பரிபூரண நிலை. இதுவே உண்மை விளக்கம். "மாயவினோத மனோதுக்கமானது மாய்வதற்கே, நீயான ஞானவினோதந்தனையென்று நீயருள்வாய்" என்ற விண்ணப்ப உண்மை சம்பூரணம். இப்பொழுதுதான் தான் அதுவாகிறுன்.

நிற்க இத்தகைய அபேத அவிரோதநிலை உய்ப்பது எது? அவனருள் அவனருளென்ருல் யார்? குரு (குருவருள்) குரு எப்படி அதுவாவன். அதை யறிவதற்கு அவனல்லவோ ஓர் ஒப்பற்ற ஆதிமூலமாயிருந்தான். அவனிடத்தல்லவோ அதைக் கண்டனே. அவனல்லவா அது "குருவே

மனுவழக்கு சரித்திரம்(படத்துடன்) விலை அணா—4.



சிவமெனக் கூறின னந்தி" இதுவே திருமந்திரம் உன்னிடத்துள்ள சுத்த சைதன்னியம். நீ அது என்று தெளி புத்திகொடுத்து அவனல்லவோ? மேலும், ஆதிப்பிரமம் வெளிப்படுத்த வகையறிவாரெம்பிரானுவரே" என்பதுவே சுருதி. இதுவே திருவாசகம். கற்பக விருக்ஷத்தினின்றும் கூவுங் குயிலனையது நம்மனம் என உருவகப்படுத்திய குயில் பத்தில் அடியில் வரும் இரண்டு திருவாசகங்களின் பொருள் கவனிக்கத் தக்கது.

"சுந்தரத் தின்பக்குயிலே சூழ்சுடர் ஞாயிறுபோன்று
அந்தரத்தேநின்று இழிந்துஇங்கு அடியவர் ஆசையறுப்பான்
முந்து நடுவு முடிவுமில்லா மூவரறியாச்
சிந்துரச் சேவடியானைச் சேவகனை வரக்கூவாய்"

"தேன்பழச்சோலை பயிலுஞ் சிறுகுயிலே இதுகேணீ
வான்பழித் திம்மண்புகுந்து மனிதரை யாட்கொண்டவள்ளல்
ஊன்பழித்துள்ளம் புகுந்து என்றுணர்வது வாயவொருத்தன்
மான்பழித்தாண்ட மென்றேக்கி மணாளனை வரக்கூவாய்"

குருவைக்கொண்டு தான் பரம்பொருளை யறியலாம். மற்றென்றைக் கொண்டும் இது முடியாது. மந்திர தந்திர அஸ்திர சஸ்திர முதலிய பயிற்சிபோலக் கஷ்டப்பட்டாவது இது தானே அறிந்துகொள்ளத் தக்கதல்ல. இது மகா பிர்மவித்தை அதையடைந்தவனுக்குத் தான் அதன் வழி தெரியும். "குருமொழியே மலையிலக்கு மற்ற மொழியெல்லாம் கோடின்றி வட்டாடல் கொள்வதொக்குங் கண்டாய்" என்றது தாயுமானவர். நாம்போய் அறிவோம் என்பது வீண்பொக்கங்கள், மற்ற எந்த விதங்களாலும் முத்தியை யடையமுடியாது. "குருமார்க்க மில்லா குருடருடன் கூடிக் கருமார்க்கத்துள்ளே கருத்தழிந்து கெட்டேனே என்ருர் பட்டினத்தாரும்.

மேலும் "ஊரிலான் குணங்குறியிலான் செயலிலான் உரைக்கும் பேரிலான் ஒரு முன்னிலான் பின்னிலான் பிறதோர் சார்பிலான் வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு நேரிலான்" என்று சாஸ்திரம் கூறுகிறது. அதைக்கண்டாரும் கிடையாது. விண்டாரும் சொன்னதில்லை. மேலும் வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாதது பரம்பொருளாகனின், அதை அடைதல்தான் எப்படி? பரம்பொருளின் அரிய குணங்குடி கொண்டா

பகவத்கீதார்த்த பங்கம் விலை அணா—1.

னொருவனைக்கொண்டு அதன் விசேஷ இலக்கணங்களை யறியவேண்டும். இத்தகைய உத்தம புருஷனை பார்க்கவேண்டும். அவன்சொல்லைக் கேட்க வேண்டும். அவனுடைய நடைப்படி ஒழுகவேண்டும். நம் பளிங்கனைய சித்தத்திற்குச் சார்ந்தவண்ணம் ஆதல் இயல்பு, இவ்வழியனறிப் பரம் பொருளைக்காண்டற்கரிது. இது பற்றி யன்றோ, "குருவினடிபணிந்து கூடுவதல்லார்க்கு அருவமாய் நிற்குஞ் சிவம்" என ஞானக்குறள் கூறல் கொடுத்தது, மேலும் திருவாசகம்,

"உள்ளப்படாத திருவுருவை யுள்ளுதலுங்
கள்ளப்படாத களிவந்த வான்கருணை
வெள்ளப்பிரா னெம்பிரான் என்னைவேறேயாட்
கொள்ளப்பிரானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

ஆகவே ஆதிப்பிரமத்தை ஒப்போடே ஓதுவித்து உள்ளத்தினுள் ளிருந்து அங்கு உறுதிகாட்டி அப்போதைக் கப்போதும் அடியவர்கட் காரமுதாய் நிற்பான் குரு. அவர் நங்கடவுளாவார் என்றும் நின்று நம் மிருதய மன்றுளாடும் தாண்டவமூர்த்தி. அறிவிக்கு அறிவாய் நின்றிலங் கும் சின்மய சொரூபி கு—ரு என்றால் இருளை நீக்குபவன். நம்மைக் கருணையோடு ஆட்கொள்ளவரும் சற்குரு மூர்த்தியின் தாத்பரியம் இன்ன என்பதைச் செவ்வனே விளக்குவது சிவஞான விளக்கம்,

"எட்டாத கொம்பி லிருக்கும் பராபரத்தை
முட்டாக்கு போட்டொருபெண் மூடினாள்—கிட்டிக்
கருத்துறையை யுண்டுமிழ்ந்து காட்டினளொன் றனக்குக்
குருவாகி வந்த குறி"

அத்தகைய சற்குருநாதனை யடைவது தான் எப்படி? யாவருக்கு அவரருள் வாய்க்கும்? என்பதை ஆராய்வதே இதின் முடிபு.

உலகத்திலுள்ள இன்பங்கள் யாவும் அனுபவித்து அவற்றின்கண் தான் ஏதோ ஓர் பெரிய ஆனந்தம் உண்டென்று மீண்டும்மீண்டும் சுவைத் துச் சுவைத்துத் திகட்டிக் கடைசியாய் அறக் கைத்ததுவாகவே முடிகிறது. ஈதென்னை? மேலும் நமக்கு உண்டாகும் இந்தச் சிற்சுகமும், அதனை அனுபவிக்கும் நாமும், இவ்வின்பத்திற்குக் காரணமாயுள்ளதும் நிலையாமை யென்பதும் கண்கூடாயிருக்கிறது. அதன்றியும் அவ்வின்பக்காலத்திற்கு

விபூதி விளக்கம் விலை அணா—4.



முன்னும் பின்னும் உன்னிப்பார்த்தால் இருப்பது துக்கமே. அதுவோ தளர்ச்சிக்குக் காரணம் என்று என்றும் ஆனந்தமே வேண்டிநிற்கும் உல் லாச புருஷனொருவன், தனக்கு இவ்வுலகத்திலுள்ள மண், பெண், பொன் இவற்றின் தேய்வு, ஒழிவு, மாறுதல் முதலியவைகளைப்பற்றி ஓர் அதிதீவிர விரக்தியுண்டாகி, பரிபூரணமான இன்பந்தேடவேண்டுமென்று ஆனந்த அமுததாகங்கொண்டு தேடுவான். தன் களைதீர்ப்பான்வேண்டி ஓர் பெருந்துறையையே நாடுவான். இவன் பிறப்பு இறப்பு என்னும் அலை களால் எற்றுண்டும், பவரோக சுராங்கண்டு அவ்வமயம் காமம் என்னும் சுராவால் விழுங்கப்பட்டும், ஆசைக்காற்றால் அடிக்கப்பட்டும் இருக்கும் துக்க சாகரத்தினின்றும் கரையேறுவான் வேண்டிப் பெரியோர்களால் சொல்லப்பட்ட பிறப்பு என்னும் ஏழ்கடற்கப்பால் ஒருதுறைமுகம் உணரு வான்பொருட்டுத் தன்னுடைய விரக்தியுற்ற பரிசுத்த சித்தத்தையே தோணியாகக்கொண்டு, விஷய இச்சைகளாகிய ஒருவித திமிங்கிலங்களா லும் கவிழ்க்கப்படாது பாதுகாத்தும் திசை தப்பித்திரிவான். ஆனால் அகோரதாகியாகிய அதிதீவரபக்குவமுள்ளவனாதலால் தன் ஆராத விடா யைத் தீர்க்கத் திருப்பெருந்துறையையே, அவனருளாலே சுக்கானை நேர் படுத்தி வந்து முத்தியெனுங் கரைகாண்பான். இதுபற்றியன்றோ,

"கொள்ளக் கருதும் குணமுடையோர் தாம்
உள்ளத்துட் காண்பா ருனை"—என்றது ஆப்தவாக்கியம்.

"ஆண்டவ னடிமையெனு மிருதன்மையினும் உன்வழக்குத் தீராது வீடுவதில்லை நடுவான கடவுளே" என்று என்றும் ஓர் வைராக்கியமாக நின்று நின்று அவனை நினைந்து நினைந்து,

"மனமொழிந்து காமமயக் கொழிந்து மாறுஞ்
சினமொழிந்து வாதனையுந் தேய்ந்தால்—இனிய
குருக்களாய்வந்து அடிமைகொண்டு வீடெய்க்கும்
திருக்களா வாழுஞ் சிவம்"—என்பது பெரியோர் சுருதி.

தானமிட்டுக் கோபத்தையாற்றி மனத்தைத்தடுத்து இருந்தபடி யிருங்கள். குருவருள் வந்து தானே யுமக்கு வெளிப்படுமே என்றார் அருணகிரிநாதரும். பின்னும் பரம்பொருள் மக்கட்குக் கூறரிதானது. கற்று எட் டத்தான் முடியாதது- மற்றொப்புக் கியாது பொவ்வாதது- மனதாலே

சாந்தோபதேச மந்திரி விலை ரூபா 1—4—0

மட்டிட்டுத் தேடவொணாதது; தத்வத்திற்கோவை பட்டாதது. ஆனால் இதுவே முத்திக்குக் காரணமானது. பெறுதற்கோ மிக்க அரிது என்று கூறியிருப்பினும் குருநாதன் மொழிந்த கருத்தை மனத்திலிருத்துங் கண்டோர் முத்தி கைகண்டதே என்றார்,

" சற்குருவைப் போற்றுமற் சற்குருவைச் சாற்றுமற்
சற்குருவைச் சந்ததமுஞ் சாராமற்—சற்குருவை
நின்று தரியாமல் நீள்பிறவி நீங்கிடுமோ
மன்று சிதம்பர தேவா "—என்ற குருநமசிவாயர் குருமொழியை

மனத்திலிருத்துவதே முத்தி சித்திக்கச்செய்யும் இதுவே குரு, சுருதி யுக்தி அநுபவசித்தம்.

ஆகையாலே வீண்படாடோபத்தானே மலைக்கச் செய்யும்படியான சமயமெனுங் காடனுமேல். ஏனெனில் வாதமலைத்திடும். தற்போதமுரத் தெழும் மனமென்னும் பூங்குயிலே ஞானமென்னும் கற்பகவிருக்ஷத்தினின்றே கானஞ்செய்,

" பற்பலவிதப் பூஞ்சோலைபுகாதே பரிபூரணமா மேகச்சோலையில்
எற்பெற நீயென்னாளு மகிழ்ந்தங்கிருவது வென்றென்றையு நாடாமே
செப்பமதாய் நின்னையு நாடாமே சீரருளே வடிவாகியிருந்து
குப்புகழ்போரூர் அப்பனைநாடி கூவாய் வர நீ கூவாய்குயிலே "

என்ற சிதம்பர சுவாமிகளின் சந்நிதிமுறையைக் குருமுறையாகக் கொள்ளுங்கள். அவனருளாலே அவன்றாள் வணங்குங்கள்.

எத்தனைதான் சொன்னாலும் ஏழைமதி தான்பூண்டு அத்தனை மறந்தலைவது நம் பித்தமனத்தின் இயல்பாகையினாலே குருவே சிவமென்பதை பதிப்பிப்பான்வேண்டி இங்கேயும் கூறுவது.

" சித்தஞ்சிவத்தோ டொருக்கிச் சிவமானமுத்தன்
சிவனென மொழிந்திடு மாகமம்
சத்தியஞ்சீவன் சங்கர னென்றே
குற்றமில் நான்மறை கூறும்வகுத்தே "

இறப்பு அற்றால் பிறவியறும். பிறவி வினையால் வருவது. வினை வஞ்ச நினைவால் வருவது. வஞ்சநினைவு பிரபஞ்ச மாயையால் வருவது,

செய்யுளிலக்கணம் விலை அணா 8.



பிரபஞ்சமாயையோ பஞ்சேந்திரிய வாசனையால் வருவது. இந்திரிய வாசனையோ சித்த சுத்தியாலொழிவது. சித்த சுத்தியோ வஸ்துஞானத்தால் வருவது. வஸ்து ஞானமோ அத்தன் செயலாலாவது. அதுவோ அத்தன்பாதத்திற் றிடசித்தம் எனும்பிணைகொண் டொழுகுவதாலாவது. திடசித்தமோ சீவன் சிவச்சொரூபமெனத்தேறுவதால் வருவது. அப்படித் தேருவதோ குருவையும் சிவமெனத்தேறி அவனைப் பற்றிய காலத்தேயாவது. இச்சமயமே சிவமயமாவது. இவனை எம்மலங்களும் அணுகாது. பஞ்சுப்பொதியில் கங்குப்பொறிபட்டதுபோல நமது வஞ்ச வினைப்பொதியில் சற்குருவின் கஞ்சமலர் பாதங்களின் ஓர்போது பட்டதுமே, விட்டது விட்டது பாசவினைவிலங்கே. வினைத்தடை நீங்க, ஞான மடை திறக்க,

" ஆனந்த வெள்ளத்து அழுந்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ "

என்றது நம் மணிவாசகம்.

ஆகவே யிதுவரையும் கூறிப்போந்ததில் எல்லக்கவலையு மற்றின்புற்றிருப்பதுவே சொல்லாரு முத்திச் சுகம் என்பதும், எல்லாக் கவலைக்கும் ஆசையே காரணமென்பதும், 'ஆகவே யாசையற்றதும் துக்கமற்றதும் அந்த துக்க நிவர்த்தியான ஆனந்த நிலையே மோக்ஷமென்பதும் பெற்றும் பின்னும் இத்தகைய மோக்ஷ சாதனைக்கு நிராசையே மார்க்கம். அதனைப் பெறுவதற்கு உத்தம குருவின் கிருபா நோக்கமே போதுமென்றது. ஏனெனில், குருவே பரம்: குருவே சிவம் என்று முறையிடுவது சகல வேதமும். அவனை வணங்குவதெங்ஙனமெனின், சாதன சதுட்டயங்களாலே நிர்மலமாக்கிய சிந்தையைக்கொண்ட அன்றே அவன் நமது உள்ளங்குடிகொள்ளுவான் என்பதே யாவும் திருவருளே யாராலும் குருவருளே திருவருள்.

(குருவருள்)

சைவாகமப்பிரமாணியம் விலை அணா—12.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அருளிலக்கணத்தின் ஓர் பகுதி.

—:o:—

ஜோதி - ௭ - பதி - ௭ - பக்கம் - ௧௫௩ - தொடர்ச்சி.

தொடர்புபற்றிக் குடும்பத்தாரோடு பிணிப்பித்து நிற்கும் பற்று தொடர்பு உடையாரிடத்தே தோன்றி வளர வளரத் தொடர்பிலாரிடத்தும் சிறிது நிகழ்கின்றது. அப்போது தன் குடும்பத்தின் நலமேதான் கவனித்தல் வேண்டும் என்கிற சுயநலத்தோடு கூடிய அற்பஇன்பம் விளைக்கும் எண்ணம் சிறிது விசாலித்ததாகித் தன் குடும்பத்தாருக்கு நேரும் சிறுமை, வறுமை, துன்பம், நோய் முதலியவைகளால் தன் மனம் நெகிழ்ச்சி விருத்தியடைந்து இவைகளுக்கு ஏற்றவாறு கூடுமானவரையில் பரிகாரஞ் செய்ய முயற்சித்தலால் குடும்பபாசத்தைச் சிறிது முதிரச் செய்கிறது. ஏனெனில் இவை போன்ற கஷ்ட நஷ்டங்கள் தன்னைச்சேர்ந்த குடும்பத்தாரல்லாத சுற்றத்தாருக்கும் அண்டை அயலார்க்கும் விளைகின்ற காலத்தில் கண்ணுற்றுத் தனக்கு இவை நேர்ந்தகாலத்தில் உண்டான மனநெகிழ்ச்சியைப்போலவே அவர்களும் துன்புறுவார்கள் என்று முதிர்ந்த அன்பினையுடையோர் எண்ணுவர். எண்ணி அவர்கள் மீது அன்புபாராட்டுவர்.

பிறகு ஒரு வீதியிலுள்ளவர் லௌகிக முறையில் ஏற்பட்ட ஒரு சாதியராயுள்ளவராகின் அவர்கள் அனைவர்மீதும் இவ்வன்பின் நெகிழ்ச்சி செல்கின்றது. பின்னர் சாதி என்னும் பேதத்தை ஒரு சிறிது விலக்கிப் பார்த்துக் கஷ்ட நஷ்டங்கள் யாருக்குநேர்ந்தாலும் உறுவது துன்பம் எனத் தேர்ந்து வருந்துகின்றோர் தம் ஊரில் ஒரு பேட்டையில் வசிப்போர் அனைவர்மீதும் அன்புறுகின்றனர். பிறகு ஊரார் அனைவர்மீதும் அன்புறுகின்றனர். தம் ஊரை ஒரு சிறிய பிரிவாகக்கொண்ட நாட்டில் உள்ள அனைவர் மீதும் அன்புறுகின்றனர். பிறகு நாட்டை அங்கமாகக் கொண்ட

Sivajnana Siddhiyar Rs. 3—0—0.



கண்டத்திலுள்ள வெகு ஜனங்கள் தம் மதம், ஆசாரம், முதலிய கொண்டுள்ளாராயின் அவர்கள்மீது அன்பு பாராட்டுகின்றார்.

பிறகு தேச ஆசாரம், ஒழுக்கம், மதம் முதலிய பலவாற்றாலும் வேறுபாடு உடைய அன்னிய தேசத்தார்மீதும் அன்பு பாராட்டுகிறார். இது போலவே, தம் மதம் முதலியவைகளை விரோதித்துச் செல்லும் புறமதங்களைத்தழுவி நிற்பவர்களானாலும் இன்ப துன்பங்கள் எல்லாமக்கட்கும் ஒப்பவிளைகின்றன எனத்தேர்ந்து உலகத்துள்ள மக்கள் தொகுதிமீது பொதுவாய் அன்பு செலுத்துகிறார்.

இதற்கு மேலும் அன்புக்குரியவை மக்கள் தொகுதியேயன்றி மக்கள் தொகுதியோடு படைக்கப்பட்டு இயற்கையமைப்பிலே கிடைக்கும் புல் பூண்டாதிகளைக் கொண்டு ஜீவித்து மக்களுக்கு ஒருதீங்கும் செய்யாத ஆடு மாடுகள் முதலிய ஜீவராசிகள் மீதும் ஒப்பற்ற பெரிய அன்பு செலுத்துகிறார். ஆகவே கடவுளால் சிருட்டிக்கப்பட்ட மக்களும் ஜீவராசிகளும் கருணைவடிவான கடவுளின் ஒப்பற்ற வல்லபத்தைத் தெரிவிக்கின்றன. எல்லா உயிர்கள்மீதும் பொதுப்பட அன்பு செலுத்துவோர் ஓர் உரிமைச் சகோதரர் ஆவர். உடலைப்பெற்ற ஆன்மா ஒருமைப்பாடு வாய்ந்த நேயத்தைக் கொண்டாடும்.

ஆன்மநேய ஒருமைப்பாடுடையோர் ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், அறிவு, சீலம், தவம், தானம், வந்தித்தல், வணங்கல், வாய்மை, துறவு, அடக்கம், அறிவு, அர்ச்சித்தல் முதலிய அறங்களை அனுஷ்டிப்பேர். இன்னோர் கருணை நெறியை மலை, கடல், காடு, நாடு, ஆறு முதலியவை தடைப்படுத்த முடியா. இரக்கமே வடிவானவர். பலவான ஆஸ்திக மதங்கள் ஒன்றோடொன்று வழிபாடு முதலிய சாதனங்களால் மாறுபட்டாலும் அருளைப் பெறவேண்டும் என்னும் நோக்கத்தை ஒப்புக்கொள்ளுகின்றன. எவ்வளவோ அறங்கள் செய்யினும் அருள் நோக்கம் இலராயின் அவை பயனிலவாம்.

ஆயின் கடவுளிடத்தே மாத்திரம் அன்புடையராயின் போதாதோ உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல் வேண்டுமா என்று உயிர்க்கொலை செய்து புலால் உண்போருள் பலர் ஐயுறுகின்றனர். தின்பவைக்கும் கடவுள் அருளைப் பெறுவதற்கும் சம்பந்தம் ஒன்றுமே இல்லை என்று சிலர் சாதிப்பர். இவ்வளவில் நிற்காமல் தின்பதற்கே ஆடு முதலிய பிராணி

Studies in Saiva Siddhanta Rs. 3—0—0.

களைக் கடவுள் படைத்திருக்கிறார்; தின்னாது விடுவோமாயின் அவை மிகப்பெருகும்; பூபாரம் ஒழியவேண்டுவது நியாயந்தானே; மேலும் நாமா கொல்லுகிறோம் கொல்பவன் கொன்று விற்பவன் விற்க நம் முன்னோர் உண்டுவந்ததையே உண்கின்றோம்; கடவுளுடைய அருள் ஊன் படைத்தவர்க்கும் கிடைத்ததில்லையோ என்று வைரக்கல்லினுங் கடினமான உள்ளம் உடையோர் உரக்க ஓசை இடுவர்.

இதனை முறையே கண்டித்தல் அருள் நெறியில் நிற்கமுயலும் அனைவரையும் பொறுத்த கடமை யாகும். அரிதரிது மானிடராதல் அரிது என்பதற்கு இணங்க மனிதப்பிறவி எடுத்தோர் பெறும் பயன் ஆன்மலாபம் ஆகும். இயற்கை உண்மை வடிவினராகிய கடவுளின் திருவருளை எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் தடைபடாமல் பெற்று வாழ்வதே மனிதரின் பெரியநோக்கம். இந்நோக்கம் எதனால் பெறக்கூடும் எனில் உயிர் இரக்கத்தால் பெறலாம். உயிர்களிடத்துக் கொள்ளும் அன்பு இரக்கமாகும். ஆன்மாக்களிடத்துக் கொள்ளும் அன்பு உருக்கமாகும். உயிர் இரக்கமும் ஆன்மவுருக்கமுமே சீவகாருண்யம் ஆகும். எல்லாச் சீவர்களும் ஒருரிமைச்சகோதரர் எனக்கொண்டு ஒழுகுதல் ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆகும். இவ்வொழுக்கம் அருள் நெறி பயில எண்ணும் எல்லார்க்கும் மிகமுக்கியமான முதற்சாதனம் ஆகும். இது இல்லாத போது ஏனைய அறம் கோடி பயின்றும் பயனில்தாம்.

அருள் என்பது கடவுள் தயை. கடவுளியற்கை விளக்கம். சீவகாருண்யம் என்பது சீவர்கள் தயை. சீவர்களான்ம இயற்கை விளக்கம் இதனால் தயையைக்கொண்டு தயையைப் பெறுதலும் விளக்கத்தைக்கொண்டு விளக்கம் பெறலும் கூடும். ஜீவகாருண்யம் உண்டானால் அறிவும் அன்பும் உடனாக விளங்கும், அதனால் உபகார சத்தி விளங்கும். உபகாரசத்தியால் நன்மை யாவும் விளையும், உயிர்கள்மீது இன்னொரு உயிர் இரக்கங் கொள்வது பழைய ஆன்ம உரிமையாகும். முற்பிறப்பில்சீவகாருண்யம் இல்லாதிருந்தோர் பக்ஷிசண்டாளம் முதலிய செந்துக்களாகப் பிறப்பர் என்பது பெரியோர் துணிபு.

ஜீவகாருண்யவொழுக்கம் கைவரப் பெற்றவர்க்கே ஏனைய ஒழுக்கங்களும் பயன்படும். அவை இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் என்பன.

Essentials of Hinduism. 3—0—0.



“இந்திரிய ஒழுக்கம் என்பது: நாத முதலிய தோத்திரங்களை உற்றுக்கேட்டல், மற்றவை கேளாதிருத்தல், கொடுஞ்சொல் முதலிய செவிபுகாமல் நிற்றல், அசுத்தங்களைத் தீண்டாதிருத்தல், கொடூரமாகப் பாராதிருத்தல், ருசியின் மீது விருப்பமின்றி இருத்தல், சுகந்தம் விரும்பாதிருத்தல், என்னும் ஞானேந்திரிய ஒழுக்கமும்; இனிய வார்த்தையாடுதல், பொய் சொல்லாதிருத்தல், ஜீவ இம்சை நேரிடுங்கால் எவ்விதத் தந்திரத்திலாவது தடைசெய்தல், பெரியோரிடத்தில் செல்லுதல், உயிர்க்கு உபகார நிமித்தம் கையாலுபகரித்தல், மலஜலபாதைகள் அளவு மீறாமலும் குறையாமலும் அளவைபோல் தந்திர ஔஷதிகளாலும் ஆகாரப் பக்குவத்தாலும் பவுதிகபக்குவத்தாலும் செய்வித்தல் என்னும் கர்மேந்திரிய ஒழுக்கமும் வேண்டும்.

“கரண ஒழுக்கம் என்பது: சிற்சபையின்கண் மனத்தைச் செலுத்துவது தவிர மற்றெந்த வகை ஆபாசத்திலும் செலுத்தாமல் இழுத்து மேற்குறித்த இடத்தில் நிறுத்தல், பிறர்குற்றம் விசாரியாதிருத்தல், செயற்கை குணங்களாலுண்டாகிய கெடுதிகளை நீக்கி இயற்கையாகிய சத்துவமயமாயிருத்தல், பிறர்மேல் கோபியாதிருத்தல், தனது சத்துருக்களாகிய தத்துவங்களைக் கோபித்தல், அக்கிரம அதிக்கிரமப் புணர்ச்சி செய்யாதிருத்தல் முதலியவாம்.

“ஜீவ ஒழுக்கம் என்பது: எல்லாமனிதரிடத்திலும் ஜாதி சமயம் குலம் கோத்திரம் சூத்திரம், தேசமார்க்கம் உயர்வு தாழ்வு முதலிய பேதமற்றுத் தானாகி நிற்றல் முதலியவாம்.

“ஆன்ம ஒழுக்கம் என்பது: எண்பத்துநான்கு நூறாயிரம் யோனிபேதங்களிடத்திலுள்ள ஆன்மாக்களிடத்தும் இரங்கி ஆன்மாவே சபையாகவும் அதன் உள் ஒளியே பதியாகவும் கண்டுகலந்து பூரணமாக நிற்றல் முதலியவாம்.

“ஷை இந்திரிய வொழுக்கங் கரணவொழுக்கங்களை உண்மை உணர்ச்சியுடன் ஒழுகவேண்டும். ஜீவவொழுக்கம் ஆன்மவொழுக்கம் ஒழுகுவதற்கு ஆனந்த முயற்சியில் பழகவேண்டும்.”

இத்தகைய ஒழுக்கம் நிரம்பியும் ஜீவகாருண்ய ஒழுக்கம் இலராயின் உண்மையான ஞானி எனக்கூறுதல் ஒன்றாது.

அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் என்பது தமிழ் நாட்டில் பழம்பாடமாகும். தமிழ் நூல்கள் கடவுள் அன்புவடிவினர் என்று கூறுவதற்குப் புலைகொலை தவிர்த்தலாகிய சிறப்பியல்பைச்சாதனமாக வற்புறுத்தும். கொல்லாமையும் கொன்றதைத் தின்னாமையும் ஆகிய அறங்களைப் பயில்வோர் சூது, களவு, பொய் முதலிய ஏனைய குற்றங்களைச் செய்ய எண்ணார். வடநாட்டிலுள்ளோர் கடவுள் பக்தனிடத்தில் விளங்குகிறார் என்றுகூறி, தெய்வஅம்சமாக அவர்கள்கூறும் பசுமுதலிய மிருகங்களை சுயநலத்தோடு கூடிய உலக இன்பம் முதலிய சாமானிய சித்திகள் பொருட்டு யாகங்களில் கொலைசெய்து உண்டார்கள். இக்கருத்தை வலியுறுத்துவதற்கு வடமொழி வேதத்திலுள்ள விஷயங்களின்போக்கு காட்டாக நிற்கும் ஒரோர் காலத்தில் உருத்திரன்' விஷ்ணு, பிரமன் ஆகிய மூவராலும், பராசரன் வியாசன் முதலிய முனிவராலும் தொகுத்தும் வகுத்தும் பலவாறு விகாரப்படுத்தப்பட்ட வேதம் சிட்சை, ஆயுள்நூல், சோதிடம், தருமநூல் முதலியவும் கன்மவிசேடம், மந்திரவிசேடம், சுராபானம், பரதாரகமனம் அசத்தியவாசகம் முதலியவைகளையும் அடக்கிக்கொண்டிருக்கின்றது. சமயத்தார் சாதியார் பலர்க்கும் ஓதவும் எழுதவும் பயிலவும் இடங்கொடாதிருக்கின்றது. பசுக்கொலை முதலிய கூறியிருத்தலின் தோத்திர ரூபமாக எழுந்த அது எங்ஙனம் அன்புஞ் சிவமும் இரண்டல்ல என்று போதிக்கும்.

வடமொழியாகிய "பக்தி" எனும் மொழி கடவுளிடத்தே செலுத்தும் உள்ள நெகிழ்ச்சி என்னும் பொருளில் வெகு பிற்பட்ட காலத்தே உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது என்றும் முதன் முதலில் குடும்பத்தின்மீது செலுத்தும் அன்பு முதலியவற்றிற்கும் பக்தி என்பது உபயோகப்படுத்தப்பட்டது என்றும் வடநாட்டிலுள்ள ஆங்கிலம்வல்ல வடமொழி ஆராய்ச்சியாளர் கூறுகின்றார்.

கிரீக் பாஷையிலும் பக்தி என்பதைக் குறிக்கும் மொழியாகிய (Pietas) என்பதை குடும்பத்தின்மீது செலுத்தும் அன்புக்கு உபயோகப்படுத்தியிருக்கின்றனர் (Family Pietas). வெகு காலத்திற்குப் பின்னரே உண்மையான அன்பு கடவுளிடத்தே செலுத்துவது என்று தேர்ந்திருத்தல் வேண்டும்.

ஆயினும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த சித்தர் பரம்பரையில் வந்த திருமூலதேவர் தம் திருமந்திரத்தில் பலவித சித்திகளைக் குறித்



துப் பலபடக்கூறி, "அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" எனும் அமுதமொழியைப் பொறித்து வைத்ததை ஊன்றிநோக்கின் பல் நெடுங்காலமாகப் புலை கொலை தவிர்த்தல் என்னும் உயிரிரக்கமும் ஆன்மவுருக்கமும் ஆகிய ஜீவகாருண்ய நன்னோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு அம்பாள் உபாசனையை கைக்கொண்டு அளவு கடந்த நெடுங்காலம் அருளனுபவ நிகழ்ச்சிபெற்று இன்புற்று சித்தர் கணத்தோர் விளங்கினர்கள் என்பது பெறப்படும்.

தமிழ் வேதம் அருளிய தெய்வப்புலமைத் திருவள்ளுவதேவர் புலை கொலை தவிர்த்தலே செழும் பொருளை அடைவதற்கு உரிய வழி என்றும் அது இல்லாத வழி ஏனைய அறங்கள் கோடி கோடி செய்யினும் பயனிலவாம் என்றும் இடித்திடித்து உரைக்கின்றார்.

"தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிதூன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்."

ஒரோர்இச்சை நிறைவேற்ற ஏனையோர் யாகாதிகளில் உயிர்க்கொலை செய்வதை முற்றும் கண்டித்து ஜீவகாருண்ய ஒழுக்கத்தை நாட்டுவார்.

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத் துண்ணாமை நன்று."

ஜீவகாருண்ய ஒழுக்கம் பூண்டோர் எல்லா உயிரும் தொழும் தேவராவர் என்றார்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்."

அறங்களைப்பாகுபாடு செய்து அதனதன் சிறப்புநோக்கி முறையாக அமைக்க எண்ணுவோர் தலையாய அறம் "ஒன்றாக நல்லது கொல்லாமை" என்று தேர்ந்து ஜீவகாருண்யமாகிய உயிரிரக்கமும் ஆன்மவுருக்கமுமே இன்றியமையாது வேண்டப்படுவன என்றும்

"நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழுநெறி."

என்றுவரும் பொன்மொழியைக் கடைப்பிடித்து அருள்நெறிக்கு முதற்சாதனம் புலைகொலை தவிர்த்தல் ஆகிய அறநெறியே என்றும் முடிவுகட்டுவர்.

தவிர்க்கவேண்டிய தீயசெய்கைகளுள் பூலோக சரஸ்வதியாகிய ஒளவைமூதாட்டியாரும் "புலையுங் கொலையும் களவும் தவிர்" என்று உலகினர் உய்த்து உணரவேண்டிய உண்மையைத் திண்ணைப் பள்ளிக்கூடத்திலேயே சிறுகாலையிற் போதித்த பாடமாகும்.

தவராஜசிங்கமாகிய முற்றுந்துறந்த பட்டினத்தடிகளும் "கொல்லாமல் கொன்றதைத் தின்னாமல்" என்று ஜீவகாருண்யத்திறம் பேசினர். திருவருட் பெருஞ் செல்வராகிய தாயுமானவப் பெருந்தகையாரும்

"கொல்லா விரதமது கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே."

என்று உலகில் நல்லவர் என ஒழுக விரும்புவோர் கையாளவேண்டிய ஜீவகாருண்ய ஒழுக்கத்தை வற்புறுத்தியிருக்கின்றார். சிறிது காலத்திற்குமுன் விளங்கிய திருவருட்பிரகாச வள்ளலாரும் தமக்கு உள்ள இச்சை

"சிற்சபைநடமும் பொற்சபை நடமும் தினந்தொறும் பாடி நின்றாடித்
தெற்சபை உலகத்துயிர்க் கெலாம் இன்பஞ் செய்வது என் இச்சையாம் எந்தாய்"

"எவ்வுயிர்த்திரளும் என்னுயிரெனவே எண்ணி"

"வன்புலை கொலை இரண்டும் ஒருவிய நெறியில்
உலகெலாம் நடக்க உளத்தறவும்."

"மண்ணுலகத்திலே உயிர்கள் தாம்வருந்தும் வருத்தத்தை
ஒருசிறிதெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும் கணமும்
நான் சகித்திட மாட்டேனே"

"வன்புலால் உண்ணும் மனிதரைக்கண்டு மயங்கி
உள் நடுங்கி ஆற்றாமல்
என் பெலாங் கருக இளைத்தனன் அந்த இளைப்பையும்
ஐயநீ அறிவாய்."

"இரக்கம் பற்றி நான் உலகில் ஆடலே அன்றிஓர்
விடயக் காதலால் ஆடல் கருதிலேன்."



இவை என அருளை நினைந்து ஒருபுறத்தே அயர்ந்து அழுது பாடினதையும் திருவருட்பாவில் 3738 முறை அருள் எனும் மொழியை உபயோகப்படுத்தி இருப்பதையும் ஜீவகாருண்ய ஒழுக்கம் உலகு எங்கும் பரவவேண்டும் என்று திருவம்பலச்சக்கரஉபாசனைசத்தியால் திருவம்பலமுடையார் திருவருளை நினைந்து பாடியிருக்கின்றதையும் ஆழ்ந்துநோக்கின் தண்டபாணிசுவாமிகள் "இரக்கமே வடிவாம் வடலூரன்" எனப்பாடியது விளங்கும். வள்ளலார் தோன்றுந் துணையாயிருந்த காலத்து மேற்றிசையாரும் சமீபகாலத்தில் புலை கொலை தவிர்ப்பார்கள் என்று கூறினது இப்போது Vegetarian Societies என்று மேற்றிசையில் உண்டாகியிருப்பதை நினைப்பூட்டுகின்றது.

முருகதாஸர் என்னும் தண்டபாணி சுவாமிகள் திருச்செந்தூரில் கடல்கொள எறிந்த பல்லாயிரம் வண்ணப்பாக்கள் போக இப்போது அறியக்கிடக்கும் ஐம்பதினாயிரம் பாக்களுள் பற்பல இடங்களில் பசுக்கொலை நீங்கவேண்டுமென்றும் புலை கொலை பண்டைக்காலந்தொட்டு இற்றைநாள் வரையிலுமுள்ள பெரியோர்கள் நூலால் தவிர்க்க வேண்டும் என்றுபறை சாற்றியும் மக்கள் தொகுதியுள் பெரும்பாலார் இன்னும் ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காது அந்தோ வாழ்நாளை வாளாகழிக்கும் பேதைமாந்தர் ஆவர் என்றும் இவர்கள் திருந்துவதற்கு அர்ச்சுனன் போன்ற சுத்தவீரன் ஒருவன் வாளேந்திவந்து பயமுறுத்துவனேல் அப்போதுதான் உலகமுழுதும் ஜீவகாருண்யம் பரவும் என்றும் பலமுறை கூறப்பட்டுள்ளது.

அன்றியும் தம் வாழ்நாள் முழுதும் அப்பெரியார் பசுக்கொலை நீங்காதபடியால் சோறு முதலிய இன் சுவை உணவுகள் கொள்ளாது பயறால் செய்த ஓர்வித அடையையே உட்கொண்டு முருகப்பிரானிடம் இக்குறை தவிர்த்தல்வேண்டும் என்று விண்ணப்பித்துக்கொண்டிருந்தார்கள் என்பது பலரும் அறிந்ததே.

ஆகவே, திருவள்ளுவதேவர் காலமுதல் அருட்பிரகாச வள்ளலார் காலம் ஈறாக உள்ள பெரியோர்கள் மக்கள் பிறவி எடுத்ததின் பயன் உயிரிரக்கமும் ஆன்ம உருக்கமும் கொண்டு அன்பின்வழியது உயிர்நிலை என்பதைப்பழகிச் சிறிய நெருப்பைக்கொண்டு பெரிய நெருப்பைப் பெறுதல் போல உயிர்களிடத்துச் செலுத்தும் சிறிய தயவைக்கொண்டு கடவு

ளருளாகிய பெரிய தயவைப் பெற்று இன்புற்று வாழ்தலே என்னும் கொள்கையைக் கடைப்பிடித்தலாகும் என்று பறைசாற்றி இருக்கின்றார்கள். நம் தமிழ் நாட்டகத்தே உள்ள ஆரியர் மட்டும் பரம்பரையாக புலை தவிர்த்தவராகக் காணப்படுகின்றார்கள். கன்னடதேசம், ஸூரியா, பங்காளம் முதலிய பரதகண்டத்தில் உள்ள பிற நாடுகளில் உள்ள ஆரிய மக்கள் மச்சம் மாத்திரம் உண்பது கொண்டு மச்சப்பிராமணர் என்று அழைக்கப்படுகின்றார்கள். வடநாட்டில் காளிகோயிலில் உயிர்ப்பலி பிராமணபூசை உள்ளபோதும் கொடுத்து வருகின்ற வழக்கத்தை இன்னும் உன்னத்தை நோக்கின் புலைகொலைத் தவிர்த்த புண்ணியர்களாகிய பழந்தமிழருடைய பண்டைச்சிறப்பு வெளியாகின்றது. சிறு கிராமங்களில் சிறு தெய்வங்கள் ஏற்பட்டதும் அவைகள் பொருட்டு உயிர்ப்பலி இடுவதும் இட்டதை உண்ண நேர்ந்ததும் பிற்பட்டு பிற நாட்டாரோடு நேர்ந்த சகவாச தோஷம் போலும்.

(இன்னும் வரும்.)

மோ. கந்தசாமி முதலியார். B.A.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மாம்ஸ போஜனக் குறைவும் மரக்கறி ஆகார உயர்வும்.

:o:

தொகுதி-7-பகுதி-6-பக்கம்-14:-தொடர்ச்சி.

இந்தக்காரணங்களால் மனிதனுக்குச் சரியான ஆகாரம் மரக்கறி பதார்த்தமேயென்பது பெறப்படுகின்றது.

## மூன்றாவது—பலம் தருவதில் மரக்கறி பதார்த்தம் எப்படியிருக்கிறது என்பது.



இதற்கு நாம் யானையைக் கவனித்துப்பார்க்கலாம். யானை மாம்ஸம் தின்பதில்லை. யானை தாவரவர்க்கங்களைப் புசிப்பதேயன்றி மாம்ஸ ஆகாரத்தைத் தேடுவதேயில்லை. யானைக்கிருக்கிற பலமும் யானைக்கிருக்கிற உற்சாகமும் வேறெந்த மாம்ஸம் தின்னும் பிராணிகளுக்கிருக்கின்றன? யானையைப்பாருங்கள். மானின்வேகத்தைக்கண்டு மருளாதவர் யாரிருக்கிறார்கள்? கொரில்லா என்னும் ஒரு பெரிய குரங்கு ஒரு பருவான பிரங்கியை ஒடித்துவிட்டதென்று சொல்லப்பட்டிருக்கிறது. காட்டில் இந்த கொரில்லாவோடு சமதையான வல்லமையைக்காட்டும் மிருகம் காணப்படவில்லை (பர்ஜர் ஆர் டாக்டர்.)

## நான்காவது—மாம்ஸம் சாப்பிடுவதால் ரோகம் உண்டாகிறதா என்பது

மாம்ஸம் சாப்பிடுவதால் கணக்கு வழக்கில்லாத கொடியரோகங்கள் உண்டாகின்றனவென்று சொல்ல இடமிருக்கிறது. கான்ஸர் (Cancer) என்னும் கொடிய ரோகமானது மாமிஸம் தின்பதாலேயே உண்டாகிறதென்று கருதப்படுகிறது. இது மரணம் விளைக்கும் மஹாகொடியநோய் அநேக பெரிய பெரிய டாக்டர்கள், கான்ஸர் உண்டாவது மாம்ஸத்தால் தானென்று நன்குசோதித் திருக்கிறார்கள். க்ஷயரோகம் நரம்புசிலந்தி, குடலைப்பற்றிய விஷஜ்வரம், பித்தபாண்டு என்னும் உடம்பு வீக்கநோய், கணுவாதம், முடக்குவாதம், கால்கைவலி, அப்பென்டிஸைடிஸ் என்னும் கொடிய குடல்ரோகம், காசசம்மந்தரோகங்கள், கொடியமலபந்தம் முதலிய கடினரோகங்கள் எல்லாம் அநேகமாய் மாம்ஸபோஜனத்தினாலேயே உண்டாகின்றனவென்று தக்க பண்டிதர்களால் ஆராய்ந்தறியப்பட்டிருக்கின்றன. (பர்ஜர் டாக்டர்.)

ஆகவே மேற்சொன்னவண்ணம், மனிதன் தேகக்கட்டின்படி சைவ ஆகாரமே ஒத்த உணவென்றும், மாம்ஸ ஆகாரம் ஒத்த உணவன்று என்றும், தேகத்திற்கு, அவஸ்யமாய் வேண்டிய ஆகாரங்களின் மூலாதாரங்கள் மரக்கறி ஆகாரத்திலேயே பெறலாகுமென்றும் அதிலேயே அவைகள் சுத்தமான நல்ல நிலைமையில் விளங்குகின்றனவென்றும், மாம்ஸம் தின்பதினால் பயங்கரமான நோய்கள் பற்பல உண்டாகின்றனவென்றும் தாவரவர்க்கங்களையே புசிக்கும் மிருகங்கள் மிகச் சிறந்த குணத்தையும் உயர்ந்த பலத்தையும் உடைத்தாயிருத்தலை நாம் கண்கூடாகப் பார்த்தலின் அவ்வித ஆகாரத்தினால் நாமும் அதிக பலம் பெறலாமென்று நன்கு விளங்குகின்றன.

இப்படியிருக்கும்பொழுது, நாம் ஏன் வெகு சுத்தமான ஆகாரத்தை விட்டு அசுத்தமான ஆகாரத்தை நாடவேண்டும்? எல்லா விதத்திலும் சைவ ஆகாரமென்னும் மரக்கறி ஆகாரம் ஸ்லாக்கியமுற்றிருக்கின்றது. மரக்கறி ஆகாரம் படி ஆகாரம் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் மாதிரி, தேகவுற்சாகமும், நஷ்டம் ஆயாசம் இவைகளைப் பொறுத்தலும் மாம்ஸம் தின்பவர்களிடம் காண்பதருமையென்று பண்டிதர்கள் ஆராய்ச்சியினால் பரிசோதித்தறிந்திருக்கிறார்கள். கால்நடைப் பந்தயங்களில், காய் பழவர்க்கங்கள் சாப்பிடுபவர்களே ஜயம் பெற்றிருக்கிறார்கள். இன்னும் தேகவலிமையையும், உழைப்புத்தொழிலில் உற்சாகத்தையும், மேலும் மேலும் பற்பலவிதமாய் பந்தயங்களில் காட்டி அவர்களே கீர்த்தி பெற்றிருக்கிறார்கள். உலகத்தில் பெரும்பாலோர் ஜபானியர், ஹிந்துக்கள் முதலிய பல்லோர், மாம்ஸ பக்ஷணத்தைத் தவிர்த்து சைவ ஆகாரத்தையே ஏற்று, எவ்வளவோ தைரியமும், சுகமுமுடையவர்களாயிருக்கிறார்கள். இப்படியிருக்க, ஏன் வேறு பெரும்பாலோரும் மாமிச உணவைத் தவிர்த்தலாகாது? அப்படித்தவிர்ப்பதனால் தங்கள் தேகசுகம் விர்த்தியாவதுமன்றி குற்றமற்ற நிரபராதிகளான ஜீவஜந்துக்களின் உயிரைக் காப்பாற்றினவர்களுமாவார்கள். எத்தனை ஆடுகள், எத்தனை மாடுகள், எத்தனை கோழிகள், எத்தனை குருவிகள், எத்தனை கோடிக்கணக்கான ஜீவஜந்துக்கள் நிர்த்தாக்ஷிணியமாய்க் கொல்லப்படுகின்றன? நமக்கு யாதொரு கெடுதியும் செய்யாத அவைகளை நாம் உணவிற்கென்று சித்திரவதைக்குட்படுத்திச் சின்னாபின்னம் செய்வது சிறிதும் ஏலாதகாரியமே. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஏழைமிருகங்களை எண்ணிலாதபடி கொலைக்களத்திற்குக் கொண்டுபோய் அவைகளைப் பற்பல உபத்திரவங்களுக்குட்படுத்தி உயிரைப் போக்குவதைக் கண்டு, சதா மாமிஸ போஜனத்திலேயே மனதைச்செலுத்தியிருந்த அவ்வூரார் இப்போது ஆயிரக்கணக்காய் மனமிரக்கத்திலேயே மரக்கறி பதார்த்தங்களை கைக்கொள்வாராயினர். அப்படியிருக்க, ஆதிகாலத்திலேயிருந்து மாம்ஸ போஜனத்தின் குறைவையும் மரக்கறி பதார்த்தங்களின் உசிதத்தையும் நோக்கிச் சைவ ஆகாரத்தை அனுஷ்டித்தலையே உபதேசித்துவந்த நம்மனோர், அவ்வாறு நடப்பதைவிட்டு, அதி அருசிதமான மாம்ச பக்ஷணத்தை இன்னும் ஸ்லாக்கியமாய் நினைத்து அதையே கையாடுவது அழகன்று.

மதவிஷயங்களில் அபிமானம்வைத்துப் பக்தியென்பதைப் பக்குவமாய்ப் பயிரிடுபவர்களுக்குச் சீவகாருணியமும் கொலைசெய்யாமையும்



புலாலுண்ணாமையும் வெகு அவசியமாய் வேண்டியிருக்கின்றன. நம்மவர்களுக்குள் பலருக்கும் இதரமதஸ்தர்கள் அனேகருக்கும் இந்த எண்ணம் இதயத்தில் கிடையவே கிடையாது. அரஹரா என்று சிவபூஜை செய்து, ஆட்டின் கழுத்தை அடியோடே அறுப்பதும், கோவிந்தா கோவிந்தா என்று தளிகைபோட்டுக்கொண்டு கோழிகுடும்பத்தைக் கூண்டோடே தொலைப்பதும் சர்வ சாதாரணமாயிருக்கிறது. ஆடுபலி கொடுக்கிறதாய் அம்மனுக்குப் பிராத்தனை செய்துகொள்வதும், கோழிகளைச்சுற்றிக் கோவிலுக்கு விடுவதாய் கும்பிடுபோட்டுக் கந்தையை முடிந்துவைப்பதும் கோரவழக்கங்களாய் நம்மனோர்க்குள் கொடுமை விளைக்கின்றது. இரக்கமென்பதே யில்லாது ஈரமென்பதே காட்டாது, கொலைத்தொழில் புரிந்து புலையுணவருந்தினால், புண்ணியனாகும் கடவுளுக்கு, அண்ணலாகும் அற்புதனுக்குக் கருணை எப்படித்தோன்றும், கிருபை எப்படியுண்டாகும்.

உலகத்தில் சமயங்கள் உயர்ந்தவைகளாயுள்ளவை, நாலைந்தேயாகும். ஹிந்துமதம், புத்தமதம், கிறிஸ்தவமதம், மஹம்மதியமதம், பார்ஸிக்காரர்களின் பக்குவமான அக்கினிமதம் இவைக்குள் முதலாவது,

கிறிஸ்தவமதத்தை எடுத்துக்கொள்ளுவோம். உலகத்தில் பெரும்பாலோரான ஜனங்கள் கிறிஸ்தவமதத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். தற்கால ஸைன்ஸ் நாகரீகத்தில் தலைநிமிர்த்தியுள்ளவர்களாகிய ஐரோப்பியர்கள் பெரும்பாலாரும், அமெரிக்காவிலுள்ள ஐரோப்பியர்களும் இன்னும் உலகத்தின் பற்பல பாகத்திலும் குடியேறியுள்ள ஐரோப்பியர்களும், இதரதேசத்தாராயிருந்து பின்னர் கிறிஸ்தவ மதத்தை மேற்கொண்டவர்களும் எவரோ இவர்களிற் சிலர் நீங்கலாக, கிறிஸ்துவமதம் மாம்ஸ பக்ஷணத்தையே உபதேசிக்கிறதென்றும், அதற்கென்றே ஆடுமாடுகளும் கோழி குருவிகளும் அகிலத்திற் படைக்கப்பட்டனவென்றும் அபிப்பிராயப்பட்டு அதே வண்ணம் நடக்கிறார்கள். இது வெகு தப்பான அபிப்பிராயம். கிறிஸ்துமஹாபுருஷர், அவதாரபுருஷர்! கருணையையும் அன்பையுமே போதித்த பெரியார் அவர்! அருளே வடிவமாகிய அவர், ஆட்டையறுத்து ஆயாசந்தீரென்று சொன்னாரென்றால் யார்தாம் ஒத்துக்கொள்வர்? அன்பைப் போதிக்கவந்த அவதாரபுருஷர் அன்பைநீக்கி ஆவிபோக்குவாய் என்று சொல்வாரா எங்காயினும்? 'நீ யாதொன்றையும் கொல்லாதே' என்று அவர் கட்டளையிட்டிருக்க நாம் தப்பர்த்தம் செய்யக்கூடாதென்

பது அனேகர் அபிப்பிராயம். மனிதர் சாப்பிடவேண்டிய உணவு மரக்கறியாகுமென்பதற்கு, (ஜெனிஸிஸ் 1-29ல்) தெளிவான ஆதாரமிருக்கும்போது அதைவிட்டு வேறு அர்த்தபேதங்கள் செய்வது அனர்த்தமாய்த்தான் முடியும். மோக்ஷலோகத்திலிருக்கும் உன்னுடைய பிதாவைப்போல் ஸர்வபரிபூரணனாய் விளங்குக என்று சொல்லவந்ததால் நாம் படிப்படியாய் மேலும் மேலும் பக்குவதசைக்கு வந்துகொண்டிருக்கிறோமென்றும் ஆகவே, நம்மிடம் தற்காலமிருக்கும் குறைகளிலொன்றாகிய மாம்ஸபோஜனத்தையும் நிறுத்தித்தான் உன்னத நிலைக்கு வரவேண்டுமென்றும், இதுதான் சரியான கிறிஸ்துமதபோதனை, மற்றதெல்லாம் போலிக் கிறிஸ்துமத போதனையே யாகுமென்றும் சில பிரபல கிறிஸ்தவ பண்டிதர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். (ரெவரன்ட் மிட்செல், மிஸ்டர் மெக்ரிகார் என்பவர்கள் எழுதிய நூல்களைப் பார்வையிடுக.)

(இன்னும் வரும்.)

தி. பக்தவத்ஸலம் பிள்ளை, B. A., M. P. P. I.

---

# மதிப்புரை.

சிவஞானபோத உபந்நியாச பாடம்:—சுத்தாத்துவித சித்தாந்தவைதிக சைவ சாத்திர இரத்தினமாகிய சிவஞானபோதத்தினை அதன் சிற்றுரை பேருரைகளைப் பெருமுயற்சியுடன் ஆராய்ச்சி செய்து நுண்ணறிவாலுண்மை யாய்ந்து அறியத்தக்க பெருவிடயங்களை யெல்லாம் எளிதிலுணருமாறு இலேசான செந்தமிழ் நடையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலைப்படித்தபின் மேற்படியுரைகளை ஆராயின் விடயங்கள் எளிதிற் விளங்குமென்பதில் தடையில்லை. மேற்படியுரைகளை ஆராய்வதற்குப் புலமையில்லார்க்கும், சிவஞானபோதத்துண்மை தெரிந்துகொள்வதற்கு இந்நூல் ஏதுவாகும். சிவஞானபோதத்தை ஆராயத்தக்க பெரும்புலமையுள்ளவர்களும் அடிக்கடி எடுத்துப்பார்ப்பதற்குபயோகமாக அவர்கட்கு இது ஓர் குறிப்புநூலாகும். இக்காலத்தில் இத்தகையநூல் வெளிவந்தது அத்தியாவசியமான உலோகோபகாரமேயாம். இஃதியற்றினோர் ஸ்ரீமத்-V. P. காந்திமதிநாத பிள்ளை அவர்கள் B. A. (வக்கீல் அம்பாசமுத்திரம்.)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி எ.] 1918ஆ செப்டம்பர்மீ [பகுதி கூ.

## சாந்தோக்யோபநிஷத்து.

### எட்டாம் பிரபாடகம்.

### கண்டம் ௪.

அத்தகைய ஆத்துமா யாவற்றிற்குமணை. எல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருக்கிறது, யாவற்றையும் நியதியினடத்துகிறது, காலத்தால் கட்டுப்படுவதில்லை, ஜரை, மிருத்யு, சோகம், சுகிருதம், துற்கிருதமடைகிறதில்லை, பாபமற்றது, இவ்வுண்மை யறிந்த அந்தன் அநந்தனாய் விடுகிறான். தேகமுண்டானபோது அதன் காரியத்தால் மொத்துண்டவன் தேகநீங்கியபின் மொத்துண்ணான், சங்கடத்திலுள்ளாகான், இவனுக்கு இரவு பகலாகி விடும்.

௩. இவர்கள் பிரமசரியத்தினால் பிரமலோகத்தை யடைகிறார்கள். எல்லா லோகங்களிலும் காமசரனாயிருப்பர்.

### கண்டம் ரு.

யஞ்ஞமென்பது பிரமசரியமே. ஞானி அந்தப் பிரமசரியத்தால் யஞ்ஞபலத்தையடைகிறான். தேவபூஜை முதலிய பிரமசரியமே. இப்பிரமசரியத்தால் ஆத்மாவை யடைகிறான்.

உ. சத்ராயநனம் பிரமசரியமே இப்பிரமச்சரியத்தால் ஆத்மாவை சத்தாகவிருக்கிற ஆத்துமாவிற்கு இரட்சணத்தையடைகிறான் மவுனமென் பது பிரமச்சரியமே. இதனால் பிரமத்தை யடைகிறான்.

ங. அநாசகாயநம் பிரமசரியமே, இதனால் எந்த ஆத்மாவையடை யப்படுகிறதோ அந்த ஆத்மாவிற்கு நாசமில்லை. அரண்ணியாயநம் பிரம சரியமே, பிரமலோகத்தில் "அர" "ண்ய" என இரண்டு சமுத்திரங்களும் அன்னமாகியவோர் மதாசகுளமும், அசுவத்த விருட்சமும், அமிர்தஸ்ரவ மிருக்கிறது அபராஜிதா எனும் பட்டணமிருக்கிறது.

ச. பிரமசர்யத்தால் பிரமலோகத்தில் இவையனைத்தையும் ஞானி யடைகிறான். காமசாரனாயிருக்கிறான்.

கண்டம் சா.

இருதய தாமரையிலிருந்து விரிந்துபோகிற நாடிகள் நாநாவர்ண முள்ள சூட்சுமமாயுள்ள ரசத்தினால் நிறைந்து வெண்மை, நீலம், மஞ் சள், சிகப்பு ரஸங்களால் பரவுகின்றன. இருதய ஆதித்தியன் பலநிற முள்ளவன்.

உ. இரண்டு ஊருக்கு மத்தியில் எங்ஙனம் ஒருவழியுண்டாகிறதோ அங்ஙனமே சூரிய கிரணங்கள் ஆதித்தலோகத்திற்கும் புருஷலோகத்திற் கும் ஏற்படுகிறது. ஆதித்தியனில் கிளம்பி புருஷ நாடிகளிற் பரவி மறு படியும் நாடிகளில் கிளம்பி ஆதித்தியனிட மடைகின்றன.

மணவழகு.

நீதி.

வீதவஸ்சந்த்ர மாஸ்சந்த்ராத்
வீதவஸ்சந்த நத்சவா
சந்த்ராச்சசந்த நாச்சாபி
வீதலா ஸ்ஸஜ்ஜ ஸ்ரோக்தயா.

சந்திரன் தன்குளிர்ந்த நிலவினால் சகல பிராணிகளையும் சந்தோஷிக் கச்செய்வான். சந்திரனைவிட சந்தனமானது தன்னைத்தேகத்தில் பூசிக் கொள்வார்கட்கு அதிகக் குளிர்ச்சியைக்கொடுத்து அவர்கள்தேகத்திலுள்ள எல்லாரோகத்தையும்நீக்கி அவர்களைக் களிக்கச்செய்யும். சந்திரன் சந்த னம் இவைகளைவிடப் பெரியார் நீதிவாக்கியத்தைக் கேட்டு நடப்பவர்கள் மனதுக்கு அது எப்போதும் சந்தோஷத்தைக் கொடுத்துவிடும்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவாசகமே மணிவாசகம்.

உலகத்திலே பெறுதற்கரிய பிறவியைப்பெற்ற ஒவ்வொருவரும் வினைக்கீடாக மாநுடஜென்மம் கிடைத்தமைப்பற்றி, முக்தியின்பம் எய்து தற்கு அறிவுகொண்டு ஒழுக்கமாக ஓர்வரையிலே நடந்து செல்வது எளி தாகவும் நிச்சயமாகவும் இருக்கின்ற நன்மைகளை உத்தேசித்து ஓர்மார்க்க த்தை கைப்பற்றிவருவதின் காரணார்த்தமே ஓர் சமயத்தின் அத்தியாவசி யகம். சஞ்சலமுள்ள ஜீவனுக் குபேதசங்கற்பமற்ற அபேத அவிரோத ஐக்கிய சித்தாந்தசமயமே உபசாந்த ஞானத்தைக்கொடுக்கும்.

முன்னோர் சென்ற முதுநெறியே பின்னோரும் பற்றுவது உய்யும் வழி. அம்முதுநெறியாகிய சுருதி, யுக்தி, அனுபவத்தால் ஒற்றுமைப்ப டும் உண்மையை கூர்ந்து நோக்குகின்றகாலத்து உண்டாகும் துணிவை விட வேறு என்ன நம்பிக்கைவேண்டும்? தன்னம்பிக்கையில்லாதவனுக்கு எந்நம்பிக்கையும் உண்டாவதரிது. ஆகவே நான்யார்? என் உள்ளமார்? என்றகேள்விகள் ஜீவனுக்குஉண்டாகிப் பதில்கிடைக்கும்வரை அவன் உள் ளக்கொதிப்பும் குளிராது. கள்ளமனமும் வெள்ளையாகாது. சஞ்சலமும் கிஞ்சித்தகலாது.

அதுநிற்க, ஒருவன் தான்தானே தினேதினே செய்து வரும் கருமங் களில் உள்ளத்திருப்தியாக ஈசுவரப்பிரீதியாக ஒன்றேனும் செய்தோமா என்றுபார்க்க, ஈதென்னே! மருந்துக்கும் ஒன்றில்லையே, என்று சொல் லாதார் இல்லை. ஆனால் இப்பிறவியின் பயன்தான் என்ன? உண்டு உடு த்துப் பூண்டு உறங்குவதுதானா? என்று ஆராயும்வேளையில், நம்மையாளும் ஒருவன் உண்டு என்றும், அவனுக்கு அணிசெய்வதும், அவனுக்கு பணி

---

மெய்கண்ட சாத்திரம் பதினான்கு மூலம் விலை அணா—8.

செய்வதும், அவன் மஹிமைவிளங்கத்தோத்திரம் செய்வதும், மஹிமையை விளக்கச் சாத்திரம் செய்வதும் ஆகிய இவற்றைவிட இன்பம்பயப்பதும், துக்கம்விட்டுத் தன்னைமறந்த பரவசநிலையைஉய்ப்பதும் என்னவிருக்கிறது, என்று அறிகிறான். அப்பேற்கொத்த பரவசநிலையிலிருந்து பரம்பொருளை யடைந்த பரமனடியார்கள் பரசிவத்தைக்குறித்துப் பரவசப்பட்டுப் பிறரும் பரவசப்படப் பாடிய அற்புத அனுபவ பாசுரங்களே திருவாசகம் தேவாரம், திருவிசைப்பா, திருமந்திரம், திருப்புகழ் முதலியன. அப்பேற்கொத்த திவ்வியப்பிரபந்தத் திருமுறைகளை நாம் ஓதுவதினால் அதன் பொருளைச் சிறிதுசிறிது உணர்ந்து அப்பாசுரங்கள் அருளிச்செய்யப்பட்ட அவ்வற்புத மனோநிலையை யடைகிறோம். அஃதின்றேல் தோத்திரத்தின் பயனுமின்று. பெரியோர்கள் சும்மா இருக்க முடியாது இப்பாசுரங்களைவெளியிட்டார்களில்லை அவன்புகழையறிந்து யாவரும் தாம் பெற்ற பெரும்பேற்றை அடையவேண்டுமென்ற சர்வஜீவ சுகப்பிரியமாகிய ஜீவகாருணியத்தால் தலங்கடோறும் வழிவழியடிமையாகத்தோன்றி நின்று நிலாவித் திருமுறை திருமுறையாக பறையறைவித்தார்கள்.

அவ்வாறு தாம்பெற்ற நிஷ்டானுபூதியில் சிவானந்தமேலீட்டால் ஆத்தும இரக்கமுற்று அருளிய அநேக திருமுறை வாசகங்களில் நடுநாயக மணிவாசகமாயுள்ளது எவ்விதத்திலும் திருவாசகமேயாகும். சாஸ்திரக் குப்பைகளிலே இம்மணிவாசகம் தன்னொளிவிட்டுவீசும். தோத்திரச் சந்தடியிலே இதன் தெய்வத்தொனியைக் காண்பிக்கும். இதனைக் கவனிக்காது குப்பையிலிருத்திவிட்டாலும் மாணிக்கம் மாணிக்கமே. இதன் பெருமை யறியாதார் குக்கிட சிகாமணிகளேயாவர். செம்பவளவாயால் மணிமுத்துவாசகங்களாகவே அலர்ந்து மலர்ந்து விழுந்ததினாலன்றோ திருவாதவூரருக்கு மாணிக்கவாசக சுவாமிகள் என அறிஞரால் கூறுநின்று என்றும் அப்பெயரே நின்று நிலவியது. சொற்பொலிவாலே யாவராலும் தேர்ந்தெடுக்கக்கூடிய பல மணிவாசகங்களாலாயினும், "இத்திருவாசகம் சற்குரு உபதேசம்பெற்று, மெய்ஞ்ஞான மார்க்கத்தையுற்று, அவன் அருளாலே உணர்த்த அறிந்தோர் அரிய ஒருவாசகமே துணைக்கொண்டு அருளிச்செய்யப்பட்டதாதலால், சற்குருவின் ஒருவாசகமென்றும் நூலினாலேயே இம்மணிவாசகங்கள் கோக்கப்பட்டுள்ளது. ஆகவே இம்மணிவாசகங்களாகிய திருவாசகத்தில் சற்குருவின் ஒருவாசகமே அகப்பொருளாகும்.



மேலும் திருவாசகத்தை மணிவாசகங்கள் என்றதும் ஓர் காரணம் பற்றியே. எவ்வாறெனின், இப்பாசுரங்கள் ஓர் மணிமாலைபோல் ஒன்றன்பின் ஒன்றாக தொடுக்கப்பட்டிருக்கின்றமை பற்றி. முத்து, பவளம்; பச்சை, கோமேதகம், வைடூரியம் முதலிய இரத்தினங்களை ஒன்றன்பின்ஒன்றாகக்கோக்கும் ஓர்நவரத்தின மாலைபோல, ஓர்முறைமையாய்ப் பக்தி வைராக்கிய விசித்திர முதலாக அனுபவவழி யறியாமை என்றதலைப்பீறாக ஒன்றன்பின் னொன்றாக அமைந்திருப்பதை அனுபூதிமான்கள் அறிவார்கள். பின்னும் எப்படி ஓர் நவரத்தின மாலையில் பலவித இரத்தினங்களும் பலவித வர்ணங்களால் பிரகாசிக்கிறதோ, அவ்வாறே பலவிதவண்ணங்களினாலே இம்மணிவாசகங்கள் விகசிக்கின்றன. எப்படி இவ்விரத்தினங்கள் மதிப்புத்தெரிந்தவனாலே அனுபவிக்கப்படுகிறதோ, அஃதேபோல் இவ்வாசகமணியின் பெருமையை மெய்யுணர்ந்தவர்கள் கண்டுகளிப்பதாகும். இக்காரணம் பற்றியே ஒருவாசக நூலாலாகிய மணிவாசக மாலையாய் இத்திருவாசகத்தை, செந்தமிழிற் செந்தமிழாய்ச் செழுமையமைந்துள்ள தென்றும், அகக்கனிவிற்கும், பாசமுனிவிற்கும், ஞானத்தெளிவிற்கும் எல்லாவற்றினும் மிகவும் அருமை, பெருமை தங்கியது எனத் தமிழறிந்த எம்மதத்தாராலும் கொண்டாட நிற்கிறது.

உலகத்தில் காணப்படும் மாணிக்கங்கள்போல அன்று இம்மணிவாசகம். இது ஜலத்தால் கெடுவதல்ல. நெருப்பால் வேவதல்ல. உறைவால் தேய்வதல்ல. காலதேசவர்த்தமானத்தால் கரு ஒளியும் குன்றுவதல்ல. இது என்றும் அழிவில்லாதது. பின்னும் பின்னும் புதுமை பயப்பது. சாத்திரக்காரர் மதிக்கவரியது. அனுபூதிமான்களின் குருமணியாவது. கீழ்க்கண்ட திருப்போரூர் சந்நிதிமுறை முத்தப்பருவத்தில் முதற் பாட்டின் உள்ளக்கிடையாய பொருள் இவ்விடம் கூர்ந்து நோக்கத்தக்கதேயாகும் :—

"கயல் கொக்குடும்பின் சிரசுகளுங் கரிக்கோடென் முடக்கோடுங் -
கழையுங் கரும்புங் கமுகினமும் கதலிசாலிகடிக்கமலம்,
புயல்நத்தாதி தருமுத்தம் புனலிற் கனலிற் புடவியினிற்
பொன்றும் பொலியிற்கே டொளிபோம் பொருந்தும் விலை
யுண்டவை வேண்டேன்
இயல்புற்றொன்றான ழிவிலதாய் என்றும் புதுமை தருமொளியா
யெவர்க்கு மதிக்கவரிதாகியிருந்து மிகுந்தமதுரமெலா
முயல்வுற்றளிக்கு நின்கனிவாய் முத்தந் தருக முத்தமே
முகுந்தன் மருகா சமரபுரி முருகா முத்தந் தருகவே."

இந்த விலையில்லா மாணிக்கவாசகம் மூல அழல்வீசும்போது ஏகவொளி வீசும். ஆனந்தபாஷ்பத்திலேயமிழ்ந்து களிக்கும். என்றும் புதுமலர் வாசம் வீசும் இம்மணிவாசகம். இஃது உணர்ந்தார்க்கும் உணர்வரிதாயிருப்பதால், இது போன்று ஓர் மணியும் நாம் என்றும் காணற்கில்லையாதலால், ஏன் இதனை நவமணி யென்றல் கூடாது.

பின்னும் திருவாசகத்தை மணிவாசகமென்றதையும் திருவாசகத்திலேயே வாசிக்கலாம். மேன்மைதங்கிய பரம்பொருளின் சம்பந்தப்பெற்றவர்க்கு பிர்மஸ்ரீ என்பதுபோல, சுவாமிகள் வாசகத்திற்குத்திருவாசகம் என்று வணக்கம் கொண்டு வழங்கிவருகின்ற பெரியோர்வாக்கு. அஃதே போன்று பரசிவத்திற்குப்பாடியருளிய தோத்திரங்களை மணிவாக்குஎன்று சொல்வது பின்வரும் திருவாசகத்தால் அறியலாம்.

" சிந்தனை நின்றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணை நின்திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக்காக்கி யைம்புலன்களார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்தவிச்சை
மாலமுதப்பெருங்கடலே மலையேயுன்னைத்
தந்தனை செந்தாமரைக்காடனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித்தனியனேற்கே "

ஈசுவரதோத்திரவாசகம் திருவாசகமாம்போல மாசிலாமணிக்குச் சொல்லும் வாசகம் மணிவாசகம் என்று அமைவது பொருத்தம். அங்ஙனம் திருவாசகத்தில் சிவபெருமானுக்கு மணியென அமைந்துள்ள திருவாய்மொழிகளில் சிலது காண்போம்.

" கோகழியாண்ட குருமணி தன்றாள் வாழ்க "

" கூடலிலங்கு குருமணி போற்றி. "

" ஏழைத்தொழும்பனேன் எத்தனையோ பிறவியெல்லாம்
பாழுக்கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
ஊழிமுதற் சிந்தாத நன்மணி வந்தென் பிறவித்
தாழைப்பறித்தவா தோணோக்கமாடாமோ "

விபூதி விளக்கம் விலை அணா—4.



" முத்துமாமணி மாணிக்க வயிரத்தபவளத்தின் முழுச்சோதி "

" கருடக்கொடியோன் காணமாட்டாக் கழற்சேவடி யென்னும்
பொருளைத்தந்திங் கென்னையாண்ட பொல்லாமணியேயோ
யிருளைத்துரந்திட் டிங்கே வாவென் றங்கேகூவும்
அருளைப் பெறுவான் ஆசைப்பட்டேன் கண்டாயம்மானே. "

" புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
னென்பெலா முருக்கி யெளியையா யாண்ட
ஈசனே மாசிலாமணியே,
துன்பமே பிறப்பே யிறப்பொடு மயக்காந்
தொடக்கெலா மறுத்த நற் சோதி
யின்பமே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவதினியே. "

என்றிவ்வாறு வருவன அநேக திருவாசகங்கள், அதன் வாச்சியமாகி சிவபெருமானை மணி யென்றும், அத்திருவாசகத்தையே மணிவாசகமென்றும் விளக்கா நிற்க கண்டோம்.

மணிவாசகங்கடந்தானைத் திருவாசகத்திற் காட்டிய
மணிவாசகர் - திருவடி வாழ்க.

(குருவருள்.)

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# சகோதரர் ஒற்றுமை.

"நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா உண்டிபாழ்
ஆறில்லா ஊருக் கழகுபாழ் — மாறில்
உடற்பிறப் பில்லா உடம்புபாழ் பாழே
மடக்கொடி இல்லா மனை" — ஔவையார்

'சகோதரர்' என்னுஞ் சொல் வடமொழியில் ஒரேவயிற்றிற் கூடப்பிறந்தவர் என்னும்பொருளைத் தருவதாகும். ஆகவே, உடன்பிறப்பு என்னுந் தமிழ்ச்சொல்லும், சகோதரர் என்னும் வடசொல்லும் ஒரேபொருளைத்தந்து ஒத்து நிற்கின்றன. தலைப்பில் எடுத்துக்காட்டிய ஔவையார் திருவாக்கின்கண், "பகைமை இல்லாத உடன் பிறப்பாளர் இன்றித் தனியேபிறக்கும் பிறப்புப் பயனற்றதாகும்" என்பது வலியுறுத்தப்பட்டது. அன்புடன் மனங்கலந்து அளவளாவும் சகோதரருடன்கூடப்பிறந்த பிறவியே பய[illegible]மென்பதும், பகைமைக்குணங்கள் உள்ள சகோதரருடன் பிறப்பது பெரு[illegible]த்திற்கு இடமாகுமென்பதும் நன்கு பெறப்படும். பொல்லாத சகோதரருடன் பிறப்பது பெரிதுந் துன்பந் தருவதாம் என்பதனை இந்தப்பாட்டின்கண் மறைவாகக் கூறினாராயினும்,

"உடன்பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டாம்
உடன்பிறந்தே கொல்லும் வியாதி — உடன்பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு"

என்னும் மற்றொருபாட்டிலே அதனை விளக்கமாகக் கூறியிருக்கின்றார். அது நிற்க. இனிப், பகைமைக்குணங்கள் உள்ள சகோதரருடன் பிறப்பதினும், தன்னந்தனியே பிறப்பது நன்றன்றோவெனின்; தனியராய்ப்பிறந்





தால், உலகவாழ்க்கையில் அடுத்தடுத்துக்கிளைக்கும் பலவகை அல்லலிற்பட்டு உழலவேண்டி வருமாதலால் தனிப்பிறவியெடுப்பது நன்றாகமாட்டாது. எந்தக்காலத்திலும் மனிதன் பிறர் உதவியையுந் துணையையும் நாடாமல் உயிர்வாழல் முடியாது. இவன் தாயின் கருப்பையிலிருந்து பிறக்குங்காலத்தே முழுதும் அறியாமை உள்ளவனும்; பிறகு சிறிது சிறிதே வளர்ந்துவருங் காலங்களிலெல்லாம் பிறருடைய சேர்க்கையாற் சிறிது சிறிதாக அறிவு விளங்கப்பெற்றுவரும் சிற்றறிவு உடையவனும், தனக்குவேண்டும் ஊண் உடை முதலான எல்லாப்பொருள்களையும் பிறரது முயற்சியாற் பெறவேண்டியவனும், தனக்கு வேண்டும் வசதிகளைத் தான் தேடிக்கொள்ள முயலும்போதும் தான் பலருடைய உதவியையும் துணையையும் வேண்டி நிற்பவனும், தனது சிறுவாழ்நாளின் இடையிடையே தான் நோயில் அகப்பட்டு வீழ்தலின் அக்காலங்களிலெல்லாம் இவன் தனக்கு நோய்தீர்ப்பான் பேருதவியைக் கட்டாயம் விரும்பிநிற்பவனும் இருத்தலால் மனிதன் தனது துன்பத்திற்கும் இன்பத்திற்கும் அறிவுக்கு மெல்லாம் பிறரைச் சார்ந்தவனாகவே யிருக்கின்றான்.

இங்ஙனம் பிறரைச்சார்ந்தே உயிர்வாழும் நிலையிலுள்ள மனிதனுக்கு எல்லாவகையிலும் உதவியுந் துணையுமாய் நிற்கத்தக்கவர்களெவர்கள்? என்று ஆராய்ந்து பார்க்குங்கால், தன் உடம்போடு தொடர்பு உடையவர்களேயல்லாமல், மற்றவர்கள் அல்லரென்பது நன்கு விளங்கும். தன்னைப்பெற்ற தாயுந் தந்தையும, தன்னோடு பிறந்த அண்ணன் தம்பி அக்கை தங்கைமாரும், தன்னைச்சேர்ந்த மனைவியும், தன் வயிற்றிற்பிறந்த பிள்ளைகளும் தன்னிடத்து அன்புபாராட்டி உதவியுந் துணையுமாய் நிற்றல்போல, உடம்பின் தொடர்பு இல்லாத மற்றவர் அங்ஙனம் இயற்கையான அன்புகாட்டி ஒருவனுக்குச் சார்பாய் நிற்றல் அரிதினும் அரிது. பிறர்க்கு நாம் எவ்வளவு பொருளைக் கொடுத்தாலும் எவ்வளவு உதவியைச் செய்தாலும் நமக்குப் பெரிய இடுக்கண் வந்த காலத்தில் அவர் நம்மைவிட்டு நீங்குவர். இதுபற்றியன்றோ ஔவைப்பிராட்டியார்,

"மரம்பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவரும் இங்கில்லை — சுரந்தமுதங்
கற்றா தரல்போல் கரவா தளிப்பரேல்
உற்றார் உலகத் தவர்" — என்று அருளிச்செய்தார்.

ஆயினும், சிற்சிலர் தமக்குள் உடம்பின் றொடர்பு இல்லாதவராய் இருந்தும், உயிரும் உடம்பும்போல் அத்தனைநேசமும் அன்பும் உடையவராய் எவ்வகை இடுக்கண் வந்த காலத்தும் பிரிவின்றியிருக்கக் காண்கின்றேமே யென்றால், அத்தகையோர் சிலநாளில் அழிந்துபோகும் இப்புலால் உடம்பின் தொடர்பை நோக்காது ஒருவரிடத்தமைந்த உயர்ந்த அறிவையும் உயர்ந்த அன்பையும் உயர்ந்த செயலையும்நோக்கி நெகிழாத அன்புபூண்டு, அவர்பொருட்டுத் தமது ஆவியையுங் கொடுப்பராதலின் அஃது இங்கே காட்டற்பாலதன்று. மனிதனுக்கு இயற்கையில் உண்டாகும் நேசமானது உடம்பின் தொடர்பால் வருதலின் அதுவே இங்கு ஆராயற்பாலதாகும்.

இனி, உடம்பிற் றொடர்புடையோரினும், தன்னைப்பெற்ற தாயுந் தந்தையும் தன்னினும் பருவம் முதிர்ந்தோராய்த், தன்னைக் குழவிப் பருவந்தொட்டுப் பாதுகாத்து வளர்க்கப் பெருந்துன்பத்தை அடைந்தவர்களாதலால் அவர்களுக்குத் தான் உதவியுந் துணையும் ஆகவேண்டுமே யல்லாது, அவர்களுடைய உதவியையுந் துணையையுந் தான் நாடலாகாது. தன்னைச்சேர்ந்த மனைவியோ பெண்பாலாய்த் தன் உடம்பைப் பாதுகாத்துத் தனது இன்பத்திற்குக் காரணமாய் இருத்தலால், அவள்பாற் பேருதவியையும் பெருந்துணையையும் பெறவிரும்புதல் ஆண் டன்மைக்கு அழகிதன்று. தன் வயிற்றிற்பிறந்த பிள்ளைகளோ சிறுமதலைகளாய்ப் பருவம் முதிருமட்டும் தன்னாற் பாதுகாக்கப்படவேண்டியவர்களாய் இருத்தலால் தனது முதுமைக்காலம் வரையில் அவர்களுடைய உதவியையுந் துணையையும் ஒருவன் எதிர்பார்க்கலாகாது. இனித் தன் உடன்பிறந்தோருள்ளும் தன் அக்கையுந் தங்கையும் பெண்பாலராகலின் அவர்க்குத் தான் உதவியுந் துணையுமாய் நிற்றலே முறைமையாம். இவரெல்லாம் இங்ஙனமாகத் தனக்கு உயிர்வாழ்நாள் முழுதும் உண்மையான உதவியுந் துணையுமாய் நிற்றற்குரியவர் எவரெனின், தன்னோடு சிறிதேறக்குறைய ஒத்தவயதும் ஒத்த அறிவும் ஒத்த தோழமையும் ஒத்த அன்பும் உடைய சகோதரரே யாவர் என்பது முடிக்கப்படும். இங்ஙனஞ் சகோதரர்மாத்திரமே தனக்கு உறுபெருந்துணையுமாய் உதவியுமாய் நிற்றலால், நல்ல சகோதரரைப் இல்லாப்பிறவி பயனற்றதென்று ஔவையார் அருளிச்செய்வாராயினர். நல்ல சகோதரரைப்பெறுதல் எவற்றினும் அரிதென்பதும், அத்தகைய சகோதரரைப் பெற்றவனுக்கே ஆகாதது ஒன்றில்லையென்பதும் உணர்த்

மணவழகு சரித்திரம் (படத்துடன்) விலை அணா—4.



தும் பொருட்டே சீவக சிந்தாமணியிலும்,

“ திண்பொருள் எய்தலாகுந் தெவ்வரைச் செகுக்கலாகும்
நண்பொடு பெண்டிர்மக்கள் யாவையும் நண்ணலாகும்
ஒண்பொரு ளாவதையா உடன்பிறப் பாக்கள்ஆகா
எம்பியை ஈங்குப்பெற்றேன் என்னெனக் கரியதென்றான் ”

என்று திருத்தக்க தேவரும் அருளிச்செய்தார். இங்ஙனமே, கந்த புராணத்திலுஞ் சூரபன்மன் தன்றம்பி சிங்கமுகனை நோக்கிப்,

“ பொன்னை நிலந்தன்னைப் புதல்வர்களை மங்கையரைப்
பின்னை யுளபொருளை எல்லாம் பெறல்ஆகும்
என்னையுடைய இளையோனே இப்பிறப்பில்
உன்னை இனிப்பெறுவதுண்டோ உரையாயே ”

என்று கூறியதூஉம் உற்றுநோக்கற்பாலதாகும்.

இங்ஙனம் பெறுதற்கரிய சகோதரத்துவத்தைப் பெற்றும், அண்ணன் தம்பிமார் சிலர் இதன் அருமையைச் சிறிதும் உணராமல் ஒருவரையொருவர் பகைத்தும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமைகொண்டும், ஒருவரை ஒருவர் வஞ்சித்தும் ஒற்றுமைகெட்டுத் தமதுபிறவியைப் பாழாக்குகின்றனர். ஏதோ முற்பிறவியிற்செய்த தவத்தால், இறைவன் தமக்குச் சகோதரரைத் தந்தருளினான் என்றும், அவன் தந்த இப்பெரும் பேற்றை நாம் பாதுகாத்துக்கொள்ளுதல் வேண்டும் என்றும் நினைந்துபாராதவர் மனிதர் ஆவரோ? தாம் உடன்பிறந்தோம் என்பதைச் சிறிதும் உணராத மிருகங்களுக்கும், தம் உடன்பிறப்பின் அருமையை உணராத மனிதருக்கும் வேற்றுமை உண்டோ? பாருங்கள் அன்பர்களே! ஓர் ஆவின் கன்றுகள் பலவும் பருவம் முதிர முதிரத் தாம் உடன்பிறந்ததனைச் சிறிதும் அறியாமல் தம்தம்வழியே போகின்றன; அதுபோலக், குழவிப்பருவத்தே ஒருங்குபிறந்து ஒருங்கு வளர்ந்த சகோதரரும் தம்மை ஒன்றாய்ப் பிறப்பித்த ஐயனது திருவுளக்கருத்தைச் சிறிதும் நினையாமல் ஒற்றுமை கெட்டுத் தனித்தனியே செல்லுதல் கூடுமோ? சிலநாளிருந்து தமது கையைவிட்டு அகலும் செல்வத்தின் பொருட்டாகவும், இடையே வந்துசேர்ந்த மனையாளின் பொருட்டாகவும் சகோதரர் பகைமைகொண்டு வேறு வேறாய்ப் பிரிந்து ஆண்டவன் நோக்கத்திற்குமாறாய் ஒழுகுதல் மன்னிக்கப்படாத

சிவஞானபோதச் சிற்றுரைவிளக்கம் விலை ரூபா 3—8—0.

பெருங்குற்றமாய் முடியும். இப்பிறப்பில் ஒருவன் தான் நினைந்த வண்ணம் தம்பியைப்பெறல் முடியுமா? தம்பி தமையனைப்பெறல் முடியுமா? தம்மாற் புதிதாகச்செய்துகொள்ளமுடியாத சகோதரத்துவத்தின் அருமையை உணர்ந்து சகோதரர் தமக்குள் மிகவும் அன்புடையராய் ஒற்றித்து வாழ்ந்து தமக்கும் உலகத்திற்கும் பயன் படல்வேண்டும். தம்பிமார் கல்வியிலும் அறிவிலும் எவ்வளவு சிறந்தவராயினும், பருவத்தில் முதிர்ந்த தம் தமையன்மார்க்குக் கீழ்ப்படிந்து ஒழுகி அவரைத் தம்மோடு இணக்கிக்கொள்ளல்வேண்டும்; தமையன்மார் வயதில் மூத்தவராயிருப்பினும் கல்வியிலும் அறிவிலும் சிறந்த தம் தம்பிமார்க்கு இணங்கி நடத்தல்வேண்டும். சகோதரர் தம்மனைவிமார்க்கு உடன்பிறப்பின் அருமையை அன்போடு தெளிவாக எடுத்துக்காட்டி அவரெல்லாம் ஒன்றுபட்டு நடக்கும்படி திருத்தல்வேண்டும். சகோதரரில் ஒருவர் கல்விவளர்ச்சியின் பொருட்டும் பிற உயிர்களின் துன்பத்தைத் துடைக்கும்பொருட்டும் செல்வத்தை நன்கு செலவிட்டுப் பயன்படுத்துவராயின் அதனைக்கண்டு 'ஐயோ! எம் சகோதரர் எங்கள் செல்வத்தை யெல்லாம் அழித்து விடுகின்றனரே!' என்று மற்றவர் வயிறு எரியாமல் 'ஊர்நடுவிலுள்ள இனிய குளம் எல்லார்க்கும் பயன்படுதல்போல, நாம் பெரிதும் முயன்று தொகுத்தபொருளெல்லாம் தக்கார்க்கு பலர்க்கும் பயன்படும்படி அதனை நல்வழிப்படுத்தி நமக்கும் நமது குடும்பத்திற்கும் பெரும் புகழையும் பெரும்புண்ணியத்தையும் வருவிக்கும் இவரைச் சகோதரராகப்பேற்ற எமது தவமேதவம்'! என்று மனம்மகிழ்ந்து, அவர்க்குத்தாமும் உதவியாய் நிற்றல்வேண்டும்.

"ஊருணி நீர்நிறைந்தற்றே உலகவாம்
பேர் அறிவாளன் திரு" என்றும்

"தாள்ஆற்றித் தந்த பொருள் எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்றும் திருவள்ளுவநாயனார் அருளிய திருவாக்கை இடைவிடாது நினைந்து சகோதரராவார் பொருட்செலவாற் பகைமைகொள்ளாது ஒற்றுமைப்பட்டு வாழக் கடமைப்பட்டிருக்கின்றார். துன்பம் வந்த காலத்தும் இன்பம் வந்த காலத்தும் சகோதரர் ஒன்றாயிருந்து அவற்றை அனுபவித்தலே அவர் தமக்கு முறையாம். பாண்டவர் ஐவரும் நாடிழந்து காடு போய்த்துன்புற்றபோதும், திரும்பி நாடடைந்து அரசியற்றி இன்புற்ற

பகவத்கீதார்த்த பங்கம் விலை அணா—1.



போதும் அவர் ஒன்றாயிருந்தமை இன்னும் புகழப்படுகின்றன தன்றோ? தன்சொற் கேளாத தமையன் சூரபன்மனைத் தான் விட்டுப்போகாது அவனோடு கூடவே உயிர்துறந்த அவன்றம்பி சிங்கமுகனது அரியசகோதர் அன்பு இன்னும் பாராட்டப்படுகின்ற தன்றோ? தன்றமையன் இராமனோடு கூடவே காடுபுகுந்து அவன் உறங்குங் காலத்துந்தான் உறங்காமல் அவனுக்குப் பதினான்கு வருடம் பக்குகாவலாய் நின்று அவன் பொருட்டுப்பெரிதும் துன்புற்றும் அன்பிற்சிறந்த அவன்றம்பி இலக்குமணன் அரிய சகோதர ஒற்றுமை இன்னும் உலகிற்கு ஒரு நன்மாதிரியாய் விளங்குகிறதன்றோ? இங்ஙன மெல்லாம் தம் சகோதரரோடு ஒன்றுகூடி வாழ்ந்தவர்க்கே மற்றவர்களையும் சகோதரராய்ப் பாவித்துப் பேரன்பு பாராட்டி இறைவன் திருவருளைப் பெறும் பெருஞ்செல்வம் உண்டாகும் என்க.

சுவாமி-வேதாசலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அருளிலக்கணத்தின் ஓர் பகுதி.

தொகுதி-7-பகுதி-8-பக்கம்-188 தொடர்ச்சி.

———:o:———

சாதாரணமாக அமைந்துள்ள இயற்கை யமைப்பிலே காணும் நற்றாட்சிப் பொருள்கள் நமக்குச் சுகாதார விருத்தியை உண்டு பண்ணுகின்றன. பெரும்பான்மையாய் தீநாற்றமுள்ள பண்டங்கள் சுகாதாரக் கெடுதியை விளைக்கின்றன. ஆதலின், அவைகளை நாம் விலக்கி விடுகிறோம். கடவுளே அப்படி இயற்கை அமைப்பிலே அமைத்திருக்கிறார்.

முக்கியமாக நாம் உள்வாங்குகிற காற்றுள் பிராணவாயு (Oxygen) என்னும் ஒருபாகத்தை உபயோகித்துக்கொண்டு கரியமிலவாயு (Carbonic acidgas) வை வெளியே விடுகிறோம். ஒருவர்விட்ட சுவாசத்தை இன்னொருவர் உள் வாங்கலாகாது. விட்ட சுவாசத்தை உள் வாங்கின் சுகாதாரம் மிகவும் கெடும். உயிர் நிலைக்கும் கெடுதி உண்டாகும்.

ஆயின், தாவரப்பொருள்களில் மரங்கள் இக்கரியமில வாயுவை உட்கொண்டு வளர்ச்சியுற்றுப் பிராணவாயுவை வெயில் உள்ளகாலத்து விலங்

குகளுக்கும் நமக்கும் உதவுகின்றன. மக்கட்கும் மரங்களுக்கும் இவ்விதமாக உதவி நேர்ந்திருப்பது மிகவும் வியப்பே. மக்கள் கழித்துவிடுகின்றவை செடிகளை நன்றாய் வளர்க்கும் எருவாகின்றன. ஜீரணசக்தி குறைந்தவர்களுக்கும் பழைய உடம்பை உண்டாக்கும் நல்ல பழங்களைச் செடிகள் தருகின்றன. கனி வகைகளின் பயனைச் செவ்வனே ஆராய்வரேல் மாதமாதமும் இங்கிலீஷ் தாதுவிருத்தி மருந்துகள் (Tonics) இவ்வளவு செலவாக வேண்டுவது இராது. முனிவர் காடுகளில் வசித்தார்கள்என்னில் துர்நாற்றம் வீசும் பட்டணங்களிலும் பட்டினங்களிலும் (கடலோரத்திலுள்ளது-பட்டினம்) உள்ளவர்களைக் காட்டிலும் மிகுந்த தேஜசும் தத்துவ பலமும் கூடிய உடம்பைப் பெற்றிருந்தது அங்குள்ள காய்கனிகளின் பலனல்லவோ.

இந்தியாவிலே இன்னும் பல நூற்றாண்டுகளுக்குப் போதுமான உணவு உதவும் மரங்கள் வளர இடமுண்டு. காலாந்தரங்களில் அப்படி இடமில்லாதபடி ஜனக்கூட்டம் ஏற்படின் அப்போதும் மிருகங்களைக் கொலைசெய்ய வேண்டுவதில்லை. ஏனெனில் விளையும் பழவகைகளிலிருந்து பலவிதமான செயற்கை உணவுகளைச் (Artificial foods) செய்து விடலாம். அவைகளால் மனிதர் உரம்பெற்று வாழலாம்.

ஆகவே, ஜனநெருக்கத்திற்குப் போதுமான இடம் இல்லாமையால் மேற்றிசையில் உணவுப்பொருள் தரும் செடிகள் விளைய வெகு காலத்திற்குப் பின் இடம் போதாது என்பது உண்மையே. குளிர் தேசத்தில் பலவகையான செடிகள் விளையா என்பதும் உண்மையே. உடம்பின் உஷ்ணத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டிய அவசியத்தில் மாமிச ஆகாரம் மரக்கறி ஆகாரத்தினும் பெரும்பயன் விளைப்பது என்பதும் உண்மையே. ஆயினும், மனிதன் அறிவு மேம்பாட்டால் எவ்வளவோ சௌகரியங்களைச் செய்துகொள்ளுகிறபோது இவ்வற்பத்தடைகளுக்கு ஏற்றபரிகாரம் தேடிக்கொள்ளுதல் மிக எளியது. இயற்கைச் சக்தியளவாகவே அமைந்தழியும் மிருகங்கள். மனிதர் செயற்கை ஆகாரம், செயற்கைப்போர்வைகள் முதலியசெய்து உயர்ந்தநன்னோக்கம் கடைப்பிடித்தலேபொருத்தமுடைத்து. இடம் போதாது எனும் தடை இங்கிலாந்து முதலிய மிகச் சிறிய நாடுகளுக்கு ஒரோ வழி பொருந்தும். பரப்பில் மிகக் குறைந்தது. காடுகளை அழித்து வர்த்தக சாலைகள் உண்டாக்கப்பட்டன. நிலக்கரி சுரங்கங்களும்

திருத்தொண்டர் வெண்பா (திருத்துறைத்தராஞ்சமுடன்) விலை அணா—1



பலபட விருத்தியாகிவிட்டன. பலவகைச் செடிகளும் செழுமையாய் அதிக குளிர்ச்சியால் வளரா.

மேற்றிசையார் உண்கின்றார்கள் என்பதனால் அத்தேய சீதோஷ்ண நிலைமையைப் பொறுத்ததாக அவர்கள் உணவு ஏற்பட்டிருத்தல்வேண்டும். அவர்கள் சந்தர்ப்பங்கள் அங்ஙனே அமைந்து கிடக்கின்றன. அவர்களும் தற்காலங்களில் மரக்கறி ஆகார சங்கங்களை ஏற்படுத்தி ஜீவகாருண்ய விருத்தியை நாடுகின்றார்கள்.

நம் நாட்டில் சௌகரியங்கள் பல அமைந்துள்ளன. பரதகண்டத்தின் பெரும்பரப்பையும் தற்காலம் உள்ள ஜனத்தொகையையும் நோக்குப்போது இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு வேண்டிய நிலம் இடம் கொடுக்கும் பரதகண்டம் இது உஷ்ணதேசம். (பல கோடிவகையான) உணவுப்பொருள் தரும் செடிகொடிகள் விசேஷமாய் விருத்தியாகும்.

தின்பதற்குக் காய்கனிகள் இருக்க, மிருகங்களைக் கொலைசெய்வதற்கே கடவுள் படைத்தனர் எனக்கூறி மகிழ்தல் ஒன்றானது. மனிதன் செய்ய இயலாத கஷ்டசாத்தியமான பளுவு இழுத்தல், வாகனமாகப் பயன்படுதல் உண்பன பயிரிடுவதற்கு எரு முதலியவற்றாலும் உழைப்பாலும் உதவுதல் முதலியன பொருட்டே கடவுள் அவைகளைப் படைத்திருக்கிறார் என்பது பொருந்தும்.

மேற்றிசையார் குளிர்தேசத்தாராய் இருப்பதாலும் உஷ்ண தேசத்திற்போல மரக்கறி ஆகாரம் விளையாமையாலும் மாமிசங்களை நீண்டகாலம் வரையில் பதஞ்செய்துகொண்டு உண்பவர்களாய் இருந்தாலும் ஜீவ இம்சையாய கழுத்துப்புண், பிறர் பார்க்கும்படி வதைசெய்தல், கொலைசெய்தல், நோயுற்றும் வேலைவாங்குதல், கிழமாட்டை உபயோகித்தல் முதலிய செய்கிறவர்களைத் தண்டிக்கிறார்கள். அத்தகைய மிருகங்களைக்காப்பாற்றுவதற்குச் சென்னையில் ஒரு சங்கம் நடைபெறுகின்றது. (Society for Preventing Cruelty to Animals) பலவகை நோயால் பீடிக்கப்பட்டும் அங்கப்பழுதும் அடைந்த மிருகங்களுக்குச் சிகிச்சை மிக எளிதாகச் செய்து வருகிறார்கள். தின்பதற்கேயாயின் பயனிலவாய்க் கிடப்பவைகளைக் கொன்று விடலாமே.

ஊன் தின்பவர்களாகப் பிறந்ததாலேயே ஊன்தின்னவேண்டும் எனவாதித்தல் பொருந்தாது. வெகு காலமாகப் பாரம்பரியமாகத் தின்று

சிவஞானபூஜைவெண்பா சந்திரவெண்பா விலை அணா—1

வந்தவர்களுடைய தேயத்திலே குடும்பங்களிலே பிறந்ததினாலேயோ நெடு ரென நீக்கின் நீக்கமுடியாத பெரிய நோய்கள் தற்சமயம் வராவிடினும் வயது முதிர்ந்த பிறகும் உண்டாகும் என்று வைத்தியநூல் ஆராய்ச்சியாளருட் சிலர் அபிப்பிராயப்படுவதை ஆதாரமாகக்கொண்டு உண்டு வருகின்றார்கள் பலர். ஆயின், அவ்வைத்திய நூலாராய்ச்சியாளரே ஊனைத் தின்பதனால் மிருகத்தினிடமிருந்த நோய் உண்டோருக்கு உண்டாகும் என்றும் பல தொத்து வியாதிகளும் பெருந்துன்பம் விளைக்கும் நீங்காத வியாதிகளும்நேரிடும் என்றும் முடிவுகட்டியிருக்கிறார்கள் என்பதைக்கடைப்பிடிக்கவேண்டும்.

முன்னோர் உண்டு வந்ததை ஆதாரமாகக்கொண்டு பின் வந்தோர்களும் உண்ணுதல் பொருந்தாது. முன்னோரிடம் உள்ள நல்ல சுபாவங்களைப் பின்பற்றி அவர்களிடம் உள்ள ஏகதேச துர்க்குணங்களைப் பின்பற்றாது இச்சா சக்தியின் வலிவால் ஒழித்துவிடுதலாகிய சிறப்பியல்பு தங்கள் சந்ததியாரிடம் உண்டாகியதே என்பதைப் பார்க்க இப்போது உயிர் பெற்று வருவாரேல் அம்முன்னோர் உளங்கொளா மகிழ்ச்சி கொள்வர். தம்மிடத்திலுள்ள தீய குணங்களைச் செவ்வனே அறிந்து அவைகளைச் சீர்திருத்திக்கொள்ள முயல்வதே நல்ல பரம்பரையில் வந்தவர் கொள்ளும் கொள்கையாகும். மேலும் செய்துவந்த குற்றத்தை மீண்டுமீண்டும் செய்யாமல் தடுத்து ஒழுக்கத்தைப் போற்றவேண்டுவது அறிவுடையோரின் கடமை. முன்னரே இக்கொடிய குற்றத்தை விலக்காது விட்டோமே என்று அன்பு உடைமையாகக்கொண்டு ஒழுகுவோர் பலமுறையும் இரங்குவர். அவ்விரக்கம் கொண்டவரே நல்லோர். மேலும் சிறுகுழந்தைப் பருவத்தில் மலம் மூத்திரம் முதலிய தீண்டப்பெறா என்பதை அறியாது புரண்டு கையால்தடவி வாய் முகம் முதலிய இடங்களில் பூசிக்கொண்டவர்கள் வயது முதிர்ந்து அறிவு விளங்கி அருளடைய அவரவும் காலத்து மீண்டும் செய்வரா. செய்யார் செய்யார்.

நாமாகொல்லுகிறோம் கொன்று ஒருவன் விற்றதையே வாங்கி உண்கிறோம் என்று புலாலுண்டோருட்பலர் கூறுவது பொருந்தாது. உலகியல் உணர்ந்த திருவள்ளுவர் அக்காலத்தேயே இதற்குத் தக்க விடை அருளிச் செய்திருக்கிறார். உண்போர் இலரெனின் விற்போர் இலராவர். வெகுஜனங்கள் கொண்டாடும் விரதநாட்களில் புலால் விற்போரே இந்த உண்மைக்குச் சான்று பகர்வார்கள்.



புலாலுண்ணாதபோது கோடிக்கணக்கான மிருகங்கள் விருத்தியாகும். பயிர் பச்சைகளுக்கு எருவைத்தரும். அதனால் சத்துள்ள உணவுப் பொருள்கள் மிகுதியாக விளையும். பசுவின்பாலை வைத்தியமுறைப்படி ஆராய்ச்சி செய்ததில் மனிதனுடைய உடம்பிலே காணப்படும் தாதுவிருத்திக்குவேண்டும் ஒவ்வொருபாகமும் வேண்டியஅளவாக அதிலமைக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றியே பசுவின்பால்(Ideal Food) என்று அழைக்கப்படுகிறது. பசுவின்பால் ஒன்றாலேயே உடம்பு ஒரு சிறிதும் கெடாமல் நிலையான சுகத்தைப் பெறலாகும் என்பதை இன்றும் உணவாதிகளைத் தவிர்த்த சந்நியாசிகளும் பால்மாத்திரங் கொண்டு வாழ்ந்துவருவது விளக்குகின்றது.

பசுவினைக் கொல்லுதல் கூடாது என நீதியாளர்கள் தவிர்த்தது பெரும்பான்மையாய் அதன் பயனைக்குறித்துப் போலும். பசுவின் அங்கம் ஒவ்வொன்றிலும் ஓரோர் தேவர் வசிப்பதாகக் கூறும் பௌராணிக மதம் பசுமாத்திரம் அல்ல உயிருள்ள ஏனைய ஜெந்துக்களும் கடவுள் உறைவிடமாக விளங்கும் என்றும் பசுக்கொலையோடு மற்றெல்லா ஜீவராசிகளின் கொலையும் உண்மையான அன்பின் நெகிழ்ச்சியினால் தவிர்த்தல் வேண்டும் என்றும் போதிக்க இல்லையா. பன்றிக்குட்டிக்கும் முலைப்பால் ஊட்டிய கடவுளிடத்து அன்புபூண்டொழுகுவோர் ஜீவராசிகளிடத்தும் எவ்வளவு அன்புகொண்டு ஒழுகுதல் அக்கடவுளருளைப் பெறுவதற்குக் கடவுளைத் திருப்தி செய்வதாகும் என்று நன்றாக ஆலோசித்தல்வேண்டும். கொலைக்கே மிருகங்களை ஏற்படுத்தியதாயின் அக்கடவுள் பரிந்து செய்த கருணை எத்தகைத்து எனச் சிந்தித்தல்வேண்டும்.

ஆடு முதலியவைகளைக் கொலைசெய்யாவிடின் பயிர்த்தொழில் மிக நன்றாகச் செழித்து ஓங்கும். ஊருடைய வனப்புகளில் பசுக்கூட்டம் ஆட்டின் மந்தை முதலியவும் அடங்கும். பசுவைப்பார்க்கினும் ஆயிரம்பங்கு அதிகமான சாந்தத்தோடுங்கூடி ஒருவருக்கும் ஒருதீங்கும் ஒரு சிறிதும் செய்யாதிருக்கும் ஆடுமாத்திரம் கொலைக்கும் உண்பவர் உலைக்கும் குலைக்கும் ஏற்பட்டதா என்பதைச் சற்று ஊன்றி நினைத்தல்வேண்டும்.

ஆடுகளைக் கொலைசெய்தலால் பூபாரம் ஒழியாது. பாரதத்துள் நடந்த சரிதங்களால் நல் அறவோர்க்குத் தீங்குவிளைத்து மகா அகங்காரியாய்ப் பல்லாயிரம் மக்களை ஆளும்படி சேர்த்தபோது இடுக்கண்செய்த துஷ்டனை நிக்கிரகஞ் செய்ததுபோல் துஷ்டர்களை அடக்கி ஆளுதலே

உலகினராகிய உயர்ந்தோருக்கும் பூபாரம் ஒழிக்குமே என்பது போதரும். பெரும்பரப்பாக உள்ள பூமியின் எல்லை நோக்குகிறபோது மனிதன் வசித்து அனுபவிக்கும் பாகம் மிகச் சிறிதே என்று பூகோள ஆராய்ச்சியாளர் முடிவுகட்டுவதைச் சிந்தித்தல் கடமையாகும். ஆகவே மிருகங்கள் வசிக்க இடமில்லாமற் போகும் என்பது ஒரு சிறிதும் பொருந்தாது.

மேலும் உடம்பை உணவாதிகளால் போற்றுவது "உடம்பினுள்ளே உறுபொருள்" காண்பதற்கேயன்றி கேவலம் சட்டைபோல் போர்த்துள்ள உடம்பைப் பிறஉயிர்க்குத் தீங்குசெய்தாயினும் பாதுகாத்தல சித்தந்தெளிந்தோர் செய்கையன்று. கிழங்குவகைகளும் கனிபேதங்களும் கீரைவகைகளும் பெரும்பான்மையாய் போதுமானவை. சத்துமிகுந்துள்ள உணவுப்பொருள்கள் பால் தயிர் நெய் பருப்பு முதலியன. இவைகளாற்செய்யக்கூடிய பலவகை உணவு விசேடங்களும் உடம்புக்கு மிகவும் நலமே.

சாண்வயிறு பொருந்திய மக்கள் சிறுமுயற்சியினால் வேண்டியபோனகத்தை உழந்து உண்டு நிலைபெற்றிருக்கத் தூய்மையான இப்பண்டங்கள் போதுமானஅளவு உதவ இருந்தும் மிருகங்களைப்போலப் பிறமிருகங்களைக் கொன்று புசித்தல் அடாதகாரியமாகி முடிந்து பின்னர்ப் படாதபாட்டை அடைவிக்கும். இது மாக்கள் செய்கையேயன்றி அறிவுடைய மக்கள் செய்கையன்று. ஏனெனின் மிருகங்களுள்ளும் எல்லாமிருகங்களும் பிறபிராணிகளை வதைத்துத் தின்னுகின்றனவோ எனின் இல்லை. மிருகங்களுள் உடம்பு பருத்தது யானை. யானை தன் உடம்புக்கு ஏற்றஅளவு மாமிசத்தைத் தின்பதாயின் எத்தனைகோடி பிராணிகள் கொல்லப்படும். சிறுமலையை ஒத்த யானையின் உடம்பு தென்னமட்டை வாழைமுதலிய தூயபொருள்களால் வளர்கின்றதை நோக்குகிறபோது அறிவின் விசேடத்தால் ஜீவித்து வரும் மக்களுடைய முயற்சி நடைபெறுவதற்கு உரிய உடம்பை மிகப் பெரிய பிராணிகளின் உடம்பின் தசையால் கொழுக்கும்படி முயல்வது சாக பக்ஷணியாகிய யானை என்னும் விலங்கினுக்குத்தாழ்ந்த நிலைமையைக் காட்டுகின்றது. அளவுகடந்து உண்பவர்களாயும் விலாப் புடைக்க உண்பவர்களாயும் காணப்படுவோர் மன்னார்சாமிக்குத்தக்க தோழராவர். அன்றியும் பிறமிருகங்களின் ஊனைத்தின்று ஊனைப்பெருக்கும் மிருகங்களுள் சிலவற்றைப் புல் பூண்டின் வகையாலேயே வளரும்படிச் சாதகப்படுத்தலாம் என்றும் சிலர் கூறுவர்.

தாயுமான சுவாமி பாடல் பெரியகட்ட விருத்தியுரை ரூபா. 3—8—0



மனிதனுடைய ஒருபாகமாகிய மிருக சுபாவ குணங்களில் திருப்தி கொண்டு (Animal Content) கடவுள் அருளை அடைவதற்குப் பாடுபடுவதில் கண்ணுங்கருத்துமாய் உழைப்பவர் பாடுபடப்பாடுபட ஈடுபட்டது மிகச்சிறியதே என அதிருப்திகொண்டு (Divine Discontent) துணிந்து மேன்மேலும் அருளில் திளைக்க முயற்சித்தலே உண்மையான நிலைபேறான இன்பம் விளைக்கும். இதுவே மனிதசுபாவ இன்பம் என்று மேற்றிசை நீதிநூலாரும் வற்புறுத்துகிறார்கள்.

(Better to bo a Discontented Socrates than a Contented pig).

நெடுங்காலமாகப் பிற உயிரைக் கொல்லாவிரதங் கொண்ட நல்லோர் சந்ததியில் வந்தவர்கள் அதுபற்றிச் சிறப்பித்துப் பேசுவது அத்தனைச் சிறப்புடையதன்று. உண்டுவந்த குடும்பத்தின் சந்ததியார் அறிவு விளங்கி அருள் சுரந்து எல்லாஉயிரும் போற்றக் கொலைதவிர்ப்பார்களானாலவர்களே தேவராலும் போற்றத்தகுந்தவர்கள். ஏனெனில் சபல மயக்கம் (Temptations) உள்ளபோது அதனைத் தன் அறிவைக்கொண்டு கூடும் கூடாது என்பதற்கு ஏற்ற காரணங்களை முறையே ஆராய்ந்து பிறகு அன்போடுகூடிய நன்னிலைக்குத் தன் இச்சாசத்தியினால் பிற உயிர்க்குத் தீங்கு விளைப்பதை ஒழித்து உயிர்க்கே உறுதி பயப்பதாய அருள்நெறியை உரிமைப்பொருளாக மேற்கொண்டு வாழவேண்டும் என்னும் கடவுள் சுபாவ எண்ணம் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் குடிகொள்ளவேண்டுமென்று அருளாளர் கடவுளை மெல்லெனத் துதிக்கிறார்கள். எல்லா உயிர்க்கும் இன்பம் ஊட்டுதலே கடவுளுடைய அருளுக்கு இலக்காகும்.

பேசும் சக்தி இலதாய் இளங்கன்றாய்ப் பயமறியாததாய்த் தானாகவே வேகமாய்த் தெருவிலே ஓடிவந்து உத்தம மரபில்வந்த அரசன் மகன் திருவாரூர்ப் பூங்கோயில் அமர்ந்த தியாகேசப்பெருமானைத் தரிசிக்கும் பொருட்டுத் தேரின்மீது சென்றபோது தேர்ச்சக்கரத்தில் அகப்பட்டு உயிர்மாய்ந்த ஓர் இளங்கன்றையும் மறந்தாயினும் விதிவசத்ததேயாயினும் கொல்லுதல் கூடாது என்ற உண்மைநோக்கிப்போலும் சிந்தைகுழைந்து தழைந்த இராமலிங்கசுவாமி தாம் எழுதிய வசனபாகங்களுள் ஒன்றாகிய "மனுமுறை கண்டவாசக"த்தில் உயிர்களுக்கு எக்காலத்தாயி

சைவாகமப்பிரமாண்யம் விலை அணா—12.

னும் எவ்வாற்றானும் எத்தகைய துன்பமும் வினைவயத்தாயினும் செய்தலும் செய்யப்பார்த்தலும் கூடாது என்று விரிவுரையாசிரியராய் எழுதியிருக்கின்றார். "கன்றை நினைந்தெழுதாய்" ப்பசு பட்டதுயரத்தை என்ன பரிதாபத்தோடு விவகரிக்கிறார். பிறகு உயிர்க்கொலை புரிந்த மகனைச் சுருதி யுக்திகளால் தடுத்த மந்திரிசொல்லையும் கேளாமல் உயிர்க்கொலை புரிந்தவன் உயிரைவாங்குதலே தாய்ப்பசுவுக்கு இழந்துபோன கன்றுவராவிடினும் தண்டனையாக ஒருவாற்றால் பொருந்தும் எனத்துணிந்து மனுச்சோழர் தம்மகன் உயிரை வாங்கினார். அப்பொழுது செங்கோல் என்பதின் காரணத்தை உலகறிய விளக்கினார். கடவுளருளால் தன் உயிர்போல் மன்னுயிரைப் போற்றி வாழும் மனுச்சோழரை வாழ்த்த இறந்த கன்று உயிர்பெற்று எழுந்து தாயிடம் செல்லத்தன் மகனும் உடனே தூங்கி எழுந்தவன் போல எழுந்தான். அவ்வாசகம் படிக்குந்தோறும் உருகாதார் யாவர்,

"எத்துணையும் பேதம்உறாது எவ்வுயிரும் தம்உயிர்போல் எண்ணிஉள்ளே
ஒத்துஉரிமை உடையவராய் உவக்கின்றார் யாவர் அவர் உளந்தான்
சுத்தசித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடம்என நான்தேர்ந்
[தேன் அந்த
வித்தகர் தம் அடிக்(கு) ஏவல் புரிந்திட என் சிந்தைமிக விழைந்த
தாலோ" திருவருட்பா.

(இன்னும் வரும்.)

மோ. கந்தசாமி முதலியார். B.A.



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# மாம்ஸ போஜனக் குறைவும் மரக்கறி ஆகார உயர்வும்.

தொகுதி - 7 - பகுதி 8 - பக்கம் - 192 - தொடர்ச்சி.

மேற்கூறியவற்றால், கிறிஸ்தவர்களுக்குக் கடவுள் பொதுவாக விதித்தவிதி, பைபில் ஓல்ட் டெஸ்ட்மெண்ட் ஜெனிஸஸ் 1-29 தானென்றும், வேறு அதற்கு விரோதம்போல்காட்டி அங்குமிங்கும் தோன்றக்கிடக்கும் சில வழக்கங்கள், நம் அபிவிர்த்தி முறையில் நேரிட்ட குறைகளேயென்றும், கிறிஸ்தவ புத்திமான்கள், இந்தக்கொடிய வழக்கங்களை விட்டொழிப்பதுதான் விரும்பற்பாலதென்றும் பெறப்படுகின்றன.

ராஜ்கோட்டியிலிருக்கும் ராவ்பஹதூர் டல்லாப்ஸ்ஜி ரோப்ஜி வேட் என்பவர் எழுதியுள்ள வியாஸத்தில், மஹம்மதிய மதபோதனைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, மாம்ஸபக்ஷணைக் கூடாதெனத்தெரிகின்றதென்றும், மிருகங்களுக்கு அன்புகாட்டவேண்டுமென அம்மதம் போதிப்பதால், மிருகங்களைக்கொலைசெய்வது அம்மதத்திற்கு அசம்மதமாகிறதென்றும், மஹம்மது சுத்தமான மரக்கறி பழவர்க்க ஆகாரத்தையே அனுஷ்டித்து வந்தவரென்றும் செம்மையாய்க் காட்டப்பட்டிருக்கிறது. ஷை வியாஸத்திலேயே பாரஸீக மதக்கொள்கையும் அஃதேயாகிறதென்று நன்கு விவரிக்கப்பட்டிருக்கின்றது.

இனி, புத்த சமயத்தை நோக்குவோம். கௌதம புத்தர் கருணை வள்ளல், கஷ்டமென்பதையே பார்க்கலாற்றாதவராக கிருத்தியங்களில். ஹிந்துக்கள் பலிகொடுப்பதைக்கூட அவர் பார்க்கமுடியாது பாதவித்தவர் கொலையைச்செய்தலே கூடாது; புலாலுண்பதே ஆகாது எனத் தசக்

தொடுத்த தூய மஹாத்மா அவர்! அருளே நிறைந்த அவரது சமயம் அகிலமெல்லாம் பரவி ஆனந்தம் விளைக்கின்றது! சைனா பர்மா முதலிய தேசங்களில் கோடிக்கணக்கான ஜனங்கள், புத்த சமயத்தைப் பின்பற்றி வருகின்றார்கள். ஆயினும் அவர்களிற் பெரும்பாலோர் அநாசார வழிகளைப் பற்றி, பல்லியையும் தவளையையும் பற்பல இழிந்த ஜந்துக்களையும் புசிப்பது ஆச்சர்யமாயிருக்கிறது. கொலையையொழித்துப் புலாலை மறுக்கவந்த கௌதமப்புத்தர் நோக்கம் ஜகமெங்கணும் தெரியுமாதலால், அதனைப் பற்றி இங்கு அதிகம் விஸ்தரிக்க வேண்டுவதில்லை.

இப்போது, ஹிந்துசமய போதனை இன்னவெனப் பார்ப்போம். மேற்கூறிய ராவ்பஹதூர் வேத் என்பவர் வடமொழிநூல்களிலிருந்து பின் வருபவற்றைப் பொறுக்கியெடுத்திருக்கிறார்.

ஸ்ருதி: 'நஹிம்ஸ்யாத் ஸர்வபூதானி' (எந்த ஜீவனையும் ஹிம்சை செய்யக்கூடாது)

ஸ்ருதி: 'அஹிம்ஸா பரமோதர்ம' (ஹிம்சை செய்யாதிருப்பதே முக்கியமான தர்மமாகும்)

"எந்த சாஸ்திரத்திலாயினும் விதிக்கப்பட்டிருந்தாலும் சரி, விதிக்கப்படாமலிருந்தாலும்சரி, ஆன்மலாபமடைய விரும்புபவன் எவ்விதமான புலாலுண்ணலையும் நீக்கவேண்டும்" என்று மஹா பாரதம். சாஸ்திரங்களையும் சட்டைசெய்யாது முடிவுரை கூறுகின்றது.

மனுஸம்ஹிதை (5-வது அத்தியாயம், 15-வது ஸ்லோகம்.) எந்த எந்த மிருகத்தினுடைய மாம்ஸத்தையாயினும் சாப்பிடுமொருவன், அந்த மிருகத்தையே சாப்பிட்டவனாகிறான். ஒரு மாம்ஸத்தைச் சாப்பிட்டவன் எல்லா மாமிஸத்தையும் சாப்பிட்டவனாகிறான். ஆனையால், இவன் மாம்ஸ போஜனத்தினின்றும் ஜாக்கிறதையாய் விலகவேண்டும்.

மனுஸம்ஹிதை (5-வது அத்தியாயம் 38-வது ஸ்லோகம்.) ஒருமிருகத்தைக்கொல்பவன் அதன் உடம்பில் எத்தனை மயிரிருக்கின்றனவோ அத்தனை தரம் பிறந்து பிறந்து இறக்கவேண்டும்.

மனுஸம்ஹிதை (5-வது அத்தியாயம் 48-வது ஸ்லோகம்.) ஜீவஜெந்துக்களுக்கு ஹானியில்லாமல் மாம்ஸத்தைச் சம்பாதிக்க முடியாது; மிருகங்களைக் கொல்வதனால் மோக்ஷவழிக்குத் தடையாகிறது. ஆகையினால், மனிதன் கொலைசெய்யா திருக்கட்டும்.

Essentials of Hinduism. 3—0—0.



சில சடங்குகளுக்கும் யாகங்களுக்கும் மாம்ஸ உபயோகம் விதித்த வேதமும் மனுஸ்ருதியுமே, மோக்ஷலாபமென்கிற பெருவழியைச் சிந்திக்கும்போது மாம்ஸ நிவர்த்தியை விதித்திருக்கின்றன. மேற்கூறியபடி ராவ் பஹதூர் தர்மஸ்ஜிவேத் அவர்கள் வடமொழி நூல்களையெடுத்து உதஹரித்தனர்.

இனி நம்தம் தமிழ்நாட்டில் பெயர் மிகப்படைத்துப் புகழ் மிக்வாய்ந்த அரும்பெரும் புலவர்கள், அற்புதக்கவிஞர்கள், புலான் மறுத்தலைப் பற்றி எவ்வளவு புகன்றிருக்கிறார்கள் என்பதைச் சற்று கவனிப்போம்.

(இன்னும் வரும்.)

தி. பக்தவத்ஸலம் பிள்ளை, B. A., M. P. P. I.,

## சமாச்சாரம்.

—:o:—

சைவசித்தாந்த மகா சமாஜம்:—திருமயிலையில் இச்சமாஜத்தில் 1918ஆம் செப்டம்பர்மீ 22, 6உ களில் முறையே சிவாத்துவித பாடிய கர்த்தராகிய ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியர் குருபூசையும், சந்தான குரவருளொருவராகிய திருப்பெண்ணாடகம்-மறைஞானசம்பந்த சிவாசாரியர் குருபூசையும் கொண்டாடப்பட்டுப் பல சைவ சிகாமணிகள் பற்பல மகோபந்நியாசங்கள் செய்தனர்.

## சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 1918-ளு ஜூலை, ஆகஸ்டு மாதங்களின் வரவு செலவு கணக்கு.

| வரவு. | தொகை. | | | செலவு. | தொகை. | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | ப. | | ரூ. | அ. | ப. |
| 1918ளு ஜூன்மீ 30உ இருப்பு ... | 301 | 15 | 10 | லிகிதர் சம்பளம் (ஜூன், ஜூலை) ... | 40 | 0 | 0 |
| ஆயுள் சமாசிகர் சந்தா ... | 5 | 0 | 0 | அச்சுக்கூலி (மார்ச்சு முதல் ஜூன் வரையில்) | 74 | 0 | 0 |
| சமாசிகர் வருட சந்தா ... | 10 | 10 | 0 | ஜூலை, ஆகஸ்டு மாதங்களின் தபால் செலவு முதலியன ... | 30 | 9 | 3 |
| விளம்பர வரவு ... | 6 | 0 | 0 | | 144 | 9 | 3 |
| பரீட்சைக்காக நன்கொடை | 25 | 0 | 0 | ஆகஸ்டுமீ 31உ இருப்பு... | *213 | 12 | 7 |
| வட்டி வரவு ... | 9 | 12 | 0 | *ஆயுள் சமாசிகர் சந்தா ரூபா 605-0-0 | | | |
| ஆக மொத்தம்... | 358 | 5 | 10 | ஆக மொத்தம்... | 358 | 5 | 10 |

K. Kuppusami Mudaliar, *Ag. Secretary.* W. T. Govindaraja Mudaliar, *Trasuerer.* M Kandasawmy Mudaliar, B.A. *Auditor.*

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி எ.] 1918ளு அக்டோபர்மீ [பகுதி கo.

## சாந்தோக்யோபநிஷத்து.

### எட்டாம் பிரபாடகம்.

### கண்டம் சு.

ஒரு புருடன் சுழுத்தியில் கரணமனைத்தும் ஒடுங்கினவனாய், புறவிடயங்களில் நோக்கில்லாதவனாய், சுவப்பனத்தை யனுபவிக்காதவனாய் எப்போது இருக்கின்றானோ அப்போது நாடிகள்வழியாக இருதய கமலத்தை யடைகிறான், அவனை யப்போது பாவம் அடைவதில்லை. ஒளி ரூபமாய் விளங்குகிறான்.

ச. ஒரு புருடன் மரணதருவாயிலிருக்கிறபோது அவனைச் சுற்றிலும் அவன் சுற்றத்தினர் வீற்றிருந்து நான் தெரிகிறதா? என்னைத்தெரியுமா? எனக் கேட்கின்றனர். அவன்போது தன்னிலிருந்து வெளிப்படும் ஆன்மாவை யவன் அறிந்துகொள்ளுகிறான்.

ரு. தேகத்திலிருந்து வெளிப்பட்ட ஆன்மா சூரியன்கிரணத்துடன் சேர்ந்து உயரப்போகிறான். அறிஞனே பிரணவத்தைத் தியானஞ்செய்து கொண்டு உயரப்போகிறான். சூரியன் பிரமலோகத்திற்கு வாயில். இவ்வாயில் அறிஞர்கள் போகிற இடம், மூடர்கள் தடுக்கப்படும் இடம்.

௬. இருதயத் தானத்தில் நூற்றொருநாடிகள் இருக்கின்றன. இவைகளிலொன்று மூர்த்தாவை யடைகிறது. இவ்வழியாய் அறிஞன்சென்று அமுதத்தை யடைகிறான். மற்ற நாடிகள் குறுக்கு நெடுக்காக விருந்து கொண்டிருக்கின்றன.

## கண்டம் ௭.

ஆத்மா (பரமான்மா) அபகதபாப்மா, விஜர, விமிருத்யு, விசோன்க, அவிஜிகத்ஸன், அபிபாஸன், சத்தியகாமன், சத்யசங்கல்பனுகவிருக்கிறான். இவனைத் தேடவும். இவனை யறியவும் வேண்டியது. இவனை யறிந்தால் சகல கன்மங்களையும், சகல லோகங்களையும் அடைவான்.

௨. பிரஜாதிபதி மூலமாக இவ்வுண்மையைச் சகலதேவர்களும் சகல அசுரர்களும் அறிந்தார்கள் எந்த ஆன்மாவை விசாரித்தால் சகல கன்மங்களையும் சகல லோகங்களையு மடையலாமோ அந்த வான்மாவை யறிவோமெனக் தேவாசுரர் கூட்டத்தில் பேசிக்கொண்டு இந்திரனும் விரோசனனும் ஒருவருக்கொருவர் தெரியாமல் சமித்துக்களுடன் பிரமனை யடைந்தார்கள்.

௩. பிரமலோகத்தில் முப்பத்திரண்டு வருடங்கள் பிரமசரியத்தை அனுஷ்டித்திருந்தார்கள். பிரமா ஒருகாலத்தில் அவர்கள் முன் வந்து எதற்காகத் தவஞ்செய்கிறீர்களென, அவர்கள் தங்கள் கருத்தை வெளியிட்டனர்.

௪. கண் எந்தச் சத்தியைப் பார்க்கிறதோ அதுவே ஆத்மா. எல்லாவற்றிலும் எது தோன்றுகிறதோ அதுவே ஆத்மா. அது அமிருதவஸ்து, அபயவஸ்து, பிரமமென்று சொல்லப்படும்.

மணவழகு.

நீதி.

அர்த்தா க்ரஹ நிவர்த்தந்தே
ஶ்மஶாநே மித்ர பாந்தவா
ஸுக்ர்தம் துஷ்க்ர்தம் தஞ்சைவ
கச்சந்தம் அநு கச்சதி.

மனிதன் இறந்தால் அவன் வாழ்நாளில் தேடியபொருளனைத்தும் வீட்டிலேயே தங்கிவிடுகின்றன. அவன் சுற்றத்தினர் சுடலை வரையில் போய்த் திரும்பிவிடுகின்றனர், புண்ணிய பாவங்கள் அவனை தொடருகின்றன.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஒரு மணிவாசக விகாசம்.

“நாலுணர்வு அறியாத நுண்ணியோனே” இப்பாசுரங்களில் நுணுகியிருக்கின்றமை பற்றி, என்னையாட்கொண்ட அவனது அருளையே தாரகமாய்க்கொண்டு இம்மணிவாசக விகாசத்தை எடுத்துக்கொண்டது. அஃதன்றி இதனைக்கண்ணுறும் சித்தாந்த சிவானுபூதிச்செல்வர்களின் கடாக்ஷ வீக்ஷண்யத்தாலும், அவர்கள் கண்டு களிதுளும்ப நிற்குங்கால் உண்டாகும் ஆனந்த விருத்தியாகாசம் அவர்கள் ஆசிகளுடன் கிட்டி என்னை உருக்கிப் பெருக்கிப் பருகற்கினிய பரங்கருணைத்தடங்கடலில்விட்டு உளங்குளிர முகந்து கொள்ளவும் குடைந்தாடவும் செய்விக்கும் என்னும் துணிவுகொண்டுமே இங்கு இதனை எடுத்துக்கொண்டது.

திருவாசகம் கண்டவர் மனத்தள்ளூரநிற்பது. சிந்திப்போர் மனத்தே சிவமாய்த் திகழுவது. வந்திப்போர் மனத்தே வாசமாய் வீசுவது. இஃது உரைமாண்ட வாசகம். “ஊமர்கண்ட கனவினைப்போல் உரைப்பரிய சிவானுபவம்” இஃது உணர்ந்தார்க்கும் உணர்வரியது. குருவாசகத்தை யடைந்தவர்க்கே திருவாசகம் வெளிப்படும்; ஏனெனில் குருவாசகமே திருவாசகம். திருவாசகம்-திருத்தெள்ளேணம்-(சிவனோடைவு) 11-வது பாசுரம்.

“கயன்மாண்ட கண்ணிதன்பங்க னெனைக்கலந் தாண்டலுமே
யயன்மாண் டருவினைச் சுற்றமுமாண் டவனியின்மேல்
மயன்மாண்டு மற்றுள்ள வாசகமாண் டென்னுடைய
செயன்மாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ”

இதன் பிண்டப்பொழிப்பான பொருளாவது:—

சிவமேயாய சற்குருதன்னை வந்து தடுத்தாட்கொண்டு அவன்தானே யாதற்பொருட்டும், வினையறுக்கவேண்டியும் தனது திருவடி தீக்ஷைசெய்தலும், முன்னர் தன்னை ஆட்டுந்தேவனுயிருந்த அயன்மாள, பொம்ம

லாட்டமான கிளைகளுமாள, திண்டாமொறுவிட்ட வினைகளுமாள, உலக பசு பாச தொந்தங்களினின்ற கொண்டாட்டமுமாள, ஞானமென்பதின் வரம்பாகிய மோனமுண்டாகவேண்டித் தனது பேச்சுமாள, அத்தகைய அருணிலையில் தனக்கென வோர் செயலில்லாத பற்றற்ற நிலையில், தன் செயலுமாள நாம் ஆனந்தமாகத் தெள்ளேணங்கொட்டிப் பரசிவத்தை வந்திப்போம். சிவனோடு அடைவாக விட்ட இவ்வழியைப் பற்றி நிற்போம் என்றவாறு.

எனையாளவந்த குருவேயாய சிவம், அம்பிகை சமேதராயிருக்குந் திருக்கோலத்தையே "கயன்மாண்ட கண்ணிதன் பங்கனெனைக்கலந்தாண்டலுமே" என்றது. அவிரோத ஞான கடாக்ஷத்தை குறிப்பிக்கவேண்டியே "கலந்து ஆண்டலுமே" என்றது. மகா மாயாசத்தி செயவல்ல சிவத்தோடொன்றியே இராநின்ற அருட்சத்தியாய அம்பிகை கூடநின்று அருள்புரிந்ததோர் முறைமை. அருணகிரிநாதர், கந்தரலங்காரத்தில்

"நீலச்சிகண்டியி லேறும்பிரான் எந்த நேரத்திலும்
கோலக்குறத்தியுடன் வருவான் குருநாதன் சொன்ன
சீலத்தைத் தெளிந்து அறிவார் சிவயோகிகளே
காலத்தை வென்றிருப்பார் மறிப்பார் வெறுங்கர் மகளே"

என்றும், சிவப்பிரகாச சுவாமிகள், சோணசைலமாலையில்

"கண்புனலுளிப்பவழல் படுமிழுதிற் கரைந்துகு நெஞ்சினின் றனையே
பெண்பயி லுருவமொடு நினைந்தெனது பெண்மயலகற்று நாளுளதோ
வண்புனல் வேந்தனூர் கலிக்குடத்து மணிமுகிற் கலயத்தின்முகந்து
தண்புனலாட்ட வாடுறுஞ்சோண சைலனே கைலைநாயகனே"

என்றும் சுவானுபூதிச்செல்வர்கள் திருவாக்குகளிளெல்லாம் இதற்கு சான்று காணலாம்.

"கயன்மாண்ட கண்ணிதன் பங்கனெனைக்கலந்து "ஆண்டலுமே" என்றதால் சிவமே குருவாக வந்தது பெற்றும்.

திருவாசகம் :—

"அதுபழச் சுவையென அமுதென வறிதற்
கரிதென வெளிதென வமரரு மறியார்
இதுஅவன் திருவுரு இவன்அவ னெனவே
எங்களை யாண்டுகொண்டு இங்கெழுந் தருளு
மதுவளர் பொழிற்றிரு வுத்தர கோச
மங்கை யுள்ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே"



யாவையும் படைக்குந் தொழிலைக்கொண்ட பிரமன்-'அயன்மாண்டு' என்றது எப்படியெனின், வினைக்கீடாய பிறவியில் பக்குவமுதிர்ந்து சிவ புண்ணியநிரம்பி மலபாகம் பிறந்து சத்திபதிந்து வினையொப்புப் பழுத்தவர்களுக்குக் குருகடாக்ஷ வீக்ஷண்ய தீக்ஷையானே இனியும் அவர்களுக்குப் பிறவியுண்டென்னலாமோ? ஆனது பற்றி அயனுக்கு மறுபடியும் படைக்கவேண்டிய விதியில்லாமல் நீங்கியது.—கந்தரலங்காரம்,

"சேல்பட் டழிந்தது செந்தூர்வயற்பொழி றேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடியார்மன மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ்சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்தது இங்கென்றலைமே லயன் கையெழுத்தே"

எவ்வமயம் குருவருள் பதிந்ததோ அக்கணமே தொட்டு இவனுக்கு மலம் கிடையாது. வறுத்த விதைபோன்று இப்பிறப்பின் வினையும் வலிகுன்றி, மேல்பிரவர்த்தியின்றிப் போதலைக்குறித்தே "அருவினைச் சுற்றமுமாண்டு" என்றது.

வினையினால் பந்தமின்றிப் புனிதனாகிச் சற்குருவருள் தாரகமாய் நிற்குங்காலத்து முன் சப்த அர்த்த நாமரூபமாத்திரத்தானே விளங்காநின்ற உலகமும், அதன்கண்ணுள்ள சிறுபொருள்களாகிய மண், பெண், பொன் என்ற் காம, வெகுளி, மயக்கங்களைத் தராநிற்கும், தேய்வு, ஒழிவு, மாறுதல் முதலிய சிற்றின்பக் குணங்களை நாடாது, "ஆரியன் அருளிய சுருதியின் துணிவால் உலகம் துச்சமென்று உணர்ந்திடல் சமாதி" என்ற சந்நிதிமுறையொக்க, 'அவனியின்மேல் மயன்மாண்டு' என்றது.

முன்னர் தற்போதங்கொண்டு முரணுற்றெழுந்து எண்ணிறந்த பேத விகற்பங்களும், சாஸ்திரச் சண்டையும், கோத்திராபிமானமும், சமயச் சழக்கும் ஆயவிதண்டை வாதங்களற்று, குருவருள் பெற்றபின்னர் இது அதுவென்றொன்றையு நாடாது பரிபூரணமாகிய பரம்பொருளொன்றினிடத்தே இடையறுப் பற்றுகின்று, உதித்தெழும் மோன சுகமாகிய

மனவழகு சரித்திரம் (படத்துடன்) விலை அணா—4.

ஆத்ம ஞானவரம்படைவராகையால்" மற்றுள் வாசகமாண்டு "என்றது. திருவாசகம்,

"உவலைச் சமயங்களொவ்வாத சாத்திரமாம்
சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறும்
கவலைக் கெடுத்துன் கழலிணை கடந்தருளும்
செயலைப் பரவிநாந் தெள்ளேணங் கொட்டாமோ"

முன்னர் அஞ்ஞானத்தால் யாவுந் தனதெனக்கொண்டு சீவபோத அகங்கார மமகாராதிகளால் வளைந்திருந்தவன், பின்னர் திருவருள் நாட்டத்தால் தனு, கரண, புவன, போகமுதல் யாவும் அவனது எனத்தெளிந்ததாலும், பின்னும் உலகத்திலே செயற்கரிய செய்கை இதைவிட ஒன்றில்லாமையாலும், தனக்கென ஓர் செயலில்லாது பணியறநின்று எல்லாம் உன்னுடைய செயலே எனக்கொண்டு அருள்வழிநிற்கும் இதய பாவனாதீத மேலீட்டினாலும்," என்னுடைய செயன் மாண்டாவாபாடி என்றது இது எல்லாம் சிவன் செயலென்று தன் முயற்சியற்று இருந்தபடி யிருக்கின்ற சுட்டிறந்து நின்ற அணைந்தோர் தன்மையே யாகும். திருப்போரூர் சந்நிதி முறை,

"தனுவோடிலகு கரணமுடன் சாரும்போக புவனமிவை [யின்றேன்
தமையானென தென்றுணர்ந்து மயறழைத்துத் கருக்கோயிழல்
உனதாமவைகண் மாயையிடை யுதிக்கச்செய்தாய் நீயதனால்
உள்ளவாறிம் முறைமைதனை யுணராச்சிறியே னுய்வேனோ
பனகாபரணர்க் குபதேசம் பாலித்தருளும் பரகுரவா
பைந்தாற்கூந்தற் றெய்வானை பரிந்துமகிழ வருகணவா
புனைபாமாலை தரித்தேத்தும் பொருவிலருணை கிரிநாதன்
புகழ்வீட்டின்பம் பெறவுதவும் போரூர் முருகப்பெருமானே"

இனி இம்மணிவாசகக் கருப்பொருள் எழுதி முடிப்போம்.

உலகத்தில் பல்வேறுயப் பரந்துள்ள அநேக சமயங்களுள் யாவரும் சுருதி, யுக்தி, அனுபவம் என்னும் திரிவிதத்தாலும் ஐயந்திரிபின்றி நிச்சயமாகக் கொள்ளத்தக்கதும், முத்திக்குச் சேர்க்கவல்ல பன்மார்க்கங்களினும் சிறப்புற்று விளங்கவல்ல சன்மார்க்கமாயுள்ளது குருமார்க்கமே யாகும்;

கல்லும் முள்ளும் கலந்தபாதையில், செடியும் கொடியும் அடர்ந்து படர்ந்திருக்க, மிடியும் புடையுமான மாயா விசித்திரத்தினடுவே, கடியும் -



பிடியுங்கொடுக்கும் விலங்கினங்கள்மத்தியில், ஓர் ஊருக்குச்செல்லவேண்டியிருப்பின் ஒருவன் என்னசெய்வான்? கரடும் முருடும் யாவும் களைந்து, நடந்து நடந்து வழியொன்றுண்டாகிப் போவதிற்குப் பிரியமுள்ளதாய், இன்னும் செல்லச்செல்ல இன்பம் பயப்பதாய், மேலும் மேலும் தைரியம் கொடுத்து உல்லாச அபிவிர்த்தியாய், என்றும் நிர்ப்பீதியாய்த் தன்னைச் சேர்க்கவல்ல ஒருவழியை யல்லவோ தான் அடையவேண்டும். அப்பேற்கொத்த முன்னோர் சென்ற முதுநெறியாயுள்ளது குருமார்க்கமே. "நமக்குக் குருப்பார்வையல்லாமற் கூடக்கிடைத்திடுமோ" என்றும் "சிந்தை குழைந்து சுகஞ்சேரக் குருவருளால் வந்தவழி நல்லவழி" என்றும் அருமைத் தாயுமானவர் திருவாய்மலர்ந்தருளியதை நோக்க நோக்கத் திருப், பெருந்துறையாய குருமுறையின் உள்ளுறை நன்குவிளங்கும்

அளப்பருந்தன்மையையுடைய பரம்பொருளை நம்மிடத்து உள்ளதேயென-"சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது"-அளந்து காண்பித்த குருநாதனிடம் உண்டாகும் நம்பிக்கையைவிட வேறு எந்தப்பொருளிடத்தில், எந்த மார்க்கத்தில், எந்தக் கலைஞானத்தில், எந்த சாஸ்திரத்தில் உண்டாகும்? உண்டானாலும் இத்தகைய திடமான பூரணபக்தியும் அபேத இலக்கணமும் அவிரோத ஐக்கியமும் வேறு எதிலுண்டாகும். மறையும், ஆகமும் ஓத்துநிற்கும். இந்த மேலான அனுபவத்தை என்னென்று இயம்புவது? யுக்தியின் யூகத்திற்கும், சாஸ்திர சமயத்திற்கும், அடைந்தோர் புந்தியில் அமிர்தமாய்ச் சொரியும். இந்த ஆனந்தானுபவத்தை யெப்படி யுரைப்பது? கண்டதைப்பற்றி அழுந்தி நிச்சயித்துத் தெளியவல்ல அந்தக்கரணத்தின் சுவபாவம், சார்ந்தவண்ணம் ஆகும் இயல்பினையுடைய பளிங்கினையது. கண்டதைக்கொண்டே காணாததை யூகிக்கவல்ல அனுமானத்தைக் கைக்கொண்டதும், பிரத்தியக்ஷத்தையே இன்னும் பெருக்கி மனத்திற் பூரணமாக்கி அறிந்துகொள்ளவல்ல இயல்பினையுடையதாகவும் இருக்கின்ற நமது மனோதத்துவத்திற்கு மானைக்காட்டி மானைப்பிடிக்கும் கொள்கைபோல, குருமூர்த்தி தன்னைக்காட்டி, தன்னிலே தலைவனையும் காட்டுகிறான்.

பரம்பொருளை ஒன்றென்றும், இரண்டென்றும், உரு என்றும் அரு என்றும், சூனியமென்றும், அணுவென்றும், அண்டமென்றும் கூறுநிற்பர். ஆனால் இவை யாவையுமான ஆதியுமந்தமுமில்லா வரும்பெருஞ்சோதியே

சைவாகமப்பிரமாண்யம் விலை அணா—12.

சற்குருவாக வந்த மூர்த்தியே நான் கண்டது, இதுவே மெய்ந்நெறி விளக்கம்.

"ஒன்றென்பர் பலவென்பர் உபயமென்பர் உருவென்பர்
அருவென்பர் யோகமென்பர்
அன்றென்பர் சூனியமேயென்பர் அன்றி யறிவென்பர்
அறிவிறந்த பொருள்
ஒன்றென்ப ரொன்றை யொவ்வாமலோதா நிற்பருலகர்
இவையனைத்துமாய் நின்றசோதி
இன்றெம்மையாள மானிடனாய்வந்த விறையென்றே யறிந்தோ
மற்றறியோம் ஒன்றும்"

பின்னும் இங்ஙனம் சர்வேசுவரனை கண்டவாறு மனம்போன போக்கெல்லாம் காயமெல்லாம் வாயாய்பிதற்றி, மனோநிலையும் தப்பித் தேவர் கூட்டங்களும் வருத்தமற உய்யும்வழியை அடையாது இருக்க, உனதுவண்ணத்தைக்காட்டி, வடிவுகாட்டி, திருவடியின் திறத்தையும்காட்டி, பிறவிவேரையும் அறுத்துக்களாட்டி, என்னையும் ஆட்கொண்ட நின்பெருமையை எங்ஙனம் புகழ்வது? இந்த அருட்பெருங் கருணையை எவ்வாறு சிந்திப்பது! இதுபற்றி யன்றோ திருவாசகம்,

"வண்ணந்தான் சேயதன்று வெளிதே யன்ற
நேகநேக னணுவிலிறந்தா யென்றங்
கெண்ணந்தான் றடுமாறி யிமையோர் கூட்ட
மெய்துமா றறியாத வெந்தாயுன் றன்
வண்ணந்தா னதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்க ளவைகாட்டி வழியற்றேனை
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டா
யெம்பெருமான் என்சொல்லிச் சிந்திக்கேனே"

குருவருள்.

---

திருத்தொண்டர் வெண்பா (திருக்குறளுந்தமிழ்த்தம்படன்) விலை அணா—1.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தருமநெறி.

தருமங்கள் எல்லாம் பலசமயங்களுக்குப் பொதுவாவனவும் ஒவ்வொரு சமயத்துக்கே சிறப்பாவனவும் என இருதிறப்படும். பொதுத் தருமங்கள் பொய்யாமை கள்ளாமை கொல்லாமை வெகுளாமை முதலவாகப் பலதிறப்படும். இந்தத் தருமங்களை மேற்கொண்டொழுகுவது மக்கட் பிறவி எடுத்தார் அனைவருக்கும் இன்றியமையாது வேண்டப்படுவதோர் கடப்பாடாகும் இந்தக் கடப்பாடு கடவுளுண்மையைக் கைக்கொண்டொழுகும் ஆத்திகரான் மாத்திரமன்று, அவ்வுண்மையைப் புறம் தந்தொழுகும் நாத்திகர் தம்மாலும் அங்கீகரிக்கப்பட்டு வருவதொன்றும். தருமநெறிகளைக் கைக்கொண்டொழுகவேண்டிய கடப்பாட்டை நாம் நுணுகி ஆராய்ந்து துருவிச் செல்வதுண்டானால் அக்கடப்பாடு கடவுளுண்மை பற்றியே எழுந்துளதென்பது விவேகிகளுக்கு இனிது புலப்படும்.

நாம் பொய் பேசாது உண்மையைத்தானே எப்போதும் பேசுதல் வேண்டியது எற்றுக்கு? நாம் பிறர்பொருளைக் கவர்தல் கூடாது என்பது எதனால்? நாம் யாதொரு உயிரையும் கொல்வது ஆகாது என்பது எதன் பொருட்டு? நாம் கோபம் கொள்வது ஆகாது என்பது எதுபற்றி? என்று இந்தத் தருமநெறிகளைக்குறித்து மேலும் மேலும் விசாரித்துக் கொண்டு செல்வோமாயின், இந்தத் தருமங்களுக்கெல்லாம் ஆதாரமாயுள்ள உண்மை எமக்கு வெளிப்பட்டுப் புலப்படும்.

இந்தத் தருமங்களை நாம் அநுசரிக்கவேண்டியதெல்லாம் உலகம் நன்கு நடைபெறுதற்கு இன்றியமையாது வேண்டப்படும் என்று இக்காலத்துள்ள லௌகிக வாதிகள் கொள்வர். உலகம் நன்கு நடைபெறுதல் வேண்டுமே என்பதைத்தான் நாம் சிந்திக்கவேண்டியதெற்றுக்கு? நமது நயத்தையும் நமது சுகத்தையும் மாத்திரமே நாம் சிந்தித்துப் பிறருடைய நய சுகங்களைப் புறக்கணித்தொழுகினாற் பெறப்படும் இழுக்

கென்னை? நமது நயத்தின் பொருட்டும் சுகத்தின் பொருட்டும் நாம் விரும்பியதை எல்லாம் செய்தலன்றோ நமக்குப் பயன்படத்தக்கது? நாம் விரும்பியவாறு செய்ய ஒட்டாமல் நம்மைத் தடுத்துவைப்பது நமது சுயேஷ்டத்தை (Liberty)-த் தடுத்தவாறாகுமன்றோ?

அற்றன்று; பிறர்க்குத் தீங்குவிளைத்தற்குரியதொன்றை நாம் நமது நயத்தின்பொருட்டுச் செய்வதுண்டாயின், அப்பிறர் எல்லாம் திரண்டு நமக்குத் தீங்கு விளைப்பராதலால், அத்தீங்கால் நாம் வருந்தாதபடி, நாம் பிறர்க்குத் தீங்குவிளையாமல் இந்தத் தருமங்களை அனுசரித்தல்வேண்டும் என்பராயின்; பிறரால் எமக்குக் கெடுதி சூழ்வது கூடாததொரு நிலையில் நாம் இருப்பதுண்டானால், இந்தத் தருமங்களை நாம் அனுசரியாமல் எமது இஷ்டப்படி ஒழுகலாமன்றோ?

இன்னனமன்று; இத்தருமங்களை நாம் அனுசரியாதொழியின், கடவுளாற் றண்டிக்கப்படுவேம் என்பராயின்; இஃது உண்மையேயாகும். ஆகவே, கடவுள் ஒருவர் உண்டென்று கொண்டாலே நாம் இந்தத் தருமங்களை அனுசரித்தலும் வேண்டும் என்றபடியாகும். இன்னும் அப்பாற் செல்வாம்.

இந்தத் தருமங்களை நாம் அனுசரித்தல்வேண்டும் என்னும் கடப்பாட்டைக் கடவுள் தான் எம்மேற் சுமத்திய காரணம் யாதாமோ? கடவுளுக்கு ஆன்மாக்கள் எல்லாம் புத்திரர் ஆதலின் அவருடைய புத்திரர்களுள் ஒருவருக்காவது மற்றொருவர் தீங்குசெய்வது அவருக்குப் பிரீதியாகாதாதலின், அவர் இந்தக் கடப்பாட்டை எம்மேற் பொறித்தார் என்பராயின்; அவர் தம்முடைய பிரீதிப்பொருட்டாக எம்மேல் ஒரு கடப்பாட்டை ஏற்றலாங்கொல்? அரசன் ஒருவன் தன்னுடைய விருப்பத்தின் பொருட்டாக ஒரோர் பிரமாணத்தைத் தனது பிரசைகளுக்கு விதிப்பானாயின், அவர்கள் அந்தப் பிரமாணத்தை முறையான பிரமாணமென்று கைக்கொள்வாரா? அன்றியும் கடவுள் தம்முடைய புத்திரருட் சிலர் பொருட்டாகப் பிறர்க்கெல்லாம் ஒரு பிரமாணத்தை விதிப்பது நீதியாகுமா? தம்முடைய புத்திரருள் எவருக்காவது தீங்குவிளையாதபடி காக்கவேண்டியது கடவுளுடைய கடன். அவர் தாம் செய்யவேண்டியதொரு அருட்கடன் நிமித்த –க. ஆன்மாக்களுக்கு யாதொரு கட்டுப்பாட்டை விதிப்பது முறை [illegible]!

சாத்திரம் பதினைந்து மூலம் விலை அணா—8.
திருத்தொண்டர் வெ[illegible]



பின்னை இந்தத் தருமங்கள் தாம் எமக்கோர் கடப்பாடாக அமைந்தமை எங்ஙனம் என்பதை நாம் நுண்ணிதாக ஆராய்வாம் எனின், இக்கடப்பாடு எம்பொருட்டாகவே எமக்கு விதிக்கப்பட்டதென்பது இனிது பெறப்படும். இந்தத் தருமங்களை அனுசரித்தலால் எமக்கு எய்தற்பாலதாகிய பயன் யாதாமோ எனின், அப்பயன் நாம் எல்லாம் கடவுளுடைய சொரூபத்தை உணர்ந்து, அச்சொரூபநிலையைப் படிமுறையாகப்பயின்று, காலாந்தரத்தில் அதனை அனுபவித்தற்குரிய பக்குவத்தை அடைவதேயாகும். கடவுள் உண்மைச் சொரூபர். அவருடைய இந்த உண்மைச்சொரூபத்தை நாம் கைவல்லியப்படுத்துமாறே நாம் எப்போதும் உண்மையைப் பேசி உண்மையிற் பழகுதல்வேண்டும் என்னும் விதி ஏற்படுத்தப்பட்டது. கடவுள் எவருக்காவது தீங்குசெய்யாத நன்மைச்சொரூபி. இந்தச் சொரூபத்தை நாம் கைவல்லியப்படுத்துமாறே நாம் பிறர்பொருளைக் கவராமையும் பிறவுயிருக்கு இன்னாசெய்யாமையுமாகிய கள்ளாமை கொல்லாமைகளை விதிக்கப்பட்டன. முத்தியிலே கடவுளுடைய சொரூபத்தை அனுபவிப்பதற்கு அந்தச் சொரூபத்தை நாம் நாடோறும் பயின்று அந்தச் சொரூபமயமானால் தானே அது எமக்குச் சுவைக்கும். அந்தச் சொரூபத்தை நாம் பயிலேம் எனின், அது எமக்குச் சுவைக்கமாட்டாது. ஆகவே முத்தியின்பத்தை நாம் அனுபவித்தற்கு இந்தத் தருமங்களை அனுசரிப்பதெல்லாம் அரிச்சுவடி கற்பதுபோலாகும். இந்த உண்மை முத்திநிலையை உள்ளபடி விளக்கிக்காட்டும் சைவ சித்தாந்தத்தான் மாத்திரமே அறியத்தக்கதாம்.

ச. சபாரத்தின முதலியார்.

விபூதி விளக்கம் விலை அணா—4.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அருளிலக்கணத்தின் ஓர் பகுதி.

தொகுதி-7-பகுதி-9-பக்கம்-188-தொடர்ச்சி.

இனி, கடவுளருளை அடைவதற்கும் ஊன் தின்பதற்கும் என்னபொருத்தம் என மறுப்பார்போன்று புலாலுண்போருட் சிலர் திருக்கண்ணப்பதேவர் தாமும் மாமிசம் உண்டு காளத்திநாதருக்கும் படைக்க இல்லையா என்று அன்பில்லா உரை நிகழ்த்துவர்.

இவர் கூற்று வலியுடைத்தோ என்பதைச் சிறிது முயற்சித்தல் கடமையாகும்.

தெய்வத்தற்சிறப்புச் செந்தமிழ்ச் செய்யுட்கண் திருவருட் பாவயித்துவதுரியமொழியாகிய "உலகெலாம்" எனும்மெய்ம்மொழியை தென்தமிழும் வடகலையும் தேசிகமும் பேசவனவாகிய திருவம்பலமுடைய இறைவர் பரமாகாய வாக்கான் திருவருட்புலமை சான்ற தெய்வச்சேக்கிழார் பெருமானுக்கு அடி எடுத்துக்கொடுக்கச் செயற்கரியசெய்த பெரியருடைய திருத்தொண்டின் திறத்தை அன்பரெலாங் கொண்டாட அவ்வருட்புலவர் அருளிய திருத்தொண்டர்புராணத்தில் திருக்கண்ணப்பதேவர் திருத்தொண்டின் நிலைமையை எங்ஙனம் ஆசிரியர் சேக்கிழார் விளக்குகின்றார் என்பதைச் சிறிது கவனித்தல்வேண்டும். அருள்மயமாய் விளங்கிய பெரியோர்களை இத்தகைய உரைகளால் அளவெடுப்பது சமயநிலை அறியாக்குறும்பர் செயலே எனினும் அதனைக் கண்டித்தல் அகவின ஆன்மநேயர் அனைவரையும் பொறுத்த கடமையாகும்.

கண்ணப்பதேவர் பண்டைக்காலத்துக் காடுகளில்வசித்த வேடுவர்குலத்திற்பிறந்தனர். வேடுவர் மலையுறைமாக்கள். வன்தொழிலோர். அச்சமும் அருளும் என்றும் இலராய் தோலை உடையாகக்கொண்டு மலைத்தே-

சிவஞானபோதச் சிற்றுரைவிளக்கம் விலை ரூபா 3—8—0.



னும் மிருகங்களின் ஊனோடுகலந்த சோறும் உண்டார். பிறப்பினால் குற்றமே குணமாக வாழ்ந்தோர். காட்டிலுள்ள சிறுதெய்வங்களுக்குக் காய்கிழங்கு இறைச்சி முதலிய நிவேதித்தனர். யானைக்கொம்பினாற் செய்யப்பட்ட உழலைவேலையின் புறத்திலிருந்த காட்டில்வாழ்ந்தனர். முயல்குட்டி, காட்டுப்பன்றி புலிக்குட்டி வளர்த்தனர். வெந்த மாமிசத்தைத் தேனில் தோய்த்து உண்டனர். ஈசல் என்னும் ஈக்களை உண்டனர். நாடுகளில் உள்ள பயிர் பச்சைகளை மிருகங்கள்போய் அழிக்காதபடி அவைகளைக் காடுகளில் வேட்டையாடி குடிகளுக்குப் பயிரைக்காப்பாற்றும் தருமம் கொண்டனர். இக்கருத்துபற்றியே பயிரை அழிக்கும் பன்றி புலி கரடி கடமை காட்டுப்பசு கலைமான் முதலியவைகளை மாதந்தோறும் வேட்டையாடினர்.

இத்தகைய வன்தொழில் பூண்ட வேடிவர்க்குத் தலைவரான நாகனார் பெற்றெடுத்த தெய்வத்திருமகனாராகிய நம்மை ஆளும் கண்ணப்பர் புண்ணியப்பொருளாய் வந்துதித்தனர். முதலில் துவக்கும் வேட்டையாகிய கன்னிவேட்டைக்குப் போகும்போது வேடுவர் மரபுக்குரிய தொழில் ஏற்று உடைதோலும் வாளும்ஏந்திச் சூல்கொண்டமேகம் ஒத்த திருமேனியுடன் சென்றனர். வேட்டையாடிக்கொண்டே வரும்போது சிந்தை பரங்கொள நின்றனர். மலைமீது ஏறும்போது தத்துவங்களாகிய சோபானம் என்னும் படிகளில் ஏறினார்.

முன்பு செய்தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான
அன்பினை எடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம்பொங்கி
என்பு நெக்குருகி உள்ளத்(து) எழும்பெரு வேட்கையோடும்

காளத்தி மலையைக் கண்ணுற்றார்.

காளத்தியப்பரைக் காண்பதற்கு நேரே செல்லு முன்னரே அக்கடவுளின் கருணை மிக்க அருள்நோக்கம் நம் கண்ணப்பத் தோன்றலார் பால் வந்து எய்தியது. அப்போது கண்ணப்ப அடிகளார் அன்புருவமாயினார். உடனே தம் வசம் கடந்துசென்ற மோகத்தோடு மலைக்கொழுந்தைத் தழுவி உச்சிமோந்தார்.

"மயிர்க்கால்தோறும் வடிவெலாம் புளகம் பொங்க
மலர்க்கண்ணீர் அருவி பாய அடியனேற்(கு)
இவர்தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ"

செய்யுளிலக்கணம் விலை அணா 8.

என ஒப்பில்லாத அன்பே ஓர் உருவங்கொண்டதுபோலப் பார்ப்பவர்களுக்குத் தோன்றும்படித் தீவிரதரப் பக்தியில் திளைத்தார்.

இனி, காளத்திநாதரைக் கலந்த அன்பாகிக் கசிந்து உள்உருகும் நலம் வாய்ந்த திருக்கண்ணப்பர் மிருகங்கள் வசிக்கும் காட்டில் காளத்திவள்ளலார் தனித்திருக்கிறதற்காகப் பெரிதும் வருந்தினர். சிவகோசரியார் என்னும் பார்ப்பனர் குடுமித்தேவரைக் குளிர்ந்த நீரினால் அபிஷேகஞ் செய்ததற்கு வருந்தினர். காளத்தியாரைப் பிரிந்தகாலத்துக் கன்றைவிட்டு நீங்கிய தலையீற்றுப் பசுப்போல வருந்தினர். உறவினரில்லர்மலும் பசியினால் வருந்தியும் நின்ற காளத்தி ஐயரிடம் பரிவுகொண்டனர். மரப் பொந்தினை விடாது பற்றிக்கொள்ளும் உடும்பைப்போலக்குடுமித்தேவரை விடாது பற்றினர். இலையில் இறைச்சியும் வாயில் நீரும் தலைமயிரில் மலரும்கொண்டு குடுமித்தேவர் பசிநீக்கக் கொண்டுவந்து மாறிலா மகிழ்ச்சியினால் படைத்து ஒப்பரிய பூசனை செய்தார்.

காளத்தி முதல்வனார் அருள்நோக்காம் இரசகுளிகையால் இரும்பு பொன்னாவதுபோல இருவினையும் மும்மலமும் ஒழித்து கண்ணப்ப சுவாமிகள் காளத்தி மலைக்கொழுந்தன்றி பற்று மற்றறியாராய் அயலறியா அன்பு பிழம்பாய்த் திரிந்தனர். உடனே காளத்தியமர்ந்த கண்ணுதற் கடவுளார் சிவகோசரியாருக்குத் திருக்கண்ணப்பர் அன்பின் திறத்தை,

“ அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமைஅறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லா நமக்(கு) இனியவாம் என்றும்
அவனுடைய நிலை இவ்வா(று) அறிநீ என்றருள் செய்தார் ’

என்று எடுத்து விளக்கி ஆகம விதிப்படிசெய்த பூசையினும் அன்புவிதி (Law of Love)ப்படிசெய்த பூசை மிக்கது என்று உண்மை தெளிவித்தனர். “மெய்யன்புடனே எழுந்தவினை தூயவர்க்கு மன்னுமிகு பூசனையே யாம் அன்பு வழக்கினால்” என்று தெய்வச்சேக்கிழார் கல்லெறிந்த சாக்கியனாரைக் குறித்ததை நன்கு சிந்தித்தல்வேண்டும். அன்றியும்,

“ அகநிறைந்த பேர்உவகை அடங்காத ஆதரவால்
மகவு மகிழ்ந்(து) உரைப்பார்கள் வன்மைபுரி செயலினால்
இகழ்வனவே செய்தாலும் இளம்புதல்வர்க்(கு) இன்பமே
திகழும் அதுபோல் அதற்கு நீள்சடையோர் தாமகிழ்ந்தார் ’



என்று தாய் தந்தையர் தங்கள் குழந்தைகள் இழிவான செயல் செய்தாலும் பேரன்பாகக் கொண்டு பேசுவார்கள். அதுபோல் உலகமெலாம் பெறுது பெற்றெடுத்த அம்பாளோடு (கன்னி) கூடி உலகு இயக்கும் கடவுளாகிய (பிரமசாரி) அம்மையப்பர் தமது அடியவர்களாகிய குழந்தைகள் செய்யும் வன்மையான தொண்டினையும் ஏற்று அருள்புரிவர் என்பது விளங்குகின்றது. அருளில் ஆராய்தல் இயலாத காரியமாகும்.

அன்றியும் திருக்கண்ணப்பர் செய்த பெருந்தொண்டை மேம்படுத்துவதான செருப்படி காளத்தித் தந்தையார்க்கு முருகவேளினது சேவடியினும் தமக்குச் சிறப்புடையது என்று விளக்குகிறார்.

“ விருப்புறும் அன்பெனும் வெள்ளக்கால்
பெருகிற்(று) எனவீழ்ந்த
செருப்படி அவ்விளம்பருவச் சேய்அடியில்
சிறப்புடைத்தால் ”

இம்மட்டோ கண்ணப்பராங் கடவுளரை காளத்தி அண்ணலார் பாராட்டியது.

வேத வாக்கியங்களும் முனிவர் துதிப்பவைகளும் மந்திரங்களும் ஆகிய இவை எல்லாவற்றிலும் கண்ணப்பர் முகமலர்ச்சியோடு காளத்தி உடையாரை அன்றி வேறு அறியாத வார்த்தைகளே பேரானந்தம் விளைப்பதாகும் எனத் தெளிவிக்கிறார்.

“ மன்பெருமா மறைமொழிகள் மாமுனிவர் மகிழ்ந்துரைக்கும்
இன்பமொழித் தோத்திரங்கள் மந்திரங்கள் யாவையினும்
முன்(பு) இருந்தும் மற்றவன்றன் முகமலர அகநெகிழ்ந்த
அன்பில் நினைந்(து) எனையல்லால் அறிவுறுமொழி நல்ல ”

என்று காற்றுவடிவமர்ந்த காளத்தியார் கண்ணப்பர் திறம் பேசினர். சிவகோசரியாருக்கு மேலும் உண்மைதெளிவிக்க மறுநாள் நடக்கும் அற்புதச் செயலைக் குறித்தனர். மலைக்கொழுந்துக்கு கண்ணில் இரத்தம்வருவதைக் கண்ணுற்றுத் திண்ணனார் என்னும்கண்ணப்பர் உடனே ஆவிசோர்ந்து உன்மத்தரைப்போல் மயங்கினார். வாயில் உள்ள நீர் சிந்தியது. கையில் உள்ள ஊனும் வில்லும் விழுந்தன. தரையில் பதைத்து வீழ்ந்தார். உடனே திருவருட்பாங்கு உணர்ந்து விளங்கும் கண்ணப்ப சுவாமி ஊனுக்கு உண்டான

சாந்தோபதேச மஞ்சரி விலை ரூபா 1—4—0

நோயை ஊனே தீர்ப்பது என்னும் உலகு உரையை நினைத்தனர். தமது கண்ணைப்பிடுங்கி அப்பவே இரத்தம் நின்றுவிட்டது. குடுமித்தேவர் மற்றொரு கண்ணிலும் இரத்தம் சிந்தவே திருக்கண்ணப்பதேவர் தம்முடைய இன்னொரு கண்ணைத்தோண்டத் தொடங்கினபோது தேவதேவனாய் முழுதுமானவராய் நின்ற காளத்திஉடைய பெருந்தேவனார் "நில்லுகண்ணப்ப" என்று தடுத்தனர் ஆண்டனர் கொண்டனர் அருளினர்.

இத்தகைய செயற்கரிய செய்த பெரியோர்கள் ஏகதேசத்தே பராமுகமாக இயற்கையாய் தமக்குக் கிடைத்த ஊன் முதலிய உணவாதிகளைக் கடவுளுக்குப் படைத்து மகிழ்ந்தார் என்பதைக்கொண்டு அன்னோரின் திருவருட்பெருமை ஆழ்ந்தறிந்து வாழ்த்திவணங்காது துரபிமானத்தால் கலக்குண்டு பொருந்தா வினைநிகழ்த்துவோர் அதிதீவிர பக்குவத்திற்செய்த அன்பின் திறத்தை எங்ஙனம் அளந்துரைக்க வல்லார்.

"தடுக்கலாகாப் பெருங்காதல் தலைநின்று அருளுங் கண்ணப்பர்
இடுக்கண் களைந்து ஆட்கொண்டருளும் இறைவர் மகிழ்ந்த காளத்தி"

க்குச் சென்று பணிந்து அருளால் ஏறி அன்பு ஆறு மடுப்ப மலைமேல் மருந்தை வணங்குதலே எவர்க்கும் உரிய கடமையாகும்.

கண்ணப்ப சுவாமி ஊன் தின்றதைமாத்திரங்கொண்டு வினை நிகழ்த்துவோர் கண்ணப்பர் என்பது காரணப்பெயர் என்பதை ஊன்றிநோக்கித் தாமும் அங்ஙனம் தமது கண்களைக் கடவுளுக்கு உரியவை என்று பிடுங்கி அப்ப எவ்வளவு விரைவில் முந்துவர் என்பதை ஆழ்ந்து நினைத்தல்வேண்டும். இவ்விரண்டு செயலும் ஒருங்கே செய்த திறத்தை அறிந்து அடங்கி நில்லாமல் ஒருசெயலைக் கொண்டு விவகரித்தல் மற்றொரு செயலை மறத்தலாகும்.

பதினோராந் திருமுறையிலுள்ள நக்கீரதேவரும் கல்லாடதேவரும் அருளிச்செய்த திருக்கண்ணப்பதேவர் திருமறங்களை ஊன்றிவாசித்தறிதல் வேண்டும்.

திருத்தொண்டர்களின் நிலையை யாவரே ஆராய்ந்து அளவெடுத்துரைக்கவல்லார். சரியை கிரியை யோகம் ஞானம் எனும் நான்கு நெறிகளிலும் முதலிலுள்ள சரியை மார்க்கம் கடைப்பிடித்து ஒழுகிய பெரியோர்கள் பெரும்பான்மையோர் ஆதலால் தொடக்கம்பற்றியும் மிகுதிபற்றியும் 'தொண்டு' செய்தோர் புராணம் திருத்தொண்டர் புராணம் ஆகும்.

பகவத்கீதார்த்த பங்கம் விலை அணா—1.



"ஓவா இன்பம் உற்றிருந்தோர் தொன்று மரபின் அடித்தொண்டு தோய்ந்த அன்பில் தோய்ந்தோர். குறிப்பில் அடங்காப் பேரன்புலாய்ந்தோர். ஐம்புலனில் புலப்படா இன்பம் புணர்ந்தோர். மெய்யுணர்வினில் பொங்கினோர். ஆனந்தக்கூத்தர் திருவடிப்பற்றே கொண்டோர். தணியாத ஆனந்தத்தால் மயிர்முகிழ்ப்பக் கண்புனல்பொழிய ஆவியினும் அடைவுடையராய் சித்தநிலை திரியாமல் பருகா அமுதத்தைக் கண்களால் பருகுவோர். மணிகண்டர் செயல் கருத்திற்கொண்டு செம்மைநெறி சேர்ந்தோர். அறிவுகொண்ட நாள்தொடங்கி ஆதிமுதல்வர் தாளே என்றும் உரிய பொருள் எனக்கொண்டோர். பல உயிர்க்கும் அருள் உடையர். ஒருமைநெறியின் உணர்வுவர ஓதிப்பணிந்தே ஒழுகுவோர். உலகு விளக்கும் திருப்பேரம்பலம் வணங்குவோர். அறிவின் எல்லையாயது தில்லை எனத்தேர்வோர். இன்பவெள்ளத்திடை நின்றும் ஏறமாட்டாது அலைவார் போல் என்பும்உருகி உயிர் ஒன்றி உடம்பும் ஒன்றும் என இசையும் மெய்க்குணமிக்கோர்.

"நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடு மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமைக்
குன்றாத உணர்வுடையார் தொண்டராங் குணமிக்கார்.

என்று கண்ணுதல் திருமுன்பு தாழ்ந்து வீழ்ந்து எழுந்து ஆரத்தே உள்ள கன்று பசுவினைக்கண்டு அணைவதுபோல் நெருங்கி ஒழுகுவோர் திறமாகும்.

ஆகவே திருக்கண்ணப்ப தேவர் முதலிய பெரியோர்களை அளவைகளாலும் ஆராய்ச்சியாலும் பக்குவம்பார்த்தல் பெரும்பயனை ஒரு சிறிதும் விளைக்காது.

உயிர் இரக்கமும் ஆன்ம உருக்கமுமாகிய ஜீவகாருண்ய ஒழுக்கம் சாதனமாகக்கொண்டு மேல்நிலைக்குரிய ஏனைய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு முழுதுமான இறைவன் திருவடிப்பற்றும் கொண்டுவாழ்தல் வேண்டும். எல்லாப்பொருளிலும் தங்குவோன் இறைவன். இறைவன் சத்தியை சரீரமாக உடையவன். அடி-சத்தி,

"போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்" எனவே உலக நன்மைக்குக் காரணமாக உள்ளது இறைவன் திருவடி.

நீராடேலோ என்பது சரீரசுத்தம். உடம்பு தூய்மையானபின் உள்ளம் தூய்மையடையும். உள்ளம் தூய்மை அடையவே திருவடிப்பற்று உண்டாகும். திருவடிப்பற்று உண்டானால் உண்மை உண்டாகும். பலபட விரிந்த அறிவையும் குவிந்த மனத்தால் அடக்குவோர் பெரும்புண்ணியர்.

திருவடியின் பெருமை இவ்வளவு என்று சொல்ல இயலாது. சாரங்கொண்ட சைவ சித்தாந்தத்தேன் அருந்தினர் சிலரே.

ஓது சமயங்கள் பொருள் உணரு நூல்கள்
ஒன்றோடொன்(று) ஒவ்வாமல் உள பலவும் இவற்றுள்
யாது சமயம் பொருள்நூல் யா(து) இங்(கு) என்னின்
இதுவாகும் அதுவல்லது எனும் பிணக்கது இன்றி
நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே
காணநின்றது யாதொரு சமயம் அதுசமயம் பொருள்நூல்
ஆதலினால் இவையெல்லாம் அருமறை ஆகமத்தே
அடங்கி யிடும் அவையிரண்டும் அரனடிக்கீழ் அடங்கும்.

எல்லா அறிவின் முடிவும் திருவடியேயாகும்.

"ஆகமமாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க"

"உன் பொன்அடிகள் கண்டு இன்று வீடுற்றேன்"

அன்பர்கள் மெல்லெனத் துதிப்பவை யாவும் திருவடிக்கீழ் அடங்கும்.

"அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து"

## Beneath THY Sacred Feet they learn the Meaning of their Song.

"தில்லை மூதூர் ஆடிய திருவடி
ஆண்டு கொண்டருள அழகுறு திருவடி."

"திருவடி இணையைப் பிரிவினை அறியா
நிழலதுபோல்" பற்ற வேண்டும்



"ஆமாறுன் திருவடிக்கே அகம் குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன்"

"சிந்தனைநின் றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக்காக்கி"

"உடைந்து நைந்து உருகி உன் ஒளிநோக்கி
உன் திருமலர்ப் பாதம்
அடைந்து நின்றிடுவான் ஆசைப்பட்டேன்"—என ஆளுடைய அடிகள் திருவடிப்பற்றின் திறம் பேசினர்.

ஆளுடைய அரசுகளும் தனியே திருவடித்தாண்டகம் அருளியதால் திருவடிப்பற்றின் அவசியம் விளங்கும்.

"அரவு அணையான் சிந்தித்து அரற்றும் அடி
சரவணத்தான் கைதொழுது சாரும் அடி
சார்ந்தார்கட்கு எல்லாம் சரணும் அடி
கணக்கு வழக்கைக் கடந்த அடி
அழகு எழுதலாக அருட் சேவடி
பெரும்பித்தர் கூடிப் பிதற்றும் அடி.
உருவிரண்டும் ஒன்றோடொன்று ஒவ்வா அடி
உருவென்று உணரப் படாத அடி
உரைமாலை எல்லாம் உடைய அடி
உரையால் உணரப் படாத அடி
அரை மாத்திரையில் அடங்கும் அடி
அகலம் அளக்கில் பாரில்லா அடி
தீத்திரளாய் உள்ளே திகழ்ந்த அடி
மந்திரமும் தந்திரமும் ஆய அடி
பற்றற்றார் பற்றும் பவள அடி"

128 அடியான் மிகுத்துவந்த ஆசிரிய விருத்தத்தால், திருவருட்பிரகாச வள்ளலார் திருவடிப்புகழ்ச்சி என்று இத்திருவடியின் பெருமைகளை விரிவாய்ப் பாடியுள்ளார்.

"பராசத்தி வடிவாம் பதம், சிற்சத்தி இச்சாஞானக்கிரியை முச்சத்தி வடிவாம் பதம், விந்தைமோகினி அசைவிக்கும் பதம், அருட்சத்தி

தாயுமான சுவாமி பாடல் மெய்கண்ட விருத்தியுரை ரூபா 3—8—0.

உருவாம் பதம், அவாத சாந்தப் பதம், சகலர் விஞ்ஞானகலர் பிரளயா கலர் இதய சாக்ஷியாம் பதம், அணுபக்ஷம் சம்புபக்ஷம் சமரசம் உறும் பதம், சூக்ஷ்ம ஸ்தூல அதிசூக்ஷ்மத்தின் உயிராம் பதம், விவித ஆன்மப் பகுதி தாங்கும் பதம், பிண்டாண்ட அகிலாண்ட பிரமாண்டந் தழைக்க அருளும் பதம், சகசமல இருளகல நின்மல சுயம்பிரகாசம் குலவும் பதம், மதாதீத வெளிநடுவில் ஆனந்த நடனமிடும் பதம், வினையொப்பு மலபரிபாகம் வாய்க்க மாமாயை மிதிக்கும் பதம், பிறவியில் அழுந்தும் உயிரை அருளின் எடுக்கும் பதம், ஊர்த்ததாண்டவஞ் செய்யும் பதம், முயலகன் மீதில் ஊன்றிய பதம், அழியாத சுத்தநிலை வழங்கும் பதம், மறைப்பாது கைச்செம் பதம், ஆயினும் மறைக்கும் எட்டாப் பதம், மறையவனுக்கு உலகம் ஆக்கின்ற அதிகாரவாழ்வை ஈயும்பதம், மால் அருச்சிக்கும் பதம், உருத்திரற்கு முத்தொழில் வன்மை அருளும் பதம் என் அம்மை மலர்க் கையால் வருடும்பதம், மறலியை உதைத்தருளும்பதம், மறக்கருணை அறக் கருணை வாழ்விக்கும்பதம், மாறனுக்காகக் கால் மாறியாடிய பதம், எம்பந்தம் அற எமது சம்பந்தவள்ளல் மொழி இயல்மண மணக்கும்பதம், எம்முடைய நாவரசர் இசை பரிமளிக்கும் பதம், எமது நாவலாரூரர் இசைத் திருப்பாட்டுப் பதம், வாதவூர் எங்கோவின் இன்சொல்மணி அணியும் பதம், எழில்பரவை இசைய ஆரூர் மறுகில் அருள்கொண்டு இராமுழுதும் உலவும் பதம், எவ்வண்ணம் வேண்டுகினும் அவ்வண்ணம் அன்றே இரங்கி ஈந்தருளும் பதம், என் கண்களுக்கினிய நல்விருந்தாம் பதம், எங்கள்பதம் எங்கள் பதம் என்று சமயத்தேவர் இசை வழக்கிடும் பதம்.

இறைவன் திருவடி போற்றுதார் தலை இத்தகையது என்று,

“ வீட்டுத்தலைவ நின்தாள் வணங்கார் தம் விரிதலைசும்
மாட்டுத்தலை பட்டிமாட்டுத்தலை புன் வராகத்தலை
ஆட்டுத்தலை வெறிநாய்த்தலை பாம்பினடுந்தலை கற்
பூட்டுத்தலை வெம்புலைத்தலை நாற்றப் புழுத்தலையே ”

இப்பாட்டால் விளங்குகிறது.

“ ஆடிய கால்மலர்க்கே அன்புடையார் யாவர்
இங்கே அவர்க்கே இன்பம்
கூடியது என்(று) ஆரணமும் ஆகமமும்
ஆணையிட்டுக் கூறும் வார்த்தை

Studies in Saiva Siddhanta Rs. 3—0—0.



ஓடியதோ நெஞ்சே நீ உன்னுவது என்
பற்பலவாய் உன்னேல் இன்னே
பாடியவன் திருப்பாட்டைப் படி கண்டாய்
இன்புல(கு) அப்படி கண்டாயே ”

என் நெஞ்சுக்கு அறிவுறுத்தல் அவசியம்.

ஆடியகால் Dance is Activity

இதுகாறும் விவகரித்தவற்றால் அறியக்கிடக்கும் உண்மைகள் கூறுதும்: உலகத்திலுள்ள பொருள்களை ஆராயப்புகுந்த பௌதிக சாஸ்திர ஆராய்ச்சியாளர் மண்ணின் அமைப்பை ஆராய்ந்து இயற்கைச் சக்தியின் கூட்டுறவால் இயங்குகின்றதென்றும் தத்வநூலோர் அண்டப்பரப்பினுள் காணப்படுவது அருள் வல்லபமே என்றும் முடிவுகட்டுகிறார்கள். அண்டத்தில் கண்டதுபோலவே பிண்டத்திலும் காணப்படுகிறது. பல உறுப்புக்களையும் தத்துவங்களையும் கொடுத்து உலக இன்பத்தை நுகரச்செய்து பேரின்பத்தை அவாவ உடம்பைத் தந்தருளினபடியால் பிண்டத்திலும் கடவுளருள் வல்லபம் விளங்கும். பெரியோர்களுடைய அனுபவம் முழுவதும் அவர்கள் அருளிய பாடல்களில் வெளிவருதல் முடியாது. பெரியோர் காலாதீதர். அற்புதம் என்பது நாம் அறிந்தவைகளுக்குமட்டும் விரோதம். ஆற்றலாலும் அறிவாலும் அளவையாலும் பெரியோர்களை அளத்தல் கூடாது. இன்பம் அனுபவிக்கும் பக்குவியைப் பொறுத்தது. குடும்பத்தைப்பற்றி நின்ற அன்பு முறையே சிறிது சிறிதாக விசாலித்து உலகத்துள்ள ஜீவராசிகள்மீது உயிர் இரக்கமாகவும் ஆன்மாக்கள்மீது ஓர் உரிமைச் சகோதரர்கள் என்கின்ற ஆன்ம உருக்கமாகவும் விளங்கும். கொலை புலை தவிர்த்தலாகிய அறம் பண்டைக்காலந்தொட்டு இந்நாள் வரையும் தமிழ் நூலோர் அனுசரித்ததாகும். புலாலுண்போர் கூறும் அற்ப ஆதாரங்கள் பொருந்தா. ஜீவகாருண்ய நன்னெறிக்கத்தோடு இறைவன் திருவடிப்பற்று அவசியம் ஆஸ்திகர்களாகிய அனைவர்க்கும் வேண்டும்.

ஆன்மா தனித்து இயங்காமல் சத்தைச் சார்ந்தகாலத்தில் சத்துவடிவமாகவும் அசத்தைச் சார்ந்தகாலத்தில் அசத்துவடிவமாகவும் விளங்கும். பல நிறக்கண்ணாடிகள் சுற்றிலும்வைத்து நடுவில் அமைத்த ஸ்படிகத்தைச் சூரியோதயகாலத்தில் பார்த்தால் ஸ்படிகமானது சூரியனுடைய ஒளியால்

Sivajnana Siddhiyar Rs. 3—0—0.

நிறக்கண்ணுடிகளின் றும் பலநிறங்களைத் தன்மீதுகொள்ளும். அப்போது தன் இயற்கை நிறம் ஆகாயம் மறையும். ஆயினும் உச்சிப்பகலில் இதே கண்ணுடிகள் சுற்றிலும் இருக்கப் பலநிறங்களை இந்த ஸ்படிகம்காட்டாமல் சூரியன் சிறந்த ஒளி வண்ணமாக விளங்குகிறது. இந்தத் திருஷ்டாந்தத்தால் பல நிறக்கண்ணுடிகள் என்பது பலவகையான இச்சைகளை ஊட்டும் உலக இன்பம. ஸ்படிகம் என்பது ஆன்மா. சூரியன் காலை வெயில் என்பது அருள் சிறிது விளங்கும் அவசரம். உச்சிப்பகல் சூரியன் என்பது திருவருள் செவ்வனே கிடைத்த அவசரம். ஆகவே திருவருளில் ஈடுபடாமல் உலகபோகங்களில் மூழ்கியிருக்கும்போது அவ்வுலகச்சார்பாகவே உயிர் பற்றிநிற்கும். திருவருள் பூர்ணமாகக் கிடைத்தகாலத்தில் கடவுள் வண்ணமாய் விளங்கும். ஆகவே ஆன்மா சதசத்து எனப் பெயர் எய்தியது. 'பளிங்கு அனைய சித்து நீ' என்பதும் இதனாலே விளங்கும்.

"Life like a dome of many-coloured glass
Stains the white radiance of Eternity."

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

இவ்வியாசத்தின் உரிமையைத்தொண்டமண்டலம் திருக்கைலாய பரம்பரைக் காஞ்சிபுரம் - ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் ஆதீனத்துத் தம்பிரான் சுவாமிகளும், மஹா வித்வானுமாகிய சித்தாந்தப் பிரவர்த்தகாசாரியர்-சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திரர் என்னும் பெருந்தகையார்க்கு எம்மை ஆண்டருளும் அன்பின் அறிகுறியாக ஊற்றஞ் செய்தவனுகின்றேன்.

"குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறியு மாந்தர் கடன்"

"எழுவகைப் பிறவிகளுள் எப்பிறவி எய்துகினும்
எய்துக பிறப்பில் இனி நான்
எய்தாமை எய்துகினும் எய்திடுக இருமையினும்
இன்பம் எய்தினும் எய்துக
வழுவகைத் துன்பமே வந்திடினும் வருக மிகு
வாழ்வு வந்திடினும் வருக

Essentials of Hinduism 3—0—0.



வறுமை வருகினும் வருக மதிவரினும் வருக அவ
மதி வரினும் வருக உயர்வோடு
இழிவகைத்து உலகில் மற்றெதுவரினும் வருக அலது
எது போகினும் போக நின்
இணையடிகள் மறவாத மனம் ஒன்று மாத்திரம்
எனக்கடைதல் வேண்டும் அரசே
கழிவகைப் பவரோக நீக்குநல் அருளெனும
கதி மருந்துதவு நிதியே
கனக அம்பல நாத கருணை அங்கணபோத
கமல குஞ்சித பாதனே."

சிவஞானமுனிவர் சேவடிவாழ்க.

மோ. கந்தசாமி முதலியார். B.A.

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# மாம்ஸ போஜனக் குறைவும் மரக்கறி ஆகார உயர்வும்.

தொகுதி - 7 - பகுதி 9 - பக்கம் - 215 - தொடர்ச்சி.

முதலாவது-ஸ்ரீ சடகோபர்: இவர் தண்டமிழ் தன்னில் நுண்பொருள்காட்டி, வடமொழி வேதத்தை வரகாய்ப் புகன்றவர். வைணவ ஆழ்வார்களில் முதல் நிலை வாய்ந்து வைணவர்களாலும் ஏனைப்பலராலும் செந்தமிழ் பயின்ற எல்லா வித்துவான்களாலும் வெகுவாய் கொண்டாடப்படும் விமரிசை வாய்ந்தவர். இவர் கூறுகிறார். "ஹா! இஃதென்ன பித்துலகம்! பல்வகையாலும் வருத்தி, மீன்களைப் பலமான வலையுட்படுத்திக் குமைத்திட்டுக் கொன்று தின்கிறார்கள்! இஃதென்ன பித்துலகம் இஃதென்ன பேயுலகம்!"

"மறுக்கிவல் வலைப்படுத்திக் குமைத்திட்டுக் கொன்றுண்பர்
அறப்பொருளை யறிந்தோரா ரீதென்ன வுலகியற்கை"

என்னும் அவர் தம் அற்புதத் திருமொழியை நன்குணர்ந்த யாவர் தாம் புலாலுண்ணலோடு புருஷோத்தமன் பக்தர்களாயிருக்க விரும்புவார்கள்? கல்லும்கரையப் புல்லும் புலம்பச் சமரசம்போதித்துச் சில்லாண்டுகட்கு முன் சமரசம்வாய்ந்த திருவருட்பா ஆசிரியராகிய ஸ்ரீமத் - இராமலிங்க சுவாமிகள் கூறுகிறார்;—

"ஆணைப்பெண்ணாக்கி ஒரு கொடியில், அப்பெண்ணை ஆணாக்கிச் செத்தவர்களை யெழுப்புகின்ற திறமுடையவனானாலும், கொலைசெய்து புலாலுண்ணுங் கருத்துடையவனாயின் சத்தியமாய் அவனை ஞானியென்று கூறவே கூடாது."

"மருவாணைப் பெண்ணாக்கி யொருகணத்தே வயங்குமப்பெண்
ணுருவாணை யுருவாக்கி யிறந்தவரை யெழுப்புகின்ற வுறவனேனுங்
கருவாணை யுறவிரங்கா துயிருடம்பைக் கடிந்துண்ணுங் கருத்தனேலெங்
குருவாணை யெமதுசிவக் கொழுந்தாணை ஞானியெனக் கூறொணாதே,"

என்பதுதான் அவர் ஆணையிட்ட அருமைப்பாடல்!

இனி, மற்றும் நமது மதநூல்களிலும் நீதிநூல்களிலும் கூறியுள்ளவற்றை இங்குக் குறித்திடுவோமாக,

நோன்பென்பது கொன்று தின்னாமை—ஔவை
கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்—திருவள்ளுவர்
ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே—இனியவைநாற்பது
கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே
கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர் மற்
றல்லாதார் யாரோ வறியேன் பராபரமே
கொலை களவு கட்காமங் கோட்பலவிட்டாலன்றோ
மலையிலக்கா நின்னருட்டான் வாய்க்கும் பராபரமே-தாயுமானவர்.

(இன்னும் வரும்.)

**தி. பக்தவத்ஸலம் பிள்ளை, B. A., M. P. P. I.,**

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி எ.] 1918ஆ நவம்பர்மீ [பகுதி கக.

## சாந்தோக்யோபநிஷத்து.

### எட்டாம் பிரபாடகம்.

### கண்டம் அ.

நீர் நிறைந்த வொரு பாத்திரத்தினில் உங்கள் ஆத்மாவைப் பாருங்கள் தெரியாவிட்டால் கேளுங்கள். அங்ஙனமே பார்த்தோம். என்ன பார்த்தீர்கள்? எங்கள் எல்லா அவயவங்களையும் பார்த்தோம். ஆடையாபரணங்களை யணிந்துகொண்டு பாருங்கள். அங்ஙனமே பார்த்தோம். இப்பேர்து எதைப் பார்த்தீர்கள். முன்பு அலங்காரமில்லை இப்போது அலங்காரத்துடன் உடலைப்பார்த்தோம். அதுவே யாத்துமா அதுவே அமிருதம் அதுவே பிரமம். பிரஜாபதியின் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு தேவரும் அசுரரும் சென்றார்கள்.

உ. பிரஜாபதி அங்ஙனம் சென்ற அவர்களை நோக்கி நீவிர் ஆத்துமாவை அறியாமல் அடையாமல் செல்லுகின்றீர்கள். இங்ஙனம் தேகமே ஆத்துமாவென்று நீங்களறிந்தால் அவமானத்தையே யடைவீர்களென்றனர்.

ந. இங்ஙனம் பிரஜாபதி சொல்லியும் அசுரராஜனாகிய விரோசனன் அசுரர்களை நோக்கித் தேகமே ஆத்துமாவென்றும், அதுவே பூசிக்கத் தக்கதென்றும் இவ்வுண்மை தெரிந்தால் இகபரலோகம் கிடைக்குமென்றான்.

௪. இது தேர்ந்த அசுரர்கள் பகுத்தறிவு, சிரத்தையின்றி யாகாதி கர்மங்களை விட்டு மிக வலங்கார கோலாகலத்துடனிருந்து எல்லா உலகங்களையுஞ் சயித்துவிடலாமென வெண்ணினார்கள்.

## கண்டம் ௯.

இந்திரனோ தேவர்களிடம் போகாமல் தீர்க்காலோசனைசெய்து, சந்தேகமுண்டாகி, இவ்வுடல் அலங்கரிக்கப்பெற்றால் அவ்வாறே காணப்படுகிறது. அங்கவீனங்களிருந்தால் அங்ஙனமே காணப்படுகிறது. ஆகவே உடலுக்கு நாசமுண்டோ இலையோ யாதொரு யோக்கியமும் காணப்படவில்லையேயெனச் சந்தேகித்தான்.

௨. மறுபடியும் இந்திரன் பிரஜாபதியிடஞ் செல்ல அவர் மறுபடியும் ஏன்வந்தீரென்றார். இந்திரன் தன் சந்தேகத்தைச் சொல்லினான்.

௩. இந்திரனே! சாயா ஞானம் கூடாது. உபதேசிக்கிறேன் கேள். முப்பத்திரண்டு வருடம் பிரமசரியம் உபாசியென்றனர். அங்ஙனமேயிருந்தான். பிறகு பிரஜாபதி சொல்லுகிறார்.

பாணவழகு.

### நீதி.

யோஜநம் பேரிசப் தச்ச
மேகசப் தச்ச த்வாதச
தாத்ராணும் தாநசப் தஸ்து
த்ரைலோக் யஞ்ச சராசரம்.

பேரிகையை யடித்தால் அச்சத்தம் ஒருகாததூரம் கேட்கும். மேகம் கர்ஜித்தால் பனிரண்டுகாத தூரம் கேட்கும். தருமவான்களுடைய தானம்

௨

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சமயம்.

## தொகுதி - ௭ - பத்தி - ௫ - பக்கம் - ௧௨௯ - தொடர்ச்சி.

சித்தாந்தத்தே சிவன்றன் றிருக்கடைக்கண் சேர்த்தி என்னுந் திருப்பாசுரத்தினுண்மைப் பொருளை விளக்கி அவ்விளக்க முடிவில் சித்தாந்தத்திற்கூறுஞ் சித்தாந்த வுரைகளன்றி ஏனையவுரைகளைப் பித்துரைகளெனவும் பாவப்பெருங்குழியில் வீழ்த்தும் பாவவுரைகளெனவும் முன்னர் வரைந்திருக்கின்றோம் இனி பித்துரைகளைக் கூறும் மூர்க்கராகிய அம்மதயானைகளை யடக்கும் அங்குசஞ் சித்தாந்த மென்பதைக் கூறுவாம்.

பதி பசு பாசம் என்று சொல்லப்பட்ட மூன்றும் அளவிடப்படாதது. அளவிடப்படாத அம்மூன்று பொருளையும் எடுத்துத் தத்தம் மனம்போனவாறெல்லாம் ஆணவ மதங்கொண்டும் தற்போத மதங்கொண்டும் பேசும் மதமுடைய மதவாதிகளாகிய மதயானைகளை அடக்கும் ஓர் அங்குசம்போன்றது சித்தாந்தம்.

இங்ஙனமான சித்தாந்தமாகிய அங்குசத்தைக் கைக்கொண்டு அந்த மதயானைகளை அடக்கவல்ல பாகர் தாதமார்க்கம் புத்திரமார்க்கம் சகமார்க்கம் என்னு மூன்றுமார்க்கங்களிலும் தவறாது ஒழுகிச் சன்மார்க்கத்திற்கூடி அவஞானபோத சம்பந்தப்பட்ட பாசஞான பசுஞானங்களாகிய அஞ்ஞான இருளகன்று சிவஞானபோத சம்பந்தப்பட்ட பதிஞானத்தால் பிரகாசிக்கும் அருட்கண்ணுடையராய்ப் பரசிவாதிக்யம் பெற்ற சிவஞானிகளாகிய (சிற்பரச்செல்வர்)களே யாவர். அவர் மும்மலங்களைச் சிவம் ஞானம் போதம் என்ற மூன்றாற்போக்குவர்.

இனி முப்பொருள்களுள் பதி-சத்தென்றும், பாசம்-அசத்தென்றும் சடமென்றும், பசு-பாசம் தன்னைவிட்டு நீங்கும் பரிபாகம் உண்டாமளவும் அதன் வண்ணமாய்ச் சார்ந்தும், சத்திநிபாதம் வரப்பெற்று அருள் வசப்பட்டபோது அதன் வண்ணமாய்ச் சார்ந்தும் நிற்பதாகிய அநன்னியத்தன்மை யுடைத்தென்றும், பிரமாண முகத்தானும் இலக்கணமுகத்தானும் நிலைநாட்டும் தன்மை யுடைத்தானது சித்தாந்தம்.

பதி—பசு பாசங்களுக்குத் தான் இடமாய் நிற்றலால் பதி எனவும் பாசத்தைத் தனது கிரியாசத்தியால் ஆணவாதி பாசங்களைக் காரியப்படுத்தலால் அஃதாவது தநுகரண புவனபோகங்களாகவும் இருவினைகளாகவும் புண்ணிய பாவங்களாகவும் சுகதுக்கங்களாகவும் இவ்விருவகையினையும் எனதெனவும் யான் எனவும் பற்றும் பற்றுப்பொருளாகவும் காரியப்படுத்தலால் **பாச(உலக)பதி** எனவும், மூவகை யான்மாக்களாகிய பசுக்களைத் தனது ஞானசத்தியினால்காரியப்படுத்தலால் அஃதாவது விஞ்ஞானகலர்க்கு ஆணவம் பரிபாகம் வரச்செய்தும், பிரளயாகலர்க்கு ஆணவம் கன்மம் இரண்டும் பரிபாகம் வரச்செய்தும், சகலர்க்கு ஆணவம் கன்மம் மாயை எனனும் மூன்றும் பரிபாகம் வரச்செய்தும் அவை வந்த பின்னர் பெத்தநிலையினீங்கி அவரவரறிவின்கண்ணும் அருள்ஞானம் பிரகாசிக்கச்செய்தும் அது பிரகாசிக்கச்செய்த பின்னர் இச்சா சத்தியால் தனது காட்டும் உபகாரத்தையும் காணும் உபகாரத்தையும் உணர்த்தி அன்பினை விளைவித்துத் தன்னையே இச்சிக்கக் கசிந்துருகச்செய்தும் வருதலால் **பசுபதி** எனவும், தனது ஆதிசத்தியால் சிருட்டி திதி சங்காரம் திரோபவம் என்னும் நால்வகைக்கிருத்தியங்களையும் தனது பராசத்தியால் சுதந்தரத்வம் விசுத்ததேகம் நிராமயான்மா சர்வக்ஞத்வம் அநாதிபோதம் அலுப்தசத்தி அனந்தசத்தி திருப்தி என்னும் எண்வகைக்குணங்களையும் உடையராய் அவ்வெண்குணங்களான் தனது உபகாரங்கருதிக் கசிந்துருகிநிற்கும் தொண்டினை மேற்கொண்டுள்ளபரமுத்தர்களுக்கு முறையே அஸ்வதந்திரத்தையும் அசுத்தமாயாதேக நீக்கத்தையும் ஐயுணர்வினை நீக்கித்தன்னுணர்வினையுணரும் உணர்வினையும் அவ்வுணர்வான் அசத்தினியல்பையும் சத்தினியல்பையும் உணர்வதாகிய முற்றுணர்வையும் அவ்வுணர்வான் சீவபோதமாகியதற்போதமொழிந்து அருட்போதவழியில் நிற்கும் அருள்நிலையையும் அந்நிலையால் மும்மலச்சார்பால் குன்றுதலடையாத இன்பநிலையினையும் அவ்வின்ப நிலையில் தெவிட்டுதலறியாத பரவசநிலையினையும்; அந்நிலையால் என்னிலையினும் தன்னிலை தோன்றாதிருத்தலாகிய திருப்தியினையும் தருதலால் **அருட்பதி** எனவும் போற்றப்படுவனெனவும்.

பசு அஞ்ஞானசம்பந்தத்தால் பாசத்துக்கடிமையாயும் ஞானசம்பந்தத்தால் ஆசிரியனுக்கடிமையாயும் அருட்சம்பந்தத்தால் அடியவருக்கடிமையாயும் நிற்றலால் அடிமைத்திறத்தை எப்பொழுதும் உடையனெனவும்,

சிவானுபூதி வெண்பா சந்துருவெண்பா விலை அணா—1.



**பாசம்.** தன்னுடனாய்நிற்கும் பசுவைப்பற்றியிருத்தல்போல் அப்பசுவுடனாய் நிற்கும் பதியைப்பற்ற அறியாமையால் சடமெனவும், தன் பற்றாயிருக்கும் பசு தன்பற்றகன்று அப்பதிப்பற்றாய் நிற்கவருங்காலத்து அப்பசுவையும் தான்பற்றுதற்கின்றியிருத்தலால் சடமெனவும் பின்னர் அவ்வருட்பற்றால் அன்பின் வசப்பட்டு நின்றகாலத்து அவர் அவ்வன்பினையாளுதற்குரிய கருவியாய் நிற்றலால் சடமெனவும் பிரகாசப்படுத்துவதே சித்தாந்தம்.

பதி—இலக்கண வியலால் பசு பாசங்கட்கு வேறாகவும், சாதனவியலால் பாசத்தோடொன்றாகவும், பயனியலால் பசுவோடு உடனாகவும் நிற்குநிலையையும்,

பதி—பசு, பெத்தநிலையில் நிற்குங்காலத்து அப்பசுவோடு ஒன்றாய் அப்பசுவைப் பாசத்தால் அழிவுபடாமற் காத்தலாகிய உபகாரத்தையும், பசு—பெத்தநிலையினின்று நீங்கி சீவன் முத்திநிலையைக் கூடவருங்காலத்தில் அப்பசுவுக்குவேறாய், பாசப்பொருள்களினின்று காட்டலாகிய உபகாரத்தையும்; பரமுத்திநிலையில் நின்று சிவானந்தத்தை அநுபவிக்கவருங்காலத்தில் பசுவுடனாய் நின்று காணும் உபகாரத்தையும் செய்துவரும் பெருங்கருணைத்திறத்தையும்,

பதி பசு பாசங்கள்—வியாபகம், வியாத்தம், வியாப்பியம் என்னும் மூவகை யிலக்கணத்தால் ஒன்றாயிருந்தமையும், பதி—பசுவோடு ஒன்றாகியும், பாசத்துக்கு வேறாகியும், பசு பாசத்தோடொன்றாகியும், பதிக்கு வேறாகியும் நிற்கு நிலைகளையும் பிரகாசப்படுத்துவது சித்தாந்தமென்க.

இச்சித்தாந்தம்—அருள், அன்பு என்னும் இவ்விரண்டையும் நேத்திரங்களாகக்கொண்டு தன்னையடுத்தோர்க்குக் கொடுக்கும் சைவசமயத்தே காணப்படுமென்க. அருளாவது—பசுத்தன்மையுடைய ஆன்மாக்களை அத்தன்மையினின்றும் வேறுபடுத்திச் சிவமாந்தன்மையைச் செய்வது, எனவே ஆன்மாக்களுக்குத் தான் இறைவன் அடிமையென்னும் பொருளை விளக்கி அவ்வடிமை குலையாது அவர்களைச் சிவமாக்குவது. அன்பாவது—அங்ஙனம் சிவத்தன்மையைப் பெறுவித்துச் சிவமாக்கியபின்னர் அவ்வான்மாக்களுக்குப் பாசத்தால் சிவானந்தத்தை விளைவிப்பது. எனவே பாசம் இறைவனுக்கு உடமையென்னும் பொருளைவிளக்கி அவ்வுடைமையாகிய பாசகாரியங்களான் சிவானந்தானுபவத்தையநுபவிக்கச்செய்வது.

இவ்விரண்டினுண்மையை உண்மையாக வுணர்ந்துய்யவே இச்சமயத்துக்குத் தெய்வமாகிய சிவனெனுநாமந் தனக்கே யுடைய உலகுக்கெல்லாம் அம்மையப்பனாய் விளங்கும் இறைவனது அருள்கண்ணாய் விளங்கும் சிவஞானபோதத்தையும், அன்பென்னும் கண்ணாய் விளங்கும் பெரியபுராணத்தையும் தனது ஞானக்கண்ணாஸ் அமைத்திருக்கின்றனர்.

சிவஞானபோதம் என்னும் நூல் ஆன்மாக்கள் அடிமைஎன்னும் தன்மையிற் குன்றாது சிவமாய் நிற்கச்செய்யவல்ல அருளைப்பிரகாசமாயறியுமாறு செய்யவல்லதாகலின் அருணூலெனப்பட்டது.

பெரியபுராணம் என்னும் நூல் பாசங்கள்- உடைமை யென்னும் தன்மையிற் குன்றாது சிவானந்தத்தை விளைவிக்குந் தன்மையில் நிற்குமாறு செய்யவல்ல அன்பைப்பிரகாசமாயறியுமாறு செய்வதாகலின் அன்புநூலெனப்பட்டது.

## இனி அன்புக்கும் அருளுக்கும் உள்ள ஒற்றுமையுள் ஈண்டு சிலவெடுத்துக் கூறுவாம்.

1: இருவினை யொப்பு வருவித்தலும் அன்பே.
2. அது வந்தபின்னர் மலபரிபாகத்தைச் செய்வதும் அன்பே,
3. அம்மலபரிபாகம் வந்தபின்னர் சத்திநிபாதம் உண்டாகும் வண்ணம் செய்வதும் அன்பே.
4. அது உண்டாயின பின்னர் தமது முதலே குருவாய் வரச்செய்தலும் அன்பே.
5. குருவாய் வந்தபின்னர் அவன் உணர்த்தும் உண்மை யுபதேசங்களை உணர்த்தியவாறே உணரச்செய்வதும் அன்பே.
6. உணர்ந்த பின்னர் அவ்வுணர்ச்சி விசேடத்தான் ஆன்மாவாகிய தன்னுண்மையை உணரும் வண்ணஞ் செய்வதுவும்அன்பே.
7. தன்னை யுணர்ந்தபின்னர் தன்னுள்ளிருக்கும் பரமான்மாவாகிய சிவனை உணரும் வண்ணம் செய்வதும் அன்பே.
8. அவனை யுணர்ந்த பின்னர் அப்பரமான்மாவின் மயமாய்த் தன்னையிருக்கும்படிச் செய்வதும் அன்பே.

மனுவழகு சரித்திரம் (படத்துடன்) விலை அணு—4.



9. அவன் மயமாயிருந்த பின்னர் அவனிடத்துள்ள ஆனந்தப் பெருக்கைத் தன்னையனுபவிக்குமாறு செய்வதுவும் அன்பே.
10. ஆனந்தானுபவனாய்த் தானுள காலத்துத் தன்னைப் பாசவசப்படுத்தி அதன்வயமாக்கிய தேகேந்திரியாதி அனைத்தையும் ஆனந்தானுபவத்தைத் தந்தவன் மாட்டு இன்புறுமாறு செய்து அத்தேகேந்திரியாதிகளின் வழியே அவ்வான்மாவை நுகரும்வண்ணஞ் செய்வதுவும் அன்பே.
11. தேகேந்திரியாதிகளின் வழியே சிவானந்தானுபவம் அனுபவிக்குமாறு ஆன்மாவுக்கு வரவே அவ்வான்மா அவ்வானந்தானுபவத்தைவிட்டு விஷயானந்தானுபவத்திற்கு வருவதற்குக் கருவிகளின்மையாய் விடுகின்றமையான் அவ்வருஞ் செயலைச் செய்ததும் அன்பே.

அருளுக்கு உடைமை அன்பு ; அன்புக்கு உடைமை அருள்.

அருள் எங்குண்டோ அங்கு அன்பு உண்டு
அன்பு எங்கு உண்டோ அங்கு அருள் உண்டு
அன்பை நோக்கிவருவது அருள்
அருளை நோக்கி உண்டாவது அன்பு

அருள்—மனங்கரைவதற்கு ஏதுவான உபகாரத்தைச் செய்வது.
அன்பு—செய்தவுபகாரத்தைக் கருதச்செய்து மனத்தைக்கரையச் செய்வது.
அருள்—அன்பை உள்ளிட்டு உண்டாவது.
அன்பு—அருளை உள்ளிட்டு உண்டாவது.
அருள்—யாதொருபொருளையும் வேண்டச்செய்யாது அன்பையே வேண்டச்செய்வது.
அன்பு—அருளையே வேண்டச்செய்து ஏனையவெல்லாம் வெறுக்கும் வண்ணம் செய்வது.
அருள்—ஆன்மாவுக்குப் பாச நீக்கத்தைச் செய்வது
அன்பு—ஆன்மாவை சிவப்பேற்றை அடைவிப்பது.
அருள்—ஆன்மாவைக் கொள்ளை கொள்வது.
அன்பு—இறைவனைக் கொள்ளை கொள்வது.
அருளுண்டாகுங்காலம்—சத்திநிபாதம் வருங்காலம்

சைவாகமப்பிரமாண்யம் விலை அணு—12.

அன்புண்டாகுங்காலம்—இருவினை யொப்பும் மலபரிபாகமும் உண்டாகுங் காலம்.

அருள்—அடியாரிடத்து அன்புண்டாக்கும்.

அன்பு-சிவனிடத்து அன்புண்டாக்கும்.

அருள்—ஞானயோகங்களை விளக்கும் பேரொளி.

அன்பு—சரியை கிரியைகளை விளக்கும் பேரொளி.

அருள்—சிவனால் கொடுக்கப்படும் ஞானயோகங்களாகிய பொருள்கள்

அன்பு—ஆன்மாவினால் சிவனுக்குக் கொடுக்கப்படும் பொருள்

அருள்—ஆன்மாவுக்கு இறைவன் செய்யும் நன்றி

அன்பு—இறைவனுக்கு ஆன்மா செய்யும் நன்றி மறவாமை.

அருள்•ஆன்மா இருக்குமிடம்.

அன்பு-சிவனிருக்குமிடம்.

அருளினால் ஆன்மாவை ஆளுவோன் சிவன்

அன்பினால் சிவனை ஆளுவோன் ஆன்மா•

அருளினால் ஆன்மாவை ஆண்டு சிவன் அவன்பால் பெறுவது அன்பு.

அன்பினால் சிவனை ஆண்டு ஆன்மா சிவன்பால் பெறுவது அருள்.

அன்பைப் பெற்ற சிவன் அவன் செயலெல்லாம் தன் செயலாக்கிக் கொண்டு தானேயாய் நிற்பன்.

அருளைப்பெற்ற ஆன்மா தானது சிற்றின்பமெல்லாம் பேரின்பமாக் கொண்டு சிவமேயாய் நிற்பன்.

அருள்•தானுனவரைத் தானாகவே நிற்கச் செய்து அவரை யாவரும் தானாகவே காணும்படிச் செய்யும்.

அன்பு-ஆன்மாவை சிவமாகவே நிற்கச் செய்து அவனை சிவனுக்கு அடிமை யென்று யாவரையும் சொல்லச் செய்யும்.

இனி இவற்றின் உண்மையை விரித்துக்கூறுவாம். அருள். அருளுடைமை என்றும் இவ்விரண்டினுண்மை முன்னர் அறியத்தக்கது.

அஃதாவது.—

உயிர்களுடைய துன்பங்கண்டு இரங்கும் இரக்கமே அருளெனவும் அதனைத் தன்னால் ஆளப்படும் பொருள்போல் கொள்ளலே உடைமையெனவும் கூறப்படும்.

திருத்தொண்டர் வெண்பா (திருக்குறளுத்தரார்த்தமுடன்) விலை அணா—1.



உயிர்களுடைய துன்பங்கண்டிரங்குமவன் யாவனெனின் உயிர்வர்க்கங்களில் ஒன்றாகாத இறைவனே யாவன். அவன் இரங்கும் இரக்கமே அருளெனப்படும். அவ்வருளை உடைமையாக ஆளப்பட்டவன் அவனே அவ்வருளன்றி அவனால் ஆளப்பட்டபொருள் வேறொன்றில்லை•

இனி உயிர்களுடைய துன்பமாவது யாதெனின், உயிர்கள்மறைத்தற்றொழிலாகிய கடிய தொழிலுடைய ஆணவமலத்தால் தமக்குரிய ஞானம் மறைபட்டு அந்த ஞானத்தால் எண்ணிச் செய்யும் செயலுமற்றிருத்தலே துன்பம் எனப்படும். ஏனெனில் உயிர்கள் ஞானமும் செயலும் உடைத்தாயிருந்தும் ஞானத்தால் அறியவேண்டியவற்றை அறியவும், செய்கையாகிய கிரியையால் செய்யவேண்டியவற்றைச் செய்வதற்கில்லாமலும் ஒழியுமாயின் பெருந்துன்பமன்றோ. அப்பெருந்துன்பத்தை யறிபவன் இறைவனன்றி வேறு எவனுள்ளான். அவ்விறைவனன்றி உள்ளாரெல்லாம் உயிர்வர்க்கங்களே யாகலான் ஒருவனும் இல்லை யென்பது திண்ணம்.

ஆகவே அவ்விறைவன் மேற்சொல்லிய உயிர்களுடைய துன்பத்தைக்கண்டிரங்கித் துன்பத்தைப்போக்குவதற்கு ஆணவத்தினின்றும் எடுத்துத்தநுவையும் கரணங்களையும் தந்து அவ்வழியால் ஞானக்கிரியைகள் செயற்படுதற்குரிய புவனங்களைப்படைத்து அதில் வாழச்செய்தனன். அங்ஙனம் வாழ்ப்பெற்ற உயிர்கள் இறைவன் கொடுத்த தநுகரணங்களைக்கொண்டு தம்தம மறைத்திருந்த ஆணவத்தின் கொடுமையைப் போக்கிக் கொள்ளும் உபாயத்தைத் தமது ஞானத்தால் அறிந்து அறிந்தவண்ணம் அதற்குச் செய்வனவற்றைத் தமது கிரியையாற் செய்து துன்பத்தைப் போக்கிக் கொள்ளும் வகையறியாது அவ்வாணவம் மாயாமலத்தாலும் கன்மமலத்தாலும் ஆக்கப்பட்டதாய் தந்தை மனைவி மக்கள் இவர்களைச் சார்ந்த சுற்றங்கள் முதலியோரிடத்தில் மயங்கும் வகையானே மயக்கி மாயாகன்மங்களைப் பெருக்கி விஷய போகங்களே அநுபவிக்கப்படும் போகங்களாகக் கூட்டி அவற்றில் மொத்துண்டு வருந்தும்படிச் செய்தது.

அதுகண்டு இறைவன் இரங்கி அவ்வாணவாதிகளுடைய கொடுமைகளையும் அவற்றால் விளையும் நல்வினை தீவினைகளையும் அவற்றால் இடை

மெய்கண்ட சாத்திரம் பதினான்கு மூலம் விலை அணா—8.

விடாது அனுபவிக்கப்படும் சுவர்க்க நரகானுபவங்களையும் அவ்வனுபவங்கள் விட்டொழியாது மேன்மேல் மாறி மாறி வரக்கூடும் சந்தையிற் கூட்டங்களாகிய மனைவி மக்களால் உண்டாகும் மாறாக் கவலைகளையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் பிரத்யக்ஷமாய் அறிந்து சுவற்றினின்றும் வேறுபட்டு வருமாறு வேத முதலிய பல சாஸ்திரங்களைப் பரக்கக் காட்டினன்.

கா. ஏ. ஆலாலசுந்தரம் பிள்ளை,

சித்தாந்தபோதரத்தினாகரம்.

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# நீலகண்டமணி மாத்திரை

## முதலிய குறிப்புகள்.

மாந்தாளிகள்ளி - சதுரகள்ளி - வெள்ளெருக்கன்வேர் பட்டை - இவைகளைச் சமன் எடையாய் நிழலில் உலர்த்திக்கொண்டு ஐந்துபலம் குழிதைலம் வாங்கிக்கொண்டு சுரக்குடுக்கையில் வைத்துக்கொண்டு பெருங்காயம் - லிங்கம் - அபினி இந்த மூன்றும் ஒவ்வொருபலம் கலுவத்தில் போட்டு பொடித்துக்கொண்டு குங்குமப்பூ - கஸ்தூரி - கோரோசனை - பச்சைகற்பூரம் - கூகைநீறு - இந்த ஐந்தும் வகைக்கு ஒன்றேகால் (கவ) வராகனெடை சேர்த்து தைலத்தைவிட்டு எட்டு ஜாமம் அரைத்து குன்றிமணி பிரமாணம் மாத்திரை செய்து மூங்கில் குழாயில் அடைத்து மண்குடத்தில் வைத்து பூமிக்குள் நாற்பது நாள் வைத்து பின்பு எடுத்து விஷ்ணுவுக்கு பூசை செய்து தங்கடப்பியில் வைத்துக்கொண்டு வாந்திபேதி கண்டவர்களுக்கு மணிக்கு மூன்றுமாத்திரை தேனில் கொடுத்தால் வாந்தி





பேதி நிற்கும். ஜன்னி பாதக ஜன்னி மூன்றுக்கும் பிரயோசிக்கலாம். நல்லபாம்பு முதலிய விஷ ஜந்துக்களுக்கும் தகுந்த அனுபானங்களில் பிரயோசிக்கலாம், இந்த மாத்திரைக்கு விஷ்ணு வைத்த பெயர் பிராணயா கால ருத்திர மணி மாத்திரை. சிவனிட்ட பெயர் நீலகண்ட மணி மாத்திரை. இது நாடியில் சொல்லியது.

சில குறிப்புகள்.

பக்தி என்பது மனநெகிழ்ச்சி, மன உருக்கம். அன்பு என்பது ஆன்ம நெகிழ்ச்சி ஆன்ம வுருக்கம், எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வியாபித்தறிதலே ஈஸ்வர பக்தி யாம். ஜீவகாருண்யம் உண்டானால் அருள் உண்டாகும். அருள் உண்டானால் அன்புண்டாகும் அன்பு உண்டானால் சிவானுபவம் உண்டாகும்.

அந்தக்கரண சுத்தியின் பிரயோசனம் பக்தியை விளைவிப்பது.

---

தயவு—வெள்ளைவர்ணம். சுத்தம் ஞானம் அருள் என்பது தயவு.

காருண்யம். தயவுக்கு விரோதமானவைகளைச் செயிப்பதற்கு அடையாளமாகத் தரிப்பது காவிவேட்டி மூவாசைகளின் விசேஷம் பற்றுவோர்களாகித் தயை இல்லாத கடின சித்தர்கள் சந்நியாசம் பெற்றுக்கொள்ள வேண்டும். மேற்படி குற்றங்களை ஒழித்தவர்கள் துறக்கவேண்டியதில்லை.

கற்பபேதம் என்பது கடவுள் இடபவாகன ரூடராய் உலகத்திலே வந்தருளி காட்சி கொடுத்து அருளுங்காலம். இடபம் என்பதற்குப் பொருள் தருமசொரூபம்: காருண்யம்: தயை.

---

காரணம் என்பது கரணசம்பந்தம் உடையது கரணம் என்பது ஒற்றுமை வேற்றுமைத்தொழில் தன்மை உடையது மட்குடத்தைப்போல.

---

தேவர் குறளில் முதல் அதிகாரத்தில் சாகாத கல்வியைக் குறித்துச் சொல்லியிருக்கின்றது. அதை ஆசிரியர் மூலமாகத் தெரிந்துகொள்ளலாம்.

---

ஜீவகாருண்யத்தால் பிரமாவினுடைய ஆயுளும் பாச வைராக்கியத்தால் விட்டுணுவினுடைய ஆயுளும் ஈஸ்வர பக்தியால் ருத்திரன் ஆயுளும் பிரம்ம ஞானத்தால் என்றும் அழியாத சொர்ண தேக முதலியவைகளைப் பெற்றுக் கடவுள் மயமாகலாம்.

சிவ = அனாதியாய் மலமில்லாத சர்வவல்லபம் உடைய் பொருள். சி = அனாதியாய் மலமில்லாதது. வ = சர்வ வல்லபம் உடையது.

சிவம் = சச்சிதானந்தம். சி = சத்து. வ = சித்து. ம் = ஆனந்தம்.

சி = எல்லாம் உள்ளதாய் விளங்குவது.

வ = எல்லாம் விளங்குவதாய் உள்ளது.

ம் = இவ்விரண்டினாலும் நிரம்பிய இன்பம்.

சி = எல்லாம் உடையது. வ = அபின்னமாகிய அருள். ய = ஆன்மாவாகிய சபை. ந = சிவன், ம = பசு.

---

மனித தேகத்தில் சுவர்க்கம் நரகம் இருக்கிற இடம் பிரமபதம், விஷ்ணுபதம், ருத்திரபதம், மயேசுரபதம், சதாசிவபதம் முதலிய பதங்களினிடம். இந்த மனிததேகத்தில் கண்டம்முதல் உச்சிவரையில் மேற்படி பதங்களுக்கு சுவர்க்கம் என்று பெயர். நரகம் நரகாதிகளுக்கு இடம் உந்தி முதல் குதபரியந்தம். இயமனிருக்கும் இடம் குதத்திற்கு இடதுபாகம்.

---

பெண்பாகத்தில் கலைநான்கு ஆண்பாகத்தில் கலைமூன்று. ஆக ஏழு. ஒவ்வொரு கலையில் ஒவ்வொரு தாதுஅணுவாய்ச்சேர்ந்து ஏழாவது கலையில் கரு சம்பூரணமாய் சப்த தாதுக்களும் கூடிய பின் பிண்டமாகும். பிறப்பு ஏழு என்பது ஒவ்வொரு தேகத்தில் ஏழு பிறப்பு.

---

பவுதிகம்—வீரம், பூரம் முதலிய 64-சரக்கு.

---

ஏமம்-கனகம் என்பது சூரியனைக் குறிக்கின்றது. சூரியனிடத்தில் பொன் இருக்கின்றது.

---

தேகநட்டஞ் செய்வது உப்பு. உப்பைக் கட்டியாகாரத்தில் சேர்ப்பது சித்தமார்க்கம்.

ஆண்பிள்ளையின் தேகத்தில் மூன்று இடங்களில் சத்துண்டு. அவை மண்டையின் மூளை, கொப்பூழ், இலிங்கத்தின் கீழ்ப்புறம், பெண்பிள்ளைகளின் தேகத்தில் சத்து நான்கு இடங்களில் உண்டு: மண்டையின்மூளை, தனங்களின்கீழ், கொப்புழ், குய்யம்.

---

சர்க்கரை புழுத்தலின்முகலின் உத்தம ஆகாரமாம்

---



சூரியன் ஆணாகவும் சந்திரன் பெண்ணாகவும் வலப்பாகம் சிவமாகவும் இடப்பாகம் சத்தியாகவும் வழங்குவது மருட்டு. ஏகதேச ஞாயம் வலப்பாகம் சிவசத்தியாகவும் இடப்பாகம் சிவமாகவும் இருப்பது அனுபவம். சூரியன் அக்கினியோடு கூடியபோது சந்திரனாகவும் சந்திரன் அக்கினி கூடியபோது சூரியனாகவும் உண்டாகும்.

பசு என்பது முற்றும் மலம் உடையது.

ஜீவன் = மூன்றுபங்கு மலம் உடையது.

ஆன்மா = ஒருபங்கு மலம் உடையது.

சிவம் = முற்றும் மலமில்லது.

மலம் முற்றும்நீங்கி தயாவடிவமாவதே சிவம்.

---

ஆனந்தம் என்பது சதா சந்தோஷத்தோடு எதிரிட்ட ஜீவர்களுக்குத் திருப்தியாய் சந்தோஷிப்பித்துத் தான் அதிசயமின்றி நிற்பதுவே.

---

ஆணவம் மாயை கன்மம். இம்மூன்றும் பக்குவம் மூன்று அபக்குவம் மூன்று. ஒவ்வொன்றில் விரிந்தது பதினெட்டு. பக்குவ ஆணவம் பக்குவ மாயை இவ்விரண்டும் தனித்து நிற்பது விஞ்ஞானகலர் என்றது. சுரநாக பசாசங்கள் அபக்குவ மாயை அபக்குவ கன்மம் பக்குவ ஆணவம் இவை கூடியவை ஜீவ ஆன்மா பக்குவ மாயை அபக்குவ கன்மம் தாவரங்கள் அபக்குவ கன்மம் ஆணவ மயமாகநிற்றல்.

---

சி—பீஜாக்ஷரம் (ஞ) பிந்துநாதம் சகர ஒற்று அகரம் இகரம் ஆக ஐந்தும்கூடிய ஒருருவாகிய சிகரம்.

சங்கல்பம் ஐந்து வகை;—

---

(1) நிர்விகல்பம், (2) சவிகல்பம், (3) சங்கல்பம், (4) விகல்பம், (5) கல்பம்.

நிர்விகல்பம் = கடவுளறிவு.

சவிகல்பம் = அதனது வியாபகம்

சங்கல்பம் = யாதொன்றிலும் பற்றுமல் சுத்தமாக இருந்த காலத்தில் தோன்றிய அசைவாகிய நினைப்பே முன் அசைவின்றி அசை

சிவஞானபோதச் சிற்றுரைவிளக்கம் விலை நடை 3—8—0.

ந்த அசைவாகிய மேலசைவென்றும் புடைபெயர்ச்சியே எக்காலத்தும் மரணம் அடையமாட்டோம் என்றும் அழுந்திய பிரக்ஞை.

விகல்பம் = பிரம்ம சதாசிவகால அளவைக் குறித்தது.
கல்பம் = மேற்குறித்தவைகளுக்கு அனுசந்தானங்கள்.

சங்கல்ப விகல்ப கற்பம் :—(1) உள் அழுந்தல் ஆன்ம திருஷ்டி, (2) அதை சிந்தித்தல் ஜீவதிருஷ்டி, (3) விசாரித்தல் மனதிருஷ்டி இம்மூன்றுமே சங்கல்ப விகல்ப கற்பம். ஆதலால் மனதில் யாதொன்றும் பற்றாமல் சுத்தமனமாக நாம் நஷ்டமடைய மாட்டோம் என உள்ளழுந்தி நிச்சயித்தலே சங்கல்பம்.

மனதின் கூறுபாடுகள் நான்குவகை

1-ஜீவப்பற்று 2-பந்தப்பற்று 3-களத்திரப்பற்று 4-தேகப்பற்று என தேகப்பற்றாகிய அகப்பற்றில் லக்ஷியம்போய் இருத்தல் சங்கல்பம்.

---

சுத்த அமுததானங்கள் ஐந்து.

(1) முதல் அமுதம் நாக்கின் அடியில் இனிப்புள்ள ஊற்றுச்சலம் போல் இருக்கும்.
(2) உள் நாக்குமேல் இளகிய இனிய சர்க்கரைப் பாகுபோல் இருக்கும்.
(3) மூக்கின முனை-குழம்பின் சர்க்கரைப்பாகுபோல் இருக்கும்.
(4) நெற்றியின் நடுவில் முதிர்ந்த சர்க்கரைப்பாகுபோல் இருக்கும்.
(5) மகா இனிப்புள்ள மணிக்கட்டியாக இருக்கும்.

இந்த ஐந்தாவது அமுதங்கிடைத்து உண்டவர் என்றுஞ் சாகாநிலையைப் பெற்றோர்.

---

குளிகை மணி ஒன்பதின் விவரம்:-

1- பரம்பரமணி—அண்டமும் அண்ட வஸ்துக்களைக் காட்டுவது.
2- பராபரமணி—பிண்டமும் பிண்ட வஸ்துக்களைக் காட்டுவது.
3- அரும்பெறன்மணி—நினைத்ததை நினைத்தபடி யருளுவது.
4- ககனமாமணி—விண்ணுலக வஸ்துக்களை யாட்டிவைக்கும்.

செய்யுளிலக்கணம் விலை அணா 8.



5- சரவொளிமணி— மண்ணுலக வஸ்துக்களை யாட்டிவைக்கும்.
6- கலைநிறைமணி—எல்லா உலகத்தும் உலாவுதல்
7- வித்தகமணி—சர அசர வஸ்துக்களிடம் விளங்குவது.
8- சித்துசெய்மணி—மகா சித்திகளை நடத்துவது.
9- வளரொளிமணி—அழியாவாழ்வு அளிப்பது.

நித்திய துறவு என்பது

அறம் பொருள் இன்பம் வீடு இந்நான்கையும் நான்குகாலங்களிலும் அனுபவித்துப் பற்றற்றிருப்பதே நித்தியத்தை அடைவதற்கு ஏதுவாக இருக்கின்றது.

---

சுரோணிதப்பையினிடத்தில் மூன்றுமணிசேர்ந்த கொத்து(க) வலது புறத்திலும் நான்குமணிசேர்ந்த கொத்து(க) இடது புறத்திலும் இருக்கின்றது. சுரோணித சுக்கிலங்கலந்து கர்ப்பந்தரிக்கிற காலத்தில் மூன்று சேர்ந்த கொத்தில் சம்பந்தப்பட்டால் ஆண்குழந்தையும் நான்குசேர்ந்த கொத்தில் சம்பந்தப்பட்டால் பெண்குழந்தையும் பிறக்கும். புணர்ச்சிக் காலத்தில் வலதுபுறம் சாய்வாகப் புணர்ந்தால் ஆணும் இடதுபுறம் சாய்வாகப்புணர்ந்தால் பெண்குழந்தையும் பிறக்கும்.

---

நவநிலை யென்பது அனுபவ மார்க்கம்.

பிந்துநாதம், பரவிந்து, பரநாதம், அபரவிந்து, அபரநாதம், திக்கிராந்தம், அதிக்கிராந்தம் அருள் ஆக ஒன்பது.

பரஞானம் என்பது முன், சாத்திர ஞானம்
வாசாகயிங்கரியம் சாதனம் வாச்சியார்த்தம்
அபரஞானம் என்பது பின், அனுபவ ஞானம்
சாத்தியம் லக்ஷியார்த்தம்
பரம் முன் அபரம் பின் சாத்திரம் முன் அனுபவம் பின்
சாதனம் முன் சாத்தியம் பின்.

---

ஆதி = முதல் அந்தம் = கடை, அனாதி = முதல்கடை இல்லாதது.

அண்ட அமுத வகை:

அக அமுதம் புற அமுதம் புறப்புற அமுதம் (= மழை)
பிண்ட அமுதம்.

அக அமுதம், அகம்புற அமுதம், புறஅமுதம், புறப்புற அமுதம்.

சகலர்-பிரளயாகலர் விஞ்ஞானகலர்.

சகலர்-இயற்கையாகிய ஆணவம்.
இயற்கையிற் செயற்கையாய மாயை.
செயற்கையாகிய காமியம் அல்லது கர்மம்
ஆக இம்மூன்றும் உடையவர்.

பிரளயாகலர்=இயற்கையாகிய ஆணவம் இயற்கையிற் செயற்கையாகிய மாயை இவ்விரண்டும் உடையவர்.

விஞ்ஞானகலர்=இயற்கையாகிய ஆணவம் ஒன்றுமாத்திரம் உடையவர்

சகலர்=ஜீவர்கள்.

பிரளயாகலர்=கல்பதேகிகள்.

விஞ்ஞானகலர்=கலாதீதர்.

---

அகர முதலெழுத்து உற்பத்தி விவரம் :—

பிந்து-பெரிய வெளிச்சம், சூரிய வெளிச்சம்.

நாதம்-பெரியநாதம்,

பரவிந்து-அதில் பாதிவெளிச்சம், சந்திர வெளிச்சம்.

பரநாதம்-நாதம்.

அபரவிந்து-வெளிச்சம்-நக்ஷத்திர ஒளி.

அபரநாதம்-நாதம்.

திக்கிராந்தம்-அருகிய வெளிச்சம் மின்னல் ஒளி.

அதிக்கிராந்தம்-சப்தம்.

வாமசத்தி

ஜேஷ்ட சத்தி

ரவுத்திரசத்தி

காளிசத்தி.

---

ஓம் என்னும் எழுத்தைப் பிரணவம் என்று சொல்லப்படும்=படைத்து அளித்து அழிக்கவல்ல தலைவன்.

---

கள் காமம் கொலை களவு பொய்—இவ்வைந்தும் கொடிய பாவத்தை உண்டுபண்ணும். இவ்வைந்தில் கொலை விசேஷபாவம். கள் உண்டவனுக்குக் காமம் உண்டாகாமல் இராது கொலை செய்யத் துணிவு வராமலிராது. களவு செய்யாமலிரான். பொய் பேச அஞ்சான். இதைப்போல



இவ்வைந்து கொடிய குணங்களில் ஒன்றை அடைந்தவனுலும் மற்றவைகள் அத்துடன் தொடராமல் இராது. ஆகையால் இவ்வைந்தையும் பரிசுத்தமாய் விலக்க வேண்டியது அவசியம்.

யோகி-அனுக்கிரக பஞ்ச அமுதத்தானங்கள்.

(1) தத்துவ அமுதம்—நாக்கு நுனியில் பக்குவ ஞானத்தால் சிருட்டி வல்லப பிரக்ஞையால்,

(2) புவனமுதம்—நாக்கு மத்தியில் பக்குவ கிரியையால் ஸ்திதி பிரக்ஜையின் உணர்ச்சியால்.

(3) மண்டலாமுதம்—நாக்கு அடியில் பக்குவ இச்சை சங்கார உணர்ச்சியின் தன்மையால்.

(4) ரகசியாமிர்தம்—உள்நாக்கு அடியில் பக்குவதிரோபவம்.

(5) மவுனமிர்தம்—உள்ளுக்கு மேற்பக்குவம்
அனுக்கிரகம்—சுபாவத்தின் அனுபவம்.

---

பூதம் என்பது யாது. அதனது சொருப ரூப சுபாவங்கள் என்ன. பூதம் என்பதற்கு சப்தார்த்தம்.

பூ=மலர்ந்தது. பிரகாசம், த=தடித்தது, காரியம் ம=ஊன்றியது நிலை.

இதற்குத் தாத்பரியம்=நிலைபெற்ற காரியப் பிரகாசம்.
பூத=அக்கினி தோற்றம் என்றும் பெயர்
பூத=காரிய அக்கினி என்றும் பெயர்.

பூ என்பதில் உகர உயிரும் (உ), தம் என்பதில் அகாவுயிரும் (அ) ஆககூடிய் தொகை (௮) இந்த (௰) இடங்களிலும் இந்த பூதகாரிய அக்கினியின் தோற்றம் உண்டு. கல்லுக்குள் இருக்கிற நெருப்பு பஞ்சில் காரியப்படுத்துவது போலாம்.

பத்து பொதுஸ்தானங்களாவன : மண், நீர் தீ, காற்று, ஒளி, பிரகிருதி, மாயை, சூரியன், சந்திரன், நட்சத்திரம் ஆக இடம் (௰)

இதைப் போலவே பிண்ட நியாயம்.

---

இந்த உலகத்தில் மனிதர்களுக்கு சீக்கிரத்தில் தேகநஷ்டம் உண்டாவதற்குக் காரணம் இரண்டுவகை, அதாவது அருந்தல் பொருந்தல். அருந்தலில் ஒன்பது பங்கு நஷ்டமும் பொருந்தலில் ஒரு பங்கு நஷ்டமும் உடையது. எப்படியெனில் பிண்டம் உற்பத்தியான காலமுதல் இறக்கும் அளவும் சதா அருந்தலுண்டு. சிசுபருவத்திலும் வாலிபப் பருவத்திலும் விருத்தப் பருவத்திலும் பொருந்தல் கிடையாது. கௌமாரம் யௌவனம் இந்த இரண்டு பருவத்தில் மாத்திரம் பொருந்தல் உண்டு. இதனினும் நோயினாலும் துக்கத்தாலும் தரித்திரத்தாலும் பசியாலும் பயத்தாலும் முதலிய துன்பங்களால் பொருந்தல் தடைபடும். அதனால் அருந்தல் சதா நஷ்டம் பொருந்தல் ஏகதேச நஷ்டம். அப்படியே ஆகார விஷயத்தில் அக்கிரம அதிக்கிரம அஜாக்கிரதை அசாதாரண உணவுகளை நீக்கி சுத்த சத்துவ ஆகாரங்களை மாத்திரம் புசித்து ஆயுளை விர்த்திசெய்துக்கொள்வது சுத்த சன்மார்க்க ஏற்பாடு.

---

பிறவி எழு:

(1) கருப்பத்தில் ஐந்து மாதம் வரையில் குழவியாக இருப்பது (2) அவயவாதி உற்பத்தி காலம், (3) பிண்டம் வெளிப்பட்டகாலம் (4) குழந்தைப்பருவம், (5) பாலப்பருவம், (6) குமாரப்பருவம் (7) விருத்தாப்பிய பருவம், ஆக பிறவி எழு.

தாபர முதலிய எழுவகைத் தோற்றத்திலும் ஒவ்வொன்றிலும் எழு பிறவியுண்டு. ஒரு பிறப்பிற் பிறந்தால் ஒரு கற்பகாலம் வரையில் தோற்றமில்லாமல் மண்ணில் மறைந்திருக்கும். மறுகற்பத்தில் தான் மறுபடியுந் தோன்ற வேண்டும். காரணப் பிறப்பு எழு. சூக்ஷமப் பிறப்பு எழு. ஸ்தூலப் பிறப்பு எழு ஜாக்கிரப் பிறப்பு ஒன்று. சொப்பனப் பிறப்பு ஒன்று. சுழுத்திப்பிறப்பு ஒன்று ஜாக்கிரத்தில் சொப்பனப்பிறப்பு ஒன்று. ஜாக்கிரத்தில் சுழுத்திப் பிறப்பு. சொப்பனத்தில் சொப்பனப்பிறப்பு சொப்பனத்தில் சுழுத்திப்பிறப்பு ஒன்று. ஆக எழு. இதன்றி மனோசங்கற்பமெல்லாம் பிறப்புகளாம்.

சினம் வெகுளி என்பது.

சினம்=உள்வேக்காடு. புடஞாயம் போல இது தேகத்தைச் சீக்கிரம் நஷ்டம் செய்யும்.





வெகுளி=மீசை துடித்தல், கண்சிவத்தல், கை, கால், உடம்பு முதல் துடித்தலாதியாகி அதை வெளிப்படையாகக் காட்டுதல். இதுவும் தேகத்தை நஷ்டம் செய்யும். ஆகையால் எந்த வகையாயினும் கோபம் கூடாது. ஒழிக்க வேண்டியது. அவசியம்.

---

ஜீவன் என்கிற தீபத்திற்கு சுக்கிலம் திரி, இரத்தம் எண்ணெய். ஆகையால் சுக்கிலமாகிய திரியை விசேஷந்தூண்டி செலவு செய்து விட்டால் ஆயுள் நஷ்டமாய்விடும். ஆனால் சிட்டத்தை மாத்திரம் எடுத்துவிட வேண்டியது. அதாவது பதினாறு தினத்திற்கு ஒருதரம் திரேக சம்பந்தஞ் செய்து ஆபாசப்பட்ட சுக்கிலத்தை வெளிப்படுத்தி விடவேண்டும். ஆசானுடைய திருவடியில் சதா ஞாபகமுடையவனுக்கு காமம் உண்டாகாது. ஆகையால் தேகசம்பந்தம் ஏக தேசத்திற் செய்யலாம் என்றது. இது மந்ததரத்தை உடையவனுக்கேயன்றி அதிதீவிரபக்குவனுக்கல்ல.

---

தூக்கத்தை ஒழித்தால் ஆயுள் விருத்தியாகும் ஒருவன் இரண்டரைநாழிகை தூங்கப் பழக்கஞ் செய்வானானால் அவன் ஆயிரம் (1,000) வருடம் ஜீவித்திருப்பான். எப்போதும் மறப்பில்லாமல் ஆசானுடைய திருவடியே ஞாபகஞ் செய்துக்கொண்டிருப்பதே சாகாத கல்விக்கு ஹேதுவாம்.

---

இரவில் தீபமில்லாதவிடத்தில் இருக்கப்படாது. ஏனெனில் அது ஆயுள் நஷ்டத்தை உண்டுபண்ணும். ஆகையால் நாம் வாழ்கிற வீட்டில் தீபத்தை வைத்து ஆயுளை விர்த்தி செய்துக்கொள்ளல் வேண்டும். வீட்டில் எந்த இடத்திலும் தீபம் வைத்திருக்கவேண்டியது. அவசியம் இருள்இருக்கப்படாது. ஒரு வீட்டில் தீபம் வைத்தால் அந்த வீட்டிலிருந்த இருளெல்லாம் அந்த தீபத்தில் அடங்கிச்சேரும். அதுபோல இந்த ஜீவனாகிய தீபம் இருக்கிற இடத்தில் விளக்கில்லாவிட்டால் அந்த இடத்திலிருக்கிற இருளெல்லாம் ஜீவனாகிய தீபத்தைச்சேர்ந்து தேக நஷ்டத்தை உண்டுபண்ணும்.

---

அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்கிற நான்கு இடத்திலும் கடவுள் பிரகாசம் காரியத்தாலுள்ள விபரம்,

பிண்டத்தில் அகம்=ஆன்மா.
,, அகப்புறம்=ஜீவன்.
,, புறம்=மனமுதலிய கரணம்
,, புறப்புறம்=கண்முதலிய இந்திரியங்கள்.
அண்டத்தில் அகம்=அக்கினி
,, அகப்புறம்=சூரியன்
,, புறம்=சந்திரன்
,, புறப்புறம்=நக்ஷத்ரம்.

ஆகவே பிண்டத்தில் நான்கு அண்டத்தில் நான்கு ஆக எட்டு இடங்களிலும் கடவுள் பிரகாசம் காரியத்தால் உள்ளது.

---

தானாக நிற்றல்-சத்துவம். இராகத்துவேஷாதிகளோடு கூடியது இராஜசம். ஜீவ இம்சை செய்வது தாமசம் சோம்பல் நித்திரை முதலியவை. ஆகையால் இயற்கையாகிய சத்துவத்தோடு கூடி செயற்கையாகிய ராஜசதாமஸத்தை நீக்கவும்.

---

தர்மம்=ஜீவதர்மம் குலதர்மம் சாத்திரதர்மம், ஆசாரதர்மம் ஆச்சிரம தர்மம் ஜாதி தர்மம் முதலியன. இதனது உண்மை ஆன்மாவின் தன்மை, தன்மை என்பது ஆன்மாவின் சுபாவம் சுபாவம்=ஆன்மாவின் இயற்கைக்குணம். தயை ஆன்மாவின் இயற்கை என்பதே தர்மத்துக்குப் பொருள்.

இந்திரியக்காட்சி=ஒருவஸ்துவின் நாமரூபமின்றிக் காணுதல்.

கரணக்காட்சி=அந்த வஸ்துவைப்பார்த்து அதை அனுபவிக்க வேண்டும் என்கிற சித்தவிருத்தி உண்டாதல்

ஆசை என்பது காமம். அதைத் தன்வசப்படுத்த எழுவது மோகம்.

ஆதலால் எந்த வஸ்துவினிடத்திலும் மோகம் காமம் முதலியவை அவா மாத்திரமாய் இருப்பது மேற்படி காட்சி. சன்மார்க்கத்தில் ஏகதேச அவாவும் கூடாது.

---

ஆணுக்குள் பெண்ணும் பெண்ணுக்குள் ஆணும் என்பது எவ்வாறெனில் பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம். பிரகிருதி ஆன்மா என்னும் ஏழும் கூடிச் சுக்கில சுரோணிதமாய் சப்த தாதுவாகச் சிருஷ்டிக்குக் காரணமாய் இருப்பதாதலால் ஆணுக்குள் பெண்ணும் பெண்ணுக்குள் ஆணுமாய் இருப்பது உண்மை. உருவபேதத்தால் பெண் ஆண் என்பது பொய். பெண் ஆண் என்னும் நாமபேதம் வருவானேன். அறிவின் உயர்ச்சி தாழ்ச்சியால், ஆன்ம அறிவு=ஆண். ஜீவ அறிவு=பெண்...... ...........



புருஷபாகத்தில் மூன்றில் ஆகாசத்தில் பிருதிவியும் பெண்பாகம் நான்கில் பிருதிவியினிடத்தில் ஆகாசந்தோன்றி அடங்குவதுபோல் பெண் ஆணாகியும் ஆண் பெண்ணாகிய நியாயம்.

---

பூர்வம்—புறப்புறம்— இந்திரியக்காட்சி,
பூர்வ பூர்வம்—புறம்=கரணக்காட்சி
உத்தரம்-அகப்புறம்=ஜீவ காட்சி
உத்தரோத்தரம்—அகம்=அகமாகிய ஆன்ம காட்சி.

---

சுக்கிலம் ௩ வகை. விராகன் எடை ௩ இருக்கும்.

(1) அதில் விஷபாகம் ஒன்று. (2) சாதாரணபாகம் ஒன்று. (3) அமுதபாகம் அரை. ஆகபாகம் இரண்டரை. இதுபோலவே ஸ்திரிகளுக்கும் சுரோணித மிருக்கும். சுக்கிலசுரோணிதத்தின் மேல் கடவுள் ஆவி உருவாய். இருப்பர். தேகசம்பந்தகாலத்தில் விஷபாகம் வெளிப்படாமல் தேகஷ்டம் சாதாரணம் வெளிப்பட்டால் வியாதி. அமுதம் வெளிப்பட்டால் சந்தான விருத்தி, இந்த நியாயத்தால் சதாதேகசம்பந்தஞ் செய்தாலும் சந்தான விருத்தி ஏகதேசம்.

கடவுள் தயை ஜீவதயை என்பவைகளுள் கடவுள் தயை: என்பது இறந்தவரை எழுப்புதல், தாவரங்களுக்கு மழைபெய்வித்தல், மிருகபட்சி ஊர்வனாதிகளுக்கு ஆகாரங்கொடுப்பித்தல், கால சக்கரத்தின்படி சோம சூரியாக்கினியின் பிரகாசங்களை அளவுமீறாமல் நடத்தி வைத்தல்.

ஜீவதயை என்பது: தன்சக்தி யளவு உயிர்களுக்கு உபகரித்தல், ஆன்மநேய தயாவிசாரத்தோடும் இருப்பது.

உபாய ஞானம்=ஜீவ அறிவு.
உண்மை ஞானம்=ஆன்ம அறிவு.
அநுபவஞானம்=கடவுள் அறிவு.

---

Studies in Saiva Siddhanta Rs. 3—0—0.

உபாய ஞானம் என்பது நட்சத்திரப்பிரகாசம்போல் தோன்றின ஜீவ அறிவு.

உண்மை ஞானம் என்பது சந்திரப்பிரகாசம்போல் தோன்றிய ஆன்ம அறிவு.

அநுபவஞானம், எல்லாப்பொருள்களையும் உள்ளபடி தெரிந்து அநுபவிக்கச்செய்கின்ற சூரியப் பிரகாசம் போன்ற கடவுளறிவு.

ஆகையால் கடவுளறிவை அறிவதற்கு ஆன்ம அறிவைக்கொண்டு அறியவேண்டும்.

---

(திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பரம் —இராமலிங்கசுவாமி எழுதிவைத்த குறிப்பினுட் கண்டது.)

**காஞ்சி நாகலிங்க முதலியார்.**

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவமும் ஏனைய மதங்களும். *

பல மதத்தினர் கூடிய இத்தகைய சபையில் பல மதங்களுள்ளே காணப்படும் தாரதம்மியங்களைப் பார்க்கிலும் ஒவ்வொன்றுக்கும் ஒற்றுமையாகக் காணப்பட்ட விஷயங்களை வெளியிடுதல் நலமாகும் "மதங்களும் உத்தேசங்களும் (Postulates) மூலபாடங்களும் ஒன்றையொன்று மறுதலித்துக் கூறும். உண்மை மதம் யாது உண்மை நம்பிக்கை யாது உண்மை மூலபாடம் யாது. இது பொய் அது உண்மை என்று கூறும் குற்றமிலாமலும் அவைகளோடு முரண்படாமலும்" எல்லாவற்றையும் தன் அகத்தே நியாய வாயிலாக அடக்கிக்கொண்டு எது விளங்குகிறதோ அதுவே உண்மையான மதம் அதுவே உண்மையான உத்தேசம். அதுவே உண்மையான மூலபாடம்." இது எங்ஙனம் பொருந்தும். ஆன்மாவையும் கடவுளையும் ஒத்துக்கொள்ளாத மதத்திற்கும் ஆன்மாவின் நித்தியத்தையும் ஆண்டவனருளையும் ஆதாரமாகக் கொள்ளும் பிறிதொரு மதத்திற்கும் எங்ஙனம் ஒற்றுமை காணப்படும்.

* 1911ஆம் அலகபாத்தில் பல மதத்தினர் கூடிய மஹாசபையில் ஸ்ரீமான்- ஜே. எம். நல்லசாமி பிள்ளை B. A. B. L, அவர்களால் வாசிக்கப்பெற்ற உபன்யாசத்தின் மொழிபெயர்ப்பு.



ஒரு மதத்திற்கும் இன்னொருமதத்திற்கும் எண்ணிலாத அவ்வளவு வித்தியாசங்கள் காணப்படுகின்றன ; எவ்வளவு வாதித்தாலும் விளக்கினும் இவ்வித்தியாசங்களைச் சுருக்கமுடியவில்லை. வாதஞ்செய்யப்புகின் அளவுகடந்த வழக்காய் முடியும். இன்னொருவரைத் தன் மதத்திற்குத் திருப்பிக்கொள்ளல் இயலாது. தர்க்க ரீதியினால் இன்னொரு மதஞ் சேர்ந்தவர்களைக் கண்டிலம். பிறமதத்துட் புகுந்தோர் மனம் முன்னரே அதிற் படிந்திருத்தல் வேண்டும்.

வாதமும் பயன்பட வேண்டில் தூய உள்ளமும் ஒரு சார்பிலா மனமும் வேண்டும், பலவகையான துரபிமானங்களோடு வாதசண்டைக்குப்புகுந்தும் தான் கொண்ட உண்மையே பொருத்தம் என்று கொண்டும் இருந்தால் ஒருபோதும் ஒத்துவருதல் முடியாது.

நாம் கொள்ளும் முறையாவது :— மனிதனுக்கு மனிதன் முக்கியமாக வித்தியாசப் படுகின்றான். பாரம்பரியம், வெளித்தொடர்புகள், அறிவை வளர்ப்பதற்குரிய சௌகரியங்கள், இருப்பதும் இல்லாமையும். இத்போன்ற பலகாரணங்களால் அறிவு ஒழுக்கம் ஆத்மார்த்தம் முதலிய அமைப்புகளில் ஜனங்கள் வெவ்வேறாகப் பிரிகின்றனர். ஐந்தாறு குழந்தைகள் உள்ள ஒரே குடும்பத்தில் அதே தாய்தந்தையின் அநுசரணையில் கொண்டுவரப்பட்டும் ஒருவன் மூடன் மற்றொருவன் மேதாவி இன்னொருவன் துஷ்டன் வேறொருவன் மஹான் ஆகக்காணப்படுதலால் கேவலம் பாரம்பரியமே காரணமாகாது,

இவ்வித வித்தியாசங்களுக்கு இவைகளுக்கு மேற்பட்டகாரணம் ஒன்றுஇருத்தல் கூடும். அது கர்மத்தின் சட்டம் (Law of Karma) என்றும் பூர்வ அநுபவத்தை பூர்வபுண்ணியம் என்றும் இந்துமத நூலோர் கூறுகின்றார்கள்.

எங்ஙனமாயினும் அறிவு ஒழுக்கம் முதலிய அமைப்புகளில் மக்கள் வேறுபடுகிறார்கள் என்பது உண்மை. எவ்வளவு கல்வியும் தண்டனையும் சீர்திருத்த முடியவில்லை.

(இன்னும் வரும்)

### சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 1918-ஆ செப்டம்பர், அக்டோபர் மாதங்களின் வரவு செலவு கணக்கு.

| வரவு. | தொகை. ரூ. | அ | ப | செலவு. | தொகை. ரூ | அ | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 1918ஆ ஆகஸ்டு மீ 31வ இருப்பு ... | 213 | 12 | 7 | லிகிதர் சம்பளம் ... | 40 | 0 | 0 |
| சமாசிகர் வருட சந்தா ... | 1 | 8 | 0 | தபால் செலவு முதலியன ... | 17 | 10 | 6 |
| விளம்பர வரவு ... | 5 | 0 | 0 | அச்சுக்கூலி ... | 33 | 4 | 0 |
| | | | | | 90 | 14 | 6 |
| | | | | அக்டோபர் மீ 31வ இருப்பு... | *129 | 6 | 1 |
| | | | | *ஆயுள் சமாசிகர் சந்தா ரூபா 605-0-0 | | | |
| ஆக மொத்தம்... | 220 | 4 | 7 | ஆக மொத்தம்... | 220 | 4 | 7 |

K. Kuppusami Mudaliar, M. Kandasami Mudaliar, B.A. W. T. Govindaraja Mudaliar, (Sept.)
C. V. Jambulingam Pillay (Oct).

*for Secretary.* *Auditor.* *Trasuerer.*

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி எ.] 1918ஆ டிசம்பர் மீ [பகுதி கஉ.

## பணிசெயல்.

இது பணியைச்செய்தல் அல்லது பணித்தலைச்செய்தல் என விரிந்து பொருள் தரும். பணித்தலைச்செய்தல் என்னும் பொருளைக் கொள்வோமாயின் இட்ட கட்டளையைச் செய்தல் என்பதே போந்த பொருளாகும். அது என்னையோவெனின் நூல்களால் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அதுஎற்றுக்கோ எனின் "அறம்பொருளின்பம்வீடு அடைதல் நூற்பயனே" என்றபடி நூலில்விதித்தனசெய்தலும் விலக்கியன ஒழிதலும் அறம்பொருளின்பம் வீடு என்னும் புருஷார்த்தத்தை யடைய ஏதுவாகின்றது ஆதலால். இவ்விதம் புருஷார்த்தத்தையடைய ஏதுவாயிருக்கும்நூல் "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்கண்ட" நூலாயிருத்தல் வேண்டும். "பொறிவாயில் ஐந்தவி த்தான் பொய்தீர் ஒழுக்கநெறி நின்றார் நீடுவாழ்வார்" என்றபடி பொறிவாயிலைந் தவியாது பொய்யொழுக்கநின்ற ஒருவர் கூறிய நூல் நீடுவாழ்வதற்கில்லையாதலால் அறிவின்முனைவன் ஆகிய இறைமைக்குணங்களெல்லாமுடைய இறைவனே கூறியநூல்புருஷார்த்தத் தைத்தருவதாகும். அவ்வாறு போற்றப்பட்ட இறைவன் சிவபெருமானவர். அவரால் அருளிச்செய்யப்பட்ட நூல்களே வேதங்களும் சிவாகமங்களுமா

கும். 'வேதம் பசு அதன்பால் மெய்யாகமம் நால்வரோதும் தமிழ் அதனுள் ளூறியநெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான் செய் தமிழ்நூலின் திறம்' என்றபடி வேதசிவாகமங்களும் தேவார திருவாசகங்களாகிய பன்னிரு திருமுறைகளும் சைவ சாத்திரங்களாகிய பதினான்கு சாத்திரங்களும் உண்மை நூல்களாகும்.

இவற்றுள் விலக்கியன ஒழிதலும் விதித்தன செய்தலுமே புருஷார்த்தத்தையடைய ஏதுவாம். இவற்றுள் வேத சிவாகமங்களை ஓதியுணர்ந்த பெரியார் திருவாக்கு பணிசெயல் மிகச் சிறந்ததென்று புத்திபோதிக்கின்றது. "அதனை பித்தனுமாக பின்னும் பேயனுமாக நீ இன்று எத்தனை நிங்கு சொன்னாய் யாது மற்றவற்றால் நானேன் அத்தனைக்கு என்னை ஒன்று மறிந்திலையாகில் நின்று வித்தகம் பேசவேண்டாம் பணிசெய்யவேண்டு மென்றார்."

"நங்கடம்பனை பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடனடி யேனையுந் தாங்குதல்
என்கடன்பணி செய்து கிடப்பதே"

என்னும் அருமைத் திருவாக்குகளே நிலைநிறுத்தும். என்னை? பணிசெயல் கட்டளையைச்செய்தல் எனின் எவ்வாறு கட்டளையைச் செய்தல்

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது"—என்னும் பெருநாவலர் போதிப்பின் வண்ணம் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கினுள் சிந்தையு மனமும் செல்லா நிலைமைத்தாகிய வீடு நீங்கலாக' ஏனைய மூன்றனுள் பொருளும் இன்பமுமாகிய சமுத்திரங்கள் அதனுட்பட்டாரை அழுந்தச் செய்தலே யன்றி கரையேறச் செய்வனவில்லையாதலால் அறம் ஒன்றையே கைக்கொள்ளல், அறக்கடவுளாகிய இறைவனது திருவடியை அடைவதற் குரிய தெப்பமாகும். ஏனெனின் எவ்வுயிரும் பிறவியாகிய பெருங்கடலி னீங்கி இறைவன் திருவடியாகிய மோக்ஷத்தையடைய அறம் ஒன்றே காரணமாதலால்.

இப்போது அறமென்பது எதுவென ஆராய்வாம் 'சிறப்பு ஈனும் செல்வமுமீனும் அறத்தினூங்கு ஆக்கமெவனோ வுயிர்க்கு' என்றபடி சிறப்பு என்னும் மோட்சத்தையும் செல்வமென்னும் தேவ போகமுதலியவற்றை



யும் தருவது அறமாகும். ஆனால் சிறப்பென்னு மோட்சத்தைத் தருவது துறவறமென்றும், செல்வமென்னும் போகத்தைத் தருவது இல்லறமென்றும் அறிந்தோம். ஆயின் அறம் ஒன்றினைக்கைப்பற்ற எண்ணிய ஒருவன் இல்லறத்தை விரும்பி வாழ்க்கைத் துணைவியையடைந்து நன்மக்களைப் பெற்று அன்புடையவனாய் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் தான்என்று ஐந்துகடமைகளைச்செய்து இனியனாகி அடக்கமுடைமைகொண்டு பொறையுடையனாய் பயனிலாதவைகளைச் சொல்லாது புகழுடையவனாய் வாழினும் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்தெய்வத்துள் வைக்கப்படும்" என்றபடி இம்மையிற் புகழும் மறுமையில் தேவர்களில் ஒருவனாயும் இருக்கவே பயன்படுகின்றான்.

மக்கட்பிறவி பிறந்து நிலவுலகத்திலே பயன் துய்ப்பதும் வானவுலகத்திலே தேவனாகிப் போகந்துய்ப்பதும் ஒருவன் இரும்பு விலங்கையும் பொன் விலங்கையும் தரித்ததுபோ லாகுமேயன்றி வேறு எவ்வித பேதத்தையும் உண்டாக்காது. பிறவி என்னும் பெருங்கடலைத்தாண்டி முத்தி என்னுங் கரையைச்சேருவதற்குத் துறவறமொன்றேபயன் தருவதாகும். அத்துறவறத்தும் விரதம் ஞானமாகிய இரண்டனுள் அருளுடைமை முதல் கொல்லாமை ஈறாகிய விரதத்தையும் நிலையாமை முதல் அவா அறுத்தல் ஈறாகிய ஞானத்தையும் மேற்கொண்டவரே துறவிகளாவர். அத்துறவிகள் சென்ற வழியே மோட்சத்தையடைய மார்க்கமாகும். அத்துறவிகளுள் சமயாசாரியருள் ஒருவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் என்கடன்பணி செய்து கிடப்பதே என்று தாமருளியபடி ஏனையோர்க்கு தாம் பணித்த விதி விலக்குகளை, அவரது தேவாரங்களில் சில திருப்பாசுரங்களால் ஆராய்வாம்.

"ஆளாகார் ஆளானாரை அடைந்து உய்யார்
மீளா ஆள்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார்
தோளாத சுரையோ தொழும்பர் செவி
வாளா மாய்ந்து மண்ணாகிக் கழிவரே"

என்றபடி ஆளாகார் என்றதால் இறைவனுக்கு அடிமையாகவில்லை என்பதும் ஆளானாரை அடைந்து உய்யார் என்றதால் இறைவனுக்கு அடிமைகளாய் அவன் திருவருளைப்பெற்ற அருளாளர்களை அடைந்து அவர் சொல்லியவழி நின்று பிறவிப்பெருங்கடலைத் தாண்டவுமாட்டார் அன்றியும் மீளா வாள் செய்து மெய்ம்மையுணிற்கிலார் என்றபடி மீளாத அடிமைசெ

ய்து மெய்மை என்னும் இறைவன் திருவடியை அடையவுமாட்டார்கள். ஆதலால் தோளாத சுரையோ தொழும்பர் செவி செவிகளில் துளைகளிருந்தும் அவை பயன் படவில்லையோ வாளாமாய்ந்து மண்ணாகிக் கழிவரே வீணாக இறந்து மண்ணோடு மண்ணாய்க் கழிகின்றார்கள் என்பதாகும்.

ஒவ்வொருவரும் பிறவியைக் கடக்கவேண்டுமாயின் இறைவனுக்கு ஆட்பட்டும் ஆட்பட்டார்க்கு அடிமைசெய்தும் இறைவனடியைத் தியானித்தும் அவன் புகழைக்கேட்டும் வாயார வாழ்த்தியும் நிற்றல்வேண்டுமென்பதாம். இவ்விதம் செய்யார் மண்ணாகிக் கழிவது எதனாலெனின் "எழுதுபாவை நல்லார் திறம்விட்டு தொழுதுபோக நின்றேனையும் சூழ்ந்துகொண்டு உழுதகால் வழியே உழுவான்பொருட்டு இழுதை நெஞ்சம் ஈதென் படுகின்றதே" என்றபடி மனமானது மாதர் வலையில்சிக்கி நல்வழியிற் செல்லாது தான் பலநாள் பழகிய அவரது ஒழுக்கத்திற்சென்று அவன் திருவடியை அடைய ஒட்டாது தடுக்கின்றதென்று கண்டாம். இவ்விதம் மயங்காது செல்லுவதற்குரியவழி "வாழ்த்தவாயும் நினைக்கமடநெஞ்சும் தாழ்த்த சென்னியும் தந்ததலைவனை சூழ்த்தமாமலர் தூவித்துதியாதே வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே" என்றபடி அவனை வாழ்த்தவும் அவனை நினைக்கவும் அவனை வணங்கவும் வேண்டுமென்பதாயிற்று. ஆயின் அவனது திருவுருவம் ஈதென்று அறிந்தாலன்றி வாழ்த்துவதும் நினைப்பதும் வணங்குவதும் செய்வதும் எவ்விதமென்று ஆசங்கிப்பாரை நோக்கி 'குறிகளும் அடையாளமும் கோயிலும் நெறிகளும் அவன் நின்றதோர் நேர்மையும் அறியஆரணம் ஆயிரமோதினும் பொறியிலீர்மன மென்கொல் புகாததே' என்றபடி வேத சிவாகமங்களில் ஓதியபடி உருவம் அருவம் அருவுருவம் என்ற மூன்று திருமேனிகளையும் கொள்ளல் வேண்டுமென்பதாம்.

அதைவிட்டு எல்லாம்காட்சியளவாக அறிதல்வேண்டுமென்று ஆசங்கிப்பாரைநோக்கி "மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சிமயானத்தான் வார்சடையான் என்னினல்லால் ஒப்புடையனல்லன் ஒருவனல்லன் ஒரூரனல்லன் உவமனில்லி அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும் அவனருளே கண்ணாகக் காணினல்லால் இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" என்று விதந்து கூறினர். ஆதலால் இவரது திருவாக்கால் பணிசெய்து கிடப்பதென்றது வேத சிவாகமங்களிற் கூறிய உருவம் அருவம் அருவுருவம் இம்மூன்று திருமேனிகளையும் மனத்தால்நினைத்து வாயால்வாழ்த்தி தலையால்வணங்கி சரியைகிரியை



யோகம் ஞானங்களாகிய நான்கனுள் சரியை முதலாகக்கொண்டு சரீரத்தால் ஆவனவெலாம் செய்து கிரியை யோக ஞானங்களையடைவது என்பதாயிற்று. முடிந்தபொருளாகக் கூறின் 'செம்மலர் நோன்றாள் சேரலொட்டா அம்மலங்கழீஇ அன்பரொடுமரீஇ மாலறநேயம் மலிந்தவர் செய்கையும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே' என்ற சைவ சாத்திரப்படி இறைவனது திருவடியை அடைய பதி பசு பாச லக்ஷணங்களை யுணர்ந்து அவற்றின் பயன்தெரிந்து நல்லாசிரியனை யடைந்து தீக்கைபெற்று பிறவியாலாயபயனை அடைய ஞானமெய்தினவனாயினும் சிவபெருமானையும் அவனடியவரையும் திருக்கோயில்களையும் வழிபட்டு செய்யவேண்டிய செயல்களைச் செய்தலே பணிசெய்தல் என்று ஆயிற்று.

(இன்னும் வரும்.)

**பத்திராதிபர்.**

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அருளும் பொருளும்.

"அருளிலார்க் கவ்வுலகமில்லை பொருளிலார்க்
கிவ்வுலகமில்லாதி யாங்கு"

பொருளில்லார்க்கு இவ்வுலக இன்பம் இல்லையாதல்போல் பிற உயிர்களிடத்துக் கருணை இல்லார்க்கு வீட்டுலக இன்பம் இல்லை என்றது அக்குறளின் கருத்து.

இதனால் அருள், பொருள் ஆகிய இரண்டினது ஆவசியகமும் ஏற்படுகிறது. மேற்போந்த குறளின்படி அருள் உடையோரே வீட்டுலகத்து இன்பமடைவர் இதனை ஓர் திருட்டாந்த முகத்தால் விளக்குகிறார். அதாவது பொருள் இல்லையாயின் இவ்வுலக இன்பம் இல்லை. என்பது யாவர்க்கும் அநுபவம் "இல்லாரை எல்லாரும எள்ளுவர்" என்றதும் இதனை வற்புறுத்தும். அப்படியே அருளிலார்க்கு வீட்டுலகம் இல்லையென்பது

அறிவுடையோர் யாவர்க்கும் அநுபவம். இதை "மென்சொலின் நாவினு ளாரு மருள்மன மம்மனத்தால் வீவிலா வீடாய்விடும்" என்றதானுமறிக. இதனை வற்புறுத்துதற்கே மற்றும் சில ஆசிரியரும் அருளைக் கூறவந்த இடத்துப் பொருளையுழ் உடன்கூறினாற்போலும்.

"மெல்லென் றருளிற்பிறக்கு மறநெறி யெல்லாம்
பொருளிற் பிறந்து விடும்"—நான்மணி.

"அருளினை நெஞ்சத் தடைகொடா தானும்
பொருளினைத் துவ்வான் புதைத்து வைப்பானும்"—திரிகடுகம்

இன்னன பல.

உண்மை ஈதாகவும் "பொருளிலார்க் கிவ்வுலகமில்லை" என்றதை மேற்கொண்டு "அருளிலார்க் கவ்வுலகமில்லை" என்றதை மறந்தனர். அந்தோபாவம்! இதுவும் அவர் தம் ஊழ் இருந்தவாறும் இன்னோர் சற்று ஆராய்வராயின் அருளின் இன்றியமையாமையை ஒருபோதும் மறவார். இதை மறந்து பொருளே இன்றியமையாதது என்றும் அதனை எவ்வழியிலாயினும் ஈட்டி பூமியில்புதைத்து வைத்துவிட்டுக் கேவலம் மிருகாதிகளைப் போல் இறந்தொழிவதே மானுடப்பிறவி யானுய பயனென்றும் சிலர் எண்ணுவர். இது அறியாமையே யன்றி வேறன்று.

பொருளையும் அருள் நெறியானே ஈட்டல்வேண்டும். அருள் நெறியான் ஈட்டலாவது. மலரிடத்துத் தேனை வண்டுகள் மலருக்கு யாதொரு கெடுதியும் இல்லாமல் கிரகித்துக்கொள்வதுபோல் பிறவுயிர்க்குத் துன்பமுண்டாகாமற் பொருளையீட்டலாம். அருள்நெறியான் வாராத பொருள் எத்துணைச் சிறப்புடைத்தாயினும் அதனை விட்டொழிதல்வேண்டும். அருள் நெறியான் ஈட்டிய பொருளே இன்பம்பயக்கும். மற்றது துன்பமே பயக்கும். ஆதலினன்றே "அழக்கொண்டவெல்லாம் அழப்போம் இழப்பினும் பிற்பயக்கும் நற்பாலவை அன்பொடும் அருளொடும் வாராப்பொருளாக்கம் புல்லார் புரளவிடல்" என ஆன்றோர் அறைந்ததும்.

பொருளைச்சேர்த்த மாத்திரையான் இன்பமுண்டாதல் இல்லை. பொருளினுலாயபயனே இன்பந்தரவல்லது. அருள் நெறியானீட்டிய பொருளைத் தானும் அநுபவித்துப் பிறர்க்கும் உதவல்வேண்டும். ஈட்டியபொருளைத் தானே அநுபவித்தலும் சிறப்புடைத்தன்றாம்.



"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீரார்க்கே யுள"

என்பதை உய்த்துணர்க.

அங்ஙனமல்லாமல் பொருளைக் குவித்துக் குவித்து வைத்திருப்பினும் அதனாற் பயன் எள்ளளவு மின்றாம்.

"கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க்கு
அடுக்கிய கோடியுண்டாயினு மில்."

க. சதாசிவன்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பிரபஞ்ச விசாரம்.

இவ்வருமைச் செந்தமிழ் உரை நடை நூலானது ஈழமண்டலத்தில் சைவ நன்மக்கள்செய்த தவப்பயன் வடிவாகத்தோன்றி அரசபாஷையில் தேர்ச்சியுற்று மிக்க உந்நதநிலைமையில் வருவதுடன் சைவ சித்தாந்த உண்மை நுட்பங்களை பல்லாண்டுகளாக ஆராய்ந்து அறிவுசான்ற திருமான் சபாரத்தின முதலியார் அவர்களால் இயற்றப்பட்டது.

"தாமின்புறுவ துலகின் புறக்கண்டு
யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

என்ற பெரியோர் வாக்குகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் பெருமை இந்நூலாசிரியர்க்குரியதென்பது இந்நூலினை நுணுகி ஆராய்வார் யார்க்கும் புலனாகும்.

இந்நூலின் உட்கோள் யாதெனிற் கூறுதும். நாம் வாழும் இவ்வுலகினைக் கண்டமாத்திரத்தே இதன்தோற்றத்தைப்பற்றி ஆராய்வான் மனஞ் செல்லுதல் கூடும். இதுவரை இவ்வாராய்ச்சி செய்தோர் எண்ணிறந்தோர். அவர் முத்திறத்தாராவர்: சிலர் இவ்வுலகத்து முதல்வன் இல்லை

என்பர். சிலர் உண்டென்பர் இன்னுஞ் சிலர் உண்டோ இல்லையோ என்று ஐயுறுவர். அங்ஙனம் கூறும் ஒவ்வொரு வகையாரும் தங்கள் கொள்கைக்கு ஆதாரமாகக் கூறும் காரண வேறுபாட்டால் பல திறப்படுவர். இப்பல திறத்தாருள் பெரிதும் வியாபகமுடைய சில வகுப்பினரது கொள்கைகளை யாதல் ஆராய்ச்சிசெய்து உண்மைதெளிதல் உலகருள் யாவருக்கும் இன்றியமையாத கடனும். இக்கடமையை எளிதில் நிறைவேற்றுமாறு பேருதவி புரிவதே இந்நூலின் நன்னோக்கமாம். ஆதலால் இந்நூல் இத்தேசத்தாருக்கு மாத்திரமன்றி உலக முழுமைக்கும் பெரும்பயன் அளிப்பது அங்ஙனம் செய்யு முகத்தானே நம்மவருள் நமது சமய உண்மை யுணராது மேலைத்தேசக்கொள்கைகளில் மயங்கிக் கிடக்கும் மாணவர் பலரும் ஏனைய சமயிகளும் சைவ சித்தாந்தத்துக் கடவுளுண்மை சாதிக்க தனிப்பெருஞ் சிறப்பினை உணர்ந்து உய்யும்வண்ணம் குற்றமற்ற தர்க்க முறையானே உண்மை விளக்கும் உயர்வுடையது இந்நூல். ஒன்றோடொன்றுறுவ்வாத பிரமாண நூல்கள் யாவர்க்கும் பொதுவாகாமையின் அவற்றையொழித்து "எப்பொருளெத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள்காண்பதறிவு" என்னும் திருவள்ளுவப் பயனையே ஆதாரமாகக்கொண்டு காரண காரிய தொடர்புக்கு (சத்காரியவாதம்) மாறில்லாத விவகாரமுறை செல்லும் இயல்பிற்று இந்நூல். யார்க்கும் மிக்க எளிதாக விளங்கும்படி செய்யுள் விரவாத தெள்ளிய உரை நடையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இன்னும் ஒரு வகையால் நோக்குழி 'பகவன் முதற்றே யுலகு' என்னும் பொது மறைக்கருத்துக்குச் செப்பமாகிய தற்காலத்துக்கேற்ற ஓர் விரிவுரைபோல்வதுடன் சிவஞானபோத முதற் சூத்திரத்திற்குப் பரபக்கப் பார்வையாக அமைக்கப்பெற்ற அகலவுரையாகவும் இந்நூல் திகழாநிற்கின்றது. ஆதலின் நம்மவருள் ஆங்கிலங்கற்றோரே யன்றி இந்நாட்டினரும் சைவ சித்தாந்த அபிமானிகளும் அருளானும் அறிவானும் ஆன்ற இந்நூலாசிரியருக்கு என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இதன் விலை ரூ 1—8—0 பிரதிகள் நமது சமாஜ ஆபிசிற்கிடைக்கும்,

கா. சுப்பிரமணியம்,
காரியதரிசி,
சைவ சித்தாந்த மகாசமாஜம்.

---



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# போதம் தமிழ் முதனூல்.

இந்நூல் வழக்கிலுள்ள, "உந்திகளிறுவுயர்போதஞ் சித்தியார்" என்ற வெண்பாவிற் குறிக்கப்பட்ட மெய்கண்ட நூல்கள் பதினான்கிலொன்று.

போதம் தமிழ்முதனூலா? வழிநூலா? மொழி பெயர்ப்பு நூலா? என்ற ஆராய்ச்சியில்

1. மொழி பெயர்ப்புநூலெனில் மொழிபெயர்ப்பென்பார் இருவரில் ஒருவர் வடமொழிரௌரவாகமம் 73-வது பாசவிமோசனப் படலத்தில் 12-வது அத்தியாயம் சிவஞானபோதம் என்றும், "மற்றொருவர் ரௌரவாகமத்தெழுந்த சிவஞானபோதநூல் என்றும், ஆதலால் தமிழ்ப் போதசூத்திரம் மெய்கண்டதேவர் மொழிபெயர்த்ததென்றும் கூறலில் ஒன்றுக்கொன்று மாறுபடலாலும்,

2. வடமொழிச் சிவஞானபோத சுலோகங்களின் தமிழ்ச்சூத்திரம் பொருளுக்கு மாறுபட்டும்; பிழையுற்றும், சித்தாந்தத்துக்கு முரணான பொருளுடையனவாயும், இருத்தலானும், அங்ஙனம் பிழைபட்டது சிவவாக்கிய மாகாதாதலானும்,

3. வடமொழிச் சிவஞானபோதநூலே 12-வது சுலோகத்தில் "ஏவம்வித்யாத் சிவஞானபோதே சைவார்த்த நிர்ணயம்" = "இவ்வாறறிக சிவஞானபோதத்திற் சைவப் பொருளின்முடிவை" என்று சிவஞானபோதம் வேறு அதில் இவ்வாறு சைவசித்தாந்தம் கூறப்பட்டுளது எனக் கூறுதலானும்,

4. இரௌரவாகமத்தில் இப்பன்னிருசுலோகங்கள் காணப்படாமையானும்,

5. தமிழில் போதம் என்ற சொல் போது + அம் போதுதல் = அடைதல் = சிவத்தையடையும் வழி என்று பொருள்படும், சிவஞானபோதமெனினும் அப்பொருள் பொருந்து மாதலானும்,

6. சிவஞானபோத வடமொழிச் சுலோகங்கள் பிற்காலத்தொருவரா லியற்றப்பட்டன. அவை மெய்கண்டதேவர், அருணந்திதேவர் உமாபதி சிவத்திலிருந்திருந்தால் அவர்களும் வடமொழி யாகமமொழிபெயர்ப்பென்று கூறியிருப்பார்கள் அங்ஙனங் கூறாமையானும்,

7. அதற்கு மாறாய் உமாபதிசிவம் சிவம் பிரகாசத்தில் நந்திசனற்குமாரர், சத்தியஞான தரிசனிகள், பரஞ்சோதி முனிவர், மெய்கண்டதேவர், அருணந்திதேவர், மறைஞானசம்பந்தராகிய சந்தான குரவர்களைக் கூறிப்பின்னர் "தெரித்தகுரு" என்ற பாட்டில் சிவஞானபோதம் சிவஞான சித்தியார்களை ஆராய்ந்து அந்நூலாசிரியர் திருவருளையும் சிவாகமங்களையுங் கூட்டிச் சிவப்பிரகாசமென்ற நூலைக் கூறுகின்றேன். என்னலால் சிவஞானபோதம் பொது சிவாகமம் வேறு என்று விளக்குகின்றாராதலானும்,

8. வடமொழிச் சுலோகங்களை மெய்கண்டதேவர் மொழிபெயர்த்தார் என்று நூலாதரவுகளொன்று மின்மையானும்,

போதம் மொழிபெயர்ப்பு நூலென்பது வெற்றுரையேயாம்.

---

1. போதம் வழிநூலெனில் தமிழில் போதத்துக்கு முதனூலாகவொன்றிருந்ததாகவும் அதன்வழியாயிது செய்யப்பட்டதென்றும் போதத்திலாவது அதன் பாயிரத்திலாவது. அல்லது வேறு நூலிலாவது கூறப்படாமையாலும்,

2. அதற்கெதிரிடையாய்ப் பாயிரத்தில் "மயர்வற நந்திமுனிகணத் தளித்த-வுயர்சிவஞானபோத முரைத்தோன்" என்று நந்திசனற்குமாரர் முன்னைய முனிவர் கூட்டத்தில் அருளிச்செய்த சிவஞானபோதத்தையே மெய்கண்டதேவர் கூறியதாய் விளக்கலானும்,

3. போதத்தை நந்திகூறியபடியே மெய்கண்டதேவர் கூறினரோவெனில் அற்றன்று, மெய்கண்டதேவர் சிவஞானபோதத் திறுதி வெண்பாவில்,

"எந்தை சனற்குமர னேத்தித் தொழவியலாய்
நந்தி யுரைத்தருளும் ஞானநூல்—சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டான் றாரணியோர் தாமுணர
வேது திருட்டாந்தத்தா லின்று"—என்று எந்தையாகிய சனற்



குமார முனிவர் புகழ்ந்து வணங்க நந்தியியலாயுரைத்தருளிய ஞானநூலாகிய போதத்தைச் சிந்தித்து உலகத்தோர் நன்கு அறிதற்பொருட்டு மேற்கோளோடு கூடிய ஏது திருட்டாந்தங்களுடன் மெய்கண்டானுரைத்தனன், என்று நந்தியுரைத்தது போதமாகிய ஞானநூல், மெய்கண்டானுரைத்தது ஏது திருட்டாந்தங்கள் என்று விளக்கலானும் மெய்கண்டதேவர் சிவஞானபோதம் வழி நூலன்று மொழி பெயர்ப்பன்று, நந்தி கூறிய போத சூத்திரத்துக்கு மெய்கண்டதேவர் ஏது திருட்டாந்தங்களோடு இயற்றிய வார்த்திக மென்னும் பொழிப்புரை யென்பதே துணிவு.

---

போதம் தமிழ் முதனூல்:—முக்கண் ணிறைவனும், அம்மையும், முருகவேளும், அகத்தியர், வான்மீகர், மார்க்கண்டர், கௌதமர், புலத்தியர், வசிட்டர் முதலிய முனிவர்களும், தமிழர் தமிழ்நூல் பயின்றனர் என்று "கொன்றை" 'சனகற்கும்' வசிட்டர் முதலிய அருணகிரிநாதர் திருப்புகழும். நச்சினார்க்கினியரும் விளக்கலானும்,

2. வைவசுவதமநுவும் அவர் வழியில் வந்த சூரிய சந்திர குல அரசரும், இராமன், பாண்டவர், கிருட்டினன், அக்குரன் சேரசோழ பாண்டியர்களும், எழு முனிவரும் தமிழர் என்று எசுர்வேத சதபதம் பிராமணமும் பாகவதம் பாரதம் முதலிய புராண இதிகாசங்களும் விளக்கலானும்,

3. நந்தி மாணாக்கர் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் சிவயோகமுனி, பதஞ்சலி, வியாக்கிரவர், திருமூலர் என எண்மர்.

1-சனகன் மாணாக்கர் சம்பு, மலையமான், 2-சனந்தனர் மாணாக்கர் சிவமண்ணியதேவர், பரமதேவர், சிவாநந்தபோதர் 3-சனாதனர் மாணாக்கர் பிரமதேவர், சுவர், யாகுங்கதேவர், 4-சனற்குமாரர் மாணாக்கர் விஞ்ஞானதேவர், சத்தியஞானதரிசர், அவர் மாணாக்கர் பரஞ்சோதிமுனி, அவர் மாணாக்கர் மெய்கண்டதேவர், அவர் மாணாக்கர் அருணந்திதேவர், அவர் மாணாக்கர் மறைஞானசம்பந்தர், அவர் மாணாக்கர் உமாபதிசிவம். 5-சிவயோகமுனி மாணாக்கர் வாமதேவர், 6-பதஞ்சலி அவர் மாணாக்கர் நிறைந்த நாயனார், அவர் மாணாக்கர் பரமானந்தமுனி, அவர் மாணாக்கர் வாகீசமுனி. 7-வியாக்கிரமர் மாணாக்கர் உபமன்யு அவர் மாணாக்கர் கிருட்டினன். 8-திருமூலர், அவர் மாணாக்கர் மாளாங்கன், இந்திரன், சோமன்;

பிரமன், உருத்திரன், காளாங்கதேவர் மாணாக்கர், கௌரதேவர், மாளிகைத் தேவர் நாதாந்ததேவர், பரமாநந்ததேவர், யோகதேவர், மூலதேவர் என்று திருமந்திர முதலிய நூல்களாற் பெறப்படலானும், அவரில் முதல் எண்மரும் நந்தி யிடம் தமிழ் நூல்கேட்டோர். அவர் வழியார் பலரின் தமிழ் நூல்கள் இன்று மிருக்கின்றனவாதலானும்,

4. மெய்கண்டதேவர் காலம் இற்றைக்கு ஏறக்குறைய 750-ஆண்டுகளாகின்றன். ஞானசம்பந்தருக்கும் மாணிக்கவாசகருக்கும் நெடுநாள் முந்தியவர் திருமூலர். அவர் சனகாதி முனிவர்போல நந்தியின் மாணாக்கராயிருந்தவர். அவர் நந்தி தமிழ்ப்போத நூல் தமக்கருளியதாய்க் கூறுவதானும்,

திருமந்திரம்.

“அற்றமும் நல்கி யடியேன் சிரத்தினில்
நற்பதமுமளித்தா னெங்கள் நந்தியே”
“புந்திக்குள் நிற்பது நந்திபொற் போதமே”
“போதந்தரு மெங்கள் புண்ணிய நந்தியை
போதந்தனில் வைத்துப் புண்ணியராயினர்”

---

5. அறம் பொருளின்பம் வீடு என்ற நான்கையும் உலகர்க்குக் கூறுவது வேதம் பொது சத்திநிபாதத்தவர்க்கு மெய்ஞ்ஞானங்கூறுவது ஆகமம் சிறப்பு இவ்விரண்டும் இறைவனால் தமிழில் முற்காலத்தருளப்பட்டன. இப்பொழுதுள்ள வடமொழி வேதம் எல்லார்க்கும் பொதுவன்று, வேள்விமிகுத்துக் கூறுவது ஆதலாலிவண் கூறப்படுவது தமிழ் வேதங்கள் ஆதலானும்,

திருமந்திரம்.

“வேதமோ டாகம மெய்யா மிறைவனூ
லோதுஞ்சிறப்பும் பொதுவு மென்றுள்ளன”
“சதாசிவந் தத்துவம் முத்தமிழ் வேதம்”
“நீலாங்கமேனி நேரிழை யாளொடு
மூலாங்க பாகமொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பினர் தேனே”
“அண்ண லருளா லருளுஞ் சிவாகமம்”
மூலனுரைசெய்த மூவாயிரந் தமிழ்
ஞாலமறியவே நந்தி யருளது”



6. மேற்கூறிய உண்மைகளனைத்தையும் நன்கு ஆசிரியர் மெய்கண்டதேவரிடந் தெரிந்த அருணந்தி தேவர் தாமே முக்கண்ணிறைவன் போத நூலைத் தமிழில் நந்திக்குரைக்க, நந்தி சனற்குமாரற்கும் அவர் சத்திய ஞான தரிசனிக்கும், அவர் பரஞ்சோதி முனிவர்க்கும், அவர் மெய்கண்டதேவருக்கும் உபதேசிக்க அவர் அதை எனக்கருளிச்செய்தனர். அதைத் தேர்ந்து சிவஞான சித்தியார் என்ற நூலைச் சொல்கின்றேனென்று கூறியுள்ளார். அஃது சிவஞான சித்தியார் பரபக்கம் நூற்கதிகாரியும், நூல்வழியும் நூற்பெயரும்,

“போதமிகுத் தோர் தொகுத்த பேதமைக்கே
பொருந்திடுவோ ரிவர்க்கன்றிக் கதிப்பாற்செல்ல
வேதநெறி யெனுமவர்கட் கறியமுன்னு
ளிறைவ னந்தி தனக்கியம்ப நந்தி
கோதிலருட் சனற்குமா ரற்குக் கூறக்
குவலயத்தி லவ்வழியெங் குருநாதன் கொண்டு
தீதகல வெமக்களித்த ஞான நூலைத்
தேர்ந்துரைப்பன் சிவஞானசித்தியென்றே.

திருமந்திரம்.

விளக்கிப் பரமாகு மெய்ஞ்ஞானச்சோதி
யளப்பில் பெருமைய னானந்த நந்தி
துளக்கறு மானந்தக் கூத்தன் சொற்போந்து
வளப்பிற் கயிலைவழி யில்வந் தேனே.

நந்தியால் உபதேசம் பெற்றவர் திருமூலர் அவர் பெற்ற உபதேச நூலாகிய போதம் சிவனார் வாக்கே யாதலால் “நந்தி சிவன் சொற் போந்து கயிலாய வழியின் வந்தேன் என்று நந்தி கூறியது சிவனார் கூறியதே என்று விளக்கினார். ஆதலானும் சிவனார் நந்திக் கடவுளுக்குரைத்த நூலே போதம் என்பது உறுதிப்படுகின்றது.

தொல் “வினையி னீங்கி விளங்கியவறிவின் முனைவன்கண்டது முதனூலாகும்.” என்ற சூத்திரப்படி முக்கண்ணிறைவன்கூறிய போத சூத்திரம் தமிழ் முதனூலே யாம் என்பது தடையற்ற முடிவாம்.

வடமொழி மணமும் வீசப் பெருதபலர் குருட்டு நம்பிக்கையாய் வடமொழியிலிருந்து தான் போதம் மொழி பெயர்க்கப்பட்டதென்று

கூறும் முரண்வாதத்தை விட்டொழித்து உண்மையைக் கைக்கொள்ளுமாறு வேண்டுகின்றனன்.

பிற்காலத்தில் இந்நாட்டிற் பலர் வடமொழி நூல்களைப் பெரிதென்று கருதி மயங்குவதால் அவருக்கு உண்மைஞான மூட்டும்பொருட்டு மாதவச் சிவஞானமுனிவர் முதலியர் வடநூல் மூலத்தின் மொழிபெயர்ப்பென்று கூறியதன்றி யறியாமற் கூறியதன்று.

வி. சிவஞானயோகி.

---

## சமாச்சாரம்.

—— :(o): ——

வாலாஜாபாத் அல்லது சிவபுரம் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் சபை:—இச்சபையின் மூன்றும் ஆண்டு நிறைவிழா சென்ற டிசம்பர்மீ 14உ சனிக்கிழமை சென்னை சமரசஞான சங்கத்தலைவர் ஸ்ரீமான் ஷண்முகானந்த சுவாமிகள் அக்கிராசனத்தின்கீழ் பல அரிய உபந்நியாசங்கள் செவ்வனே நடைபெற்றன.

இரண்டாம்நாள் 15உ ஞாயிற்றுக்கிழமை இச்சபையின் சார்பாயுள்ள இந்துமத பாடசாலையின் பரிசளிக்கும் வைபவம் செங்கல்பட்டு ஜில்லா நீதிபதி ஸ்ரீமான் ப. வேணுகோபால் செட்டியாரவர்களின் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது. ஏழை மாணவர்களுக்கு ஆடையும் மற்றவர்களுக்குப் புத்தக முதலியவைகளும் பரிசாக அளிக்கப்பட்டன.

அனுதாபம் (3—1—19உ) ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள் சபையார் சைவ நாட்டிற்கே திலகராய் விளங்கிய சிவஸ்ரீ கலியாண சுந்தர யதீந்திர சுவாமிகளவர்கள் சிவப்பேறெய்தியதற்காக மிகவும் வருந்துவதாகவும் அவ்வனுதாபத்தை அப்பெரியார்தம் மாணவர் கழகத்தாருக்கும் குடும்பத்தாருக்கும் தெரிவிக்கவேண்டுமெனவும் தீர்மானம் செய்தார்கள்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்
## பதின்மூன்றாவது வருட
# அறிக்கைப் பத்திரம்.
## 1918.

"சித்தாந்தத்தே சிவன்றன் திருக்கடைக்கண் சேர்த்திச்
செனன மொன்றிலே சீவன் முத்தராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞானவாரி
மடுத்தானந்தம் பொழிந்துவரும் பிறப்பையறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ் வைப்பன்"

என்று மொழிந்தவாறே இக்கண்ணகன் ஞாலத்தேயுலவும் எண்ணிறந்த உயிர்த்தொகுதிகள் யாவும் தத்தம் பிறவிப்பெருந்துயர் தீர்த்து அந்தமிலின்பம் பெறுதற்கரிய நெறிகளெனக் கூறப்பட்டன. உண்மைப் பரம்பொருள் நிலையும் எஞ்சிய உலகநிலையும் இன்ன தன்மைத்தென உண்மையாகவே விளக்கும் பெருமாண்பு படைத்தமையோடு எவ்வுயிரும் மிக்க எளிதின் உய்ந்துபோமாற்றை உணர்த்துவதில் இணையற்ற செம்மை நன்னெறியாய்த் திகழ்வது சைவசித்தாந்த உயர்நெறியேயெனத் தெளிந்த அறிஞர் பலர் சமயப்பிணக்கென்னும் இருள்கெடவும் மன்பதைகள் இதயகமலம் மலர்ந்து களிக்கவும் அன்னார் தற்பரங்கண்டு தனிப்பேரின்பந் தலைப்படவும் தண்ணருட் பேரொளி பரப்பும் ஞானமாவிளக்கமாக சைவசித்தாந்த மகாசமாஜமெனப் பெரிய ஓர் பெருங்கழகத்தை நிலைநிறுவி மன்னுவித்தார்கள்.

### ஆண்டு நிறைவிழா.

இப்பெருங்கழகத்தின் ஆண்டு நிறைவிழா 1906-ம் ஆண்டுமுதல் 1916-ம் ஆண்டுவரை முறையே தில்லைமாநகர், நாகையம்பதி, திரிசிரபுரம், இராமநாதபுரம், சென்னைப்பட்டினம், காஞ்சிமூதூர், வேலூர்

கூடலூர், தஞ்சைமாநகர், திருமயிலை என்னும் பேரூர்களில் அணிபெற நிகழ்வுற்றன. சென்ற ஆண்டு பிரம்பூர்-செம்பியத்தின்கண்ணே திருவாளர் புழலை-திருநாவுக்கரசு முதலியாரெனப் பெயரிய சைவப் பெருந்தகையாரின் பெருமுயற்சியால் பேரணிமிக்க பெரியதோர் பந்தரின்கண்ணே சென்னை சித்தாந்தசரபம் அஷ்டாவதானம் - சிவஸ்ரீ-கலியாண சுந்தர யதீந்திர சுவாமிகள் தலைவராக வீற்றிருப்ப டிசம்பர்மீ 23, 24, 25-ந் தேதிகளில் இச்சமாஜப் பெருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சித்தாந்த அறிவு மிக்க பண்டிதர் பலர் அரிய சொன்மாரி பொழிந்தனர். இப்பெருவிழா நன்கு நிகழ்ந்து இக்கழகத்தை யாவரும் சீராட்டிப் பாராட்டும் வண்ணம் பேருதவிபுரிந்த திருவாளர் புழலை திருநாவுக்கரசு முதலியார் அவர்கட்கு ஏனைச் செல்வமான்கட்கும் சமாஜக் காரியக்கூட்டத்தினர் என்றும் நன்றி புனைரும் கடைப்பாடுடையவர்.

## அங்கத்தவர்.

நிகழ்சமகத்தே இப்பெருங்கழக-அவயவிகள் அறுநூற்றிருபத்தைவராவர்.

## செய்திநிலையம்.

இப்பெருங்கழகச் செய்திநிலையம் சென்னை, திருமயிலை இராஜ விலாசத்திலுள்ள பொழிலகத்தே யாம். இந்நிலையத்திற்கு நிலயச்சார்பாய் இருக்கை நிலங்கள் அமைத்துதவும் வள்ளல். கி. இராஜி கிராமணி அவர்களின் சைவாபிமானம் வியக்தற்பாலது.

## சித்தாந்தம்.

இப்பெருங்கழகத்தினின்று திங்கட்கொருமுறை தோன்றித் திகழும் ஞானத் திருவிளக்கானது சித்தாந்தம் என்பதாகும். கழிந்த மூவாண்டுகளாக கடிதவிலை அளவிற்கு மிகுதிப்பட்டும் திங்கள்தோறும் தம்மொளி குறைவின்றித் திகழாநின்றது.

## காரியக்கூட்டம்.

இக்கூட்டம் அங்கத்தினர் சமாஜநிலையத்தே இவ்வாண்டில் பதின்முறை கூடிப் பெருங்கழகச் சார்பாய் செய்கைகளைக் குறித்து தம்முட்கலந்து உரையாடி செய்யக்கூடிய யாவும் செய்துள்ளார்கள்.



## பத்திராதிபர்.

மேற்கூறிய சித்தாந்தமென்னும் சிவஞானச்சுடர் கொளுத்தும் பத்திராதிபர் சித்தாந்தசரபம் அஷ்டாவதானம் சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திரசுவாமி அவர்கட்கு இக்கழகத்தார் என்றும் நன்றி பகருதற்குரியவர்.

## கணித பரிசோதகர்.

திங்கள்தோறும் கழகக் கணக்குகளைப் பரிசோதித்து வெளியிட உதவிய திருவாளர் மோ. கந்தசாமி முதலியார் அவர்கட்கும், ஆண்டின் இறுதியில் கணித பரிசோதனை செய்துதவிய திருவாளர் A. C. சண்முக நயினார் பிள்ளை அவர்கட்கும் காரியக்கூட்டத்தினர் நன்றி பாராட்டுகின்றனர்.

## கிளைக்கழகங்கள்.

மெய்கண்ட சந்தான சபை, சென்னை.
சைவ சமயாபிவிருத்தி சபை, செங்கற்பட்டு.
சைவசித்தாந்த சபை, கட்டியாம் பந்தல்.
சைவசித்தாந்த சபை, திருக்கோவிலூர்.
சைவசித்தாந்த சபை, உத்திரன்மேரூர்.
சைவசித்தாந்த சபை, பூவாளூர்.
பால விக்னேஸ்வர சங்கம், பெங்களூர்.
சிந்தாமணி விநாயக பக்தஜன சபை, செம்பியம், பிரம்பூர்.
மெய்கண்டார் சபை, (தெய்வச்சேக்கிழார் புத்தகசாலை) செம்பியம், பிரம்பூர்.
ஸ்ரீ சொர்ணாம்பிகை சைவசித்தாந்த சபை, சேலம்.
சிவனடியார் திருக்கூட்டம், ஆலந்தூர்.
வாகீச பக்தஜன சபை, விழுப்புரம்.
ஸ்ரீ சன்மார்க்க சபை, ஜலகண்டபுரம்.
ஸ்ரீ பிருஹத் கருணாம்பிகை சைவசித்தாந்த சபை, அவிநாசி.
சைவசித்தாந்த ஸ்ரீ பாமாசாரிய பக்தஜன சபை, தேர்த்துறை
சண்முகானந்த சபை, தாரமங்கலம், சேலம்.
ஸ்ரீ கலியாணசுந்தர பக்தஜன சபை, மாணம்பதி.

## ஆசிரிய வழிபாடு.

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார், மாதவச் சிவஞான யோகிகள், ஆசிரியர் உமாபதியார், அருண்மொழித்தேவர், ஸ்ரீகண்டாசாரியார்,

ஆசிரியர் மறைஞானசம்பந்தர், ஆசிரியர் அருணந்திசிவம், ஆசிரியர் மெய்கண்டதேவ நாயனார் என்னுஞ் சிவஞான வள்ளல்களது குருபூசைத் திருநாட்கள் திருமயிலைப் பிள்ளையார் பொழிலகத்தே கவின்மிக நிகழுற்றுத் திகழுற்றன. அவ்வமயங்களில் திருவாளர் ஆலால சுந்தரம்பிள்ளை அவர்கள், திருவாளர் சிங்காரவேலு முதலியார் அவர்கள், திருவாளர் கி. குப்புச்சாமி முதலியார் அவர்கள், திருவாளர் புழலை திருநாவுக்கரசு முதலியார் அவர்கள், திருவாளர் வல்லை சண்முகசுந்தர முதலியார் அவர்கள், திருவாளர் சேதுப்பிள்ளை அவர்கள், என்றற்றொடக்கத்து சைவநூற் புலவர் பலர் தமது மொழிவன்மையால் அன்பர் இதய கமலங்களை மகிழ்வித்தனர்.

### மாணவர் பரிசோதனை

இனி நிகழுமாண்டுகளில் இப்பெருங் கழகத்தாரால் சிவநேசச் செல்வர்களது உதவிகொண்டு மாணவர் பரிசோதனை நடைபெறற்பாலது.

### ஓர் வேண்டுகோள்.

சென்னைமாநகரின்கண்ணே ஏனைய கேவலாத்துவிதம், விசிட்டாத்துவிதம் முதலிய தத்துவநூலாராய்ச்சிக்குரிய கல்லூரிகள் செல்வமான்களது பேருதவியால் எளிதிலே நிலையிடப்பட்டு நடைபெறு நிற்பவும் இத்தமிழ்நாடு தோன்றிய காலந்தொட்டுச் சைவ நன்மக்கட்கு மதித்தற்கரிய புனிதாத்துவித சைவசித்தாந்தத்துக்கு அனையதோர் கல்விமாடம் இதுவரை யமையாதிருத்தல் சைவர் என்பார்களது அளவற்ற ஊக்கக் குறைவானன்றோ? இத்தகைய கலாசாலையொன்று இராஜதானியின்கண்ணே அமைவதற்காக சமாஜ அறிஞர் பலர் முயன்றும் அவர்களது நன்னோக்கம் நிறைவேறுவதற்குரிய அமயம் இனிமேற்றான் வருவதுபோலும். இணையில்லாத பெரும் புண்ணியமாகிய இதனை எளிதில் இனிதாக முற்றுப்பெறும் வண்ணம் இயன்றவரை விடாமுயற்சி செய்வது சைவாபிமானிகள் யாவர்க்கும் ஒருதலையான கடமை என்பதைத் தாழ்வுடன் நினைவூட்டுவதோடு எங்கள் பெருங்கருத்து முடியும்வண்ணம் சிவபரம்பொருளாகிய முன்னோனது, திருவடித்தாமரையை முடிமேற்கொள்வாம்.

சைவசித்தாந்த மகாசமாஜ நிர்வாக சபையார்.

### அக்கிராசனர்கள்.

1906 சிதம்பரம், கனம் பொ. இராமநாதத்துரையவர்கள், K.C.C M.G., கொழும்பு.

1907 சிதம்பரம், காலஞ்சென்ற பொ. பாண்டித்துரைசாமித் தேவர் அவர்கள், பாலவனத்தம் ஜமீன்தார்.



1908 நாகபட்டினம், ஸ்ரீமான் J. M. நல்லசாமிப்பிள்ளையவர்கள் B. A. B. L., மதுரை.

1909 திரிசிராப்பள்ளி, கௌரவ அ. கனகசபைப்பிள்ளை யவர்கள், B. A. அத்துவக்காத்து, யாழ்ப்பாணம்.

1910 இராமநாதபுரம், திவான்பகதூர் இராஜசபாபூஷணம், K. P. புட்டண்ண செட்டியார் அவர்கள், மைசூர் சமஸ்தானம்.

1911 சென்னை ஸ்ரீமான் J. M. நல்லசாமிப்பிள்ளை யவர்கள், B.A., B.L., மதுரை.

1912 காஞ்சிபுரம் ஸ்ரீமான் T. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள், M. R. A.S. Retired Excise Commissioner, Travancore

1913 வேலூர், ஸ்ரீமத்-சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், அதிபர், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம்.

1914 கடலூர். ,, ,,

1915 தஞ்சை, ஸ்ரீமத்-அம்பலவாண நாவல சுவாமிகள், யாழ்ப்பாணம்.

1916 திருமயிலாப்பூர், ஸ்ரீமான் ச சபாரத்தின முதலியார் அவர்கள், J. P. Dy. Fiscal. Jaffna

1917 பிரம்பூர்-செம்பியம், சிவஸ்ரீ கலியாண சுந்தர யதீந்திர சுவாமிகள், சென்னை.

### போஷகர்கள்.

மாட்சிமை தங்கிய இராமநாதபுரம் மகாராஜா அவர்கள்.

ஸ்ரீமான் S R. M. Ct. பெத்தாச்சி செட்டியாரவர்கள், M R A.S.

,, இரத்தினவேலுச் செட்டியாரவர்கள், சென்னை.

,, அ. தா. முத்துக்குமாரசாமி செட்டியாரவர்கள், கடலூர்.

,, P. தெய்வசிகாமணிச் செட்டியாரவர்கள், சென்னை.

,, ஆண்டவராய விஜய அருணாசல வணங்காமுடி பண்டாரத்தார் அவர்கள், பாலவனம் ஜமீன்தார்.

ஸ்ரீமத்-அம்பலவாண நாவல சுவாமிகள், யாழ்ப்பாணம்.

ஸ்ரீமான் கி. இராஜு கிராமணியார் அவர்கள், மயிலாப்பூர்.

,, புழலை திருநாவுக்கரசு முதலியாரவர்கள், மிராசுதார், செம்பியம், பிரம்பூர்.

சபைத்தலைவர்.

சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திர சுவாமிகள், சென்னை.

உதவி சபைத்தலைவர்.

ஸ்ரீமான் J. M. நல்லசாமிப்பிள்ளை யவர்கள், B.A. B.L., High Court Vakil, மதுரை.

,, T. நல்லசிவன் பிள்ளை யவர்கள், B. A. B. L, High Court Vakil, சென்னை.

காரியதரிசி.

ஸ்ரீமான்-கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள். M.A. M.L., சென்னை.

பொக்கிஷதாரர்.

ஸ்ரீமான்-சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளையவர்கள், சென்னை.

பத்திராசிரியர்.

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திரரவர்கள், சென்னை.

(மணவழகு)

கணித பரிசோதகர்.

ஸ்ரீமான் A. C. சண்முகநயினார் பிள்ளை அவர்கள், B.A.B.L.

உள்ளூர் நிர்வாக சபையார்.

ஸ்ரீமான்-இ. குப்புச்சாமி முதலியாரவர்கள்.

,, புழலை-திருநாவுக்கரசு முதலியாரவர்கள்.

,, M. கந்தசாமி முதலியாரவர்கள், B. A., (Monthly Auditor.)

,, W. T. கோவிந்தராஜ முதலியார் அவர்கள்.

,, ஆ. சிவப்பிரகாச முதலியாரவர்கள் B. A.,

,, வல்லை-சண்முகசுந்தர முதலியாரவர்கள்.

,, இ. சுப்பிரமணிய முதலியாரவர்கள்.

,, C. ஏகாம்பர முதலியாரவர்கள்

,, R. P. சேதுப்பிள்ளையவர்கள், B.A.

,, C. முருகேச முதலியாரவர்கள்.

,, ம. மாசிலாமணி முதலியார் அவர்கள்.

160958

வெளியூர் நிர்வாக சபையார்.

ஸ்ரீமான் T. A. இராமலிங்கம் செட்டியாரவர்கள், கோயம்புத்தூர்.

,, T. S சாமிநாதப்பிள்ளையவர்கள் திருசிரபுரம்.

,, S. சபாரத்தின முதலியார் அவர்கள், யாழ்ப்பாணம்.

,, இராஜவேலு முதலியார் அவர்கள், B. A., வேலூர்.

மறைத்திருவன் விருதை-சிவஞானயோகிகள், கோயில்பட்டி.

ஸ்ரீமான்-பொ. நடேசமுதலியார் அவர்கள், செங்கற்பட்டு,

,, T. சபாபதி முதலியார் அவர்கள், கட்டியாம்பந்தல்.

,, K. U. பொன்னுசாமி முதலியார் அவர்கள், உத்திரமேரூர்.

,, M. R. குமாரசாமிப் பிள்ளையவர்கள், திருக்கோவலூர்.

,, J. சாமிநாதப்பிள்ளையவர்கள், பெங்களூர்,

,, A. R. அமிர்தலிங்கம் செட்டியார் அவர்கள், பூவாளூர்.

பிரம்மஸ்ரீ-கிரிவாசகுருக்கள் அவர்கள், சேலம்.

ஸ்ரீமான்-P. C. முருகேச முதலியாரவர்கள். காஞ்சிபுரம்.

,, P. முத்தையபிள்ளையவர்கள், தூத்துக்குடி.

,, S. பால்வண்ண முதலியார் அவர்கள், திருநெல்வேலி.

,, S. மெய்கண்டப்பிள்ளையவர்கள், நாகை.

,, E. சாமிநாதப்பிள்ளையவர்கள், வேதமடம்.

,, M. வேலுசாமித்தேவர் அவர்கள், இராமநாதபுரம்.

,, A. T. முத்துக்குமாரசாமிச் செட்டியாரவர்கள், கூடலூர்.

,, M. கதிரேசம் செட்டியாரவர்கள், மகிபாலன்பட்டி.

,, P. L. இராமசாமிநாய்க்கர் அவர்கள், மிட்டாதார், பாகல்பட்டி.

,, P. மாணிக்க முதலியார் அவர்கள், புழல்.

,, K. முத்துக்கன்னிவேலு செட்டியாரவர்கள், வாலாஜாபாத்.

வனிதையர் வகுப்புக் காரியதரிசி.

ஸ்ரீமதி-ஆண்டாளம்மாள் அவர்கள், சென்னை.

---

R673 M211 N12
N12.7

## சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

# பதின்மூன்றாவது வருடத்திய வரவு செலவு கணக்கு.

| வரவு. | தொகை. ரூ. அ. பை. | | | மொத்தத் தொகை. ரூ. அ. பை. | | |
|---|---|---|---|---|---|---|
| 1917௵ டிசம்பர்௴ 1௳ இருப்பு | | | | 254 | 3 | 7 |
| சமாசிகர் வருட சந்தா ... | 763 | 2 | 0 | | | |
| ஆயுள் சமாசிகர் சந்தா ... | 110 | 0 | 0 | | | |
| பழைய பிரதிகள் விற்பனை ... | 0 | 7 | 0 | | | |
| விளம்பர வரவு ... | 41 | 8 | 0 | | | |
| பரீக்ஷை நன்கொடை .... | 25 | 0 | 0 | | | |
| சேவிங்சு பாங்கி வரவு ... | 9 | 12 | 0 | | | |
| | | | | 949 | 13 | 0 |
| | 949 | 13 | 0 | | | |
| | | | | 1204 | 0 | 7 |

| செலவு. | தொகை. ரூ. அ. பை. | | | மொத்தத் தொகை. ரூ. அ. பை. | | |
|---|---|---|---|---|---|---|
| காகிதம் ... | 348 | 3 | 0 | | | |
| தபால் செலவு முதலியன ... | 289 | 10 | 9 | | | |
| லிகிதர் சம்பளம் ... | 240 | 0 | 0 | | | |
| அச்சுக்கூலி ... | 207 | 10 | 0 | | | |
| | 1085 | 7 | 9 | | | |
| | | | | 1585 | 7 | 9 |
| நவம்பர்௴ 30௳ இருப்பு ... ... | | | | 118 | 8 | 10 |
| | | | | 1204 | 0 | 7 |

ஆயுள் சமாசிகர் சந்தா ... 605 - 0 0

C. V. JAMBULINGAM,
*Treasurer.*
15-12-18.

K. SUBRAHMANIAM,
*Secretar*

I audited the accounts and found them correct

C. SHANMUKHA NAINA
*High Court*
20-12-18.